மலை அரசி



சாண்டில்யன்

வானதி பதிப்பகம்

சாண்டில்யன்

பாரிஸ் அறிவாலயம்
PARIS ARIVAALAYAM
7, RUE PERDONNET, 75010 PARIS, FRANCE
TEL : 01 44 72 03 34 FAX : 01 44 72 03 35

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதல் பதிப்பு : அக்டோபர், 1981
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1982
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி, 1985
நான்காம் பதிப்பு : 1988
ஐந்தாம் பதிப்பு : அக்டோபர், 2001
ஆறாம் பதிப்பு : ஜூன், 2004

© Copyrights with Author

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 65.00

Title : MALAI ARASI
Author : Sandilyan
Subject : Historical Novel
Language : Tamil
Edition : Sixth Edition, Jun, 2004
Pages : 288
Published by : Vanathi Pathipagam
23, Deenadayalu Street,
T.Nagar, Chennai - 600 017.
Price : Rs. 65.00

Printed at : Malar Printers, 044-28224803

முன்னுரை

"மலையரசி" எனும் இந்த சரித்திர நாவலின் நிகழ்ச்சிகள் முக்கால்வாசி சரித்திரத்தின் உண்மைச் சம்பவங்கள். ராஜபுதனச் சரித்திரத்தின் பொன்னேடுகளில் இது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

இக்கதையில் வரும் பாகுர்ச்சிரா (பக்ஷிகளின் சரணாலயம்) என்ற ஜோடாகிர் (சண்டை மலை) இன்னுமிருக்கிறது. இதில் வரும் ஜோகி சரித்திர பாத்திரம். கதாநாயகன் ராவ்ஜோடா, அவன் தந்தை ரின்மல், மேவாரின் மகாவீரன் சந்தசிம்மன், அவன் புதல்வர்கள் காந்தாஜி, மஞ்ஜாஜி அனைவரும் சரித்திர பாத்திரங்கள். பிருமச்சாரி ஹர்பா சங்க்லா, குதிரை வளர்ப்பவரும் மகா வீரருமான பாபுஜி— எல்லோரும் சரித்திரத்தில் ஜீவிக்கிறார்கள்.

மலை அரசி ஒருத்திதான் கற்பனைப் பாத்திரம். இந்தக் கதையின் சரித்திர நிகழ்ச்சிகளில் அவள்

பட்டுக் கயிறுபோல் நுழைந்து இழைந்து ஓடுவதைப் பார்ப்பீர்கள்.

மிகுந்த சிரத்தையுடனும் எல்லாச் சுவைகளையும் இலக்கிய அளவோடு இணைத்து இந்த சரித்திர நாவலை எழுதியிருக்கிறேன். இதை நீங்கள் மிகுந்த ஆவலுடன் படிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

"வாராந்திர ராணி" பத்திரிகையில் தொடர்கதையாக வந்தபோது, மிகுந்த ஆவலுடன் ஆதரித்த நீங்கள் புத்தக வடிவிலும் ஆதரிப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

Col James Todd எழுதிய "Anals and Antiquities of Rajasthan" என்ற நூலின் முதல் பாகத்தில் 69ஆம் பக்கத்திலிருந்து 72ஆம் பக்கம் வரையிலும் இரண்டாம் பாகத்தில் 371ஆம் பக்கத்திலிருந்து 373ஆவது பக்கம் வரையிலும் இந்தக் கதைக்கான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

இந்த நூலைப் படிப்பதால் நீங்கள் ராஜபுதன வரலாற்றின் ஒரு முக்கியப் பகுதியைப் படிக்கிறீர்கள்.

சென்னை-17 சாண்டில்யன்
13-9-1981

1. சுடர்க்கொடி

சரித்திரம், பூமி, வாழ்க்கையின் கர்ம பலன்கள் ஆகிய சகலத்திலும் ஒரு சுழற்சியும் தொடர்ச்சியும் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுவதில் எத்தனை உண்மையிருக்கிறதென்பதை, சுற்றிலும் தன்னை எரித்துக்கொண்டிருந்த மணற்பரப்பை நோக்கிய மார்வார் ராஜபுத்திரனான ராவ்ஜோடா சந்தேகமறப் புரிந்துகொண்டான். எங்கும் வெள்ளை வெளேரென்று தெரிந்த அந்தப் பாலைவனத்துக்கு தனது கிரணங்களால் அதிகப்படியான தீட்சண்யத்தையும் பளபளப்பையும் பிற்பகல் கதிரவன் அளித்து அழகு செய்தாலும், அந்த அழகே தன்னைக் கொன்றுவிட முடியும் என்ற முடிவுக்கும் வந்த அந்த வாலிபன், "அழகினால் ஆபத்தே தவிர சுகம் ஏதுமில்லை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, கொல்லும் வெயிலிலும் தன்னைச் சுமந்துகொண்டிருந்த புரவியின் முதுகில் ஒருமுறை தனது கையால் தட்டிக் கொடுத்ததன்றி, அதன் முதுகிலிருந்து கீழே இறங்கவும் செய்தான். அப்பொழுது அவன் கிட்டத்தட்ட அந்தப் பாலைவனத்தைத் துண்டுசெய்து ஓடிக்கொண்டிருந்த லூனி என்ற உப்பனாற்றங்கரைக்கு வந்துவிட்டதால் தன்னை இரண்டு நாட்களாகத் துரத்தி வந்த ஆபத்து விலகி விட்டதென்ற நினைப்பில் ஆற்றங்கரையை நடந்தே அணுகிய மார்வார் ராஜபுத்திரன் ஆற்றில் இறங்கி அதன் நீரை வாரித் தன் முகத்தில் அடித்துக்கொண்டான். பின்னால் தொடர்ந்து தன்னுடன் ஆற்றில் இறங்கிய புரவியின் முகத்திலும் நீரை அள்ளித் தெளித்தான். அந்த சைத்தியோபசாரத்தால் புரவி

உடல் சிலிர்த்து, முகத்தை அந்த வாலிபன் தோளிலும் வைத்துப் புரட்டியது. அதன் முகத்தைத் தனது வலது கையால் தட்டிக் கொடுத்த ராவ்ஜோடா, மீண்டும் லூனி நதிக்குப் பின்னாலிருந்த பாலைவனத்தை உற்றுநோக்கினான். பழையபடி ஆரம்பத்தில் மனத்தில் உதயமான தத்துவத்தை எண்ணிப் பார்த்து அது முற்றிலும் சரி என்று மனத்துக்குள் சொல்லியும் கொண்டான்.

"காமத்வஜமென்றும் கனோஜ் என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்ட கன்னோசியிலிருந்து, கங்கைக்கரையில் அமைந்திருந்த விஸ்தாரமான வளப்பமான நாட்டிலிருந்து, ஏன் இந்த மாருஸ்தலி என்றும் மாருஸ் தானமென்றும் அழைக்கப்பட்ட மரண பூமிக்கு சரித்திரம் எங்களைத் தள்ளிவிட்டது?" என்று வினாவைத் தொடுத்த அந்த ராஜபுத்திரன் "எங்கள் மூதாதையரான ஜெயசந்திரன் தனது மகளைத் தூக்கிச் சென்று கடிமணம் புரிந்த பிருதிவிராஜனை நசுக்கும் எண்ணத்துடன் கோரி நவாபான ஷாபுடீனை வரவழைத்தான். ஷாபுடீன் பிருதிவிராஜனையும் அழித்தான்; ஜெயசந்திரனையும் அழித்தான். ஆகவே, ஜெயசந்திரன் சந்ததிகளில் ஒருவரான சேவாஜி இந்த மாருஸ்தலி என்ற மரண பூமியில் அரசை நிறுவினார். ஜெயசந்திரன் செய்த பாவம், அவர் சந்ததியை கங்கையின் உயிரூட்டும் வளமிக்க பூமியிலிருந்து விரட்டியது மட்டுமல்ல, மார்வார், மாரோவார், *மாருஸ்தலி என்றெல்லாம் அழைக்கப்பட்ட இந்த வரண்ட பாலைவனத்து, மரணபூமிக்கு அனுப்பிவிட்டது. இப்பொழுது மீண்டும் என் தந்தை அதே சிதோதயர்களுக்கு துரோகம் செய்தார். இதோ நான் மரண பூமிக்கு மீண்டும் வந்துவிட்டேன். ஜெயசந்திரன் பாவத்திலிருந்து சிறிது மீட்சி, சிறிது புண்யம், சேவாஜியின் முயற்சியால், இப்பொழுது எனது தந்தையின் துரோகத்தால் மீண்டும் அதே பழைய பாலைவனம் ஒரு சுழற்சி, பாவ

* 'மாருஸ்தலி'யின் பொருள் 'மரணபூமி'.

புண்யங்களின் ஒரு சுற்று முடிந்துவிட்டது. சரித்திரம்கூட ஒரு சுற்று சுற்றிவிட்டது. உயர்ந்த சாம்ராஜ்யம் சிதைந்து இருநூறு வீரர்களுடன் இந்தப் பாலைவனத்தை அடைந்த சேவாஜி இங்கு அரசை நிறுவினார். அந்த அரசு இப்பொழுது ஆட்டங் கண்டிருக்கிறது. நான் மீண்டும் அவரைப்போல் நிர்க்கதியாக இங்கு வந்திருக்கிறேன். சரித்திரமும் சுழன்றுவிட்டது ஒரு முறை. இத்தனைக்கும் காரணம் பூமி சக்கரமாயிருப்பதாலா? அது சுழல்வதால் வாழ்க்கையும் சுழலுகிறதா? சக்கரத்தில் வைக்கப்படும் ஒரு பொட்டுப்போல வாழ்க்கையும் உருண்டு, ஒருசமயம் மேலும் இன்னொரு சமயம் கீழுமாகச் சுழல்கிறதா? அப்படித்தானிருக்க வேண்டும்" என்று தனது கேள்விக்குப் பதிலும் சொல்லிக்கொண்டான் ராவ்ஜோடா.

இப்படி சிந்தனை வசப்பட்டுக்கொண்டே சித்தூரில் மேவார் வம்சத்தவனும் பரம தியாகியுமான சந்தசிம்ஹனால் கொல்லப்பட்ட தனது தந்தைக்கு லூனியில் இறங்கி மூழ்கி நீராடவும் செய்தான் மார்வார் இளவரசன். பிறகு புரவியின் மீது சொட்டச் சொட்ட இருந்த உடைகளுடனும் தலை மயிருடனும் ஏறி ஆற்றைக் கடந்து திரும்பி அக்கரையில் நீண்ட தூரத்தில் தெரிந்த ஆராவலி மலைத்தொடரை நோக்கி ஒரு முறை பொறாமைப் பெருமூச்சும் விட்டான். "ஆராவலி வலிமை மிக்கவர்களின் இருப்பிடம். என்ன அழகான பெயர்" என்றும் சொல்லிக்கொண்டு மார்வாரின் தென் பகுதியிலிருந்த அந்த மலைத்தொடரை நோக்கி இரண்டாம் முறையும் பெருமூச்சு விட்டான். * "ஆராவலி! வலிமை மிக்க

* 'ஆர்' என்றால் ராஜஸ்தானியில் மலை என்று பொருள். தெலுங்கு மொழியிலும் மலைக்கு 'ஆர்' என்ற சொல்தான். 'வலி' என்றால் வலிமை. வலிமை மிக்க மலை அல்லது வலிமை மிக்கவர்களின் புகலிடம் என்பதால் ராஜபுத்தர் மலைத்தொடருக்கு ஆராவலி என்று பெயர். *Hill of Strength, Refuge of Strength. Annals and Antiquities of Rajasthan By col.James Todd, Vol I. p.p.688*

(வலி என்றால் வலிமையாதலால் தமிழ்—ராஜஸ்தானி மொழிகளில் ஒற்றுமையையும் கவனிக்கலாம்)

வர்களின் புகலிடம்! மகாவீரர்களான சித்தூர் ராணாக்களுக்கு சிதோதய வம்சத்தாருக்கு அதுதானே புகலிடம்? அந்த வம்சத்தை அந்த மலைத்தொடர் எவ்வளவு தூரம் பாதுகாத்திருக்கிறது! சரித்திரமே இதற்குச் சான்று" என்றும் சொல்லிக்கொண்ட மார்வார் இளவரசன் "சித்தூர் ராணாவுக்கு சதி செய்யப் போய்த்தானே இந்த கதி எனக்கு வந்தது?" என்றும் கேட்டுக்கொண்டான் மனத்துள். இரண்டு நாட்களுக்கு முன்னர் முடிந்த கதை அப்பொழுதும் அவன் மனக்கண்ணில் எழுந்தது.

வயோதிக வயதிலிருந்த மேவார் மன்னர் லக்க ராணாவுக்கு தமது மகளைக் கொடுத்தார் மார்வார் மகாராஜா ரின்மல். அவளுக்கு மகன் பிறந்தால் அவன்தான் அரசாள வேண்டும் என்ற நிபந்தனையையும் ஏற்படுத்தினார். அதற்கு லக்கராணா சம்மதிக்காவிட்டாலும் அவரது மூத்த மகனும் பட்டத்துக்குரியவனும் மகாவீரனுமான சந்தன் சம்மதித்தான். தான் சிம்மாசனம் ஏறுவதில்லையென்று சபதமும் செய்தான். அப்படியே தந்தை இறந்ததும் தனது இளைய தாயாரின் மகனான மோகுல்ஜியை சிம்மாசனத்தில் ஏற்றி முடிசூட்டி, தான் பக்கபலமாக நின்று அரசாண்டான். மோகுல்ஜியை சந்தன் வெறும் கைப்பொம்மையாக்கிவிட்டான் என்று சிற்றன்னை புகார் செய்தாள். சந்தன் அவள் எண்ணங்களுக்குத் தலைதாழ்த்தி தனது வீரர்களுடன் நாட்டை விட்டு அகன்றான். சிற்றன்னையின் பிறந்தகத்தார், தகப்பன், மாமன்—சகலரும் சித்தூரை வசப்படுத்திக்கொண்டார்கள். இளையராணி தனது மடத்தனத்தை உணர்ந்து சந்தனுக்கு சொல்லியனுப்பினாள். சந்தன் தனது வீரர்களுடன் தசராவின் கடைசி நாளன்று மாறுவேடம் புனைந்து சித்தூருக்குள் நுழைந்துவிட்டான். சிதோதய வீரர்கள் மார்வார் ராஜபுத்திரர்களை வெட்டிச் சாய்த்தார்கள். மார்வார் மகாராஜாவின் முடிவு கேவல மாகவும் கேலிக்கு இடமாகவும் இருந்தது. தனது மகளின் பணிப்பெண்ணுடன் சரசமாட முற்பட்டு, அவள் கொடுத்த

மதுபானத்தை அருந்தி மயக்கமாகப் படுத்திருந்த மகாராஜாவை, பணிப்பெண் அவர் தலைப்பாகையைக் கொண்டே அவரைக் கட்டிலில் கட்டினாள். அப்பொழுது நுழைந்த சிதோதய வீரர்கள் மார்வார் அதிபதியை வெட்டிப் போட்டார்கள். இப்படி தன்னுடைய சதிக்கு துர்க்கதியால் பிராயச்சித்தம் செய்தார் மகாராஜா ரின்மல். அவரது மகன் ராவ்ஜோடா அப்பொழுது சித்தூர் நகரில் வேறொரு மூலையில் இருந்ததால், செய்தி கேட்டு புரவியிலேறி அதன் வேகத்தால் தப்பினான். தப்பியும் பயனென்ன? இரண்டு நாள் பயணம் மாருஸ்தலியில், மரணத்தின் பிடியில்.

இந்த நிகழ்ச்சிகளை எண்ணி "மேவாருக்கு இழைத்த பாவப் பாசியை மார்வார் தனது ரத்தத்தால் துடைத்துவிட்டது" என்று தீர்மானித்த ராவ்ஜோடா "இந்த மார்வார் ராஜ்யத்தை மீண்டும் நிலைநிறுத்துகிறேன். மார்வார் ராஜவம்சத்தில் இன்னுமொருவன், இந்த ராவ்ஜோடா, சாகவில்லை இருக்கிறான்" என்று தனது மார்பை ஒருமுறை வலது கையால் தட்டிக்கொண்டான். அந்த பெருமிதத்துடன், உறுதியுடன் ஏக்கத்தை உதறி தூரத்தே கண்ணுக்கெழுந்த மலைச்சிகர மொன்றை நோக்கினான். அங்குதான் தனக்கு விடிமோட்சமிருக்கிறதென்பதையும் புரிந்துகொண்டான். பாகுர்ச்சிரா (பட்சிகளின் சரணாலயம்) என்று பிரசித்தி பெற்ற அந்த மலைச்சிகரம் பட்சிகளைப் போலவே தனக்கும் அடைக்கலம் அளிக்க முடியும் என்று எண்ணி அதை நோக்கிப் புரவியை நடத்தினான்.

நாழிகைகள் ஓடின. மெள்ள அந்த மலை உச்சி, மலைவாயிலில் கதிரவன் விழுந்துவிட்ட நேரத்தில் நன்றாகவே கண்ணுக்குத் தெரிந்ததால், மனத்தில் நிம்மதியுடன் புரவியைச் செலுத்தி அதன் அடிவாரத்துக்கு ராவ்ஜோடா வந்த நேரத்தில் இருள் ஓரளவு அடர்ந்தேவிட்டது. இருளில் பெரும் பிசாசு போல் உயர்ந்து நின்ற அந்த மலையும், மலையின்

அடர்த்தியான மரங்களும், சலசலவென்று எங்கோ ஓடிய இரண்டொரு அருவிகளின் ஒலியும், மலைச்சிகரத்தை அடைந்து கூண்டுகளில் புகுந்துவிட்ட பட்சி ஜாலங்களின் நானாவித கூச்சல்களும் அச்சத்தையும் இன்பத்தையும் கலந்தே அளித்தாலும், அச்சமென்பதை லவலேசமும் அறியாத அந்த ராஜபுத்திர வீரன் இன்பத்தை மட்டும் மனத்தில் வாங்கி புரவியை மலைமீது ஏறவிட்டான்.

எத்தனையோ சுகதுக்கங்களை தனது எஜமானுடன் பகிர்ந்துகொண்டிருக்கும் அந்த வீரப்புரவியும் செங்குத்தான அந்த மலையில் சற்று கஷ்டத்துடனேயே ஏறிச் சென்றது. கரடு முரடான பாதையில் அதன் கால்கள் சிற்சில சமயங்களில் கற்களை இடறி உருட்டினாலும், மரங்கள் சில உடலில் உராய்ந்தாலும், அவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு ஏறிய புரவியும் உச்சிக்கு சிறிது தூரத்தில் வந்ததும் வயிறு ஏறி இறங்கி இறைக்க வாயில் நுரை தள்ள சிறிது நின்றது. அதன் சிரமத்தை உணர்ந்த ராவ்ஜோடா அதன் முதுகிலிருந்து இறங்கி தனது சட்டைத் துணியில் அதன் வாயிலிருந்த நுரையைத் துடைத்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் தேடி வந்த இடம் கண்ணுக்குத் தெரியவில்லை. மலையின் உச்சியைச் சுற்றி வாயைத் திறந்துகொண்டிருந்த எத்தனையோ குகைகளில் எந்தக் குகையில் வனப்பிரஸ்த ஜோகி இருப்பார் என்று எண்ணிப் பார்த்தான் சில விநாடிகள். பிறகு மலைச்சரிவில் ஏறினான் கால்நடையாக. அவன் கண்களில் பக்கத்து மரங்களிலிருந்து தொங்கிய இரண்டொரு கயிறுகள் படவே ஜோகியின் இருப்பிடம் பக்கத்தில்தான் இருக்கும் என்ற எண்ணத்தில் இருபுறம் தலையைத் திருப்பி நோக்கிய ஜோடாவின் கண்களில் சிறிது தூரத்திலிருந்த ஒரு வெளிச்சம் தெரியவே அதை நோக்கி நடந்தான்.

அந்த வெளிச்சம் தெரிந்த இடம் கிட்டே வரவர அதன் ஜ்வாலையும் நன்றாகத் தெரிந்தது அவன் கண்களுக்கு. புரவி பின்னால் நடந்துவர அந்த ஜ்வாலையை நோக்கி நடந்த ராவ்

ஜோடா, அது இருந்த இடத்தை சமீபித்ததும் தான் தேடிவந்த மலைக்குகை அதுதானென்பதைப் புரிந்துகொண்டதால் மகிழ்ச்சியையும் தன் துக்க சிந்தனையில் வரவழைத்துக் கொண்டு ஜ்வாலையை அணுகினான்.

அதே சமயத்தில் அந்த ஜ்வாலையும் குகைக்குள்ளேயிருந்து நகர்ந்து அந்த வாலினை நோக்கி வந்தது. குகைவாயிலை அடைந்ததும் ஜ்வாலை நகர்ந்து வந்த காரணத்தை மார்வார் இளவரசன் புரிந்துகொண்டான். அந்தப் பந்தத்தை ஏந்தி குகை வாயிலில் நின்றிருந்தாள் ஒரு பெண். மலையின் செழிப்பெல்லாம் அவள் வனப்பில் தெரிந்தது. உடை அதிகமாக இல்லை. மரவுரிதான் தரித்திருந்தாள். ஆனால் அவள் நாசியை அலங்கரித்த வைர நத்து அவள் துறவியல்லவென்பதை அறிவித்தது. அவள் கண்கள் ஜோடாவைக் கண்டதும் பளபளத்தன பந்தத்தின் வெளிச்சத்தில்.

"இங்கு ஏன் வந்தாய்?" என்ற அவள் கேள்வியில் குரூரம் இருந்தது.

"வனப்பிரஸ்த ஜோகியைப் பார்க்க வந்தேன்" என்றான் மார்வார் இளவரசன்.

அவள் சிறிது சிந்தித்தாள். "உன் கைகளை அதோ அந்தச் சுனையில் சுத்தம் செய்துகொண்டு வா" என்று கூறினாள், சிறிதும் கருணை ஒலிக்காத வரண்ட குரலில்.

"லூனியில் நீராடித்தான் வந்திருக்கிறேன்" என்றான் ராவ் ஜோடா.

"ரத்தம் படிந்த உன் கைகளை லூனி போக்க முடியாது. அந்த அருவியால் முடியும்" என்றாள் அந்த மலைப்பெண். மீண்டும் அருவியைச் சுட்டிக் காட்டினாள் தலையின் லேசான அசைப்பினால்.

"ரத்தமா? எது ரத்தம்?" என்று தனது கைகளை பந்த வெளிச்சத்தில் காட்டினான் மார்வார் அரசகுமாரன்.

"பாவத்தின் ரத்தம் பந்தத்தில் தெரியாது. போய் சுத்தம் செய்து வா" என்றாள் அந்த அழகி மீண்டும்.

அதிர்ச்சியுற்று நின்றான் மார்வார் இளவரசன். பந்தத்தின் சுடரின் பக்கத்தில் நின்றிருந்தாள் அந்த சுடர்க்கொடி. அவள் முகத்தில் எந்தவித உணர்ச்சியுமில்லையென்று சொல்ல முடியாது. வெறுப்பு தாண்டவமாடவே செய்தது.

அவளை மீண்டும் ஒருமுறை நோக்கிய அரசகுமாரன் அவள் கண்களில் தெரிந்த உறுதியால் சட்டென்று திரும்பி அருவியை நோக்கிச் செல்லக் காலடி எடுத்து வைத்தான்.

"நன்றாக அலம்பு சிசோதய வம்சத்துக்குச் செய்த பாவத்தின் கறையை" என்ற இரக்கமற்ற அவள் சொற்கள் அவன் காலடியைத் தேக்கின. சிந்தனையையும் தூண்டின.

திரும்பி நோக்கினான் அவளை ராவ்ஜோடா. "யார் சொன்னது உனக்கு? என்று வினவினான்.

"முக்காலமும் அறிந்தவர்."

"ஜோகியா?"

பதிலுக்கு தலையை மட்டும் அசைத்தாள் அவள். அந்த அசைப்பில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்ததை அந்த வாலிப வீரன் புரிந்துகொண்டான்.

2. விளக்கில் விரிந்த கதை

வனப்பிரஸ்த ஜோகியின் மலைக்குகை வாயிலில், மரங்கள் அடர்த்தியாயிருந்ததால் இருள் கடுமையாக இருந்த அந்தப் பிராந்தியத்தில், பந்தத்தை கையில் ஏந்தி அதன் சுடர் முகத்தில் வீச சுடர்க்கொடியென்ற காரணப் பெயருக்கு முற்றும் பொருத்தமாய் விளங்கிய அந்த அழகு பிம்பத்தை திரும்பி நோக்கிய ராவ்ஜோடா அசைவற்று நின்றான் பல விநாடிகள். பந்தத்தின் ஜோதியில் பளபளத்த அவள் சந்திரபிம்ப முகத்தில் நக்ஷத்திரங்கள் போல் ஜொலித்த இரு கருவிழிகளையும் கண்ட மார்வார் ராஜபுத்திரன் நக்ஷத்திரங்களிலும் சில கறுப்பு நக்ஷத்திரங்கள் இருக்க வேண்டும் என்று நினைத்தான். அப்படி இருப்பதால்தான் அமுதத்தைக் கொட்ட வேண்டிய விழிகள் வெறுப்பு எனும் விஷத்தைத் தன்னை நோக்கி கக்குவதாக நினைத்தான். அவள் விசால வதனத்தின் சந்திரனையொத்த பொலிவு சற்றே சினத்தின் விளைவாக சிவந்து அவள் நெற்றியில் தீட்டியிருந்த குங்குமத்தின் சிவப்பை அர்த்தமற்றதாக செய்துவிட்டதையும், அவள் நுதலின் கீழ் வளைந்து கிடந்த கருத்த புருவங்களிலும் எழுச்சியோ வேறெவ்வித அசைவுகளோ இல்லாததால் அவை தொடுக்க வேண்டிய மாரன் கணைகளுக்குப் பதில் அக்னிக் கணைகளை தொடுக்கத் தயாராயிருந்ததையும், அவள் முதலில் பேசியபோது சற்றே தெரிந்த முத்துப்பற்கள் உள்ளே நன்றாகக் கடிக்கப்பட்டதால் புடைத்திருந்த செழுமையான காட்டு மலர்போல் வழவழப்பு மண்டிய அழகிய சிவந்த கன்னங்கள்

எத்தனையோ அழைப்புகளை விடுத்தாலும், எட்டா மலர்களைப்போல எச்சரிக்கைகளையும் விடுத்திருந்ததையும் கவனித்தான் ராவ்ஜோடா. அந்த சுந்தர முகத்துக்குத் தனி அரக்கு முத்திரை வைத்தது போலும், அரக்கு உருகும் சமயத்தில் லேசாக இளகும் பக்குவத்துடன் நீரோட்டம் கலந்தும், ஏதோ சிறிய தனி மலரொன்றை பங்கஜத்தை இயற்கை வேண்டுமென்றே பொருத்திவிட்டது போலும், தெரிந்த அமுதச்சுனை உதடுகள், அளவுக்குமீறிய மயக்கத்தை உண்டு பண்ணியதையும், அதேசமயத்தில் அச்சத்தையும் வெளியிடுவதையும் பார்த்த மார்வார் இளவரசன் தனது உள்ளத்தில் சற்று ஏக்கமும் அடைந்தான்.

அவள் வெண்மைக் கழுத்தும் அதற்குக் கீழே புலப்பட்ட மேல் மார்பும், வர வர அது புடைத்து இரண்டாகப் பிரிந்து அவள் வாழ்ந்த மலையைப்போல திண்மையையும் அதன் உச்சியைப் போன்ற உச்சிகளையும் கொண்டு, மலையைப் பாதுகாக்கும் மரங்கள் அவற்றுக்கு தங்கள் பட்டையால் செய்த உடையைக் கொடுத்து காக்க முற்பட்டும் முடியாமல் திணறியதை அரசகுமாரன் கண்டான். அப்படி மறைக்க முடியாததால் மேலேயும் அடியிலும் சற்றே தெரிந்த இரட்டை இந்திரஜாலத்தின் மோகன விளிம்புகள் மரவுரியின் அந்த இடத்துக்குத் தனி மகிமையைக் கொடுத்திருப்பதையும், மார்புக்குக் கீழே உடையால் மறைக்கப்படாமல் தெரிந்த ஆலிலை வயிறும் சரேலென்று குறுகி பிறகு விரிந்து பாயும் புண்ணிய நதிகளைப் போலக் காட்சியளித்த இடையும், காட்சியளிக்காத பின்னழகுகளும், முன்புறத்தில் உறுதியாக நின்ற கால்களும், கண்ணுக்குப் புலனான ஆடுசதைகளின் திடமும் அந்த ராஜகுமாரனின் இதயத்தில் வெறியை ஊட்டினாலும், புலனாகாத இடங்களையும் சாமுத்திரிகா லட்சண சாஸ்திரம் புலப்படுத்திவிட்டதன் விளைவாக அவன் புத்தி பெருமயக்கம் கொண்டது. இத்தனையையும் பறக்க அடித்தது பல அர்த்தங்களை அள்ளிக் கொட்டிய அவள்

புன்சிரிப்பு. அந்த புன்சிரிப்பில் கலந்த இகழ்ச்சியால் லேசாக வலதுபுறம் இழுபட்ட இதழ்களுக்கு மேலிருந்த கன்னத்தில், அவள் அழகிய நாசியின் வலது பக்கத்திலிருந்த நத்தின் வைரங்கள் சுடரொளியால் பலவித வண்ண ஜாலங்களைப் புள்ளி புள்ளியாகக் கன்னத்தில் இழைத்திருந்ததால் இயற்கை அவளுக்குப் புது நகை செய்து போட்டிருந்த பிரமையை அளித்தது. இதனால் கண்களில் வெறி வீச அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தான் மார்வார் இளவரசன்.

அந்த சமயத்தில் அவள் லேசாக நகைத்தாள். நகைப்பில் இன்பமும் இருந்தது; விஷமும் இருந்தது. அதனால் ராவ் ஜோடாவின் பொறுமையும் எல்லைமீறவே, "ஏன் நகைக்கிறாய்?" என்று வினவினான் சினத்துடன்.

அவள் விநாடி நேரந்தான் நிதானித்தாள். "உன் கண்களில் வெறி இருக்கிறது" என்று சொற்களை அச்சமின்றி உதிர்த்தாள்.

"அறிவு இருக்கிறது எனக்கு" என்று சீறினான் மார்வார் இளவரசன்.

"அதுதான் உபத்திரவம்" என்றாள் அந்தப் பெண். அப்படிச் சொல்லி சற்று நிமிர்ந்து நின்றாள்.

அப்படி நிமிர்ந்ததில் அரச தோரணை தெரிந்தது. "இந்த மலைக்கு இவள் அரசியாயிருக்கத் தகுந்தவள்" என்று உள்ளூர சொல்லிக்கொண்ட ராவ்ஜோடா "நீ சொல்வது புரியவில்லை" என்றான் வெளிப்படையாக.

"உனக்கு அறிவு இருப்பதாகச் சொன்னாய். உன் கண்களில் நான் வெறியைப் பார்க்கிறேன். அறிவுடன் வெறி கலக்கும்போது நெறி புரண்டுவிடுகிறது. இல்லாவிட்டால் மலையில் தனியாக வாழும் ஒரு பெண்ணை இப்படி அலசிப் பார்த்திருக்கமாட்டாய் நீ" என்ற அந்த அழகி மீண்டும் நகைத்தாள்.

மேலும் நகைத்தான் ராவ்ஜோடா. "நீ யார்?" என்று வினவினான் இறுதியில் அவளை நோக்கி.

"குருஜீ சொல்லுவார். சீக்கிரம் கைகளைக் கழுவிவிட்டு வா" என்றாள் அவள். தூரத்திலிருந்த சுனையைத் தலையின் ஒரு அசைப்பினால் சுட்டிக் காட்டவும் செய்தாள்.

அதற்குமேல் ஏதும் பேசாமல் அருவியை நோக்கி நடந்தான் ஜோடா. அவன் புரவியும் அவனைத் தொடர்ந்து அவன் சுனையில் இறங்கியதும் கரையில் நின்றது, சுனை நீரை உற்று நோக்கிக்கொண்டு. அப்படி அருகில் வந்து நின்ற புரவியைத் திரும்பிப் பார்த்த ராவ்ஜோடா, "என்ன பார்க்கிறாய்? இதில் அவள் அழகு பிம்பம் தெரியாது. தெரிந்தாலும் பார்க்காதே. மேற்கொண்டு பாவத்தைச் சுட்டிக்கொள்ளாதே" என்று கூறிய அந்த மார்வார் வாலிபன், தனது கால் சராயைச் சுருட்டி விட்டுக்கொண்டு சுனையின் முனையில் இறங்கி தன் கை கால்களை நீரில் நன்றாகக் கழுவினான். முகத்திலும் நீரை வாரி அடித்துக்கொண்டு தன் அங்கியால் துடைத்துக்கொண்டான்.

அடுத்து ஒருமுறை குகை வாயிலில் நின்றிருந்த மோகினியை நோக்கினான். பிறகு புரவியின் கடிவாளத்தைப் பிடித்து அதை சுனையில் இறக்கி, நீரை வாரி இறைத்து அதன் நான்கு கால்களையும் முதுகையும் தேய்த்து நன்றாகக் கழுவினான். அவன் செய்கையால் குகை வாயிலில் நின்ற காரிகையின் முகத்தில் சினம் தெரிந்தது. பந்தத்துடன் நடந்து சுனையருகே வந்து, "இது புரவி குளிப்பாட்டும் இடமல்ல" என்றாள் சீற்றத்துடன்.

"அப்படியா!"

"ஆம்."

"புரவி குளிப்பாட்ட?"

"வேறு இடமிருக்கிறது. இது..." அவள் சொற்களை முடிக்கவில்லை.

"இது?" என்று அவன் வினவினான்.

"நான் நீராடும் இடம்" என்றாள் அவள். அதுவரை உறுதியாயிருந்த அவள் குரலில் சிறிது தயக்கம் காணப்பட்டது.

ராவ்ஜோடா அவளை நோக்கினான் வியப்புடன். பிறகு சொன்னான், "புரவியை முழுதும் குளிப்பாட்டவில்லை. கால்களைத்தான் கழுவினேன்" என்று.

"அதன் கால்களைக் கழுவ இப்பொழுது என்ன அவசரம்?" என்று அவள் வினாவினாள் எரிச்சலுடன்.

"அதுவும் பாவி" என்றான் ராவ் ஜோடா.

"புரவியா?"

"ஆம். பாவியான என்னைத் தூக்கி வந்திருக்கிறது. குற்றவாளிக்கு உதவுகிறவர்களும் குற்றவாளிகள்தான்" என்ற ஜோடா புன்முறுவல் கொண்டான்.

அவன் தன்னைப் பார்த்து நகைக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட அந்த மலைமகள் "சத்தியம் பேசுகிறாய். வா குகைக்கு" என்று சொல்லிவிட்டு திரும்பி நடந்தாள் குகையை நோக்கி. அப்படி நடந்தபோதும் அவள் பந்தத்தை இடக்கையில் செங்குத்தாகப் பிடித்திருந்ததால் அவள் பின்னழகு நன்றாகத் தெரிந்தது. எடுத்து முடிந்த குழல் மிக அடர்த்தியாயும் பருமனாயும் இருந்தது. மரவுரியால் சரியாக மறைக்கப்படாத முதுகு யவனர்களின் முக்கோணமான நீளக்கவசம் போலும், மறைக்கப்பட்டாலும் தெரிந்த பின்னெழுச்சிகள் அவள் வசித்த திண்மையான மலைப் பகுதிகள் போலும் அவள் சரீரத்தின் மேற்பகுதியையும் கீழ்ப்பகுதியையும் பிரித்த சிற்றிடை இரு பெரிய சுமைகளை இழுத்துப்போட்ட இரும்புக் கவசம்

போலும் தெரிந்தது. அவற்றை எப்படி அந்த மலர்ப்பாதங்கள் தாங்கிச் செல்ல முடிந்தது? அதுவும் இயற்கையின் தனி சக்திதான், தனி விந்தைதான் என்று தீர்மானித்தான் மார்வார் இளவரசன்.

முன்னால் நடந்த அவள், சில அடி தூரம் நடந்ததும் பின்னால் கலவரம் ஏதும் கேட்காததால் தலையை மட்டும் திருப்பி அவனை நோக்கி "ரசனையின் பொருள், இடம், காலம், இவற்றைப் பிரித்துப் பார்ப்பதற்கு பகுத்தறிவு என்று பெயர். நாகரிகம் என்று சொல்வதுண்டு" என்று கூறினாள். அப்படியும் அவன் நகராததால் "பாவத்தை வளர்த்துக் கொள்ளாதே. ஏற்கனவே செய்துள்ளது இன்னும் இரண்டு தலைமுறைகளுக்குப் போதும்" என்று சீறிவிட்டு வேகமாக நடந்துவிட்டாள். பிறகு அவனுக்காகக் காத்திராமல் குகைக்குள் நுழைந்து சென்றாள்.

அவள் உள்ளே சென்றுவிட்டதால் பந்தம் மறைந்து விட்டதன் விளைவாக இருளின் முழு கருமை ஜோடாவையும் அவன் புரவியையும் வளைத்துக் கொண்டது. சில விநாடிகள் கழித்து குகைக்குள்ளிருந்து சின்னஞ்சிறு தீப வெளிச்சம் தெரியவே அதை அடையாளம் கொண்டு, புரவியை சுனைக்கரையிலேயே நிறுத்திவிட்டு, குகையை நோக்கி விரைந்தான் அந்த வாலிபன். குகையை அடைந்ததும் உள்ளே எட்டிப்பார்த்தான். வெளிச்சத்தைத் தவிர ஏதும் தெரியாததால் வியப்புடன் உள்ளே நடந்தான். குகையின் உட்புறம் மிகவும் குறுகலாயிருந்ததால் ஆஜானுபாகுவான ராவ் ஜோடா பெரிதும் வளைந்த கூனன்போல நடந்தான். பத்தடி தூரம் இம்சைப்பட்டு நடந்ததும் குகை சற்று இடது புறம் திரும்பியது. அந்த இடதுபுற மூலையில் மனிதன் என்று சொல்லக்கூடிய ஒரு எலும்புக்கூடு தெரிந்தது. அதைப் பெரிய தலைச்சடைகள் மூடியிருந்தன. அந்த உருவத்தின் எதிரில் ஒரு அகல் விளக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த உருவத்தின்

எதிரே ஒருபுறமாக குகையின் பாதையொன்றில் சாய்ந்து நின்றிருந்தாள் அந்த அழகி. ராவ் ஜோடாவின் வருகையைக் கண்டதும் அருகில் வரும்படி சைகை செய்தாள். பிறகு குனிந்து அந்த உருவத்தின் காதில் ஏதோ சொன்னாள். அதைக் கேட்டதும் மெல்ல நகைத்த அந்த உருவம், தனது தலையை உயர்த்தி சடைகளை பின்னுக்குத் தள்ளவே ஈட்டி போன்ற இரு கண்கள் ஆராய்ந்தன ராவ்ஜோடாவை. அவன் உட்காரலாமென்பற்கு அடையாளமாக மெல்லிய பளபளத்த கையொன்று அசைந்தது.

ஜோகியின் கண்களின் ஜொலிப்பையும், காயக்கிலே சத்தினால் தூய்மையான ரத்தம் சிவப்பாக ஓடியதால் சுருங்கியிருந்தாலும் பளபளத்த பொன்னிற தேகத்தையும் கண்ட ராவ்ஜோடா குகையின் தரையில், கடுமையான மலைப் பாறையில் நெடுஞ்சாண் கட்டையாக விழுந்து வணங்கினான். ஜோகி ஏதும் பேசவில்லை. அவர் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. "எழுந்திருக்கலாம். விளக்கின் எதிரே உட்காரலாம்" என்று அந்த பெண்ணே ஆணையிட்டாள்.

பதிலேதும் பேசாமல் எழுந்து விளக்குக்கு எதிரே உட்கார்ந்தான் ராவ்ஜோடா. அப்பொழுதுதான் ஜோகி சிறிது அசைந்து தனது வலது கையை நீட்டி, ஆள்காட்டி விரலால் அகலின் திரியைத் தூண்டினார். பக்கத்தில் கிடந்த பல இலைகளில் பச்சையாய் ஒன்றை எடுத்துக் கிள்ளி அதை எண்ணெயில் போட்டார். பச்சிலையும் விளக்குக்கு ஏதோ சக்தியை அளித்திருக்க வேண்டும். விளக்கு பெரிதாக சுடர்விட்டு எரிந்தது. அந்தச் சுடர் மெள்ள பட்டையாக விரிந்தது. அதில் விரிந்தது பெருங்கதை.

3. துணைவன்!

விரிந்து படர்ந்து எரிந்த விளக்கின் சுடரை விந்தைக் கண்களுடன் நோக்கிய ராவ்ஜோடா. அதில் விரிந்த கதையைக் கண்டதும் மெய்சிலிர்த்துப் போனான்.

முதலில் அந்தச் சுடரில் ஏதும் தெரியாததால் புரியாமல் விழித்த மார்வார் இளவரசனை நோக்கிய ஜோகி, "விளக்கை நன்றாக உற்றுப் பார். கவனத்தை வேறு எங்கும் திருப்பாதே" என்று நிதானமாகக் கூறினார். "மலைஅரசி! பந்தத்தை அணைத்துவிடு" என்று அந்தப் பெண்ணுக்கும் உத்தர விட்டார். அடுத்த விநாடி அவள் பந்தத்தை பக்கத்துப் பாறையில் தீய்த்து அணைத்துவிடவே, தீபத்தின் ஜோதி ஒன்றே குகையின் உட்புறத்தை ஆட்கொண்டது. "மார்வார் ராஜபுத்திரனே! இப்பொழுது பார் ஜோதியை" என்றார் ஜோகி சாந்தமான குரலில்.

ராவ்ஜோடா அகல்விளக்கின் ஆடாமல் நின்ற சுடரை நோக்கினான் அதன் உள்ளே வேகத்தில் விர்ந்தன காட்சிகள். "அதோ வருகிறார்கள்! அதோ வருகிறார்கள்!" என்று மெதுவாகக் கூறினான், மார்வார் இளவரசன்.

"எத்தனை பேர்?" அந்தப் பெண் கேட்டாள்.

"ஆயிரம் பேர் இருக்கும்" என்றான், ஜோடா.

"அத்தனை பேரும் சிதோதயர்கள். அவர்களுக்குத் தலைமை வகித்து வருகிறான் அவன். அவன்தான் சந்தசிம்மன். இந்த இடத்தை நோக்கித்தான் வருகிறான். இல்லை. திரும்பி விட்டான். இல்லை, திரும்பவில்லை. மீண்டும் இந்த வழி வருகிறான். என்னைக் கொல்ல வருகிறான். சித்தூரிலிருந்து நான் தப்பியது தெரிந்துவிட்டது அவர்களுக்கு. மார்வார் வம்சம் என்னுடன் ஒழிந்துவிட்டது. ஒழிந்தேவிட்டது" என்று பதட்டத்துடன் கூவினான்.

"ஒழிந்துவிட்டது. ஒழிந்துவிட்டது" என்ற அவன் குரலை குகையின் பாறைச் சுவர்கள் பயங்கரமாக எதிரொலி செய்தன. ராவ்ஜோடாவின் மூளை பெரும் அதிர்ச்சியுற்றதால், அவன் விளக்கின் முன்பு தலையை சாய்த்துக்கொண்டு மவுனமாகி விட்டான்.

"மறுபடியும் பார்! அதைரியம் மனிதனின் முதல் எதிரி" என்றார் ஜோகி.

மீண்டும் சுடரை நோக்கிய ராவ்ஜோடா ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். "சந்தசிம்மன் திரும்பிவிட்டான். நல்ல வேளை தப்பினேன். ஐயோ அதோ, இன்னொரு புரவி வீரர் கூட்டம் வருகிறதே, அது யார்? இந்த இடம் நோக்கி வருகிறது. அதன் தலைவன் இந்த மலைப்பக்கம் கையைக் காட்டுகிறான். யார் அவன்? அவன் என் உபதளபதி. நேராக இங்கு வா. வனப்பிரஸ்த ஜோகி மகான் முன்பு நான் இருக்கிறேன்" என்று இரைந்து கூறினான் மார்வார் ராஜாபுத்திரன்.

அந்த சமயத்தில் பந்தத்தைக் கொளுத்தினாள் அந்தப் பெண். "மலை அரசி! இவனுக்கு உணவு ஏதாவது கொடு. மிகவும் களைத்திருக்கிறான்" என்றார் ஜோகி, அனுதாபத்துடன்.

"இவளை ஏதோ பெயர் சொல்லி அழைத்தீர்களே" என்றான், ஜோடா.

"மலை அரசி" என்றார், ஜோகி.

"புதுப் பெயராக இருக்கிறதே."

"தமிழ்ப் பெயர்."

"தாங்கள்—?"

"ஜோகி சுற்றாத இடம் இல்லை, அறியாத மொழி இல்லை." இதைச் சொன்ன ஜோகி, "சரி, முதலில் உணவு கொள்" என்றார்.

"உணவு தேவையில்லை" என்றான், மார்வார் ராஜபுத்திரன்.

"வேறு என்ன வேண்டும்?"

"தங்கள் அருள்."

"ஆண்டவன் அருளைக் கேள். உனக்கு இப்பொழுது நிரம்பவும் தேவை" என்றார் ஜோகி.

அதே சமயத்தில் புரவியொன்று வரும் சத்தம் கேட்டது. ஜோகி பார்த்தார், மார்வார் இளவரசனை. "உனக்குத் துணை வந்துவிட்டது" என்றார்.

அந்தத் துணை உடனடியாக உள்ளே வரவில்லை. "வனப்பிரஸ்த ஜோகி என்று வெளியில் இருந்து வந்தது, இடி போன்ற குரல்.

"வரலாம்" என்றார் ஜோகி.

அந்த உத்தரவை அடுத்து உள்ளே பெரும் காலடிச்சத்தம், ஏதோ பாறையை இரும்பு நசுக்குவது போன்ற ஒலி கேட்டது. அப்படி வந்த ராட்சஸனை வியப்புடன் நேராக நோக்கினான், மார்வார் இளவரசன்.

"அப்படியானால், நீ தப்பிவிட்டாய்?" என்று அந்த ராட்சஸன் ராவ்ஜோடாவை நோக்கி வினாவினான். மார்வார்

ராஜபுத்திரன் தப்பியது பெரும் பிழை எனக் குறிப்பிடுவது போல் அமைந்திருந்தது, அந்தப் புதுமனிதன் குரல்.

ராவ்ஜோடாவின் முகத்தில் லேசாகச் சினத்தின் சாயை படர்ந்தது. "நான் தப்பியதில் தங்களுக்கு மகிழ்ச்சியில்லை போலிருக்கிறது?" என்று வினாவினான், ஜோடா அந்த ராட்சஸனை நோக்கி.

அந்த ராட்சஸன் வனப்பிரஸ்த ஜோகியை நோக்கினான். "ஜோகி! உயிருக்குப் பயந்து ஓடுபவனைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் அடக்கத்துடன். கேட்டதன்றி, ஜோகிக்கு வணக்கமும் செய்துவிட்டுத் தரையில் உட்கார்ந்தான், ஜோடாவுக்கு அருகில்.

அப்படி உட்கார்ந்தபோது அந்த ராட்சஸன் தொடையொன்று ஜோடாவின் தொடைமீது அழுந்தி, ஏதோ கனமான பாறை ஒன்று தன் தொடையை நசுக்குவது போன்ற இம்சையைக் கொடுக்கவே மார்வார் ராஜபுத்திரன் முகத்தை லேசாகச் சுளித்தான்.

அதை கடைக்கண்ணால் கவனித்துவிட்ட ராட்சஸன் நகைத்தான்.

"இவன் உள்ளத்தைப் போலத்தான் இருக்கிறது உடலும். உறுதியற்றது. சிறு கஷ்டத்தையும் தாங்க மறுக்கிறது" என்றான் ராட்சஸன் ஜோகியை நோக்கி.

அதுவரையில் அந்த ராட்சஸனின் அலட்சியத்தையும் இகழ்ச்சிச் சொற்களையும் தாங்கிக்கொண்டு இருந்த ராவ் ஜோடா, "இது வனப்பிரஸ்த ஜோகியின் சந்நிதானம். பூசல்களுக்கு இது இடம் இல்லை" என்றான்.

"வேறு இடம் இருக்கிறது வெளியில்" என்று சுட்டிக் காட்டினான், அந்த ராட்சஸன்.

அதுவரை எதும் பேசாமல் மவுனமாயிருந்த ஜோகி, குகையின் பாறையில் நின்ற பெண்ணை நோக்கி, "குழந்தாய்! இதுவரை இந்த மலையில் அமைதி நிலவியிருந்தது. பறவைகளின் சரணாலயமாயிருந்தது" என்றார். சிறிது பெருமூச்சும் விட்டார்.

சுகதுக்கங்களை சமமாகப் பாவிப்பவரான வனப்பிரஸ்த ஜோகி துன்பப் பெருமூச்சு விட்டதும் அந்தப் பெண் மட்டு மின்றி குகையில் இருந்த அனைவரும் பேசும் சக்தியை இழந்தனர். சில விநாடிக்குப் பிறகு ராவ்ஜோடா மட்டும் கேட்டான், "ஜோகி! இப்பொழுது என்ன மாற்றம் ஏற்பட்டுவிட்டது?" என்று.

ஜோகி மிக மெதுவான குரலில், "இனி இது பறவைகளின் சரணாலயம் அல்ல. இனிமேல் அவற்றின் கிலகிலா சத்தத்தையும், இனிய கூவல்களையும் நாம் கேட்க முடியாது" என்றார்.

அதுவரை அடங்கிக் கிடந்த ராட்சஸன் "ஏன் ஜோகி? ஏன்?" என்று வினவினான், பணிவிலும் கடுமையுடன் ஒலித்த குரலில்.

"இனி இது ஜோடா கிர்" (போர் மலை) என்றார் ஜோகி. "மனிதன் காலடி எடுத்த வைக்கும் எந்த இடமும் பாழாகிறது. சண்டைக்கு இடமாகிறது" என்றும் கூறினார்.

மார்வார் இளவரசன் மனம் நொந்தான். "ஜோகி! நான் வந்ததைச் சொல்கிறீர்களா? என் பெயர் ஜோடா! என்பதற்காக, அந்தப் பெயரைக் கொண்டு இந்த மலைக்கும் அவப் பெயரை அளிக்கிறீர்களா?" என்று கேட்டான், துன்பம் துளிர்ந்த குரலில்.

எலும்புக் கூடாகக் கூனிக் குறுகியிருந்த ஜோகி சற்று நிமிர்ந்து பின்னால் இருந்த பாறையில் சாய்ந்தார். "இல்லை

ஜோடா, இல்லை. நீ வருமுன்பே இதெல்லாம் தீர்மானமாய் இருக்கிறது. நான் உன்னையும் நோகவில்லை, ஹர்பா சங்க்லாவையும் நோகவில்லை. நம்மையும் மீறிய சக்தி நம்மை ஆட்டுகிறது" என்றார், ஏதோ கனவில் பேசுவதைப் போல். அவர் குரல் தீனமாயிருந்தாலும், அதன் பலவீனத்திலும் ஓர் ஒளி ஊடுருவிச் சென்றதை மற்றவர்கள் உணர்ந்தார்கள்.

அந்த உணர்ச்சியுடன் ராவ்ஜோடாவின் உடலில் வேறொரு பயங்கர உணர்ச்சியும் ஊடுருவிச் சென்றது. ஹர்பா சங்க்லா என்ற பெயரைக் கேட்டதும் மயிர்க்கூச்செறிந்தது மார்வார் ராஜ்புத்திரனுக்கு. ராஜஸ்தானத்திலேயே இணையற்ற வீரன் என்று பெயர் பெற்றவரும், நைஷ்டிக பிரம்மச்சாரியும், நல்ல காரியம் எதற்கும் யாரும் வேண்டாமலே கைகொடுப் பவருமான ஹர்பாசங்க்லாதான் தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ராட்சஸன் என்பதை உணர்ந்ததால் சற்றே சங்கடத்தாலும் அச்சத்தாலும் அசைந்த ராவ்ஜோடாவை நோக்கிய மலை அரசியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது.

அவள் சொன்னாள், "ஆம். மார்வார் ராஜபுத்திரனே! இவர்தான் ஹர்பா சங்க்லா. இவரைத்தான் உனக்குத் துணையாக நியமித்திருக்கிறார் ஜோகி" என்று.

அவளைத் திரும்பிப் பார்த்தார் பிரம்மச்சாரி. இவனுக்கு நான் துணையா?" என்று வியப்பு குரலில் மண்ட வினவினார்.

"சற்று முன்பு ஜோகியின் வாயிலிருந்து வந்த வார்த்தை அதுதான்" என்றாள் மலை அரசி வரண்ட குரலில்.

"இந்த பாவிக்கா நான் உதவ வேண்டும்?" என்று கேட்டார் பிரம்மச்சாரி.

"பாவம் இவன் செய்யவில்லை. தந்தை செய்தது. அந்த வினை இவன் தலையில் இருக்கிறது" என்றார் ஜோகி.

அத்துடன் சொன்னார். "பாவம் யார்தான் செய்யவில்லை? நீ கூட இப்பொழுது மார்வார் இளவரசனை சண்டைக்கு இழுத்தாய்– பாகுர்ச்சிரா (பட்சிகள் சரணாலயம்) ஜோடகிர் (போர் மலை) ஆகிவிட்டது. அதற்கு நீயும் ஒரு காரணம் ஹர்பா சங்க்லா! சரண் அடைந்தவர்களை நீ கைவிட்டதில்லை. இவனையும் கைவிடதே. இவனால் மார்வார் வம்சம் தழைக்கப் போகிறது" என்றார் ஜோகி.

ஹர்பா சங்க்லா ஜோகிக்குத் தலை வணங்கினான். "அப்படியானால் இப்பொழுது இவன் தனது தலை நகரத்துக்குப் போகட்டும். சுத்த விரதத்தன்று என் இருப்பிடம் வரட்டும்" என்றான், பிரம்மச்சாரியான ஹர்பா சங்க்லா.

"தலைநகரத்துக்கா?" என்று கேட்ட அந்தப் பெண் நகைத்தாள். ஜோகியும் புன்னகை பூத்தார்.

இருவர் நகைப்பிலும் ஏதோ மர்மம் இருந்ததைப் புரிந்து கொண்டான் ராவ்ஜோடா. அந்த விபரீத மர்மத்தை மலை அரசியே விளக்கனாள்.

"நீ தலைநகரத்துக்குள் புகுந்த நான்காவது நாள் அதை விட்டு வெளியேற நேரிடும்" என்றாள் மலை அரசி.

4. இரு விந்தைகள்

மலை அரசியின் மதுர இதழ்களில் இருந்து உதிர்ந்த அந்தக் கொடுமையான சொற்களைக் கேட்டதும், வியப்பும் அச்சமும் கலந்த உணர்ச்சிகள் ராவ்ஜோடாவின் இதயத்தை ஊடுருவிச் சென்றன. அப்படி அவன் நடுங்கியதை பக்கத்தில் உட்கார்ந்து இருந்த பிரம்மச்சாரியான ஹர்பா சங்க்லாவும் உணர்ந்திருக்க வேண்டும். அவர் கருணைக் கண்கள் மார்வார் இளவரசனை நோக்கின அனுதாபத்துடன். அதே சமயத்தில் எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுவது போல ஜோகி சொன்னார் தீர்மானமான குரலில். "பிரம்மச்சாரிணியின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் என்றும் பொய்யாவது இல்லை."

ஜோகியின் சொல் கேட்ட ராவ்ஜோடாவின் மனநிலை மீண்டும் அதிர்ச்சிக்கு உள்ளாகியது. 'இவ்வளவு அழகிய பெண் பிரம்மச்சாரிணியா? மற்றவர்கள் தொடக் கூடாதவளா?" என்று தனக்குள் கேள்விகளை எழுப்பிக் கொண்டான் ஜோடா.

ஜோகி மீண்டும் நகைத்தார். "ஏன், கிரிஜா பிரம்மச்சர்ய விரதம் பூண்டிருப்பது உனக்கு விந்தையாக இருக்கிறதா?" என்றும் கேட்டார் நகைப்பின் ஊடே.

"கிரிஜாவா?" வியப்பு, குரலில் ஒலிக்க வினவினான், மார்வார் இளவரசன்.

"அவள் பிறந்தபோது பெற்றோர்கள் இட்ட பெயர் மகாசக்தியான பார்வதியின் பெயர். கிரிஜா—அதாவது மலைமகள்—என்ற பெயரை கிரிராணி என்று நான் மாற்றினேன். அவள் மலையை ஆளத் துவங்கிய பிறகு கிரி ராணிக்கு தமிழ் மொழி பெயர்ப்பை அளித்து, மலை அரசி ஆக்கினேன். திராவிடப் பிரதேசத்தில் இருந்து என்னைக் காண வந்த ஒரு சித்தரை திருப்திபடுத்த" என்று ஜோகி விளக்கினார்.

ஜோடா மேலும் வாயைப் பிளந்தான். "திராவிட நாட்டு சித்தரா!" என்று கேட்டான் பிரமிப்புடன்.

ஜோகி நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டவர் போல் கண்களை மூடிக்கொண்டு பேசலானார்: "ஜோடா! இந்த பாரதம் ஒரு பெரும் புண்ணிய பூமி. இதில் ஆதி காலத்தில் இருந்து ரிஷிகளும், யோகிகளும், சித்தர்களும், பித்தர்களும் திரிந்து வருகிறார்கள். சிலர் நூறு ஆண்டில் ஜோதி சொரூபம் ஆகிறார்கள். இன்னும் சிலருக்கு ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டு கழித்து அந்த பாக்கியம் கிடைக்கிறது. சிலர் அதையும் வேண்டாது தவமே சுகம் என்று, உலகம் ஏற்பட்ட நாளாய் இருந்துகொண்டு இருக்கிறார்கள். இந்திரிய வசப்பட்ட மக்களின் கண்களில் இவர்கள் படுவது இல்லை. ஆனால், தவசிகள் எங்கும் போகிறார்கள். கண நேரத்தில் விரும்பிய இடத்தை அடைகிறார்கள். அப்படி வந்தார் சித்தர் இங்கு. நாங்கள் கலந்து பேசினோம்..." ஜோகி வாசகத்தை முடிக்கவில்லை.

இதையெல்லாம் கேட்டு பிரமித்த ராவ் ஜோடா கேட்டான். "ஒருவர் ஆயிரம் ஆண்டுகள் இருக்க முடியுமா?" என்று.

"அது அவரவர் சித்தியைப் பொறுத்தது. தவவலிமையைப் பொறுத்தது. ஆயிரம் ஆண்டு நீருக்குள் மூழ்கி தவம் புரிந்தவர்களைப் பற்றி நீ படித்தது இல்லையா?" என்று வினவிய போதும் ஜோகி கண்களைத் திறக்கவில்லை.

"புராணங்களில் படித்திருக்கிறேன்." ஜோடா சொன்னான் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக.

"புராண காலங்களோடு அவர்கள் போகவில்லை. எந்த ஜோகியும் இஷ்டப்பட்டால் இந்த உடலை நீத்துவிடுவான்."

"இல்லையேல்?"

"இருப்பான், பீஷ்மர் தமது சாவைத் தள்ளிப் போட்டு, வேண்டும்போது இறந்ததைப் படித்தது இல்லையா?"

"படித்திருக்கிறேன்."

"அது மாதிரிதான் ஜோகிகளும் சித்தர்களும். இந்த ஹர்பா சங்க்லாவும் அத்தகைய நிலையை அடையலாம் அவர் கட்டியிருக்கும் வாளைத் துறந்தால்."

ஜோகியின் இந்த வார்த்தையைக் கேட்ட பிரம்மச்சாரி நகைத்தார். பெரிதாக, "அந்த பாக்கியம் எனக்கு இல்லை. வாளைத் துறப்பதைவிட உயிரைத் துறப்பேன்" என்றார் நகைப்பின் ஊடே.

"அது உன் விருப்பம் ஹர்பா சங்க்லா" என்றார் ஜோகி, பெருமூச்சுவிட்டு.

அப்பொழுது இடைபுகுந்து கேட்டான் ஜோடா. "ஜோகி! தாங்கள் அந்த திராவிட சித்தருடன் என்ன பேசினீர்கள்?" என்று.

"உலக முறையில் பேசவில்லை. இருவரும் வாயைத் திறக்கவில்லை" என்றார் ஜோகி.

அதுவரை வாளாவிருந்த அந்தப் பெண் குறுக்கே புகுந்து "சித்தர்கள் சந்திக்கும்போது வாயால் பேசுவது இல்லை. சிந்தையால் பேசிக்கொள்கிறார்கள். நீ அதைப் புரிந்து கொள்வது கஷ்டம்" என்றாள்.

இந்த ஜோகி சித்தர் விவகார வேதாந்தம் மண்டையைக் குழப்பியதால் ஜோடா அதைவிட்டு தனது சொந்த விவகாரத்தைப் பற்றிக் கேட்டான். "ஜோகி! அடுத்து நான் என்ன செய்யட்டும்?" என்று வினவினான்.

"உன் தலைநகருக்குப் போ" என்றார் ஜோகி.

"மண்டோருக்கா?"

"ஆம்."

"அங்கு இருந்து நான்கு நாளில் நான் வெளியேற நேரிடும் என்று மலை அரசி சொன்னாளே."

"அவள் சொன்னால், அது சத்தியம்."

"நான்கு நாளில் மீண்டும் நான் ஓட வேண்டுமா?"

"ஆம்."

அப்படியானால் நான் போவானேன்?"

"உன் கர்மாவைப் பூர்த்தி செய்ய. இந்த ஹர்பா சங்க்லாவின் உதவி கிடைக்கும்வரை நீ நாடு இழந்து, நகரம் இழந்து ஓடுவாய். பிறகு நீ இந்த மலைமீது ஒரு கோட்டையைக் கட்டுவாய். அது உன் பெயரால் ஜோட்பூர் என்று பிரசித்தமாகும். பெரும் அரசை நீ நிறுவுவாய். இது உன் தலையெழுத்து. ஆனால், மேலும் உன் கைகளில் ரத்தக்கறை படியும். எப்படியென்று கேட்காதே. கர்ம வினைகளில் இருந்து நீ தப்ப முடியாது. ஆகையால் சொல்கிறபடி செய்... போ உன் நகரத்துக்கு" என்று உத்தரவிட்டார், ஜோகி. பிறகு மவுனமாகிவிட்டார். அவர் கண்கள் மூடின. அதை அறிந்து கொண்டது போல் அவர் எதிரில் இருந்த விளக்குச்சுடர் மெள்ள இழிந்து இழிந்து அடங்கியது.

"ஜோகி சமாதியில் ஆழ்ந்துவிட்டார். செல்லுங்கள் வெளியே" என்ற மலை அரசியின் கண்டிப்பும் அதிகாரமும் நிறைந்த குரலைக் கேட்ட மார்வார் இளவரசனும் ஹர்பா சங்க்லாவும் எழுந்தார்கள்.

ஹர்பாசங்க்லா வெளியே நடந்தார் பதில் பேசாமல். அவர் பெரும் காலடிச் சத்தம் குகையை அதிரச் செய்தது. அடுத்த சில வினாடிகளில் அவர் புரவி, மலைச்சரிவில் பாய்ந்து செல்லும் பெரு ஒலியும் ஜோடாவின் காதில் விழுந்தது.

ராவ்ஜோடா ஜோகியை நோக்கினான். அவர் முகம் ஏதோ பெரிய விளக்குபோல் பிரகாசித்தது. அப்பொழுது மீண்டும் பந்தத்தை அணைத்துவிட்டாள் பிரம்மச்சாரிணி. "நீயும் வெளியே செல்லலாம்" என்றாள் அதிகாரத்துடன்.

ஜோகியின் முகத்தின் பிரகாசம் குகைக்கு மந்தமான வெளிச்சத்தை அளித்தது.

அதில் ஆழ்ந்துவிட்ட மலைஅரசியின் கண்கள் மூடின. அவள் முகம் ஜோகியின் முகத்தில் இருந்து கிளம்பி குகையில் பரவிவிட்ட ஜோதியில் மங்கலான உதயகால சந்திரன்போல் பெரு மயக்கத்தை அளித்தது. ஏதோ தேவதைபோல் அசைவற்று உணர்வற்று நின்றிருந்தாள், அவள்.

அவளுடைய வனப்பு மார்வார் வாலிபன் மனதை ஈர்த்தும் அவனால் அவளை நோக்கி ஓர் அடியெடுத்து வைக்க முடியவில்லை.

சில நிமிடத்துக்குப் பிறகு கண்களைத் திறந்தாள் அவள். எதிரே நின்ற ராஜபுத்திரனை ஏறிட்டுப் பார்க்காமல், கனவில் நடப்பதுபோல் அவனையும் தாண்டி குகைக்கு வெளியே நடந்தாள்.

ராவ்ஜோடா அவளைப் பின்பற்றினான்.

குகைக்கு வெளியே வந்த பின்பும் அவள் நிற்கவில்லை. மலைக்காட்டுக்குள் போய்க் கொண்டிருந்தாள். அவள் கீழோ மேலோ பக்கங்களிலோ பார்க்காமல் நடந்தாள்.

அவளைப் பின்பற்றிய ஜோடா இரண்டு விந்தைகளைக் கண்டான். இரண்டும் அவனைப் பிரமிக்க வைத்தன. அவள் மானிடப் பெண் அல்ல, ஏதோ மோகினிப் பிசாசு என்று திகைத்தான். அதன் விளைவாகத் திரும்பி ஓடினான் வந்த திசையை நோக்கி.

5. நான் வருவேன்

வனப்பிரஸ்த ஜோகியின் குகையைவிட்டு வெளியேறிய மலைஅரசி, வேகமாக மலையின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் நடந்து சென்றதும், விளைவித்த இரண்டு விந்தைகளும் மகாவீரனான மார்வார் இளவரசனை திகில் கொள்ளச் செய்தன என்றால், அவற்றின் விளைவாக அவன் வந்த திசையை நோக்கிப் பறந்துவிட்டன என்றால், அதில் வியப்புற ஏதுமேயில்லை. ஜோடாவின் நிலையில் யார் இருந் திருந்தாலும் அவன் வழியைத்தான் பின்பற்றியிருப்பார்கள். உலகில் யாரும் நம்பமுடியாத அத்தனை பயங்கர விந்தைகளை அவன் பார்த்தான்.

மலை அரசி ஜோடாவை சிறிதும் இலட்சியம் செய்யாமலும் கண்களை அவன் பக்கம் அறவே திருப்பாமலும் குகையிலிருந்து வெளியேறியதும் நேராகக் காட்டுப் பகுதியில் நுழைந்தாள். அவளைப் பின்தொடர்ந்த ஜோடா அந்த அடர்ந்த மலைக்காட்டில் குத்து குத்தாகக் கிளம்பி காலைக் குத்திய கற்களை சிறிதும் சட்டை செய்யாமல் அவள் வேகமாக நடந்ததைக் கண்டான். அப்படி அவள் பத்தடி தூரம் சென்றதும், ஒரு மரத்தில் இருந்து குறுக்கே ஏதோ தொங்கியதையும், அது தொப்பென்று நிலத்தில் விழுந்ததையும் கண்டதும் அது பெரும் விஷப்பாம்பு என்பதை உணர்ந்து அவளை எச்சரிக்க குரல் கொடுக்க முற்பட்டான். ஆனால்

அவன் வாயைத் திறக்குமுன்பு அந்தப் பாம்பு மலை அரசியின் காலில் சுற்றிக்கொண்டு விட்டதைப் பார்த்து, அத்துடன் தொலைந்தாள் மலை அரசி என்று நினைத்து அலறும் நிலைக்கு வந்தான். ஆனால், மலை அரசியின் முகத்தில் அச்சத்திற்குப் பதில் மந்தகாசம் உலாவுவதைக் கண்டதும் பிர மித்தான். அவனது பிரமிப்பை அதிகப்படுத்தவோ என்னவோ, மலை அரசி காலை வளைத்துவிட்ட பாம்பின் தலையைக் குனிந்து கையில் அனாயாசமாகப் பற்றி எடுத்தாள். அதை உற்று நோக்கினாள் சில விநாடிகள். பிறகு கையால் சுழற்றி தூர எறிந்துவிட்டு மேலே நடந்தாள்.

இந்தக் காட்சியைக் கண்ட ஜோடா ஒரு விநாடி திகைத்து நின்றான். அந்த பாம்பு சரசரவென்று ஓடி சருகுகளில் மறைந்துவிட்டதாலும், வேறு பாம்புகளும் இருக்கலாம் என்ற பீதியாலும், வெகு எச்சரிக்கையுடன் அவளைப் பின் தொடர்ந்தான். அவன் பின்னால் வருவது அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிலையின் தன்மைகளை அறிந்த அந்தப் பெண் பின்னால் ஜோடா நடந்ததால் ஏற்பட்ட சருகுகளின் ஒலியைக் காதில் வாங்கிக் கொண்டிருப்பாள் என்பதில் ஜோடாவுக்கு சிறிதும் சந்தேகம் இல்லை. அப்படி அறிந்தும் அவள் அவனை திரும்பிப் பார்த்தாள் இல்லை. நேராக நடந்து அந்த மலை உச்சியின் மற்றொரு பகுதிக்கு வந்து ஒரு பெரிய பாறையில் உட்கார்ந்து கொண்டாள்.

எங்கிருந்தோ இரண்டு புலிக் குட்டிகள் அவளை நோக்கி ஓடி வந்தன. அவை இரண்டையும் தூக்கி முத்தமிட்டு மடியில் படுக்க வைத்துத் தடவினாள். பிறகு அவற்றை தூக்கி மிகுந்த எச்சரிக்கையுடன் தரையில் விட்டு "போங்கள் நாளைக்கு குகைக்கு வாருங்கள்" என்றாள். புலிக்குட்டிகள் அவள் கால்களை நக்கிவிட்டு ஓடி மரங்களுக்கு இடையே மறைந்தன.

அடுத்து அவள் மலைப்பாறையில் மல்லாந்து படுத்தாள். மேலே வானத்தில் இருந்து நட்சத்திரங்கள் வீசிய சிறு வெளிச்சத்தில் அவள் வனப்பு மிகுந்த உடல் மனோகரமாகக் காட்சி அளித்தது. அவள் மலைப்பாறையில் நன்றாக மல்லாந்து படுத்ததால் அவள் செழித்த மார்பு நன்றாக நிமிர்ந்து ஆகாயத்தை ஊடுருவிவிடும் எண்ணத்தைக் கொண்டதுபோல் செங்குத்தாக நின்றது. அவள் நிதான மூச்சு விட்ட போதும் நன்றாக எழுந்து தாழ்ந்த இரட்டை அழகுகள் ஒருமுறை துடித்தன. என்ன காரணத்தாலோ, எந்த உணர்ச்சியாலோ ஏற்பட்ட அந்தத் துடிப்பு மார்வார் இளவரசனின் மனத்தை எங்கோ அள்ளிச் சென்றதால், அவன் தன்னை திடப்படுத்திக் கொள்ள, மறைந்திருந்த மரத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

ஒருமுறை சிலிர்த்து திடப்பட்டு கெட்டிப்பட்டு நின்றுவிட்ட அவள் மார்பகத்தை அடுத்து, அவளது திரண்டு உருண்ட தொடைகள் இரண்டும் ஒருமுறை நெருங்கி இழைந்து நின்றன. அவள் இடையிலிருந்து முழங்கால் மட்டுமே மறைந்த மரவுரியின் கீழ்ப்பாகம் உராய்ந்ததால் சற்றே அதை சரிப்படுத்திய மலை அரசி லேசாக ஏதோ நகைத்தாள். பிறகு கனிவாய் இதழ்களைக் குவித்து ஊதினாள் மெதுவாக. அந்த ஊதலில் பிறந்தது ஆத்மாவை மயக்கும் கீதம்.

செம்பருத்தி மொட்டுகள் போல் குவிந்து சிறிது திறந்துவிட்ட வாயிலிருந்து புல்லாங்குழல் இசைப்பது போன்ற ஒலி தொடர்ந்து மிக மிருதுவாகக் கிளம்பியது. அதில் பிறந்தது, மார்வார் இளவரசன் ராஜஸ்தானத்தில் எங்கும் கேட்டு இராத புது ரக இசை. அது மானிடருக்காக ஏற்பட்டது அல்ல, மானிடரால் அமைக்கப் பெற்றது அல்ல என்பதை அடுத்த இரண்டு விநாடிகளில் ஜோடா புரிந்துகொண்டான்.

அவள் அழகிய இதழ்களில் இருந்து பிறந்த அந்த சொர்க்க கீதம், மலையின் அந்தப் பகுதியை ஆட்கொண்ட சிறிது

நேரத்தில் எல்லாம் மரக் கூண்டுகளில் இருந்த பலரகப் பறவைகள் மெள்ள மெள்ள பறந்து அவள் படுத்திருந்த பாறைமீது இறங்கின. மைனா, குயில், கிளி, மரங்கொத்திப் பறவை, ஆந்தை இந்த வர்க்கங்களின் குஞ்சுகள் அவள்மீது தொத்தித் தொத்தி ஏறத் தொடங்கின. அவற்றை சிறிதும் லட்சியம் செய்யாமல் அவள், இதழ்க்குழலால் இசையை எழுப்பிக்கொண்டே இருந்தாள்.

அடுத்தபடி, இரண்டு அன்னப் பறவைகள் நடந்து வந்து பாறைமீது ஏறி அவள்மீது படுத்துக்கொண்டன. அவை செய்த சைகையை ஒட்டி மற்ற பறவைகளும் அவள்மீது படுத்ததால், ஏதோ ஒரு புதுவிதப் பறவை ஆடை அணிந்த பெண்பாவை போல் ஆனாள் மலை அரசி.

இத்தனையும் போதாது என்று இரண்டு குருவிகள் மரத்திலிருந்து இறங்கி அவள் செழுமிய மார்பகத்தில் இரு உச்சிகளிலும் உட்கார்ந்தன. அந்த சமயத்தில் அவள் கண்விழித்து, அந்த இரண்டு குருவிக் குஞ்சுகளையும் எடுத்து முத்தமிட்டாள்.

பிறுகு படுத்த நிலையை விட்டு எழுந்து உட்கார்ந்தாள். உட்கார்ந்துகொண்டு தன்மீது எழுந்து தவழத் தொடங்கிவிட்ட பறவைகளைப் பார்த்து, “நாளைக்கு வாருங்கள், குகைக்கு. ஜோக் அவர் கையாலேயே உங்களுக்குப் பிரசாதம் கொடுப்பார்” என்று சொன்னாள்.

அதைக் கேட்ட பறவைகள் சிறகுகளைத் தூக்கி அடித்துக்கொண்டன. பிறகு பலவித சப்த ஜாலங்களைக் கிளப்பின. மலை அரசியும் ஏதேதோ பலவித ஒலிகளை எழுப்பினாள். பறவைகள் அவளது ஒலிகளைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவை பதிலுக்கு அதேவித ஒலிகளைக் கிளப்பின. அவள் கையசைத்தாள். சட்டென்று சகல ஒலிகளும் அடங்கின; நிசப்தம் நிலவியது. அப்பொழுது

அவள் குயிலைப் பார்த்து சைகை செய்ய குயில்மட்டும் கூவ ஆரம்பித்தது. அதற்கு அவள் மெதுவாகத் தாளம் போட்டாள்.

அதற்குமேல் ஜோடாவால் தாங்க முடியவில்லை. “முதலில் சர்ப்ப வித்தை, பிறகு பட்சி ஜாலம். இதில் ஏதோ மாயம் இருக்கிறது. இவள் சாதாரணப் பெண் அல்ல. மோகினிப் பிசாசு என்று சொல்வார்களே, அப்படி ஏதாவது இருக்க வேண்டும்” என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அடுத்த விநாடி அங்கு நிற்கவில்லை. ஜோடா திரும்பிப் பறந்தான் ஜோகியின் குகையை நோக்கி.

குகைப் பிராந்தியம் மிக அமைதியாயிருந்தது. எங்கும் ஆழ்ந்த இருளைத் தவிர வேறு ஒளி ஏதுமில்லை. சற்று எட்ட ஓடிய அருவியின் சலசலப்பைத் தவிர வேறு எந்தவித ஒலியும் இல்லை.

அவன் விட்டுப் போயிருந்த புரவிகூட எந்தவித சத்தத்தையும் செய்யாமல் மந்திரத்தால் கட்டுண்டதுபோல் அசைவற்று நின்றிருந்தது. அதைக் கண்ட ஜோடா தனது புரவியையும் மலை அரசி மயக்கிவிட்டாளோ என்ற நினைப்பில் தயக்கத்துடன் அதை அணுகினான். ஆனால், தன்னைத் திரும்பிப் பார்த்து முகத்தால் தன் முகத்தில் உராய்ந்ததால் அதன் சுரணை கெடவில்லை என்று அதன் மீது மெதுவாக ஏறினான். அது சில அடிகள் நகர்ந்ததும், மலை அடிவாரத்தில் பல புரவிகள் வரும் சத்தம் கேட்கவே சட்டென்று கடிவாளத்தை இழுத்து புரவியை நிறுத்தினான்.

புரவிகள் மேலே ஏறி வரும் சத்தம் கேட்டது. வரட்டும் என்று காத்திருந்தான், ஜோடா.

அந்தச் சமயத்தில் அவன் முன்பு தோன்றினாள் மலை அரசி. அவன் புரவிக்கு எதிரே நின்று, “இளவரசனே! வருபவர்கள் உன் வீரர்கள்” என்றாள்.

இதனால் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்ட ராவ்ஜோடா "எப்படித் தெரியும் உனக்கு?" என்று கேட்டான்.

"நீ வந்தது எப்படித் தெரிந்தது? நீ என்னைத் தொடர்ந்தது எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள் அந்தப் பெண். அத்துடன் சொன்னாள், "உன் வீரர்கள் வந்தால் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடு, உன் தலைநகருக்கு" என்று.

இதைக் கேட்டு பிரமித்தான் ஜோடா. "ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?" என்று வினவினான் பிரமிப்பின் ஊடே.

"நீ அவர்களுடன் சென்றால், நீங்கள் அனைவரும் உயிர் இழப்பீர்கள்" என்றாள் அவள்.

"அவர்கள் போய்விட்டால் எனக்குத் துணை யார் வருவார்கள்?" என்று ஜோடா வினவினான்.

"நான்" என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னாள் அவள்.

ஜோடாவின் மலைப்பு எல்லை கடந்தது. "நீயா!" என்று திகைத்த குரலில் கேட்டான்.

"ஆம்."

"என் தலைநகருக்கா வருவாய்?"

"ஆம்."

"வேறு உடையிருக்கிறதா உனக்கு?"

"இல்லை."

"இந்த உடையிலேயா வருவாய்?"

"ஆம்."

ஜோடா இந்த சங்கடத்துக்கு என்ன செய்வது என்று தெரியாமல் பிரமிப்பில் ஆழ்ந்து சிலையென நின்றுவிட்டான்.

6. பெண் துணை!

பெண்ணின் லாவண்யத்தால் ஆண்மகன் அறிவு அழிந்துவிடுகிறது. சவர்ச்சியான கன்னியின் முன்பாக எந்த ஆண்மகனும் சுயபுத்தியை இழந்துவிடுகிறான். இந்தப் பழைய நிகழ்ச்சிகளுக்கு அத்தாட்சியாக நின்றான் ராவ்ஜோடா.

"உனது வீரர்களை திருப்பி அனுப்பிவிடு" என்று மலை அரசி இட்ட உத்தரவு, சந்தசிம்மனிடம் இருந்து தப்பி ஓடிவந்த மார்வார் இளவரசனுக்கு அத்தனை திருப்தியாயில்லை என்றாலும், அதற்குக் கீழ்ப்படியவே செய்தான் அவன்.

அவனுடைய வீரர்கள் மலைமீது ஏறி வந்தார்கள். அவன் முன்பாக படைத்தலைவன் வந்து நின்றான். அப்போதும் அவன் சித்தம், சற்று முன்பு பறவைகள் தொத்தி ஏறிய மலை அரசியின் சுந்தர உடலின் பகுதிகளில் ஊன்றிக் கிடந்ததால் ஜோடா வாயைத் திறந்தான் இல்லை.

"எப்படி வந்தாய்? சந்தசிம்மன் இரண்டாயிரம் வீரர்களுடன் பாலைவனத்தில் வந்தானே. அவனைப் பார்த்தாயா?" என்று கேள்விகளை வீசவும் இல்லை. சித்தினியின் அழகில் தோய்ந்த சித்தத்துடன் மவுனமாகவே நின்றான்.

ஜோடாவின் மௌனத்தைக் கண்டதால் வியப்பு அடைந்த படைத்தலைவனான ஜகத்சிம்மன், "மகாராஜா!" என்று மெள்ள அழைத்தான்.

"என்ன?" ஜோடாவின் குரல், உணர்வு இழந்து ஒலித்தது.

"நாங்கள் தப்பி வந்துவிட்டோம்" என்றான் ஜகத்சிம்மன், சிறிது குரலில் உணர்ச்சியைக் கூட்டி.

"செய்ய வேண்டியதைச் செய்தாய்" என்றான் ராவ் ஜோடா, ஏதோ சொப்பனத்தில் பேசுவது போல்.

ஜகத்சிம்மனுக்கு ஜோடாவின் போக்கு விசித்திரமாயிருக்கவே ஒருவிநாடி நிதானித்துவிட்டுக் கேட்டான்: "நாங்கள் தப்பி வந்தது உங்களுக்கு திருப்தியாயில்லையா?"

"இதில் திருப்திக்கு என்ன இருக்கிறது? மார்வார் வீரர்கள் போரிட்டு மடிந்த காலம் ஒன்று இருந்தது. இப்பொழுது புறமுதுகு காட்டி ஓடும் காலம். இதில் திருப்தி என்ன இருக்கிறது?" என்று வினவினான் எரிச்சலுடன்.

ஜகத்சிம்மன் முகத்தில் இகழ்ச்சிச் சாயை படர்ந்தது. "மன்னர் எவ்வழி அவ்வழி குடிகள்" என்றான், சொற்களிலும் இகழ்ச்சி ஊடுருவ.

படைத்தலைவன் தன் கோழைத்தனத்தைச் சுட்டிக் காட்டுவதை உணர்ந்த ஜோடா, வேறு சமயமாயிருந்தால் அவனை உடனடியாக வெட்டிப் போட்டிருப்பான். ஆனால், அன்றைய நிலையில் அவன் அந்த வசைப்பாட்டையும் ஓசைப்படாமல் ஏற்றுக்கொண்டான். "இந்த ஒரு வழியிலாவது என்னைப் பின்பற்றியது பற்றி மகிழ்ச்சி. ஆனால், நீ இங்கு வரப்போவது எனக்குப் புதிதல்ல. நீ பாலைவனத்தில் வீரர்களுடன் அலைந்ததை முன்பே பார்த்தேன்" என்று தெரிவித்தான் சர்வ சாதாரணமாக.

பாகுர்ச்சிரா மலை உச்சியில் இருக்கும் மார்வார் இளவலுக்கு நெடுந்தூரத்தில் தான் அலைந்ததை எப்படிப் பார்க்க முடியும் என்று சந்தேகம் வந்ததால், "பார்த்தீர்களா?" என்று ஜகத்சிம்மன் கேட்டான் பெருவியப்புடன்.

"ஆம்." ஜோடாவின் பதில் உடனடியாக வெளிவந்தது.

"எப்படிப் பார்த்தீர்கள்?"

"விளக்கில்."

"விளக்கிலா?"

"வேறு எதில் பார்க்க முடியும்?"

இதைக் கேட்ட ஜகத்சிம்மன் சந்தேகப் பார்வையாக ராவ் ஜோடாவைப் பார்த்தான். அந்தப் பார்வையை ஜோடாவும் கவனித்தான். "ஜகத்சிம்மா! மகான்களுடைய வழிகளை நாம் அறியமாட்டோம். அதோ அந்தக் குகையை உற்றுப் பார்" என்று கூறித் திரும்பி பின்னால் இருந்த ஜோகியின் குகையைக் காட்டினான்.

அதில் தெரிந்த வெளிச்சத்தைக் கண்ட ஜகத்சிம்மன் "தாங்கள் சொன்ன விளக்கின் ஜோதியா அது?" என்று வினவினான்.

"இல்லை; அங்கு விளக்கு ஏதும் இல்லை" என்றான் ஜோடா.

"பிறகு ஏது வெளிச்சம்?"

ஜகத்சிம்மன் பிரமிப்புடன் கேட்டான்.

"வனப்பிரஸ்த ஜோகியின் ஆத்மஜோதி." இதை பயபக்தியுடன் சொன்னான் ஜோடா.

ராஜபுதனத்தின் மலைக்குகைகளிலும் காடுகளிலும் வாழும் ஜோகிகளைப்பற்றி ஜகத்சிம்மனும் கேட்டு இருந்தாலும் அவர்களிடம் உள்ள மந்திர விளக்குகளைப் பற்றியும் மாயா ஜோதியைப் பற்றியும் கேட்டது இல்லை. "மகாராஜா! தாங்கள் இனி இங்கு இருப்பது சரியல்ல. புரவியில் ஏறுங்கள், போய்விடுவோம்" என்று கூறினான்.

ராவ்ஜோடா தனது படைத்தலைவனை நோக்கி திடமான குரலில் சொன்னான்: "ஜகத்சிம்மா! சாதாரண உலகத்தில் உள்ளோர் அறியாத விசித்திரங்கள் இந்த மலையில் இருக்கின்றன. இங்கு நான் பல விஷயங்களை அறிந்தேன். உன்னுடன் நான் வந்தால், நாம் அனைவரும் கொல்லப் படுவோம். ஆகையால், நீ முதலில் சென்றுவிடு. தலைநகருக்கு. நான் பின்னால் வருகிறேன்" என்றான்.

ஜகத்சிம்மன் சந்தேகம் வரவர வலுத்தது. மகாவீரனான ஜோடா, முழுக் கோழையாக மாறிவிட்டானா? சந்தசிம்மனை நினைத்து அஞ்சுகிறானா என்ற சந்தேகம் வலுக்கவே, "மகாராஜா! உங்கள் தலைக்கு மார்வார் கிரீடம் காத்திருக்கிறது மண்டோரில்" என்று உணர்த்தினான்.

ஜோடா லேசாக நகைத்தான், முதன் முதலாக. "உன்னுடன் வந்தால் என் தலையிருக்காது. ஆகையால் கிரீடத்தை வைக்க அவசியம் இருக்காது" என்றான்.

அத்துடன் நின்று இருக்கலாம் அவன். ஆனால், சட்டென்று திரும்பி "அதோ, இருக்கிறாள். அவளை வேண்டுமானால் கேள்" என்று பக்கத்தில் இருந்த காட்டின் அடர்ந்த பகுதியைக் கையால் சுட்டிக் காட்டினான்.

அந்த இடத்தில் யாரும் இல்லாது போகவே "சற்று முன்பு இங்கு இருந்தாளே, எங்கே அவள்?" என்று கேட்டான், சிறிது இரைந்து.

ஜகத்சிம்மன் பொறுமையும் மெள்ள அகன்றது. "யாரைக் றிப்பிடுகிறீர்கள், மகாராஜா?" என்ன வினாவினான், சினம் லசாகத் துளிர்த்த குரலில்.

"அவள்தான் மலை அரசி" என்றான், ஜோடா.

"பெண்ணா! இந்தக் காட்டிலா!" ஜகத்சிம்மன் வியப்பு கமாயிற்று.

"ஆண்மகனையா மலைஅரசி என்று சொல்லுவேன்" என்ற ஜோடாவின் குரலில் மகிழ்ச்சியும் இன்பமும் கலந்து ஒலித்தன.

இந்தக் காட்டில் யாரோ பெண்ணைப் பார்த்திருக்கிறான் மார்வார் மன்னன். பெண் பித்துப் பிடித்து அலைகிறான் என்று நினைத்த ஜகத்சிம்மன், "மகாராஜா! நமது அரண்மனையில் ஆயிரம் அழகிகள் இருக்கிறார்கள். போயும் போயும் காட்டுப் பெண்ணைப் பார்த்து சித்தம் இழக்கிறீர்கள். வாருங்கள், போவோம். மார்வார் சிம்மாசனம், அந்தப்புரம் எல்லாம் தங்களுக்காகக் காத்திருக்கின்றன" என்றான். அவன் குரலில் பரிவும் இருந்தது, பரிதாபமும் இருந்தது.

"ஜகத்சிம்மா! அவள் உத்தரவு அப்படியில்லை" என்றான் ராவ்ஜோடா.

"இந்தக் காட்டுப் பெண் உத்தரவு இடுகிறாளா?" என்றான் ஜகத் சீற்றத்துடன்.

"அவளை அற்பமாக எடை போடாதே" என்றான் ஜோடா.

"இல்லை. மார்வார் இளவரசனை, இப்பொழுது மகாராஜா ஆகிவிட்ட மகாவீரனை, திடீரென்று பைத்தியமாக அடித்தவளைக் குறைவாக எடை போட முடியாது. எங்கே அவள்? ஏன் எங்களிடம் இருந்து பதுங்குகிறாள்" என்று கூறினான் படைத்தலைவன்.

"அவளை மரியாதைக் குறைவாகப் பேசாதே. மார்வாரை இப்பொழுது காப்பாற்றக்கூடியவள் மலைஅரசிதான். அவள் சொல்வதைக் கேள். நீ செல், தலைநகரை நோக்கி. இன்னும் நான்கு நாளில் மண்டோருக்கு நான் வருகிறேன்" என்ற ராவ் ஜோடா, படைத்தலைவன் போகலாம் என்பதற்கு அறிகுறியாக மலையடிவாரம் செல்லும் பாதையைக் காட்டினான்.

"நாங்கள் நூற்று இருபத்து ஐந்துபேர் இருக்கிறோம். நாங்கள் போனால் உங்களுக்குத் துணை?" என்று வினவினான் ஜகத்.

"மலை அரசி இருக்கிறாள்." ஜோடாவின் பதில் திட்டமாயிருந்தது.

"பெண் துணையா?" நம்பிக்கையற்ற குரலில் வினவினான் ஜகத்.

"ஆம்" என்றான், ஜோடா.

"இதைக் கேட்டால் மார்வார் நகைக்கும்" என்று சுட்டிக் காட்டினான், ஜகத்.

அந்த சமயத்தில் மரங்கள் இடையே ஒரு பந்தம் எரிந்தது.

மலைஅரிசியின் முகம் அதன் வெளிச்சத்தில் ஜொலித்தது.

மெள்ள அந்த பந்தத்துடன் நடந்து வந்த மலை அரசி, ஜகத்சிம்மன் முன்பு நின்றாள்.

அவளைக் கண்ட ஜகத்சிம்மன் பிரமித்தான்.

அந்த வசீகரக் கண்கள் அவனைச் சுட்டுவடுவது போல் பார்த்தன. "ஜகத்சிம்மா? இப்பொழுது மேவாரைக் காத்தது யார்?" அசைந்த உதடுகள் வினவின.

"சந்தசிம்மன்." ஜகத்சிம்மன் குரலில் அச்சம் இருந்தது.

"இல்லை, மேவார் ராணி. ஜோடாவின் சகோதரி சந்தசிம்மனை அவள்தான் வரவழைத்தாள். அவளால் மார்வார் அரசன் மாண்டான்" என்று கூறினாள் மலைஅரசி.

"ஆம்." ஜகத் பிரமிப்புடன் கூறினான். இந்தக் காட்டுப் பெண்ணுக்கு நாட்டு நடப்பு எப்படித் தெரிந்தது என்ற வியப்பில்.

"மகாசக்தியில் இருந்து உலகம் பிறக்கிறது, அசைகிறது. அவள் பெண். ஆகையால் பெண்களை அவமதிக்காதே. சென்றுவிடு, உன் தலைநகருக்கு. இளவரசர் வருவார் பின்னால்" என்றாள் மலைஅரசி. அவள் குரலில் அதிகாரம் இருந்தது.

ஜகத்சிம்மன் பேச நா எழாமல் நின்றான்.

மலை அரசி அவனை பரிதாபத்துடன் பார்த்தாள், "போய்விடு சீக்கிரம் தலைநகரைப் பாதுகாக்க ஏற்பாடு செய். இன்னும் இரண்டு நாளில் சந்தசிம்மன் முற்றுகையிடுவான்" என்றாள்.

"மகாராஜா?" என்று கேட்டான், ஜகத்.

"நான் அழைத்து வருகிறேன்" என்றாள் மலைஅரசி.

ஜகத்சிம்மன் ஏதோ பேச முற்பட்டான். அவள் அனுமதிக்கவில்லை. அவள் கண்களில் அதிகாரம் இருந்திருக்க வேண்டும். அவளுக்குத் தலைவணங்கி, வீரர்களுடன் திரும்பினான் ஜகத்சிம்மன்.

கடைசி வீரன் மறைந்ததும், "ஜோடா! வா. போகலாம்" என்று மலைஅரசி அழைத்தாள்.

"எங்கே?" என்று கேட்டான், ஜோடா.

"குகைக்கு" என்றாள், மலைஅரசி. திரும்பி நடக்கவும் முற்பட்டாள்.

மார்வார் வீரன் அவளைத் தொடர்ந்தான் மௌனமாக.

அந்த மௌனத்தாலும், மனம் இருந்த குழப்பத்தாலும் அவள் சென்ற திக்கை அவன் கவனிக்கவில்லை. சுரணை திரும்பியபோது திகைத்தான். அவள் அவனை அழைத்துச் சென்றது, ஜோகியின் குகையல்ல, வேறொரு குகை. அதன்

வாயிலில் நின்று அவள் ஜோடாவை வரும்படி சைகை செய்தாள். ஜோடா தயங்கினான், நடுங்கினான் எல்லையற்ற அச்சத்தால்.

அவள் பந்தத்தை அணைத்தாள். பிறகு, "உம்! ஜோடா வா" என்று அவனை அழைத்தாள். அந்த அழைப்பில் இன்பம் பெரிதும் ஒலித்தது.

ஜோடா உணர்ச்சி மிகுதியாலும், திடீரென மாறிவிட்ட அவள் போக்கினாலும் திகில் பிடித்து, நின்ற இடத்தில் நின்றான்.

அவனது மலைப்பை, திகைப்பை மலைஅரசி உணர்ந்திருக்க வேண்டும். அவனை நோக்கி அவளே வந்தாள்.

7. சாகுந்தலம்

பந்தத்தையும் அணைத்துவிட்டு இருண்ட குகைக்குள் தன்னை வா வா என்று அழைத்த அந்த பருவப் பாவையின் துணிவை நினைத்து ஜோடா திகிலுக்கு இலக்காகி நின்ற நேரத்தில், மலைஅரசியே குகை வாயிலைவிட்டு அவனை அணுகி, அவன் கையைப் பிடித்தாள். "ஜோடா! வா, அஞ்சுவதற்கு ஏதும் இல்லை" என்று தைரியம் சொன்னாள் மார்வார் இளவரசனுக்கு.

தன் இடக்கை மணிக்கட்டில் அவள் பிடித்த பிடி மிகக் கெட்டியாயிருந்ததைக் கண்ட ஜோடா நல்ல பலசாலியான பெண்ணிடம் தான் சிக்கிக்கொண்டு இருப்பதை உணர்ந்தான். அவள் பிடியை அவனால் உதற முடியும் என்பது நிச்சயம் என்றாலும், என்ன காரணத்தாலோ அவன் எந்த செய்கையிலும் ஈடுபடாமலும், அவள் இழுத்த இழுப்புக்கு உட்படாமலும் சிலையென நின்றான், சில விநாடிகள். பிறகு மெதுவாகச் சொன்னான்: "மலை அரசி! நீ பருவப்பெண்" என்று.

இதைக் கேட்ட மலை அரசி மெதுவாக நகைத்தாள். "இதை அறிந்துகொள்ள சோதிடம் தெரியவேண்டியதில்லை" என்றும் சொன்னாள்.

"நானும்" என்று மென்று விழுங்கினான் ராவ்ஜோடா.

"வாலிபர்" என்று மலை அரசி வாசகத்தை முடித்தாள்.

"தவிர—" இழுத்தான் ஜோடா.

"சொல்லுங்கள்."

"வனப்பிரஸ்த ஜோகி—"

"அவருக்கு என்ன?"

"பிராமண குலம்?"

"அதனால் என்ன?"

"நீயும் பிராமணப் பெண்ணாயிருக்க வேண்டும்."

மலைஅரசி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சொன்னபோது அவள் குரலில் உறுதியிருந்தது. "அவர் பிரும்ம குலமானால் நானும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை" என்று கூறிய மலை அரசி, "இரவு முழுவதும் குகை வாயிலில் நின்று பேச வேண்டாம். உள்ளே வாருங்கள். நீங்கள் வர மூன்று நிமிடம் அவகாசம் தருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் குகைக்குள் நுழைந்துவிட்டாள் தனியாக.

ராவ்ஜோடா இதுதான் சமயம் என்று புரவியில் ஏறி ஓடிவிடலாம் என்று நினைத்தான். ஆனால் அது அத்தனை சுலபம் அல்ல என்பதையும், தன்னை நின்ற இடத்திலேயே நிறுத்த ஜோகிக்கும் மலை அரசிக்கும் சக்தியுண்டு என்பதையும் உணர்ந்ததால், கனத்த இதயத்துடன் குகையை நோக்கிச் சென்று உள்ளே நுழைந்தான். அங்கு அவன் கண்ட காட்சி, அவனது பிரமிப்பையும் அச்சத்தையும் உச்சநிலைக்குக் கொண்டு சென்றது.

ஆரம்பத்தில் லவலேசமும் வெளிச்சம் இல்லாது கும்மிருட்டாயிருந்த குகை, சிறிது தூரத்துக்கு அப்பால் மங்கலான வெளிச்சத்துடன் காட்சியளித்தது. மெள்ள பக்கச்சுவர்களைத் தடவிய வண்ணம் வெளிச்சம் இருந்த இடத்தை அடைந்ததும், வெளிச்சத்துக்குக் காரணம் குகையின் மேற்பகுதியில் இருந்த

இரண்டு சிறிய துளைகளே என்பதை ஜோடா புரிந்து கொண்டான். அந்த இரண்டு துவாரங்கள் மூலம் மூன்றாம் ஜாமச் சந்திரன் வீசிய வெளிச்சம் மிக லேசாக உள்ளே விழுந்தது. அந்த துவாரங்களை அடுத்து முளைத்து உள்ளே தொங்கிய ஒரு பூங்கொடியின் காட்டு மலர் லேசாக ஆடிக்கொண்டு இருந்தது. குகையின் சூழ்நிலை மிக ரம்மியமாக இருந்தது.

அந்தச் சூழ்நிலையில் குகையின் தரையில் விரிவாகத் தூவிக் கிடந்த மலர்ப்படுக்கையில் மலைஅரசி மல்லாந்து படுத்துக் கிடந்தாள். அவள் படுத்துக்கிடந்த நிலையில் இருந்தும் குகைக் கூரையின் துளைகளில் இருந்து நேராக அம்புகள்போல் மெல்லியதாக விழுந்த இரு சந்திர கிரணங்கள் காட்டிக் கொடுத்த அழகில் இருந்தும், ஏதோ அப்சரஸ்தான் சாபத்தால் அந்தக் குகையில் வந்து கிடக்கிறாள் என்று நினைத்தான் மார்வார் இளவரசன்.

அவள் மல்லாந்து படுத்திருந்ததால் அவள் நிமிர்ந்த மார்பு மீது குறியிட்டு விழுந்த இரண்டு கிரணங்கள் அவள் கவர்ச்சியை உச்சநிலைக்குக் கொண்டுபோயின. அப்படி கவர்ச்சி நிலைகளைக் காட்டியதன் விளைவாக ஒளவு தெரிந்த முகத்தின் மந்தகாசமும், அதில் பளிச்சிட்ட இ கூர்வேல்களும், உன்மத்தத்தை ஊட்டும் செம்பருத்தி உத களும் ஜோடாவின் சித்தத்தை ஈர்த்தன. வெறி பிடித் ஜோடா தன் நிலையையும், அவள் ஜோகியின் மகள் என் பயத்தையும் உதறித்தள்ளி, அவளை நோக்கி நடந்தான். அவ முன்பு சில விநாடி நின்று அவள் பூவுடலை ஆராயவு செய்தான்.

சந்திர கிரணங்கள் குறிப்பாகப் பட்டதால் விளக்கேற்றி குன்றுகளைப் போலக் காட்சியளித்த கவர்ச்சிப் பிம்பங்களை மறைத்த மரவுரி தெறித்து விழும் நிலையில் இருப்பதா ஜோடாவின் கண்களுக்குத் தென்பட்டதால், அவன் தன

பார்வையைச் சிறிது அப்புறப்படுத்தினான். ஏதோ சம தரையைப் போல் படிந்துவிட்ட வயிற்றையும் அதற்குக்கீழே இறுகி திண்மையிலும் சின்னஞ்சிறியதாகத் தெரிந்த இடையையும், கீழே இறங்கிய காலின் பரிமாணங்களையும் கவனித்த ஜோடா, மரவுரியை அவள் தரித்திருந்ததன் காரணமாக பல இடங்களில் இடைவெளிகளில் புலனான அவள் சுந்தர எழிற்பகுதிகளைக் கண்டு. சித்தத்தின் நிதானத்தை அறவே இழந்தான். அதன் விளைவாக அவள் அருகில் உட்காரவும் செய்தான்.

சிறிது நேரம் உட்கார்ந்திருந்த பின் அவள் மலர்க்கையை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்ட மார்வார் ராஜபுத்திரன், "அரசி! இது முறையல்ல" என்றான்.

"எது?" என்று முணுமுணுத்துக் கேட்டாள், அவள்.

"ஒரு அந்தண மகளை..."

"எப்படித் தெரியும் உங்களுக்கு, நான் அவர் மகள்தான் என்று."

"மகள் அல்லாவிட்டால் வேறு யார்?"

"எனக்குத் தெரியாது."

"ஜோகிக்கு?"

"அவருக்குத் தெரியாதது எதுவுமில்லை."

"அவரைக் கேட்பதுதானே!"

"எதைப் பற்றி?"

"உன் பிறப்பைப்பற்றி?"

"கேட்டேன், ஒருமுறை."

"என்ன சொன்னார்?"

"அதைப்பற்றி காலம் வரும்போது சொல்வதாகச் சொன்னார்."

இதற்குமேல் அவள் பேசவில்லை. அவள் அழகிய பெருவிழிகள் ஜோடாவின் விழிகளுடன் கலந்து, கவர்ந்து நின்றன. அவை விடுத்த அழைப்பால் எதைச் செய்கிறோம் என்று புரியாமலே முகத்தை அவள் முகத்துக்கு அருகே கொண்டு போனான். "அரசி! என்று அவள் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக அழைத்தான்.

"உம்." அவள் செண்பக மொட்டு நாசியில் இருந்து வெளிப்பட்டது அந்த ஒலி.

"எனக்குப் பயமாயிருக்கிறது, மலை அரசி" என்றான் ஜோடா, மெதுவாக நடுங்கிய குரலில்.

மலை அரசியின் மதுர இதழ்கள் விரிந்தன. இளநகை கொண்டதால். "பயத்திற்கு என்ன இருக்கிறது, இதில்?" என்று மெதுவாக வினவினாள்.

"அதர்மச் செயலில் இறங்குவது அரச தர்மத்துக்கு அழகல்ல" என்றான் ஜோடாவும் இன்னும் சற்று அதிகமாகக் குனிந்து.

காமபாணங்கள் அவன்மீது கணக்கின்றிப் பாய்ந்தன. செழித்த கன்னங்களில் அவள் முறுவல் காட்டியபோது விழுந்த குழிகள் அவனை மயக்கின. கழுத்தை அவள் சற்றே திருப்பி அவனைப் பார்த்தபோது முகத்துக்கு வெகு அருகில் வந்துவிட்ட கழுத்தும் மார்பும் அவனை நிலைகுலையச் செய்தன.

அப்பொழுது மீண்டும் சொன்னாள் மலை அரசி, "உன்னைப் போல் வந்தான், வேறோர் அரசன், வேறொரு காலத்தில், வேறொரு பெண்ணை நோக்கி. அவன் அஞ்சவில்லை" என்று.

"யார் அந்த அயோக்கியன்?" என்று முணுமுணுத்தான், ராஸ்ஜோடா.

"அயோக்கியன் அல்ல, அதர்மவானும் அல்ல. ஆனால், கடமையை உணர்ந்தவன்" என்றாள் மலை அரசி.

"அவன் க்ஷத்திரியனா?"

"சூரியகுல சக்கரவர்த்தி."

"பெயர்?"

"துஷ்யந்தன். உங்களைப் போலத்தான் ஒரு ரிஷியின் பெண்ணைப் பார்த்தான். ஆனால், அஞ்சவில்லை..." என்ற மலைஅரசி சிறிது ஒருக்களித்தாள்.

ஒருக்களித்ததால் அவள் சுந்தர உடலின் எழிற்பகுதிகள் குனிந்திருந்த அவன் உடல்மீது நன்றாகவே அழுந்தின. மெள்ள சுயநிலை இழந்தான், ஜோடா. அதுவரை பக்கவாட்டில் ஊன்றியிருந்த அவன் வலக்கை அவள் உடலுக்குக் குறுக்கே சென்று அப்புறம் இருந்த தரையில் பதிந்தது.

மலை அரசியும் அந்த நிலையில் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கினாள். அவள் கையொன்று எழுந்து அவன் கழுத்தை வளைத்தது.

அடுத்த விநாடி ஜோடாவின் முகம் அவள் கழுத்தில் புதைந்து புரண்டது. சகுந்தலையின் மகோன்னத காவியம் அந்த குகையில் மீண்டும் புத்துயிர் பெற்றது.

8. காட்டு மலர்

ஜோடாவின் வாலிப முரட்டு முகம் அவள் வழவழத்த கழுத்தில் திடீரென அழுந்திப் புரண்டபோது, மலை அரசியின் இதயமும் அந்த வாலிபன் உள்ளத்தைப்போலவே உணர்ச்சி அலைகளில் உருண்டது.

அத்தனை உணர்ச்சி எழுச்சியிலும் அரசகுமாரன் தன் உடலை அடியோடு தூக்கி அணைத்துக்கொள்ளாமல், அவன் முகம் கழுத்தில் புரண்டும் இதழ்கள் விரிந்து விரிந்து கழுத்தில் பல இடங்களில் மாறி மாறிப் புதைந்த போதிலும், தனது உடலுக்குக் குறுக்கே பாய்ந்திருந்த அவனது வலக்கை திடமாக ஊன்றி அவனது உடலை சிறிது தூக்கியே வைத்து தனது கவர்ச்சிப் பிரதேசங்களுக்கும் வலிய அவன் மார்புக்கும் இடைவெளி கொடுத்தே இருந்ததையும் உணர்ந்த அந்த காட்டு ராணி, பண்பில் ஊறியிருந்த ஒரு மகாவீரனிடம் தான் சிக்கியிருப்பதைப் புரிந்துகொண்டாள். அதனால் பெருமை கலந்த உணர்ச்சி மிகுந்த பெருமூச்சொன்றையும் வெளியிட்டாள்.

அந்தப் பெருமூச்சின் விளைவாகவும், மீண்டும் பெரிதாக உள்ளே இழுத்து நிறுத்தப்பட்ட சுவாசத்தின் விளைவாகவும் விம்மிய அவள் மார்பகம், அப்படியே நின்றுவிட்டதால் அந்தப் பகுதி ஜோடாவின் மார்புமீது லேசாக உராயவே செய்தது என்றாலும், அதையும் அதன் அழைப்பையும் ஜோடா உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஏதோ பெரும் மயக்கத்தில்

சிக்கியவன் போல் ஜோடா அவள் கழுத்தில் பதிந்து புரண்ட முகத்தைக்கூட ஒரே இடத்தில் நிறுத்தினான். பிறகு அந்த இடத்தில் இருந்து முகத்தை எழுப்பி அவள் கண்களுடன் தன் கண்களை உறவாடச் செய்ய முயன்றான்.

ஆனால், மலை அரசியின் மான்விழிகள் மூடியே இருந்ததால் அவன் எண்ணம் நிறைவேறவில்லை என்றாலும் மூடிய நிலையிலும் அந்த முகம் இருந்த வசீகர எழிலைப் பருகவே செய்தான். மூடியிருந்த கண்கள் முத்துச்சிப்பிகளைப் போலக் காட்சியளித்தன. அவற்றின் மேலே கறுத்து வளைந்து இருந்த இரு விற்கள் அந்தச் சிப்பிகளைப் பாதுகாக்கவே ஏற்பட்டனபோல் தெரிந்தன, ஜோடாவின் விழிகளுக்கு.

அவன் விசால முகம், அவளுடைய முன்னுச்சி முடிகளின் விளையாடும் நிலமாகவும், குறுக்கே படுக்க வைக்கப்பட்ட அகன்ற தாமரை இதழ் போலும் இருந்ததை கவனித்த மார்வார் ராஜபுத்திரன், தனது வலக் கையை தரையில் இருந்து எடுத்து அவள் நுதலைத் தடவவும் செய்தான். அவள் கண்களை அணைத்து நின்ற கன்னங்களின் செழுமை அவனை வாவென்று அழைத்துங்கூட அவன் அவற்றை இதழ் கொண்டு நெருங்காமல் வலக் கையால் மெல்ல வருடினான். ஒருமுறை லேசாக்கி கிள்ளியும் பார்த்தான்.

அந்த கிள்ளல் அவள் இதயத்தில் ஏதோ ஒரு வாசலைத் திறந்திருக்க வேண்டும். அவள் அழகிய தேன் சொட்டும் அதர இதழ்கள் மெள்ள விரிந்து சேர்ந்தன ஒரு விநாடி. அப்படி விரிந்து சேர்ந்ததில் ஒரு துடிப்பும் இருந்ததை கவனித்தான் ஜோடா. 'துடிப்பு ஏன்? மலை அரசியும் பயந்துவிட்டாளா? அல்லது சகுந்தலையும் துஷ்யந்தன் சமீபத்தில் இப்படித்தான் துடித்திருப்பாளா?' என்று தன்னுள் வினவிக் கொண்டான், அந்த வாலிபன்.

அந்தத் துடிப்பு தனது இதழ்களுக்கு அழைப்பு என்பதை அந்த ஆண் மகன் புரிந்துகொள்ளவில்லை. அந்தச் சமயத்தில்

அது காமத்தின் துடிப்பு, அச்சத்தின் துடிப்பு அல்ல என்பதை அவன் உணரவில்லை. அப்பொழுது அவள் உடலும் அசைந்ததையும், பருத்த அவள் தொடைகள் கூட லேசாக அசைந்து கூடிக் கொண்டதையும் பார்த்த ஜோடா, முதலில் துணிந்த மலை அரசியின் கற்பின் வலிமை அவளைக் காப்பாற்ற முன்வந்துவிட்டதாக எண்ணினான்.

இப்படி அவள் ஒவ்வோர் அசைவையும் தர்மக் கண்கொண்டு பார்த்த மார்வார் ராஜபுத்திரனுக்கு, உண்மைக்கு மாறுபட்ட அர்த்தங்களே புத்தியில் தோன்றவே அவளை சமாதானப்படுத்த முயன்றான் அவன். அவளுக்கு துணிவைக் கொடுப்பது தனது கடமை என்று எண்ணிய ஜோடா, மடமை என்பது பெண்களின் தனிச் சொத்தல்ல என்பதை நிரூபிக்கத் தொடங்கினான். "பெண்ணே!" என்று அவள் காதுக்கு அருகில் குனிந்து மெள்ள அழைத்தான்.

அவளிடம் இருந்து பதில் ஏதும் வரவில்லை.

அவனே மீண்டும் சொன்னான், "உன்னைக் காக்க மார்வார் இளவரசன் இருக்கும்வரை நீ அஞ்சுவதற்கு ஏது மில்லை" என்று.

மௌனம் எழுப்பிய உணர்ச்சிகளில் அனாவசியமான பேச்சு குறுக்கிடவே சட்டென்று சுயநிலை எய்திவிட்ட மலை அரசி மிக மதுரமாக மெல்ல நகைத்தாள்.

ராவ்ஜோடா நன்றாக நிமிர்ந்து தரையில் உட்கார்ந்து இரு கைகளையும் அவள் உடலுக்குக் குறுக்கே கொடுத்துத் தூக்கி முகத்தை தனது முகத்துக்கு அருகில் கொண்டு வந்தான். அந்த நிலையில் கேட்டான், "மலை அரசி ஏன் சிரிக்கிறாய்?" என்று.

அப்பொழுதும் அவள் கண்களை விழிக்கவில்லை. அவள் தலை பூமியை நோக்கி சாய்ந்து, முடிந்த குழல் அவிழ்ந்து தொங்கி தரையில் புரண்டுகொண்டு இருந்தது. தலை அப்படி சாய்ந்து இருந்ததால், முன்பு அவனது முகம் புரண்ட கழுத்து

நன்றாக நீண்டு அவன் கண் எதிரில் காட்சியளித்ததால், அதன் மோகனாகாரத்தில் அவன் இரண்டாம் முறையாக மூழ்கினான், இதழ்களை அந்தக் கழுத்தில் அழுத்தினான். கழுத்து செய்த பாக்கியத்தைத் தாங்கள் செய்யவில்லையே என்ற எரிச்சலால் இரட்டை எழில் பகுதிகள் அந்த வாலிபனை நோக்கி முறைத்தன. மார்பின் எரிச்சலை நோக்கியதாலோ என்னவோ அவள் அழகிய இடை வெட்கத்தால், அதர்மத்தைக் காணும் நல்ல மனிதர்களைப் போல, மிகவும் குறுகியது. குன்றிவிட்ட மனிதர்களின் இடங்களை ஆக்கிரமித்துக் கொள்ளும் தீயவர்களைப் போல கீழ்ப்பரிமாணங்கள் அகன்று இடத்தைப் பிடித்து, அது இருந்த இடத்தைத் தெரியாமல் அடித்துவிட்டன.

ராவ்ஜோடா மீண்டும் தனது முகத்தை அவள் கழுத்தில் இருந்து எடுத்தான். அவள் உடலை நன்றாகத் தூக்கி தனது மார்பில் அவள் தலையை சாய்த்துக்கொண்டான். "மலைஅரசி! அடி காட்டு மலரே!" என்று இன்பமாக அழைத்தான்.

மலை அரசி மெள்ள கண்களை விழித்தாள். "காட்டு மலரா?" என்று மெதுவாக வினவினாள்.

"ஆம். நாட்டில் மலர்கள் இத்தனை செழிப்பதில்லை" என்றான் ஜோடா. அவள் உடலின் பின்புறத்தில் கண்களை ஓட விட்டு.

"காட்டில் மட்டும் செழிக்கிறதா? உண்மையாகவா?" என்று வினவினாள், மலை அரசி மெதுவாக.

"ஆம்." ஜோடாவின் கண்களில் கனவு விரிந்து, கனவுக் கண்கள் அவள் வசீகரத்தைப் பருகின.

"ஏனோ?" அவள் முணுமுணுத்தாள்.

"நாடு நாகரிகத்தில் திளைக்கிறது. செயற்கையை வளர்க்கிறது. இயற்கை வாழ்விலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்கிறது. அதனால்தான்."

"காட்டில்?"

"கட்டுப்பாடு இல்லை. கேட்பார் இல்லை. இயற்கை கொடுக்கிறது உரம். சுதந்திரம் அளிக்கிறது சூழ்நிலை. கவலையற்று வளர்கிறது காட்டுச் செடி. அதன் மலர்களுக்கு மனிதன் பறித்துவிடுவானே என்ற அச்சமில்லை. அதனால் செழித்து வளர்ந்து மலர்ந்து காற்றில் விளையாடுகிறது."

"உங்களுக்கு நாடு பிடிக்கவில்லையா?"

"உன்னை பார்த்ததில் இருந்து பிடிக்கவில்லை."

"நீங்கள் கவிஞரா?"

"உன்னைப் பார்த்தபின் அப்படியானேன்."

"நான் இல்லாமல் நீங்கள் ஊர் சென்றால்?"

"இன்பக் கவி துன்பக் கவியாவான். கவி மனம் ஒரு முறை ஊற்றெடுத்து விட்டால் வரண்டு போவதில்லை."

மீண்டும் மலை அரசி நகைத்தாள். "வாலிபரே!" என்று அழைத்தாள் கண்களை அகல விரித்து. அவன் கண்களுடன் உறவாடவிட்டு.

"மலரே! ஏன்?" கவிதையிலேயே பேசினான். அரசமகன்.

"மன்னனே!..." என்று தொடங்கினாள் மலை அரசி.

"என்ன மலரே?" இன்ப முறுவல் கூட்டினான். இளவரசன்.

"மன்னன் கையில் மலர் கிடக்கிறது."

"உம்."

"காட்டு மலரை அவன் பறித்தது தவறு."

"பறித்தது அவன் அல்ல. அது இடறியது" என்று சொல்லியிருக்கலாம் அவன். ஆனால், சொல்லவில்லை. அதை நெருங்கினான், முகர்ந்தான்.

"அது?"

"தவறல்ல, இயற்கை நியதி. ஆனால்..."

"ஆனால்?"

"முகர்ந்ததுடன் நின்றுவிட்டான். அது அதர்மம். இன்னொருவன் அதை முகர முடியாது."

"அதனால்?"

"நுகருவது தர்மம். சாஸ்திரம் அனுமதிக்கிறது."

"எதை?"

"எதை துஷ்யந்தன் ஏற்றான்?"

"காந்தருவத்தை."

"அது க்ஷத்திரிய தர்மம் அல்லவா?"

ஜோடா தீர்க்கசிந்தனையில் இறங்கினான். பிறகு மெதுவாகச் சொன்னான் : "நீயும் க்ஷத்திரியப் பெண்ணாயிருந்தால் அது தர்மம். இல்லையேல்..." என்று.

அவன் வாசகத்தை முடிக்கவில்லை. "என்னை நீங்கள் தொட்டதே பாவம். பிறகு செய்வதெல்லாம் அழிக்க முடியாத அதர்மம். இப்பொழுது மலரைத் தாங்கியிருக்கிறீர்கள். மீளா நரகத்திற்குச் செல்ல இதுதான் வழி" என்று அவன் வாசகத்தை வெட்டிய மலை அரசி, "உங்களுக்கு மனச்சாட்சியில்லை. துஷ்யந்தன் தனது மனம் சகுந்தலையிடம் சென்றதும் சிறிது சிந்தித்தான். பிறகு தர்மவானான அவனே சொல்லிக் கொண்டான், 'நல்ல மனிதர்கள் மனம் தவறான வழியில் செல்லாது' என்று. பிறகு அவன் கடமையைச் செய்யத் தவறவில்லை. உங்கள் மனத்தில் தெளிவில்லை, திடமில்லை" என்ற மலை அரசி சட்டென்று அவன் கைகளை உதறி எழுந்து நின்றாள்.

ஜோடாவும் எழுந்தான்.

எழுந்து அவள் நின்றபோது மேலேயிருந்து வந்த கிரணங்கள் அவள் உடலை நிலவில் குளிப்பாட்டின. விரிந்த கருங்குழலை அவள் எடுத்து முடித்துக்கொண்டு ஜோடாவை நோக்கி, "ராஜபுத்திரனே! இரவு கண்களை மூடிவிட்டது. உதயம் கண்ணை விழிக்கப் போகிறது. அருவிக்குச் சென்று காலைக் கடனை முடித்து புரவியைத் தயார் செய்துகொள். அருணோதயத்தில் நாம் புறப்படுகிறோம்" என்று உத்தர விட்டாள்.

ராவ்ஜோடா ஏதும் பேசாமல் குகைக்கு வெளியே சென்றான். அதுவரை அவன் பட்ட உஷ்ணத்துக்கு அருவி நீர் அமுதமாயிருந்தது. அவன் அதில் மூழ்கினான். அருணன் கிழக்கே மெல்லத் தலை காட்டினான். சந்தியாவந்தனத்தை முடித்த ராஜபுத்திரன் கரைக்கு வந்து தனது உடைகளைப் புனைந்தான். பிறகு எட்ட இருந்த தனது புரவிக்கு சேணமிட்டான்.

அந்தச் சமயத்தில் மலை அரசி புது மரவுரியை இடையில் தரித்து, ஒரு புலித்தோலை தாவணியாகப் போட்டுக்கொண்டு குகையில் இருந்து வெளியே வந்து நேராக புரவி இருக்கு மிடம் சென்று அதன்மீது தாவி அனாயாசமாக ஏறினாள். "ஜோடா! நீயும் ஏறிக்கொள்" என்றாள் மலை அரசி.

அவள் சொற்படி அவனும் ஏறியதும் புரவி மலைச்சரிவில் வேகமாக இறங்கிச் சென்று, பாலைவனப் பகுதியை அடைந்தது. இப்படிப் பயணம் செய்த இரண்டாவது நாள் இருவரும் மார்வார் தலைநகரத்துக்கு எதிரில் தோன்றினார்கள். அவர்களைக் கண்டதும் மண்டோரின் கோட்டைக் கதவுகள் திறக்கவே, ராவ்ஜோடா புரவியில் இருந்து இறங்கி கடிவாளத்தைக் கைகளில் ஏந்தி தலைநகரில் நுழைந்தான்.

அவனை ஜகத்சிம்மன் கோட்டை வாயிலிலேயே எதிர் கொண்டான். "உங்களுக்குத் துன்பச் செய்தி வைத்திருக்

கிறேன்" என்று சொன்னான் ஜகத்சிம்மன், மலை அரசியை வெறுப்புடன் பார்த்து.

"அது என்ன என்பது எனக்குத் தெரியும்" என்ற மலை அரசி, "சந்தசிம்மன் வருவதைப் பற்றிக் கவலைப்படாதே" என்றும் சொன்னாள்.

இதைக் கேட்ட மார்வார் படைத்தலைவனை ஜகத்சிம்மன் பிரமை பிடித்து கல்லாய் சமைந்து நின்றான். பிறகு கோபம் தலைக்கு ஏற, "நீ ஒரு..." என்று ஏதோ தொடங்கினான்.

"காட்டுமலர்" என்று அதட்டலான குரலில் அவன் வாசகத்தை வெட்டிய இளவரசன், வேறொன்றும் சொன்னான். அதை மலை அரசிகூட எதிர்பார்க்கவில்லை.

9. நிலையற்ற அரசு

மலை அரசியை "காட்டு மலர்" என்று குறிப்பிட்டதோடு தனது பேச்சை ஜோடா நிறுத்திக்கொண்டு இருந்தால் ஜகத்சிம்மனின் கோபம் தலைக்கு ஏறியிருக்காது. "இவள் மார்வார் ராணி" என்றும் சொல்லவே ஜகத்சிம்மனுக்கு கோபத்துடன் திக்பிரமையும் சித்தத்தைச் சூழ்ந்து கொண்டதால், அவன் பேச நா எழாமல் நின்றான் பல விநாடிகள். பிறகு பேசியபோதும் பேச்சில் அச்சமும் குழப்பமும் கலந்து கிடந்தன. "இவளா! மார்வார் ராணியா!" என்று மார்வார் படைத் தலைவன் கேட்டபோது, ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது போன்ற ஒலி அதில் பரவிக் கிடந்தது.

புரவியின் கடிவாளத்தை ஏந்திக்கொண்டு தரையில் நின்ற ஜோடா தனது படைத் தலைவனை சிறிது சினத்துடன் நோக்கினான். "ஜகத்சிம்மன்! உனக்கு மார்வார் ராணியைப் பற்றிப் பேசும் முறையே தெரியவில்லை. 'இவளா' என்று கேட்பது பெரும் குற்றம்" என்று சுட்டிக் காட்டவும் செய்தான் ராவ்ஜோடா.

ஜகத்சிம்மன் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவல் அரும்பிற்று. ' மலை அரசிக்குத் தலைவணங்கிவிட்டு ஜோடாவை நோக்கித் திரும்பி "இவர்கள் உடனடியாக ராணி ஆக முடியாது" என்றான்.

"ஏன்?" ஜோடாவின் குரலில் சீற்றம் இருந்தது.

"தாங்கள் இன்னும் மகாராஜா ஆகவில்லை. நாளைக்கு மறுநாளைக்கு மறுநாள் அதற்கு நாள் வைத்திருக்கிறார் புரோகிதர். அதற்குப் பின்புதான் தாங்கள் மகாராஜா. மகாராஜாவுக்குத்தான் மகாராணி உண்டு. ராஜபுதனத்து சம்பிரதாயம் தாங்கள் அறியாதது அல்ல" என்று விளக்கினான் ஜகத்சிம்மன்.

"புரோகிதர் குறிப்பிட்ட நாளில் முடிசூட்டு நடக்காது. அதை நாளைக்கே நடத்திவிடுங்கள்" என்று குறுக்கிட்டுப் பேசிய மலை அரசி, "சேனாதிபதி! மீதி விஷயங்களை நாம் அரண்மனையில் பேசலாம்" என்றும் சொன்னாள் கட்டளையிடும் தோரணையில். சொன்னதோடு நிறுத்திக் கொள்ளாமல் புரவியை நகர்த்தவும் செய்தாள், தனது கால்களை அதன் வயிற்றில் உதைத்து.

அதற்குமேல் நிற்கவோ பேசவோ சந்தர்ப்பம் கிடைக்காததால் ஜோடா புரவிக்கு முன்பு கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு மார்வார் தலைநகரத்தின் ராஜவீதியில் நடந்தான். படைத்தலைவனும் இளவரசனைப் பின்பற்றிச் சென்றான்.

அரண்மனையின் முதல் கட்டுக்கு வந்ததுமே பத்து பணிப்பெண்கள் மலை அரசியை சூழ்ந்துகொண்டனர். "தாங்கள் இளவரசருடன் செல்ல முடியாது. இப்படி வரவேண்டும்" என்று மற்றொரு புறமாக வழிகாட்டினார்கள்.

பெண்கள் மலை அரசியைச் சூழ்ந்ததும் ஜோடா சிறிது விலகி நின்றான். "மகாராணி! சீக்கிரம் உங்களை சந்திக்கிறேன்" என்று கூறி வேறுபுறம் திரும்பிச் சென்றான். பெண்கள் மலை அரசியை பெரிய அரசி இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஜோடாவின் தந்தை மேவார் தலைநகரில் கொல்லப்பட்ட செய்தியை முன்னதாகக் கேள்விப்பட்டு இருந்ததால் முகத்தை

நன்றாக மறைத்துக்கொண்டு துக்கக் கோலத்தில் தனியாக பஞ்சணையில் அமர்ந்திருந்தாள் மார்வார் மகாராணி. அவளுக்குப் பணிவதைவிட்டு நேராக அவள் இருந்த பஞ்சணையை அடைந்த மலை அரசி அவள் அருகில் உட்கார்ந்து அவளை இறுக அணைத்துக் கொண்டாள். "மகாராணி! இந்த உலகம் இன்பமும் துன்பமும் கலந்தது. கிரமமும் அக்கிரமமும் கலந்தது. ஆயினால் கவலையை விடுங்கள். உங்கள் புதல்வர் மார்வாருக்கு ஜெயத்தையும் மங்களத்தையும் அளிப்பார்" என்று தைரியமும் தத்துவமும் கலந்த சொற்களை உதிர்த்தாள்.

அந்த அணைப்பில், அந்த சொற்களில், சிறிது ஆறுதலைப் பெற்ற மகாராணி, "பெண்ணே! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டாள்.

"ஜோட்கிர்ரில் இருந்து வருகிறேன். வனப்பிரஸ்த ஜோகியின் மகள் நான்" என்று சொன்னாள், மலை அரசி.

மகாராணி சற்று மலை அரசியின் அணைப்பில் இருந்து விலகி "ஜோட்கிர்ரா? அப்படி எதுவும் இந்தப் பகுதியில் கிடையாதே" என்றாள்.

"பெயர் இப்பொழுது மாறிவிட்டது. முன்பு பாகுர்ச்சிரா என்று பெயர்" என்று சொன்னாள் மலை அரசி.

மகாராணியின் கண்களில் வியப்பு தெரிந்தது. "ஏன் அப்படி மாறியது? யாரால் மாற்றப்பட்டது?" என்று வினவினாள் குரலிலும் வியப்பு பெரிதும் ஒலிக்க.

"வனப்பிரஸ்த ஜோகியால் மாற்றப்பட்டது. இனி அந்த மலை போர்களைத் தூண்டும் என்பதால் மாற்றினார். அதற்குக் காரணம் உங்கள் புதல்வர். அவர் அங்கு அடி எடுத்து வைத்த அன்றே ராஜஸ்தானம் போர்க்களமாக வித்து விதைக்கப்பட்டது" என்றாள் மலை அரசி.

மகாராணி திகைப்ரமை அடைந்தாள். "ஆம், ஆம், உண்மைதான். சந்தசிம்மன் படையெடுத்து வருகிறானாம் மாண்டோர் மீது" என்று சொன்னாள், துன்பம் தோய்ந்த குரலில்.

"அஞ்சாதீர்கள் மகாராணி, அந்தப் படையெடுப்பால் மண்டோருக்கோ உங்கள் மகனுக்கோ எந்தத் தீங்கும் இல்லை" என்ற மலை அரசியை அச்சத்துடன் நோக்கினாள் மகாராணி. "இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்" என்றும் கேட்டாள்.

சிறிது சிந்தித்தாள் மலை அரசி. "சாதாரண மனிதர்களின் கண்ணுக்கோ புத்திக்கோ எட்டாத பல விஷயங்கள் என் வளர்ப்புத் தந்தைக்குத் தெரியும். அவர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். இந்த ராஜபுதனத்தின் பிற்காலத்தைப் பற்றி. இந்த மண்டோர் சில காலம் கை மாறலாம். ஆனால், மார்வார் கைமாறாது. உங்கள் கணவர் மேவாரை ஆக்கிரமிக்க முயன்றதால் ஏற்பட்ட விளைவுகளை உங்கள் மகனின் நிதானமும் நேர்மையும் சரிப்படுத்தும். இந்த நாட்டில் இரத்தப் பூசல்கள் இன்னும் தீரவில்லை. உங்கள் மகன் அப்பூசல்களுக்கு முடிவு கட்டுவார். இந்த மார்வார் இவர் காலத்தில் பெரிதும் விரியும், அமைதி நிலவும். மேவாருக்கும் மார்வாருக்கும் இடையில்" என்று சொல்லிவிட்டு, "நான் நீராடிவிட்டு வருகிறேன்" என்று பணிப்பெண்களுடன் சென்றுவிட்டாள்.

மகாராணி அவள் செல்வதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். "என் மகனுக்கு ஏற்ற அழகி தான்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அறையை விட்டுக் கிளம்பிய மலை அரசியை தனி அறைக்கு அழைத்துச் சென்ற பணிப்பெண்களில் ஒருத்தி அவள் மரவுரியைக் களையச் சொல்ல, மற்றவர் வேறோர் ஆடையளித்தார்கள் நீராட்டத்திற்காக. பிறகு குளியல் அறையில் மங்களஸ்நானமும் செய்வித்தார்கள். அடுத்து

அவளுக்கு என்று ஒதுக்கிவிடப்பட்ட தனி அறை காட்டப் பட்டது. அந்த அறைக்குள் அவர்களால் அளிக்கப்பட்ட பட்டாடையை தாறுமாறாகச் சுற்றிக்கொண்டாள். மலை அரசி மற்றவர்களை ஆடையை அணிந்துவிடவும் அனுமதிக்க வில்லை. அவள் குழலைக்கூட யாரையும் சீவ அனுமதிக் காமல் தானே கோதி முடிந்துகொண்டாள். நெற்றியில் பளிச்சென்று குங்குமம் அணிந்து, அவர்கள் கொண்டுவந்த மலர்ச்சரத்தைத் தன் குழலின் பெருமுடிப்பில் அணிந்து கொண்டாள்.

இந்த அலங்காரத்துக்குப் பிறகு அவளைப் பார்த்த பணிப்பெண்கள் பிரமித்தார்கள். தாறுமாறாக உடலை மூடி சுற்றப்பட்ட ஆடையும், குழலில் அனாயாசமாக சுற்றப்பட்ட மலர்ச்சரமும் அவளுக்குப் பேரழகைக் கொடுத்திருந்ததைக் கண்ட பெண்கள், "மகாராணி! இந்த மார்வார் சிம்மாசனத்தில் என்றைக்கு அமரப்போகிறீர்கள்?" என்று கேட்டார்கள் பயபக்தியுடன்.

மலைஅரசி அவர்களை அன்புடன் நோக்கி முறுவல் செய்தாள். "அதற்கு இன்னும் காலம் இருக்கிறது" என்றாள்.

"ஏன் மகாராணி?" என்று கேட்டாள் ஒரு பணிப்பெண்.

"இளவரசருக்கு அரசு இன்னும் நிலைக்கவில்லை. அதற்கு காலம் இருக்கிறது" என்ற மலை அரசி, அவர்களை அதற்கு மேல் பேசவிடாமல் ஒரு பெண்ணை நோக்கி, "இளவரசர் காலைக்கடன்களை முடித்து உணவு அருந்தியதும் மந்திராலோசனை சபையைக் கூட்டச் சொல்" என்று கூறினாள்.

பணிப்பெண் பிரமித்தாள். "அம்மணி! இது அரசாங்க விஷயம்" என்றாள்.

"ஆம்" என்றாள் மலை அரசி.

"அதில் தாங்கள் தலையிடுவது... இளவரசருக்கு ஆணையிடுவது..."

"நியாயம்."

"நியாயமா?"

"நியாயந்தான். அவசியமுங்கூட" என்றாள் மலை அரசி.

அதற்குமேல் பேசவில்லை, பணிப்பெண் பறந்தாள் அந்த அறையில் இருந்து. ஆனால் பணிப்பெண்களுக்கு அடுத்த நிகழ்ச்சிகள் வியப்பாயிருந்தன. மலை அரசியின் உத்தரவை மேற்கொண்டான் இளவரசன் ஜோடா. காலையில் பத்து நாழிகைக்கெல்லாம் அவசரமாக மந்திராலோசனை சபையைக் கூட்டினான். அதில் கலந்துகொள்ள அவனே வந்து மலை அரசியை அழைத்துப்போனான்.

மந்திராலோசனை தொடங்கியது. இளவரசரை நோக்கி முதலமைச்சர் வினவினார். "தங்கள் மகுடாபிஷேகத்தை என்று வைத்துக் கொள்ளலாம்?" என்று

இதற்கு இளவரசன் பதில் சொல்லவில்லை.

"நாளைக்கு" என்றாள் மலை அரசி.

"நாளைக்கு மறுநாளைக்கு மறுநாள் புரோகிதர் நாள் வைத்திருக்கிறார்" என்றார் முதலமைச்சர்.

"அன்று மகுடாபிஷேகம் நடக்காது" என்று திட்டமாகச் சொன்னாள் மலை அரசி.

முதலைமச்சர் வெகுண்டு எழுந்தார். "ஏன் நடக்காது? யார் தடுக்க முடியும்?" என்று சீறினார்.

மலை அரசி சபையை உற்று நோக்கினாள், அமர்ந்த வண்ணம். "சந்தசிம்மன்" என்றாள் திடமாக.

"சந்தசிம்மனா! இந்த மண்டோருக்குள் ஆயிரம் சந்தசிம்மனாலும் நுழைய முடியாது" என்றான் ஜகத்சிம்மன்.

மலை அரசியின் கண்களில் இகழ்ச்சி தாண்டவம் ஆடியது.

"இன்று உங்கள் இளவரசர் அமர்ந்திருக்கும் இடத்தில் இன்றில் இருந்து நான்காவது நாள் சந்தசிம்மன் அமர்ந்திருப்பான்" என்றாள் மலை அரசி, உறுதி நிரம்பிய குரலில்.

"நீங்கள் பேசுவது ராஜத் துரோகம்" என்றார் முதலமைச்சர்.

"பெண்களை மந்திராலோசனைக்கு அழைப்பதால் ஏற்பட்ட தவறு" என்று சீறினான் ஜகத்சிம்மன்.

இன்னும் சில அமைச்சர்களும் படைத்தலைவர்களும் பல படி கேள்விகளைக் கேட்டார்கள்.

இத்தனையிலும் ஜோடா தலையிடவில்லை. மலை அரசியே தொடர்ந்து பேசினாள். அவள் கண்களில் சீரிய ஒளி ஒன்று புலப்பட்டது. "உங்களை எச்சரிக்கிறேன். மீண்டும் ரத்தத்தை இந்த மாருஸ்தலியில் சிந்தாதீர்கள். மேவாரில் சிந்தப்பட்ட ரத்தம் போதும். போருக்கு சன்னத்தம் செய்யாதீர்கள். நாளைக்கு இளவரசருக்கு மகுடம் சூட்டுங்கள்" என்றாள் மலர் போன்ற உதடுகளைத் திறந்து.

"நாளைக்கு நாள்..." முதலமைச்சர் தடுமாறினார்.

"நல்ல நாள். இளவரசரை மார்வாரின் நிரந்தர மன்னன் ஆக்கும் நாள். ஐந்து கிரகங்கள் நாளைக்கு உச்சத்துக்கு வருகின்றன." இதைத் தீர்மானமாகச் சொன்னாள் மலை அரசி. பிறகு ஜோடாவை நோக்கித் திரும்பி. "ஜோடா! இத்தனையும் உன் நன்மைக்காகவே செய்கிறேன்" என்று சொன்னாள்.

இளவரசரை அவள் ஏகவசனத்தில் பேசியது வெறுப்பாயிருந்தது மற்றவர்களுக்கு. ஆனால் ஜோடா அதைப் பாராட்டவில்லை. "மகுடாபிஷேகத்தின் போது நீயும் என் பக்கத்தில் மகாராணியாக அமருவாய் அல்லவா?" என்று வினவினான்.

"அதற்கு இன்னும் காலம் இருக்கிறது" என்றாள் மலை அரசி. "நான் உட்காரும்போது இந்த சிம்மாசனம் உறுதியாயிருக்கும். இப்போது இது நிலையற்ற அரசு" என்று அதிகாரத் தோரணையில் கூறினாள்.

"இப்பொழுது உறுதியில்லையா?" என்று வினவினான் ஜோடா.

அதற்குப் பதிலாக ஓர் அதிர்வெடியை எடுத்து வீசினாள் மலை அரசி.

10. பறந்த கிளி! தொடர்ந்த துன்பம்!

மலை அரசியின் சொற்களோ உத்தரவுகளோ மந்திராலோசனை சபையில் இருந்தவர்களுக்குக் கட்டோடு பிடிக்காதிருந்தாலும் அவள் சொன்னதற்கு எல்லாம் ஜோடா தலையை ஆட்டியதால், அவள் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் எல்லோருமே முனைந்தார்கள்.

மறுநாள் இளவரசருக்கு மகுடாபிஷேகம் என்று மண்டோர் மக்களுக்கு அன்று பிற்பகலிலேயே தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டதன் விளைவாக மண்டோர் வெகு சீக்கிரம் விழாக்கோலம் பூண்டது. அன்று மாலைக்குள் தலைநகரின் பல இடங்களில் தோரணங்கள் தோன்றலாயின. மங்கள வாத்தியங்களும் பிரதான கோட்டை வாசல் தூரிகைகளும் பலமாக முழுங்கத் தொடங்கின. முக்காடு அணிந்து ராஜபுத்திர பெண்கள் குடங்களில் நீர் ஏந்தி வெளிவந்து வாசல்களில் நீர் தெளித்துக் கோலமிட்டு செம்மண் பூசினர். வீரர்கள் பத்துப் பத்துப் பேராக அணிவகுத்து வீதிகளில் வலம் வந்து ஜெயகோஷங்களைக் கிளப்பினார்கள். மார்வாரின் பெரும் கொடி கோட்டை வாசல்மீது ஏற்றப்பட்டது. நகரம் எங்கிலும் பாடல்களும் மகிழ்ச்சிக் கூச்சல்களும் எழுந்த வண்ணம் இருந்தன. மாலை அணுகியதும் எங்கும் விளக்குகள் பிரகாசமாக எரியத் தொடங்கின.

இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் மலை அரசி அரண்மனை உப்பரிகையில் இருந்தே கவனித்துக் கொண்டிருந்தாள். அரண்மனையில் மட்டும் பெரிய மகாராஜா காலமாகி நாட்கள் பத்துகூட ஆகாததாலும், மகாராணியின் துக்க காலமும் கோலமும் நீங்கவில்லை என்ற காரணத்தாலும் மங்கள அலங்காரங்கள் ஏதும் நடக்கவில்லை. அதைக்கண்ட மலை அரசி பணிப்பெண்களில் ஒருத்தியை அழைத்து, "இளைய ராஜா மகாராஜா ஆவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று வினவினாள் சிறிது சினத்துடன்.

"அப்படி எதுமில்லையே அம்மணி" என்றாள் பணிப்பெண் திகிலுடன்.

"அரண்மனை ஏன் மகுடாபிஷேகத்துக்கு அலங்கரிக்கப்படவில்லை?" என்று வினவினாள் மலை அரசி.

"மகாராஜா இறந்து பத்து நாள் ஆகவில்லை" என்றாள் பணிப்பெண்.

"அதனால் பாதகம் இல்லை. அரண்மனையை அலங்காரம் செய்யுங்கள்" என்று மலை அரசி உத்தர்விட்டாள்.

"மகாராணி இதற்கு ஒப்பமாட்டார்கள்" என்று பணிப்பெண் சுட்டிக் காட்டினாள்.

"நான் சொல்லிக் கொள்கிறேன் மகாராணியிடம். அலங்காரத்தைத் தொடங்குங்கள்" என்ற மலை அரசியின் உத்தரவு திட்டமாயிருந்தது.

இந்த உத்தரவை நிறைவேற்றுவதில் கஷ்டமிருந்ததால் பெரிய மகாராணியிடம் விஷயத்தை பணிப்பெண்கள் சொன்னார்கள். பெரிய மகாராணி முதல் அமைச்சரை வரவழைத்து, "இந்தக் காட்டுப்பெண் முறை கெட்ட உத்தரவுகளை எல்லாம் இடுகிறாளே, என்ன செய்வது?" என்று விசாரித்தாள்.

முதலமைச்சர் சிறிது சங்கடத்தில் ஆழ்ந்தார். "அப்படி என்ன உத்தரவு இட்டாள்?" என்று வினவினார்.

பெரிய மகாராணி பெருமூச்செறிந்தாள். "அரண்மனையை அலங்காரம் செய்யச் சொல்லுகிறாள். மகாராஜா இறந்து இன்னும் பத்து நாள் ஆகவில்லை" என்று பெருமூச்சுக்கு இடையே துன்பம் மிகுந்த குரலில் சொன்னாள் பெரிய மகாராணி. "இது எந்த நியாயத்தில் சேரும்?" என்றும் கேட்டாள்.

"அரச நியாயத்தில், தர்மத்தில் சேரும்" என்ற மலை அரசியின் குரல் அவர்களைத் திகைக்க வைக்கவே இருவரும் திரும்பி அறை வாயிற்படியில் நின்ற அவளை நோக்கினார்கள்.

இருவருக்கும் அவள் வரவு சிறிது திகிலை அளித்தாலும் முதலமைச்சர் துணிவை வரவழைத்துக் கொண்டு, "அம்மணி! நீங்கள் இன்னும் மகாராணி ஆகவில்லை" என்று சிறிது கோபத்துடன் சுட்டிக் காட்டினார்.

"இந்த உண்மையைக் கண்டுபிடிக்க ஒரு முதலமைச்சர் தேவையில்லை. இந்த அரண்மனையின் சாதாரணப் பணிப்பெண்ணுக்கும் அது தெரியும்" என்ற மலை அரசி, "அமைச்சரே! மகாராஜா அடைந்திருப்பது வீரமரணம். மேவார் தலைநகரில் வாள்கூட இல்லாமல் நிராயுதபாணியாயிருந்த அவரை பத்து வீரர்கள் வளைத்துக் கொண்டார்கள். தனியாக அங்கிருந்த கேடயத்தை மட்டும் தாங்கி அதைக் கொண்டே ஆறுபேர் உயிரை மாய்த்தார் மகாராஜா. அத்தகைய மகாவீரர்கள் சொர்க்கத்துக்குப் போகிறார்கள். அது துக்கப்படும் சம்பவம் அல்ல பெருமைப்படும் சம்பவம். தவிர, மற்றவர்களுக்குள்ள நியதி க்ஷத்திரியர்களுக்குக் கிடையாது. மரணத்துக்குப் பின் மகுடாபிஷேகம் நடப்பதும் மங்களம் தொடருவதும் ராஜபுத்திர வம்சங்களின் இயல்பு" என்று விளக்கினாள்.

இதைக் கேட்ட மகாராணி மட்டுமன்றி முதல் அமைச்சரும் வியப்பின் எல்லையை அடையவே முதல் அமைச்சர் கேட்டார், "காட்டில் இருக்கிற உங்களுக்கு நாட்டுப் பழக்கம் எப்படித் தெரியும்?" என்று.

மலை அரசி நகைத்தாள், "தூரத்தில உள்ள மேவார் தலைநகரில் நடந்தது காட்டில் இருந்த எனக்கு எப்படித் தெரிந்தது?" என்று பதில் கேள்வியை வீசினாள்.

"இளவரசர் சொல்லியிருக்கலாம்" என்றார் முதலமைச்சர்.

சிரித்தாள் மலை அரசி சிறிது வாய்விட்டு, "இளவரசருக்கே நாங்கள்தான் காட்டினோம் சித்தூர் நிகழ்ச்சிகளை, வரப்போகும் சம்பவங்களை" என்று சொன்ன மலை அரசி, "உங்கள் இளவரசர் நான் சொல்வதை எல்லாம் ஏன் ஏற்க வேண்டும்?" என்றும் வினவினாள்.

முதலமைச்சர் தமது நகைச்சுவையைக் காட்டினார் "மயக்கம்" என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னார்.

"என்னிடம் மயங்கிவிட்டாரா?" மலை அரசியின் கேள்வியில் கேலி இருந்தது.

"ஆம்."

"உங்கள் இளவரசரைப் பற்றி உங்கள் மதிப்பு அவ்வளவுதான்!"

"அவரைப்பற்றி நான் ஏதும் சொல்லவில்லை."

"அவர் சபலபுத்தியைப் பற்றிச் சொல்கிறீர்கள்? எந்த பெண்ணைப் பார்த்தாலும் பல் இளிக்கும் புத்தி அவருக்கு இருக்கிறதாக்கும்?"

சம்பாஷணை விபரீத வழியில் இறங்குவதைப் பார்த்த முதலமைச்சர், நான் ஏதும் சொல்லவில்லை" என்று பின் வாங்கினார்.

மலை அரசி அவரை விடவில்லை, "வேறு யார் சொல்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"மக்கள்" என்ற முதலமைச்சர் "ஒரு காட்டுப் பெண்ணை மரவுரி தரித்தவளை, புரவியில் அமர்த்தி கடிவாளம் பிடித்து சேவகனைப்போல் நடக்கும் இளவரசரை நகர மக்கள் நேரிடையாகப் பார்த்துவிட்டார்கள்" என்றும் கூறினார்.

"அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?" என்று கேட்டாள் மலை அரசி.

இதற்கு சரியாகப் பதில் சொல்லத் தெரியாததால் விழித்தார் முதலமைச்சர்.

மலை அரசியே பேச்சைத் தொடர்ந்தாள். "அமைச்சரே! ஏதோ சூசகமாகப் பேசுகிறீர்களே தவிர, எதையும் ஆராய நீங்கள் முற்படவில்லை. ஜோடா போன்ற ஒரு மகாவீரன் புரவியில் அமர்ந்து ஒரு பெண்ணை நடக்கச் சொல்ல முடியாது. அது அவர் கண்ணியத்துக்கோ, வீரத்துக்கோ, பண்பாட்டுக்கோ அடையாளமாகாது. ஆகையால் இளவரசர் செய்கையை மண்டோர் மக்கள் பாராட்டவே செய்கிறார்கள். அவர்கள் நகரை அலங்கரிக்கும் உற்சாகத்தைப் பாருங்கள். உமது சம்பிரதாயத்தை மூட்டை கட்டிவையும் அமைச்சரே! நாளை நடக்கப்போவதை கவனியும். ஜோடா தனது மூதாதைகள் சிம்மாசனத்தில் அமரும்போது, இந்த அரண்மனை அமங்களமாயிருக்கக்கூடாது அமங்களத்தை மங்களமாகத் திருப்புவதைத் தான் சாஸ்திரம் அனுமதிக்கிறது" என்று உலக நீதியைச் சொன்னாள் மலை அரசி. அத்துடன் கேட்டாள் "முதலமைச்சரே! நீர் அந்தணர்தானே?" என்று.

"ஆம்" என்றார் முதலமைச்சர்.

"தாய் தந்தையருக்கு சிரார்த்தம் செய்கிறீரா?"

"செய்கிறேன்."

"அக்கினி மூட்டி?"

"ஆம்."

"அதில் அக்கினி குண்டத்தை நகர்த்தும்போது என்ன சொல்கிறீர்?"

முதலமைச்சர் பிரமையில் ஆழ்ந்ததால் பதில் ஏதும் சொல்லவில்லை. ஆகையால் மலை அரசி சொன்னாள், "சேமாய புனராகமனாச, அதாவது திரும்பி சுபகாரியத்துக்கு வா என்று சொல்கிறீர். அமங்களத்தை அமங்களமாகவே வைக்கக்கூடாது என்பது சாஸ்திரம். மங்களத்தை அழைப்பதும், அமைப்பதும் சாஸ்திரத்தின் நோக்கம். ஆகவே சொல்வதைக் கேளும். அரண்மனையும் மங்களமாகத் திகழட்டும். அதற்கான ஏற்பாடுகள் உடனடியாக நடக்கட்டும்" என்று உத்தரவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

முதலமைச்சர் அப்பொழுதும் அவள் வார்த்தையைக் கேட்கவில்லை. அரண்மனையில் மட்டும் அலங்காரத்தை அனுமதிக்கவில்லை. மறுநாள் மகுடாபிஷேகம் மங்கள தீபங்கள் அற்ற அரண்மனையிலேயே நடந்தது. மகுடாபிஷேக மண்டபத்தில் திரளாக வீரர்கள் வந்திருந்தார்கள். ஆனால், மலை அரசி மட்டும் வரவில்லை. இருமுறை ஜோடா சொல்லியனுப்பியும் அவள் தனது அறையை விட்டு வர மறுத்தாள். ஆகவே மகுடாபிஷேகம் முடிந்து, அரச முடியும் மாலையும் தரித்தவனாய் ராவ் ஜோடாவே மந்திரிப்பிரதானிகளுடனும், பிரதான படைத்தலைவனுடனும் அவள் அறையை அடைந்தான்.

அவன் வந்ததும் மலை அரசி அறை வாயிலில் தோன்றினாள். "மகாராஜா! நீங்கள் மகுடாபிஷேகம் கொண்டது நல்லது. ஆனால் அரண்மனை அதில் பங்கு கொள்ளவில்லை அந்த அமங்களம் எப்படியும் உங்களை பாதிக்கும்" என்று கூறிவிட்டு அவன் நெற்றியில் இடது கையிலிருந்த குங்குமத்தை எடுத்து திலகமாகத் தீட்டினாள்.

ராவ்ஜோடா அவள் முன்பு தலைவணங்கி நின்றான். "மலை அரசி! வருந்தாதே முதலமைச்சர் சகலத்தையும் சொன்னார். சம்பிரதாயங்களை உடைக்க முடியவில்லை அவரால்" என்றும் சொன்னான் அவளுக்கு ஆறுதலாக.

மலை அரசியின் முகத்தில் துன்பம் பரவி நின்றது "சாஸ்திர சம்மதமற்ற சம்பிரதாயம் உடைக்கத் தகுந்தது. அதை இனி நினைத்துப் பயனில்லை. சம்பிரதாயத்தை உடைக்கவில்லை முதலமைச்சர். ஆனால் நாட்டை உடைத்து விட்டார். இந்த மாருஸ்தலியில் இன்னும் ரத்தம் அதிகமாக ஓடும்" என்று சொன்னாள். அவள் கண்களில் கனவு படர்ந்தது. "இன்னும் ஒரே நாள்! மீண்டும் ஓடப் போகிறோம்" என்ற மலை அரசி, மன்னன் செல்ல விடை கொடுத்தாள். அறைக் கதவையும் சாத்திக்கொண்டாள்.

மறுநாள் மலை அரசி மண்டோரில் காணப்படவில்லை. அவளைப் பார்க்கச்சென்ற ராவ்ஜோடா அவள் பஞ்சணை மீது புது உடைகள் வைக்கப்பட்டு இருப்பதையும் அவளது புலித்தோலும் மரவுரியும் காணாததையும் கவனித்தான்.

ஜோடாவைத் தொடர்ந்து வந்த ஜகத்சிம்மன் கேட்டான், "மகாராஜா! அந்தப் பெண் எங்கே?" என்று.

"காட்டுக் கிளி பறந்துவிட்டது" என்ற ஜோடாவின் குரலில் துன்பம் மிதமிஞ்சி ஒலித்தது.

அந்தச் சமயத்தில் பஞ்சணையை நோக்கிய ஜகத்சிம்மன் "மகாராஜா! அதோ ஓர் ஓலை இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினான்.

ஓலையை எடுத்துப் பார்த்தான் ஜோடா. அதில் இருந்தது ஒரே வார்த்தை "சுத்த விரதம்" என்ற சொல்லை இரைந்து படித்தான் மார்வாரின் புது மன்னன், திரும்பிப் படைத் தலைவனைப் பார்த்து "நான் மார்வாரை விட்டுச்

செல்ல காலம் வந்துவிட்டது. போக வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்" என்று உத்தரவிட்டான்.

"இன்றைக்குத்தானே முடிசூடினீர்கள் மகாராஜா?" என்று முதலமைச்சர் கேட்டார்.

"ஆம் முதலமைச்சரே! இது நிலையற்ற அரசு என்று மலை அரசி மந்திராலோசனையில் சொல்லவில்லையா?" என்றான் ஜோடா.

"சொன்னாள்" என்றார் முதலமைச்சர்.

"தெரியாமல் அவள் சொல்லவில்லை. நமக்குப் புரியாதது அவளுக்கு முன்னோக்கிப் புரிகிறது" என்ற ஜோடா, விடுவிடு என்று அரண்மனையின் அந்தப்புரப் படிகளில் இறங்கிச் சென்றான், புரவிச்சாலையை நோக்கி. "அவளை எப்படியும் பிடித்துவிடுகிறேன்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு, தனது புரவியை அவிழ்த்து அதன்மீது தாவி ஏறினான்.

அதே சமயத்தில் மண்டோரின் வாயிற்கதவுகள் பெரிய சத்தத்துடன் சாத்தப்பட்டன. போர் முரசு பலமாக ஒலித்தது. புரவியில் தாவி ஏறிய ஜோடா புரவியை நகர்த்தவில்லை, அப்படியே மலைத்து நின்றான், கையிலேந்திய கடி வாளத்துடன்.

11. மண்டோர் ரணகளம்

மண்டோரின் பெரும் கதவுகள் சாத்தப்பட்டதாலும் போர்முரசு பலமாக ஒலித்ததாலும் வருவது என்னவென்பதை அறிந்த புது மகாராஜாவான ராவ்ஜோடா, புரவியின் கடிவாளத்தை பிடித்த நிலையிலேயே திகைத்து அமர்ந்துவிட்ட சமயத்தில் மலை அரசியின் சொற்கள் ஒவ்வொன்றும் பலிப்பதை புரிந்துகொண்டான்.

முரசு ஒலித்ததால் கோட்டைப் பெருங்கதவை நோக்கிப் பறந்த படைத்தலைவனான ஜகத்சிம்மன் போன வேகத்தில் திரும்பி வந்து, புரவிச் சாலையின் முன்பு சிலையென குதிரையில் அமர்ந்திருந்த புது மகாராஜாவை நோக்கித் தலைவணங்கி, "போர்முரசு உங்கள் காதிலும் விழுந்து இருக்கும் என நினைக்கிறேன்" என்று கூறினான் மிகப் பணிவுடனும் பரபரப்புடனும்.

ராவ்ஜோடா எந்த பரபரப்பையும் காட்டவில்லை. "போர் முரசு காதில் விழாத அளவுக்கு உன் மன்னன் இன்னும் செவிடாகிவிடவில்லை" என்று பதில் சொன்னான் ஜோடா.

மன்னனின் மன ஓட்டமும், ஓட்டத்தின் திக்கும் ஜகத்சிம்மனுக்கும் புரிந்து இருந்ததால் சிறிது நேரம் பேச்சை எப்படித் தொடருவது என்று தெரியாமல் நின்றான். பிறகு கேட்டான் "முதலமைச்சரை அழைக்கட்டுமா?" என்று.

"இனி அமைச்சருக்கு வேலையில்லை. படைகளைத் திரட்டு. தலைநகரப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய். சந்தசிம்மனை முடியுமானால் தடுப்போம். இல்லையேல் களத்தில் சந்திப்போம்" என்று கூறிய ராவ்ஜோடா புரவியைத் தட்டிவிட்டு கோட்டை வாசலை நோக்கி விரைந்தான். கோட்டைச் சுவரின் பக்கத்தில் இருந்த படிகளில் ஒன்றில் ஏறி, கதவுகளுக்கு மேலிருந்த பார்வைக் கூடத்தில் இருந்து பாலைவனப் பகுதியை நோக்கினான்.

வெகுதூரத்தில் புரவிகள் எழுப்பிய மணல்தூசி, படைகளை முழுவதும் மறைக்காவிட்டாலும் வருவது பெரும்படை என்பதை உணர்த்தியது; அத்துடன் வரும் எதிரி எப்படியும் தன் நகரை நிர்த்தூளி செய்யும் உறுதியுடன் வருகிறான் என்பதையும் புலப்படுத்தியது.

வருபவன் ராஜபுதனத்தின் மகாவீரனும் மகா தியாகியுமான சந்தசிம்மன் என்பதையும், மேவாரின் மன்னனை பொம்மையாக்க முயன்ற மார்வார் வம்சத்தின் மிஞ்சிய தலைமுறைமீது பழிவாங்கும் கோபத்துடன் வருகிறான் என்பதையும் உணர்ந்துகொண்ட ஜோடா, கோட்டை மதில் மீதிருந்து கீழே இறங்கி மீண்டும் அரண்மனை வந்து தனது படைத்தலைவனையும் முதலமைச்சரையும் மந்திராலோசனை சபைக்கு வரவழைத்தான். இருவரும் வந்ததும் ஆலோசனை எதுவும் கேட்கவில்லை ராவ்ஜோடா. "முதலமைச்சரே! அரண்மனையை அமங்களமாக்கி சம்பிரதாயத்தை நிலைநிறுத்திவிட்டீர். இப்பொழுது சந்தசிம்மன் இந்தத் தலைநகரையே அமங்களப்படுத்த வருகிறான். அதற்கு என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவினான்.

மன்னன் சொல்வது என்னவென்று சந்தேகமறப் புரிந்தது முதலமைச்சருக்கு. "மகாராஜா! சந்தசிம்மனை சந்திப்பது உங்கள் கடமை. படையெடுப்புக்காகக் கண்ட காட்டுப் பெண்களின் யோசனையை ஏற்பதோ சம்பிரதாயத்தை

மாற்றுவதோ சரியாகாது. என் புத்தியில் உதித்ததை, தர்மத்தை நான் செய்தேன். விளைவுக்கு நான் அஞ்சவில்லை. என் பதவியை நான் விட்டுவிடத் தயாராக இருக்கிறேன்" என்று கண்டிப்புடன் பேசினார் முதலமைச்சர்.

ராவ்ஜோடாவின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. "முதலமைச்சரே! பதவியை நீர் விட வேண்டிய அவசியமில்லை. அதுவே உங்களை இன்னும் இரண்டொரு நாளில் விட்டுவிடும். சந்தசிம்மன் மண்டோரில் புக முற்படுவது உமது பதவியை நிலைநிறுத்த அல்ல" என்று கூறினான் புன்முறுவலின் ஊடே. பிறகு ஜகத்சிம்மனை நோக்கி "படைத்தலைவர் பதவி துறக்க இஷ்டப்படுவாரானால் அதற்கும் ராவ்ஜோடா தயார்" என்றும் கூறினான்.

ஜகத்சிம்மன் தனது வாளின்மீது கையை வைத்தான். "மன்னருக்காக மடிவது என் கடமை" என்று சொன்னான் வீராவேசம் ஒலித்த குரலில்.

"கடமையை சிறிது மாற்றிக்கொள்ளலாம். மன்னருக்காக உயிர் வாழ முயற்சி செய் ஜகத்சிங்" என்ற ராவ்ஜோடா, "ஜகத்சிங்! மேவார் ராஜப்பிரதிநிதி சந்தசிம்மனுக்கு சரியான வரவேற்பு கொடுக்கத் தயார் செய். நான் ராஜ மாதாவிடம் விடைபெற்று வருகிறேன்" என்று கூறிவிட்டு மந்திராலோசனை முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்துவிட்டு அரண்மனை அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான்.

மகாராணி தனது பஞ்சணையில் கம்பீரமாக அமர்ந்து மகனை வரவேற்றாள். "மகனே! எதிரி வந்துவிட்டான். அதைப் பற்றி ராஜபுத்திரர்கள் என்றும் கவலைப்பட்டது கிடையாது" என்று சொன்னாள்.

ராவ்ஜோடா அந்த வீரமாதாவின் முன்பு தலைவணங்கி நின்றான். "வீரனுக்குக் கவலை கிடையாது, கடமை உண்டு" என்றான்.

"என்ன கடமை மகனே?" என்று வினவினாள் மகாராணி.

"எதிரி உட்புகுவதால் உங்களுக்கும் மற்ற பெண்களுக்கும் ஜோகருக்கு ஏற்பாடு செய்வது" என்றான் ஜோடா.

ராஜபுத்திர பெண்மணிகள் எதிரி நுழைந்தவுடன் தீக்குளித்துவிடும் புனித வழக்கமான ஜோகரைப்பற்றி மகன் உரைத்தவுடன் மகாராணி புன்முறுவல் செய்தாள், "மகாராஜா!" என்று மகனை அவள் பதவி சொல்லி அழைத்து, "ஜோகருக்கு யார் ஏற்பாடும் தேவையில்லை. ராஜபுத்திர பெண்களுக்கு அது கைவந்த கலை. தவிர இப்பொழுது வருபவன் ராஜபுத்திரப் பெண்களைக் கற்பழிக்கும் பழக்கமுள்ள விரோதியல்ல. வருபவன் ராஜபுதனத்தின் மகாவீரன். உன் சகோதரி மகனுக்காக தனது அரசு உரிமையை விட்டுக் கொடுத்த மகாதியாகி. ஆகையால் உனக்கு எங்களைப்பற்றி கவலை வேண்டாம். நீ புறப்படு" என்று கூறி பக்கத்தில் இருந்த பணிப்பெண் ஏந்தி நின்ற தட்டிலிருந்த குங்குமத்தை எடுத்து மகன் நெற்றியில் இட்டாள். "வெற்றிச் செய்தி அனுப்பு, இல்லையேல் உன் மரணச் செய்தி கிடைக்கட்டும்" என்று ஆசீர்வாதமும் செய்தாள் அந்த வீரமாதா.

தலைவணங்கி அந்தப்புரத்தில் இருந்து வெளியேறிய ராவ்ஜோடா பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரிடையாகப் பார்வையிட்டான். கோட்டைமீது இருந்த வேல்களையும் அம்புக்கூடங்களையும் தீப்பந்தம் எரியும் யந்திரங்களையும் கவனித்தான். அன்று மாலை சந்தசிம்மன் மண்டோருக்கு எதிரில் பாசறை அமைத்துத் தங்கியபோது எந்தச் சமயத்திலும் போருக்கு சித்தமாயிருந்தான் ராவ்ஜோடா.

மண்டோர் கோட்டை வாயிலுக்கு வெளியே எறி அம்புகளும் வேல்களும் பாயக்கூடிய தூரத்திலேயே கூடாரங்களை அமைத்திருந்த சந்தசிம்மன், தனது கூடார

வாயிலில் நின்று எதிரேயிருந்த கோட்டையையும் அதன் பெரு வாயிலையும் உற்று நோக்கினான். நல்ல உயரத்துடனும் திரண்ட புயங்களுடனும் கூரிய விழிகளுடனும் காட்சியளித்த சந்தசிம்மன் முகத்தில் சினத்துடன் விசனக்குறியும் கலந்து கிடந்தது. அதை பக்கத்தில் நின்ற அவன் துணைத்தலைவன் கவனித்து, "இதில் விசனப்படுவதற்கு ஏதும் இல்லையே. நம்மை அழிக்க முயன்றவர்களை நாம் அழிக்க முயலுகிறோம்" என்றான்.

"நம்மை அழிக்க முயன்றதற்காக நான் ஜோடாவைப் பின்தொடர்ந்து வரவில்லை. வஞ்சகத்தால் மேவாரைக் கைப்பற்றச் செய்த முயற்சிக்காக தொடர்ந்து வந்தேன்" என்றான் சந்தசிம்மன்.

"ஜோடா என்ன வஞ்சகம் செய்தார்?" என்று துணைத்தலைவன் வினவினான்.

சந்தசிம்மன் கோட்டை மீதிருந்த கண்களை தனது துணைத்தலைவன் மீது திருப்பினான். "ஜோடா வஞ்சகம் செய்யவில்லை. வஞ்சிக்க முயன்றது அவன் தந்தை. வஞ்சகத்தைத் தடை செய்யாதது, வஞ்சகத்துக்குத் துணை புரிந்தது இவன் குற்றம்" என்றான் சந்தசிம்மன்.

"அப்படியானால் போரைத் துவக்கலாமா?" என்று வினவினான் துணைத்தலைவன்.

சந்தசிம்மன் சிறிது சிந்தித்தான். "வேண்டாம். மாலை வேளையாகிவிட்டது. இரவில் போரைத் துவக்குவதை க்ஷத்திரிய தர்மம் அனுமதிக்கவில்லை" என்றான்.

துணைத்தலைவன் தலைவணங்கி திரும்பினான். சந்தசிம்மனும் இளைப்பாற கூடாரத்துக்குள் சென்று வாளையும் வேலையும் ஒரு மூலையில் சாத்திவிட்டு வெளியே வந்தான்.

மண்டோரின் கோட்டையில் தீபங்கள் பிரகாசமாக எரிந்தன. பாலைவனத்தின் நிலவு எழுந்து, ஏற்கனவே வெள்ளையாயிருந்த மணலை மிக வெள்ளையாக அடித்திருந்தது. மண்டோர் நிர்மாணிக்கப்பட்டு இருந்த மலைப் பிரதேசத்திலும் செடி கொடிகள் எதுமில்லாததால் அதன் பாறாங்கற்களின் கடுமையும் சிவப்புங்கூட அழகு பெற்று இருந்தன. இயற்கையின் இத்தனை அழகையும் பாழக்க போரும் இருக்கிறதே என்று சந்தசிம்மன் எண்ணி சோகப் பெருமூச்சு ஒன்றையும் வெளியே விட்டான். அந்தச் சமயத்தில் படைத் தளத்தின் கோடியில் இருந்து இரு புரவிகள் வெகு வேகமாக ஓடி வந்தன. அதிலிருந்து இறங்கிய இரு வாலிபர்கள் சந்தசிம்மனின் எதிரில் ஜோடியாக நின்று அவனை நோக்கினார்கள்.

"அப்பா! சோகம் என்பதை அறியாத உங்கள் முகத்தில் ஏன் சோகம் தெரிகிறது?" என்று வினவினான் மூத்தவன்.

"ஏனப்பா கேடயத்தையும் வாளையும் வேலையும் துறந்து நிற்கிறீர்கள்? போரைத் துவங்க வேண்டாமா?" என்று வினவினான் இளையவன்.

வீரத்தில் தனக்குச் சிறிதும் சளைக்காதவர்களும் சிங்கக் குட்டிகளைப் போல் எதிரே நின்றவர்களுமான தனது இரு புதல்வர்களையும் நோக்கிய சந்தசிம்மன் முகத்தில் பெருமைக்குறி பெரிதும் விரிந்தது.

"இரவில் போரில்லை மகனே. க்ஷத்திரிய தர்மம் இரவில் போரை அனுமதிக்கவில்லை" என்றான் சந்தசிம்மன் தனது மூத்த மகனான காந்தாஜியை நோக்கி.

இளைய மகனான மஞ்சாஜி தந்தையை வியப்புடன் நோக்கினான். "மேவார் தலைநகரில் இரவில்தானே மார்வார் படைகளைத் தாக்கினீர்கள்" என்று கேட்டான் அந்த இளஞ்சிங்கம்.

சந்தசிம்மன் நகைத்தான். "அது போர் அல்ல. நமது தலைநகரில் வஞ்சனையால் புகுந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை. இது போர். இதற்கு நெறிகள் உண்டு" என்றான் அந்த மகாவீரன். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு "காந்தா! மஞ்சா! இந்தத் தலைநகரை நான் கைப்பற்றுகிறேன். நீங்கள் மேவார் சென்று இதை நிர்வகிக்கும் அளவுக்குப் படைகளை அழைத்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

இந்த உத்தரவு இரு மைந்தர்களையும் திகைக்க வைத்தது. "அப்பா! போரில் நாங்கள்" என்று கெஞ்சினான் காந்தாஜி.

"நாங்கள் போக மாட்டோம்" என்றான் மஞ்சாஜி.

சந்தசிம்மன் இரு புதல்வர்களையும் அணைத்துக் கொண்டான். "இந்த மண்டோரை ஆளப்போகும் உங்களுக்கு நிதானம் வேண்டும். போர் எப்பொழுதும் ராஜபுதனத்தில் உண்டு. ராஜபுதனம் என்றும் ரணகளம். சாந்தியையும் சிறிது வளர்க்கப் பார்ப்போம். சொல்கிறபடி செய்யுங்கள். உங்களை பத்து நாளுக்குள் இங்கு எதிர்பார்க்கிறேன்" என்றான்.

இரண்டு இளஞ்சிங்கங்களின் முகங்களிலும் ஏமாற்றம் தெரிந்தது. வேறு வழியின்றி தந்தைக்குத் தலைவணங்கி பாசறையில் இருந்து கிளம்பி சித்தூரை நோக்கி விரைந்தார்கள்.

சந்தசிம்மன் சாந்துப் பெருமூச்செறிந்தான். ஆனால் அந்த இரவு அவனுக்கு சாந்தியை அளிக்கவில்லை. நள்ளிரவில் எதிர்பாராதவிதமாக ஜகத்சிம்மன் கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு சந்தசிம்மனின் படைகளை நோக்கி வந்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி வெற்றி அத்தனை சுலபமாயில்லை. கதவுகள் திறந்ததும் பிரமிக்கும் துரிதத்தில் தயாராகிவிட்ட மேவார் படை எதிரியைச் சந்தித்தது. சந்தசிம்மன் போரின் முன்னிலையில் புரவியுடன் காட்சியளித்து வாளால் பலரையும் வெட்டிச் சாய்த்தான்.

எதிர்ப்பட்ட ஜகத்சிம்மனை நோக்கி, "ஜோடா எங்கே?" என்று சீறினான்.

இரவில் ஜகத்சிம்மனால் துவக்கப்பட்ட போரை அறியாத ஜோடா, போரின் சத்தம் கேட்டதும் தனது பஞ்சணையில் இருந்து எழுந்து புரவியில் வேகமாக வந்தான். அதற்குள் போர் ராஜ வீதிக்கு வந்துவிடவே எதிரி படைக்குள்ளும் பக்கத்து விடுதிகளின் முனைப்பிலும் பாய்ந்து போரிட்டான் புது மகாராஜா. தூரத்தே இருந்த சந்தசிம்மனைப் பார்க்க வெட்கமாயிருந்ததால் புரவியைக் கோட்டை வாயில் பக்கம் செலுத்தினான் போரிட்டுக்கொண்டே.

மேவார் படை மண்டோரில் எங்கும் காட்சியளித்தது. கோட்டை வாயிலில் அதிக வீரர்கள் இல்லாவிட்டாலும் போர் மும்முரமாக நடந்தது. அந்தப் போரில் நுழைந்து கலந்து போரிட்ட ஜோடா விடியற்காலையில், மண்டோருக்குள் எதிரியின் ஜெயகோஷத்தைக் கேட்டு தலைகவிழ்ந்து புரவியைச் செலுத்தினான் எதிரே இருந்த மலைச் சரிவை நோக்கி. அவன் இடையில் எதோ ஒரு பெரிய ஈட்டி நுழைந்திருந்ததால் இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. மலைச்சரிவின் முகப்புக்கு வந்ததும் மயக்கத்தால் புரவியில் இருந்து சரிந்தான் ஜோடா. அவன் இரத்தம் மலைச் சரிவின் முகப்பில் இருந்த மணலை நனைத்தது.

விழுந்த அவனை நோக்கி வந்தாள் மலை அரசி மலைப்புதர் ஒன்றில் இருந்து. அவன் இடையில் இருந்து வந்த இரத்தப் பிரவாகத்தையும் அது நனைத்த இடத்தையும் பார்த்துக்கொண்டு நின்றாள். "இரத்தச் சண்டை இன்னும் முடியவில்லை. பாவத்தின் கறை அதிகமாகிறது உன் படைத்தலைவனால்" என்று முணுமுணுத்தாள். பிறகு அவன் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து குப்புற விழுந்து கிடந்த ஜோடாவைப் புரட்டித் தன் மடியில் கிடத்திக்கொண்டு அவன் காயத்தைப் பரிசோதிக்கலானாள்.

12. குகையில்...!

பெற்றோர் புரிந்த பாவம் சிலரைப் பிடித்து வாட்டுகிறது. உற்றார் செய்த பாவமும் சிலரை விடுவதில்லை. பெற்றோரும் உற்றாரும் விளைவித்த பாவங்களுக்கு எப்பாவமும் அறியாத ஜோடா இலக்கானான். பேரனான மோகுல சிம்மனை சீராட்டும் முகாந்திரத்தால் மேவார் அரியணையை தந்தை விழுங்கப் பார்த்ததால் ஜோடா சித்தூரை விட்டு ஓட வேண்டியதாகி விட்டது. சந்தசிம்மன் உறங்கியிருந்த சமயத்தில் இரவில் திடீரென ஜகத்சிம்மன் தாக்குதலைத் துவக்கியதால் ஜோடா மண்டோரில் இருந்தே ஓட வேண்டியதாயிற்று.

இப்படி மற்றவர் துர்ச்செயலால் தலைநகரையும் பறிகொடுத்து மாருஸ்தலியின் மண்ணில் மயக்கமாக விழுந்துவிட்ட ஜோடாவின் காயத்தைப் பரிசோதித்த மலை அரசி, அது ஆழ்ந்த காயம் என்பதைப் புரிந்துகொண்டதால், சுற்றும்முற்றும் பார்த்தாள். எங்கும் யாரும் தென்படாததால் ஜோடாவின் அங்கியைக் கிழித்து தற்கால சாந்தியாக அவன் காயத்தை இறுகக் கட்டி இரத்தம் வெளியேறுவதை நிறுத்தினாள். அவன் முகத்தை நீரால் நனைத்தால் சிறிது சுரணை வரும் என்ற காரணத்தால், அவன் தலையை தன் மடியிலிருந்து இறக்கி மணலில் கிடத்திவிட்டு மீண்டும் மலைச்சரிவில் ஏறிச் சென்றாள். அங்கிருந்த ஒரு சிறு ஊற்றில் இருந்து இரு கைகளிலும் நீரை ஏந்தி வந்து அவன் முகத்தில்

தெளிக்கவே, மெள்ளக் கண்விழித்த ஜோடா, தன்மீது குனிந்து நோக்கிய முகத்தைக் கண்டு பிரமித்தான். "இது சொப்பனம். மலை அரசி மீண்டும் என்னிடம் வரமாட்டாள்" என்று முணுமுணுத்துக்கொண்டு மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

அவன் முணுமுணுத்தது அவள் காதில் விழவே செய்தது. அத்தனை துன்பச் சமயத்திலும் லேசாகப் புன்முறுவல் கொண்ட மலை அரசி "ஜோடா, என்னைப் பார். நீ காண்பது கனவல்ல" என்றாள்.

மெள்ளக் கண்விழித்த ஜோடா "மலை அரசி! நீ இங்கு எப்படி வந்தாய்? எதற்காக என்னைவிட்டுப் போனாய்?" என்று முணுமுணுத்தான்.

மலை அரசி மறுபடியும் அவன் தலையை எடுத்துத் தனது மடியில் வைத்துக் கொண்டாள். சிறிதாயிருந்த மரவுரி சிறிது அகன்றுவிட்டதால், வழவழத்த அவள் தொடைகளின்மீது தலை கிடந்தது. பெண்ணின் மடியளித்த இன்பத்தை நினைத்த ஜோடா "சொர்க்கம் என்று சொல்வார்களே, அது மலை அரசியின் மடியாகத்தான் இருக்கும்" என்று சொன்னான் வாய்விட்டு. அத்துடன் அவள் மென்மையும் திண்மையும் கலந்த தொடைகளில் தலையைப் புரட்டினான்.

மலை அரசி பரிதாபத்தால் அவன் கன்னங்களைத் தடவிக் கொடுத்தாள். பிறகு ஆகாயத்தைப் பார்த்தாள். "விடிய அதிக நேரமில்லை. நாம் மறைவிடத்திற்குப் போக வேண்டும். சற்று சமாளித்துக்கொண்டு எழுந்திருக்க முடியுமா?" என்று ஜோடாவை வினவினாள்.

"முடியும்" என்றான் ஜோடா பலவீனமான குரலில்.

"சரி எழுந்திரு. என்னை நன்றாகப் பிடித்துக்கொள்" என்று கூறிய மலை அரசி, அவன் வலது கையைத் தனது

கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டாள். தனது கைகள் இரண்டாலும் அவனைத் தூக்கினாள் மெதுவாக. முதலில் முக்கி முனகி மண்டியிட்டு அவளைப் பற்றிக்கொண்டு எழுந்து நின்ற ஜோடா, வேல் பாய்ந்த தனது இடையைத் தொட்டுப் பார்த்தான். கிழிந்திருந்த மேலங்கியையும் கவனித்தான். மலை அரசியால் தான் பிழைத்திருப்பதைப் புரிந்துகொண்டு, மெள்ள அவளை நோக்கி, "மலை அரசி! உனக்கு வைத்தியமும் தெரியுமா?" என்று வினவினான்.

"தெரியும். காட்டில் இருப்பவர்களுக்கு முதலில் வைத்தியம் தேவையில்லை. அப்படி இயற்கையையும் மீறி நோய் வந்தால், அதைச் சமாளிக்க இயற்கை எத்தனையோ மூலிகைகளை அளித்திருக்கிறது" என்று பதில் சொன்ன மலை அரசி அவனை மெள்ள புரவியிடம் நடத்திச் சென்றாள்.

ஜோடா சிரமப்பட்டு முக்கி முனகி புரவியில் ஏறிப் படுத்துக் கொண்டான்.

மலை அரசி புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு அவனைப் பக்கத்து மலைமீது அழைத்துச் சென்றாள். சிறிதுதூரம் சென்றதும் மரங்கள் நெருக்கமா யிருந்த பகுதியில் அவனை இறக்கி மரச்சருகுகளைத் திரட்டி படுக்கையாக்கி அவனைப் படுக்க வைத்தாள். பிறகு எங்கோ சென்று சில மூலிகைகளைப் பிடுங்கி வந்து, அருகேயிருந்த மலைச்சுனைக்கு அருகில் உட்கார்ந்து அவற்றை அங்கிருந்த ஒரு கல்லை வைத்து நசுக்கினாள். அடுத்து ஜோடா படுத்திருந்த இடம் வந்து அவனைத் திரும்பச் சொல்லி பழைய கட்டை அவிழ்த்துவிட்டு, காயத்தில் மூலிகைச் சாற்றை இருமுறை கையால் இறுகிப் பிழிந்தாள். கசங்கிய மூலிகை இலைகளை காயத்தில் அடைத்து, மீண்டும் அதைக் கட்டினாள். "நாளைக்கு எழுந்து நடக்க முடியும்" என்று சொன்னாள்.

"நாளைவரை இங்கிருக்க முடியாது. எதிரிகள் தேடி வருவார்கள்" என்றான் ஜோடா.

"இங்கு யாரும் வரமாட்டார்கள்" என்று மலை அரசி திட்டமாகச் சொன்னாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"மண்டோர் இருக்கும் மலைத் தொடரில்தான் ஜோடா கிரும் இருக்கிறது. இங்கிருந்து தெற்கே சரியாக அரை காதம் ஜோகி இருக்கும் மலை உச்சி. இந்தப் பகுதி முழுவதும் அவரது ஆணைக்கு உட்பட்டது."

"அதனால்?"

"இங்கு யாரும் பூசல்களில் இறங்க முடியாது. இறங்கினால், ஜோகியின் சாபத்துக்கு இலக்காவார்கள். அவர் சாபம் நினைக்க பயங்கரம்" என்ற மலை அரசி, "அஞ்சாமல் படுத்திரு ஜோடா. இங்கு ஜோகியின் சட்டதிட்டங்களை மீறி யாராவது வந்தாலும் நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து போகத் தொடங்கினாள்.

"எங்கு போகிறாய் மலை அரசி?" என்று கேட்டான் ஜோடா.

"நீராடி வருகிறேன். உணவு தயார் செய்ய வேண்டும் அல்லவா?" என்று கூறிவிட்டு சுனையை நோக்கிச் சென்றாள்.

சுனையை நெருங்கியதும் ஒரு மரத்தின் மறைவுக்குச் சென்று மரவுரியையும் மேலே போர்த்தியிருந்த புலித்தோலையும் உதறினாள். இதையெல்லாம் ஒருக்களித்த நிலையில் இருந்து கவனித்த ஜோடா ஏக்கப் பெருமூச்சு விட்டான். இருப்பினும் மரத்தின் மறைவை விட்டு அவள் வெளிவந்துதானே ஆக வேண்டும் என்ற நினைப்பில் இருந்த

ஜோடாவுக்குப் பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. மரத்தின் மறைவில் இருந்த மலை அரசி, மின்னல் வேகத்தில் ஆழமான மலைச்சுனையில் பாய்ந்துவிட்டாள். ஏதோ ஒரு நட்சத்திரம் குறுக்கே ஓடியதுபோல் தெரிந்த அவள் சரீரம் நீருக்குள் மறைந்துவிட்டதால், எதையும் காணமுடியாத தனது துரதிருஷ்டத்தை நினைத்துப் பெரிதும் மனம் நொந்தான் மார்வார் மன்னன்.

"எத்தனையோ ராஜபுத்திரர்கள் ராஜபுத்திரப் பெண்களைத் தூக்கிக்கொண்டு போய் ராக்ஷஸ விவாகம் செய்து கொள்கிறார்கள். என் அருகிலேயே இருக்கும் பெண்ணை நான் நெருங்கக்கூட முடியவில்லை. நான்தான் பெண்போல் இருக்கிறேன். அவள்தான் என் காயத்துக்குக் கட்டுப் போடுகிறாள். என்னைக் காப்பாற்றி புரவியில் ஏற்றி மறைவிடம் அழைத்து வருகிறாள். மண்டோர் வீதியில் அவள் புரவியில் அமர்ந்துவர கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு நான் நடந்து சென்றேன். அப்பொழுதே மக்கள் நகைத்தார்கள். அரண்மனையில்கூட சலசலப்பு அதைப்பற்றி. இப்பொழுது கதை தலைகீழாகிவிட்டது. நான் புரவியில் வர அவள் கடிவாளத்தைப் பிடித்து வந்தாள். இப்பொழுது அவள் இஷ்டப்படி நான் ஆடுகிறேன்" என்று உள்ளூர எண்ணினான். இப்படி அவன் சிந்தனையில் இருந்த சமயத்தில் மலை அரசி நீராடி மரவுரி புலித்தோல் தரித்து அவன் முன்பு வந்து நின்றாள். ஈரத்தலையையும் அவிழ்த்து உதறினாள். அதிலிருந்த தண்ணீர்த் திவலைகள் ஜோடாவின் முகத்தின் மீது விழுந்தன. அந்தத் துளிகள் அவனுக்குப் புத்துயிரைத் தந்தன. அவன் இதழ்களில் புன்முறுவல் உதயமாயிற்று.

மலை அரசியும் பதிலுக்குப் புன்முறுவல் செய்தாள். "ஜோடா! எழுந்திரு நாம் அந்த குகைக்குப் போவோம்" என்று எட்ட இருந்த குகையைக் காட்டினாள்.

அப்பொழுது, பொழுது நன்றாகவே புலர்ந்துவிட்டதால் அந்த மலைக்காட்டுப் பிரதேசம் ரம்மியமாயிருந்தது. ஜோடாவை எழுந்திருக்கச் சொன்ன மலை அரசி அவனுக்கு எந்தவித உதவியையும் செய்ய முன்வரவில்லை.

ஜோடா கையை நீட்டினான் அவளை நோக்கி. "அவசிய மில்லை ஜோடா. நீயே எழுந்திருக்கலாம். இத்தனை நேரம் பச்சிலை உன் காயத்தின் இரத்தத்தை அடியோடு நிறுத்தி யிருக்கும்" என்றாள்.

ஜோடா மெள்ள எழுந்திருந்தான். காயத்தில் வலி தெரியவில்லை. நன்றாகவும் அவனால் நிற்க முடிந்தது. இரண்டடி நடந்து பார்த்தான். எந்தவித வலியும் இல்லை. "இதென்ன பச்சிலை மலை அரசி?" என்று வினவினான் ஜோடா, வியப்புடன்.

"உனக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. நீ மருத்துவன் அல்ல" என்றாள் மலை அரசி.

"நீ மருத்துவச்சியா?" என்று ஜோடா கேட்டான்.

"இல்லை. ஆனால் மருத்துவம்தெரியும். ஜோகி சில இரகசிய மூலிகை வைத்தியங்களை கற்றுக் கொடுத்திருக்கிறார்."

"எதற்கு?"

"மலைப் பிராணிகளுக்கு நோய் வருமானால் சிகிச்சை செய்ய."

"ஆடு மாடுகளுக்காக?"

"புலி சிங்கங்களுக்கும் பட்சிகளுக்குங்கூடத்தான்" என்றாள் மலைஅரசி சர்வசாதாரணமாக. "அதனால்தான் பாகுர்ச்சிராவில் பட்சிகள் சரணடைகின்றன. அந்த மலை ஆரோக்கியமானது. ஜோகி அங்கிருப்பதால் மலையின்

மகத்துவம் பன்மடங்காகிறது" என்ற மலை அரசி மேற் கொண்டு ஏதும் பேசாமல் நடந்தாள் குகையை நோக்கி.

ஜோடாவும் புரவியும் அவளைத் தொடர்ந்து சென்றார்கள். குகையை அடைந்ததும் புரவிக்கு கீழேயிருந்த புல்தரையைக் காட்டினாள் மலை அரசி. அவளை உற்று நோக்கிய புரவி தலை குனிந்து புல்லை மேயலாயிற்று. அதன் மீதிருந்த சேணத்தையெல்லாம் கழற்றி அதை சுதந்திரமாகத் திரியவிட்ட மலை அரசி, ஜோடாவை குகைக்குள் அழைத்துச் சென்றாள். "ஜோடா, இங்கேயே படுத்திரு. உணவு கொண்டு வருகிறேன்" என்று கூறிச் சென்றாள்.

மலை அரசி வெயில் நன்றாக ஏறியபின்பே திரும்பினாள். அவள் கையில் பழவகைகள் நிரம்ப இருந்தன. எங்கிருந்தோ ஒரு குடுவையும் கண்டுபிடித்து அதில் சிறிது பாலும் கொண்டு வந்திருந்தாள். ஜோடாவுக்கு பழங்களையும் பாலையும் அளித்த பிறகு, தானும் சிறிது உண்டு மறுபடியும் வெளியே சென்றாள். திரும்பி அவள் இரவு முற்றிய பின்புதான் வந்தாள். அவள் கைக்குடுவையில் சுடச்சுட பால் இருந்தது. "ஜோடா! இதைக் குடி" என்றாள்.

ஜோடா அதை வாங்கி அருந்தினான். ஏதோ புத்துயிர் பெற்றுவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவன் பலமும் மீண்டது. "மலை அரசி! ஏது பால்?" என்று கேட்டான் ஜோடா.

"சிறிது தூரத்தில் யாதவர் குடிசைகள் இருக்கின்றன. அங்கிருந்து வாங்கி வந்தேன்" என்றாள் மலை அரசி.

"அப்படியானால் நாம் அங்கேயே தங்கலாமே" என்றான் ஜோடா.

"அது சவுகரியப்படாது" என்றாள் மலை அரசி.

"ஏன்?"

"நாம் தனித்திருக்க முடியாது."

"எதற்காகத் தனித்திருக்க வேண்டும்?"

இதைக் கேட்ட மலை அரசி நகைத்தாள். "ஜோடா! நீ ஒரு முட்டாள்" என்று கூறினாள். அடுத்து வேறொன்றும் சொன்னாள். அதைக் கேட்ட ஜோடா திணறினான். திகைத்தான். "மலை அரசி! உனக்குப் பைத்தியம் இல்லையே" என்றும் குளறினான்.

13. அவள் கனவு!

மலை அரசியைப் பார்த்து மார்வார் இளவரசனாயிருந்து அரசனாகி, நாட்டையும் பறிகொடுத்த ராவ்ஜோடா, அத்தகைய ஒரு கேள்வியைக் கேட்டான் என்றால், அதற்கு மூலகாரணம் அவளுடைய விபரீதமான பதில்தான். "நாம் தனித்திருப்பது உனக்கு நல்லதுதானே. இஷ்டப்பட்டால் என்னை இப்பொழுதே ராணியாக்கிக் கொள்" என்று சொல்லி குகையின் தரையில் படுத்துக்கொள்ளவும் செய்தாள் மலை அரசி.

அப்பொழுது இருள் நன்றாகக் கவிந்துவிட்டதாலும், மதியும் வான வீதியில் பவனிவரத் தொடங்கிவிட்டதாலும் அவன் கிரணங்களில் சில அந்தக் குகைக்குள் நன்றாகப் பாய்ந்திருந்ததாலும் அரைகுறை வெளிச்சம் குகையை ஆட்கொண்டது. அந்த வெளிச்சத்தில் மல்லாந்து கிடந்த மலை அரசியின் மோகனாகரமான உருவம், ஜோடாவின் மதிக்கு மயக்கத்தை ஊட்டியது. அதுவரை காயத்தின் கடுமையால் படுத்துக் கிடந்த ஜோடா, எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவளை நோக்கினான்.

அவள் இதழ்களில் புன்முறுவல் படர்ந்து கிடந்தது. அரைகுறையாக மூடியிருந்த கண்கள் அவனை விஷமமாகப் பார்த்தன. விரிந்த புன்முறுவல் கன்னங்களின் புஷ்டிச் சதைகளில் இரண்டு குழிகைகளையும் சிருஷ்டித்திருந்தன.

அவையும் சேர்ந்து நான்கு கண்கள் தன்னை அழைப்பது போன்ற பிரமை ஏற்பட்டது ஜோடாவுக்கு.

அவள் மல்லாந்து கிடந்த காரணத்தால், அவளின் திண்மையான மார்புகள் இரண்டும் மண்டோர் மலைத் தொடரின் இரு உச்சிகளைப் போலக் காட்சியளித்தன. ஜோடா அவற்றை வைத்த கண் வாங்காமல் பார்த்தான் என்றாலும், என்ன காரணத்தாலோ அவற்றைத் தீண்ட அவனுக்குத் துணிவு வரவில்லை. ஆகவே, மார்புக்கும் இடைக்கும் இடையே வெளேரெனத் தெரிந்த அவள் வயிற்றை லேசாக வலக்கையால் தொட்டான். அதைத் தொடும் பாவனையில் மேலேயும் சிறிது கையைக் கொண்டுபோய் மிதமிஞ்சிய அதைரியத்தால் மீண்டும் கையை வயிற்றுக்குக் கொண்டுவந்து வழவழத்த இடைப் பகுதியில் தவழ விட்டான். அடுத்து சொர்க்கம் காத்து இருப்பது அவனுக்குப் புரிந்தது. இருப்பினும் ஜோடாவின் கண்ணியமான இதயமும் உணர்ச்சிகளும் அவனை அதிக சரசத்துக்குத் தூண்டவில்லை.

அழகை எல்லாம் அள்ளிக் கொட்டிக்கொண்டு காட்டு மலர்போல் செழித்துத் தன் அருகில் கிடந்த அந்தப் பெண்ணின் தனிமையையும் உணர்ச்சிப் பெருக்கையும் பயன்படுத்திக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆகவே, மெள்ள இரு கைகளாலும் அவள் கால் இரண்டையும் பிடித்தான். கால்களை வருடிக்கொண்டே வந்தவன், தொடைகளிடம் வந்ததும் அவற்றின் பருமனைக் கண்டு வியந்தான். இயற்கை வேண்டுமென்றே பெண்களுக்கு பருமனையும் இளைப்பையும் மாறி மாறி உடலில் அமைத்திருக்கிறது என்று இயற்கைமீது குற்றம் சாட்டினான்.

அவன் வயிற்றைத் தொட்டபோதும் மார்புக்கு அருகில் கையை உயர்த்தியபோதும், பிறகு இரு கால்களையும் பிடித்த போதும் மரக்கட்டையாகக் கிடந்த மலை அரசி, அவன் கைகள் தனது இரு பருத்த தொடைகளில் அழுந்தியதும் அடியோடு நிலைகுலைந்து போனாள். அவள் உடல் திடீரென உணர்ச்சி அலைகளில் சிக்குண்டு லேசாகத் துடித்தது.

அந்தச் சமயத்தில் அவள் தொடைகளின் இணைப்பில் ஜோடா முகத்தைப் புதைத்துக்கொண்டது, அக்கினி அலைகளை அவள் உடலெங்கும் பரவவிட்டது. சரேலென அவள் ஜோடாவின் முடியை இரு கைகளாலும் கோதினாள். “பாவம்! குழந்தை!” என்றும் முணுமுணுத்தாள். தலையில் புரண்ட அவள் கமலக் கைகள் அடுத்து அவன் கழுத்தையும் தடவின.

ராவ்ஜோடா இந்த உலகை மறந்தான். தனது இடுப்பின் காயத்தை மறந்தான். மலை அரசியின் மகோன்னதமான காயத்தையே நினைத்தான். அதனால் தலையைத் தூக்கி வேகமாக நகர்ந்து அவள் கழுத்தில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, “மலை அரசி! மலை அரசி!” என்று முனகினான். அவன் முகம் அவள் அழகிய கழுத்தின் பல பகுதிகளில் முத்திரைகளை வேகமாகப் பதித்தது.

“ஜோடா!” என்று மலை அரசியும் அந்தச் சமயத்தில் உணர்ச்சிப் பெருக்கால் முனகினாள்.

ஜோடா கழுத்தில் இருந்த முகத்தை நிமிர்த்தி அவள் கண்களைச் சந்தித்தான். “ஏன் மலை அரசி?” என்று வெகு இரகசியமாகக் காதுக்கு அருகில் கேட்டான். பிறகு கன்னத்தில் தனது முரட்டு இதழ்களைப் பதித்தான்.

மலை அரசி எரிமலையாயிருந்தாள். அவள் சொற்கள் தழுதழுத்து வந்தன. அவன் அழைப்புக்கு “உம்” என்ற ஒலியை மட்டும் வெளியிட்டாள்.

“நீ...” ஜோடா திணறினான் பேச முடியாமல்.

“உம்.”

"சொர்க்கம்."

பிறகு இருவரும் பேச்சை இழந்தார்கள். மலை அரசி புரண்டு ஒருக்களித்தாள். அவள் கைகள் இரண்டும் அவன் கழுத்தை வளைத்தன. அவன் கைகள் அவள் உடலைச் சுற்றி வளைத்து இறுக்கின, தூக்கின. மெள்ள அவளை மடியில் கிடத்திக்கொண்டு உற்றுப் பார்த்தான், ஜோடா. "மலை மலரே!" என்று மெதுவாக அழைத்தான் அந்த நிலையில்.

அவள் கண்கள் மூடியிருந்ததால் பார்க்கவில்லை. இதழ்கள் மூடியிருந்ததால் பேசவில்லை. அந்தக் கண்களை அவன் உதடுகள் திறந்தன. இதழ்களைத் திறக்கவில்லை, நன்றாக மூடிவிட்டன. அந்தச் சமயத்தில் அசைந்த அவள் இதழ்கள் சொர்க்கத்தில் அவனுக்கு இடம் கிடைத்துவிட்டதை நிரூபித்தன.

ஜோடா இத்தனை உணர்ச்சிப் பிரவாகத்திலும் அவளை எடுத்தாள இஷ்டப்படவில்லை. அவன் அவளது பலவீனத்தைப் பயன்படுத்திக்கொள்வது முறையல்ல என்று நினைத்ததால், அவள் இதழ்களுக்கு விடுதலையளித்தான்.

"மலை அரசி!" இம்முறை அவன் குரல் தடித்திருந்தது.

"உம்." அவள் குரல் குழைந்து கிடந்தது.

"இது சரியல்ல" என்றான் ஜோடா, அவள் உடல் முழுவதையும் ஒருமுறை தடவிக் கொடுத்து.

அந்தத் தடவலில் வித்தியாசம் இருந்ததை உணர்ந்தாள் மலை அரசி. ஒரு குழந்தையைத் தடவும் ஆதரவு அதில் இருந்தது. வெறிபிடித்த ஆண்மகனின் தடவல் அல்ல அது என்பதை அறிந்த மலை அரசி லேசாகப் புன்முறுவல் கோட்டினாள்.

மலை அரசி அவன் மடியில் கிடந்தபடி சொன்னாள். "நேற்று மகாராணியாக்கத் துடித்தாயே, ஜோடா?" என்று

விடுதலை அடைந்துவிட்ட அவன் கையில் ஒன்றை எடுத்து தனது உடலுக்குக் குறுக்கே போட்டுக்கொள்ளவும் செய்தாள்.

"ஒன்று புரியவில்லை எனக்கு" என்று தொடங்கினான் ஜோடா.

"என்ன அது?"

"என்னை எப்பொழுதும் ஜோடா என்று அழைக்கிறாய்."

"ஆம்."

"மரியாதையே காட்டவில்லை."

உடனடியாக இதற்கு பதில் சொல்லவில்லை மலை அரசி. சிறிது மவுனத்திற்குப் பிறகு அவன் கண்களைச் சந்திக்காமலே சொன்னாள். "ஜோடா! உன்னைப் பார்த்த முதல் நாளே உன்னிடம் என் மனத்தைப் பறிகொடுத்தேன்" என்று.

"அதனால் மரியாதை இல்லாமல் பேச வேண்டுமா?" என்று வினவினான் ஜோடா.

"சதிபதிகள் தனித்து இருக்கும்போது காதல் மிகைப்படுகிறது. மரியாதை அகன்றுவிடுகிறது. இது புரியவில்லையா, உனக்கு?" என்று சொன்னாள் மலை அரசி.

ஜோடா சிந்தனை வசப்பட்டான். "இருக்கலாம். மற்றவர் முன்பும் அப்படித்தானே அழைத்திருக்கிறாய்?" என்று கேட்டான் முடிவில்.

"ஜோடா..." சிறிது தாமதித்தாள் மலை அரசி.

"சொல், மலை அரசி" என்றான் ஜோடா.

"மற்றவர் இருக்கும்போதும், உன்னோடு தனிமையில் இருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது எனக்கு. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் மற்றவர் இருக்கும் நினைப்பு ஏற்படுவது இல்லை எனக்கு. சூழ்நிலைகூட மறந்துவிடுகிறது.

இது என்னிடம் உள்ள குறை. ஆனால் ஜோடா! நான் திருந்திடுவேன். நான் காட்டில் இருந்தவள் அல்லவா? நாட்டுப் பழக்கம் துரிதத்தில் வருமா?" என்றாள்.

இதற்குப் பிறகு இருவரும் பேசவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு ஜோடா சொன்னான், "மலை அரசி! நான் நிரந்தரமாக நாடு இழந்து இருக்கப்போவது இல்லை..." என்று.

"ஆம், அது தெரியும் எனக்கு" என்றாள் மலை அரசி.

"என்ன தெரியும்?"

"நீ மண்டோரை வெற்றி கொள்ள நாளாகும். அதற்குள் புதுநகரை சிருஷ்டிப்பாய். அங்கு நான் உன் ராணியாக அரசு புரிவேன்."

"ஏதேதோ சொல்கிறாயே, மலை அரசி."

"நடக்கப் போவதை சொல்கிறேன். அந்த நகரும் சீக்கிரம் சிருஷ்டிக்கப்படும். அது மாருஸ்தலியின் சிகரமாயிருக்கும். அந்த நகரில் இருந்து உன் எதிரிகளின் இருப்பிடங்கள் எல்லாம் தெரியும். அந்த நகரின் அரண்மனையில் உன் ராணியாக நான் வீற்றிருப்பேன்" என்று பேசிய மலை அரசியின் கண்களில் கனவு தெரிந்தது.

ராவ்ஜோடாவும் அவள் கனவில் ஈடுபட்டான். அவளை மெள்ளத் தரையில் கிடத்தி வெளியே சென்றான்.

மலையில் ஏறி வந்துகொண்டிருந்தான், ஜகத்சிம்மன் அவன் தனியாக வரவில்லை. நூற்று இருபத்தைந்து வீரர்களும் உடன் வந்தார்கள்.

14. தண்டனை!

மலை அரசியை தரையில் கிடத்திவிட்டு குகையின் வாயிலுக்கு வந்த ராவ்ஜோடாவின் செவிகளில் ஜகத்சிம்மனும் மற்ற வீரர்களும் ஏறிவந்த புரவியின் குளம்படி ஒலிகள்கூடக் கேட்கவில்லை. குகைக்கு உள்ளே மலை அரசியின் அருகாமையிலும் தனது பிற்காலத்தைப்பற்றி அவள் கூறிய விவரங்களாலும் மனம் நெகிழ்ந்திருந்த காரணத்தால், அவன் பிரமை பிடித்து நின்றுகொண்டிருந்தான்.

சிறிதுநேரம் கழித்து ஜகத்சிம்மன் அவன் முன்பு புரவியில் இருந்து குதித்து வணங்கி நின்றபோது சுரணை அடைந்த ஜோடா, தனது படைத்தலைவனை வெறுப்புடன் நோக்கினான். "வெற்றிச் செய்தி கொண்டுவந்திருக்கிறாயா?" என்று வெறுப்புடன் வினவவும் செய்தான் மார்வார் மன்னன்.

ஜகத்சிம்மன் தனது மன்னன் கேள்வியால் அசரவில்லை. "போரில் தோல்வியும் வெற்றியும் சகஜம்" என்று கூறினான்.

இதைக் கேட்ட ராவ் ஜோடா பெரிதாக நகைத்தான். "முந்தியது நமக்குப் பழக்கம் இல்லை, பிந்தியது சகஜம்" என்று கூறினான், ஜகத்சிம்மனை நோக்கி நகைப்பின் ஊடே.

ஜகத்சிம்மன் சங்கடத்தால் அசைந்தான். "சந்தசிம்மன் படைபலம் அதிகம். அதன் பயிற்சியும் அதிகம்" என்று விளக்கினான்.

அந்த விளக்கம் ராவ்ஜோடாவின் வெறுப்பை அதிகப்படுத்தியதால், "தோற்பவன் காரணங்களைக் கண்டுபிடிப்பதில் வல்லவன். அது கிடக்கட்டும் ஜகத்சிங்! இன்னொன்று சொல்ல மறந்துவிட்டாயே!" என வினவினான்.

"என்ன அது?" என்று மார்வார் படைத்தலைவன் வினவினான்.

"சந்தசிம்மன் நம்மைவிட வீரன் என்பது. இன்னொன்றும் மறந்துவிட்டாய்..."

"சொல்லுங்கள்."

"தர்மம் அவன் பக்கத்தில் இருக்கிறது."

"எந்த தர்மத்தைச் சொல்கிறீர்கள்?"

"போர்முறை" என்ற ராவ்ஜோடா, "சாஸ்திரப்படி, தர்மப்படி, போரை இரவில் தொடங்கவில்லை சந்தசிம்மன். அவன் உறங்குகிறான் என்று நீதான் அவனைத் தாக்கினாய், இரவில் அவன் படை விழித்திருக்காது என்ற நினைப்பால். அதற்கு உண்டான பலன் கிடைத்தது" என்று கூறினான். அத்துடன் வினவினான், "ஜகத்சிம்மா! நீ எப்படி க்ஷத்திரிய னாகப் பிறந்தாய்?" என்று.

ஜகத்சிம்மன் தலைநிமிர்ந்து நின்றான். "மன்னவா! அந்தக் கேள்வியை நானும் தங்களைக் கேட்டு இருக்கலாம். முதலில் மேவார் தலைநகரைவிட்டு ஓடினீர்கள். இப்பொழுது மண்டோர் ரணகளத்தில் இருந்து ஓடினீர்கள்" என்றும் சொன்னான் துணிவுடன்.

ராவ்ஜோடா அவனை மிதமிஞ்சிய இகழ்ச்சியுடன் நோக்கினான். "ஜகத்சிம்மா! உன் துணியை நான் வியக் கிறேன். மன்னனை எதிர்ப்பவருக்கு மரண தண்டனை கொடுக்கலாம். அதோ உன் பின்னால் நிற்கும் நூற்று இருபத் தைந்து பேரும் நான் கையசைத்தால் உன்னை வெட்டிப் போடுவார்கள். ஆனால், அத்தகைய தண்டனையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகையால் நீ பிழைத்திருக்கிறாய்; அது கிடக்கட்டும். நீ கேட்ட கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியும். ஆம், இரு முறை ஓடினேன். இரு முறையும் அதர்மத்தின் விளைவிலிருந்து ஓடினேன். முதலில், நம்பிய தன் மகளை வஞ்சித்து, பேரனை வஞ்சித்து, மேவார் அரியணையைக் கைப்பற்ற முயன்ற என் தந்தை செய்த அதர்மம் என்னை விரட்டியது சித்தூரிலிருந்து. மண்டோரில் இரவில் உறங்கியிருந்த படையை அழிக்க முயன்ற உன் வஞ்சகம் விளைவித்த அதர்மத்தில் இருந்து ஓடினேன், இரண்டாவது முறை. எப்பொழுதும் ஏதாவது ஓர் அதர்மம் என்னைத் துரத்துகிறது" என்று கூறினான் ஜோடா, இகழ்ச்சியும் துன்பமும் நிறைந்த குரலில்.

மன்னனின் போக்கு விசித்திரமாக இருந்தது, படைத் தலைவனுக்கு. "எதிரியைப் புகழ்கிறீர்கள்!" என்றான்.

"எதிரியை அல்ல. தர்மத்தைப் புகழ்கிறேன், வீரத்தைப் புகழ்கிறேன், ஜகத்சிம்மா! வீரம் எனக்கு இருக்கிறது. இனி தர்மத்தைச் சம்பாதிக்க வேண்டும்" என்று சொன்னான் நாடு இழந்த மன்னன்.

"அதற்கு என்ன செய்ய உத்தேசம்?" ஜகத்சிம்மன் கேட்டான் கோபத்துடன்.

"தவம் செய்யப் போகிறேன்."

"எப்படி?"

"வனப்பிரஸ்த ஜோசியின் அடிமையாக."

"ஏற்கனவே அடிமை ஆகிவிட்டீர்களே."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"பின்னால் பாருங்கள்."

ஜகத்சிம்மனின் சொற்களைக் கேட்டதும் சட்டென்று திரும்பிய ஜோடா தனக்குப் பின்னால் மலை அரசி நிற்பதைக் கண்டான். அந்தச் சமயத்தில் ஒலித்தது, ஜகத்சிம்மன் குரல், "ஜோகியின் மகளுக்கு அடிமையானாலும் ஜோகிக்கு அடிமை ஆனாலும் ஒன்றுதானே?" என்று.

இந்தச் சொற்களால் ராவ்ஜோடா மனம் கலங்கிப் போய் விடுவான் என்று ஜகத்சிம்மன் எதிர்பார்த்திருந்ததால், அவன் ஏமாந்தே போனான். ராவ்ஜோடா படைத்தலைவனை வருத்தத்துடன் நோக்கினான். பிறகு மலை அரசியை நோக்கி, "மலை அரசி! உள்ளே என் வாள் இருக்கிறது, எடுத்து வா" என்று கட்டளையிட்டான், வருத்தம் நிரம்பிய குரலில்.

மலை அரசி அடுத்து வரும் நிகழ்ச்சியை உணர்ந்தாள். இருப்பினும் மறுப்பு எதும் தெரிவிக்காமல் உள்ளே சென்று ஜோடாவின் வாளை எடுத்து வந்தாள். வாளை உறையில் இருந்து உருவிக்கொண்டு உறையை மலை அரசியிடம் கொடுத்த ஜோடா, குகை வாயிலில் இருந்து ஜகத்சிம்மன் நின்றிருந்த இடத்துக்கு வந்தான்.

"ஜகத்சிம்மா, நீ என் உறவினன். அதனால் உன் சொற்களை இத்தனை நேரம் பொறுத்தேன். மன்னனாகிய என்னை இகழ்ந்தாய், பொறுத்தேன். இப்பொழுது மலை அரசியை இகழ முற்பட்டு இருக்கிறாய். மலை அரசி உன் மகாராணியாகப் போகிறவள் என்பதைத்தான் மறந்தாய். மகாராணிப் பதவி அளிக்கப்பட்டபோது அதை அவள் உதறியதையும் மறந்தாய். அதர்ம யுத்தம் நடத்திய ஒரு படைத்தலைவன், தான் படைத்த ரணகளத்தை விட்டு ஓடிவந்தவன், இஷ்டப்படி யாரையும் இகழலாம் என்ற ஆணவத்தையும் விடவில்லை. இது அத்தனைக்கும் தண்டனை உண்டு. வாளை எடுத்துக்கொள்" என்றான்.

ஜோடாவின் சொற்களில் ஆத்திரம் இல்லை, கோபம் இல்லை. உணர்ச்சிப்பெருக்கு எதுவுமே இல்லை. ஏதோ

கடமையைச் செய்பவன் போல் வாளைக் கையில் ஏந்தி நின்றான். ஜகத்சிம்மனும் வாளை உருவிப் பிடித்துக் கொண்டான். "மன்னவா!" என்றான் மெதுவாக.

"இப்பொழுது மன்னன் இல்லை. ஆகையால் அந்த நிலையை நினைக்காதே" என்றான் ஜோடா.

"தங்களிடம் போராட நான் இங்கு வரவில்லை" என்று சுட்டிக் காட்டினான்.

"இப்பொழுது நான் உனக்கு அளிக்கப்போவது போர் அல்ல, தண்டனை" என்று விளக்கினான், ஜோடா.

ஜகத்சிம்மன் தன் வாளை முதலில் நீட்டி சண்டையைத் தொடங்கினான்.

ஜகத்சிம்மன் வாள் போரில் நிகரற்றவன் என்று ராஜபுதனத்தில் பிரசித்தம். அது உண்மை என்பதை அந்த இரவில் நிரூபித்தான் படைத்தலைவன். அவன் ஒவ்வொரு வாள் வீச்சும் பயங்கரமாக இருந்தது. அவன் வாள் ஜோடாவின் இதயத்தையும், கழுத்தையும், கண்களையும் நோக்கி அடுத்தடுத்து வந்தது, மின்னல் வேகத்தில். குறி வைப்பதற்காகவும் வேகம் திரட்டுவதற்காகவும் இடம் மாறி மாறி, பாய்ந்து பாய்ந்து போரிட்டான் ஜகத்சிம்மன்.

ராவ்ஜோடா இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. அவன் வாள் ஜகத்சிம்மன் வாளை அனாயாசமாகத் தடுத்து நின்றது. ஜகத்சிம்மன் குறி ஒவ்வொன்றும் மிக வேகமாக வந்தும் அவன் வாள் மின்னல் வேகத்தில் சுழன்றும் ஜோடாவின் வாள் அந்த இடங்களில் எல்லாம் மந்திரத்தால் தோன்றுவதுபோல் தோன்றி படைத்தலைவனின் வாளைத் தடுத்தது.

ஜகத்சிம்மன் மெள்ள மெள்ள உண்மையை உணர்ந்தான். ராஜபுதனத்தில் தான் எடுத்திருக்கும் பெயருக்கு அழிவுகாலம்

வந்துவிட்டதை உணர்ந்தான். அதனால் அதிகத் துரிதமாக வாளை திரும்பத் திரும்ப சுழற்றி மன்னனை நோக்கி வந்தான்.

அத்தகைய ஒரு சமயத்தில்தான் ஜோடா தனது வாளினால் படைத்தலைவன் வாளை ஓங்கியடித்து நிலத்தில் ஊன்ற வைத்து அவன் மணிக்கட்டையும் தனது இடக்கையால் பிடித்து நெறித்து, எதிரி வாள் உதறி விழும்படி செய்தான். பிறகு காலால் அந்த வாளை தூரத்தில் தள்ளிவிட்டு, "ஜகத்சிம்மா! இப்பொழுது உன் மகாராணியிடம் உன் நடத்தைக்கு மன்னிப்புக் கேள்" என்றான்.

நிராயுதபாணியாக நின்ற சமயத்தில் ஜகத்சிம்மன் அசையவில்லை. "வாளை என் இதயத்தில் பாய்ச்சி விடுங்கள்" என்று சொன்னான், ஜோடாவை நோக்கி.

தன் வாளை ஒருமுறை நோக்கி மலை அரசியையும் நோக்கிய ஜோடா "மலை அரசி! படைத்தலைவனுக்கு நீயே தண்டனை கொடு" என்று கூறினான்.

மலை அரசி தண்டனை கொடுக்கும் நிலையில் இல்லை. படைத்தலைவனைப் பரிதாபத்துடன் பார்த்தாள். கடைசியில் சொன்னாள், "படைத்தலைவரே! பெரும் வீரர்கள் பிறர் மீது வசைபாடுவது இல்லை. ஆகையால் உங்கள் போக்கை சிறிது மாற்றிக்கொள்ளுங்கள். மார்வார் பெரும் நாடாகப் போகிறது. அதை நிர்மாணிக்கும் பணியில் உங்கள் வாள் பெரிதும் பயன்படலாம். ஆகவே, செல்லுங்கள் ஜோடா கிருக்கு" என்று.

"அங்கு எதற்கு?" தலை குனிந்தவண்ணம் கேட்டான், ஜகத்சிம்மன்.

"மார்வார் அரசு தழைக்கும் வித்து அங்குதான் ஊன்றப்படும். ஜோடாகிர் வெகுசீக்கிரம் உங்கள் மன்னன் பெயரைத் தாங்கும். ஜோட்பூர் என்ற பெயரில் அங்கு

மார்வார் தலைநகரம் உருவாகும். அங்கு உங்கள் பாவங்கள் அழிக்கப்படும்" என்றாள் மலை அரசி அதிகாரம் நிரம்பிய குரலில்.

"தாங்கள்?" இம்முறை ஜகத்சிம்மன் குரலில் மரியாதை பெரிதும் ஒலித்தது.

"நானும் இவரும் வேறு இடத்துக்குப் போகிறோம்" என்றாள் மலை அரசி.

"அந்த இடத்தை நான் அறியலாமா?" என்று ஜகத்சிம்மன் கேட்டான்.

"சீக்கிரம் அறிந்துகொள்வீர்கள். போய் வாருங்கள். உங்கள் வீரர்களையும் அழைத்துச் செல்லுங்கள்" என்று மலை அரசி உத்தரவிட்டாள்.

அப்பொழுது யாரும் எதிர்பாராத விந்தை ஒன்று நிகழ்ந்தது. அதைக் கண்டு ஜோடாவே பிரமித்தான்.

15. ஹர்பா சங்க்லா!

மலை அரசியால் மன்னிக்கப்பட்டு ஜோடாகிருக்குச் செல்லும்படி பணிக்கப்பட்ட ஜகத்சிம்மன் உடனடியாகத் திரும்பவில்லை தனது புரவியை நோக்கி. நின்ற இடத்திலேயே அசைவற்று நின்றான் பல விநாடிகள். பிறகு சட்டென்று வேகமாக நடந்து, ஜோடாவின் காலால் உதைக்கப்பட்டு தூரத்தில் கிடந்த தனது வாளை நோக்கிச் சென்று அதைக் கையில் எடுத்துக்கொண்டான். அந்த வாளை இரு முறை திருப்பிப் பார்த்துவிட்டு வேகமாக வந்தான் மலை அரசி நின்றிருந்த குகை வாயிலுக்கு. அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை ஜோடாவோ மலை அரசியோ அறியுமுன்பு, மலை அரசியின் முன்பாக மண்டியிட்டுத் தலை வணங்கி தனது வாளை அவள் கமலப் பாதங்களில் வைத்தான். "மகாராணி! இந்த வாள் உங்கள் சேவைக்காக அர்ப்பணிக்கப்படுகிறது. இன்று நான் தங்களைப்பற்றிக் குறை கூறிய பாவத்துக்கு என்றாவது ஒருநாள் இந்த வாள் பரிகாரம் அளிக்கும். எனக்கு மன்னிப்பு அளியுங்கள். என்னை உங்கள் பணியாளாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றான் துன்பம் தோய்ந்த குரலில்.

இந்த திடீர் காட்சியைக் கண்ட ஜோடா அசைவற்று திக்பிரமை பிடித்து நின்றான். மலை அரசியோ அவனை ஒரு தாய், மகனைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். அது மட்டுமின்றி, "ஜகத்சிம்மா! நான் சகோதரர்களுடன் பிறக்கவில்லை.

அப்படி யாராவது சகோதரர்கள் இருந்தாலும் எனக்குத் தெரியாது. ஆகவே என் சகோதரனாயிரு. வாளை எடுத்துக் கொள். அது உன் நாட்டின் மீட்சிக்கும் வெற்றிக்கும் பயன் படட்டும்" என்றாள் கம்பீரமும் கருணையும் கலந்த குரலில்.

அதற்குப் பிறகும் ஜகத்சிம்மன் எழுந்தான் இல்லை. "எழுந்திரு ஜகத்சிம்மா" என்றாள் மலை அரசி.

"என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தைகூட நீங்கள் சொல்லவில்லை" என்றான் ஜகத்சிம்மன்.

மலை அரசி பரிதாபம் நிரம்பிய கண்களுடன் படைத்தலைவனைப் பார்த்தாள். "மன்னித்துவிட்டேன் ஜகத்சிம்மா எழுந்திரு. ஜோடாகிருக்கு நீ மட்டும் போ" என்றாள்.

"வீரர்கள்?" என்று வினவினான் ஜகத்சிம்மன்.

"எங்களுடன் அழைத்துப் போகிறோம்" என்றாள் மலை அரசி.

எங்கு ஏதென்று முன்பு கேட்ட கேள்வியைக் கேட்கவில்லை ஜகத்சிம்மன். ஏதும் பேசாமல் எழுந்திருந்து ஜோடாவுக்கும் மலை அரசிக்கும் தலை வணங்கிவிட்டு புரவியில் ஏறி மலைச்சரிவில் சென்றுவிட்டான்.

அவனுடன் வந்த நூற்று இருபத்து ஐந்து புரவி வீரர்கள் மட்டும் அப்படியே கூட்டமாக நின்றார்கள். "இவர்களை எதற்காக நிற்கச் சொன்னாய் மலை அரசி?" என்று கேட்டான் ராவ்ஜோடா.

மலை அரசி சிறிதும் சிந்திக்காமல் பதில் சொன்னாள். "இது உங்கள் அஸ்திவார சைன்னியம். இதைக்கொண்டு தான் நீங்கள் வெற்றியை அடைய வேண்டும். நூற்று இருபத்து ஐந்து உங்கள் அதிர்ஷ்ட எண்" என்று.

"எண்ணுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் என்ன தொடர்பு?" என்று வினவினான் ஜோடா.

"சித்தூரில் இருந்து உங்களுக்குப் பின்பு தப்பி வந்தவர் நூற்று இருபத்து ஐந்து பேருடன் போகப் போகிறோம். அங்கு புரியும் உங்களுடைய அதிர்ஷ்டம்" என்று சொன்னாள்.

"யாரை சந்திக்கப் போகிறோம்?" என்று கேட்டான் ஜோடா.

"அதற்குள் மறந்துவிட்டீர்களா? உங்கள் துணைவரை சந்திக்கப் போகிறோம்" என்று மலை அரசி குறிப்பிட்டாள். அத்துடன் வீரர்களை நோக்கி "இரவு இங்கேயே இளைப் பாறுங்கள். காலையில் புறப்படுவோம்" என்று கூறிவிட்டு குகைக்குள் சென்றாள்; ஜோடாவும் குகைக்குள் நுழைந்தான்.

குகைக்குள் மலை அரசி படுக்கவில்லை. பாறை சிருஷ்டித்த சுவரில் சாய்ந்துகொண்டு நின்றிருந்தாள். நின்ற நிலையில் குகையின் கூரையிலிருந்த துவாரத்தின் மூலம் கண்களை ஆகாயத்தில் செலுத்தி ஆராய்ந்து கொண்டிருந்தாள். பிறகு ஜோடாவை நோக்கி "ஜோடா! இன்னும் இரண்டு நாட்கள் இங்குதான் நாம் தங்கவேண்டும்" என்று சொன்னாள்.

"ஏன்?"

"இன்றுதான் புஷ்யம்."

"புஷ்யம் என்றால்?"

"பூச நட்சத்திரம். அதோ பார்" என்று கூரையின் ட்சியைக் காட்டினாள்.

வானத்தைப் பார்த்த ஜோடாவுக்கு கொத்தாக ட்சத்திரங்கள் தெரிந்தன. ஆனால், அதில் எது புஷ்யம், முழுவதுமா, அவற்றில் ஏதாவதொன்றா என்று ஏதும் தெரியாததால் "நட்சத்திரங்கள் கொத்தாகத் தெரிகின்றன. தனால் என்ன?" என்று கேட்டான்.

"மக நட்சத்திரம் அன்றுதான் சுத்தவிரதம்" என்றாள் மலை அரசி.

அப்பொழுதுதான் ஜோடாவுக்கு தான் வனப்பிரஸ்த ஜோகியின் குகையில் சந்தித்த ராட்சசனைப்பற்றி நினைவுக்கு வந்தது. அவன் பிரம்மச்சாரியான ஹர்பாசங்க்லா என்பதை ஜோகி தெரிவித்ததும், அவனைத் தனக்குத் துணைவனாக நியமித்ததும் மெள்ள மெள்ள சிந்தையில் உலாவலாயிற்று. அவன் தன்னை சுத்த விரதத்தன்று வந்து சந்திக்கும்படி சொல்லிச் சென்றதும் மனதில் உதயமாகவே "மறந்து விட்டேன் மலை அரசி! இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது" என்றான்.

"ஹர்பாசங்க்லா சுத்த விரதம் கொண்டாடும்போது அங்கு இருந்தால் நமது வேலை முடிந்தது" என்று உற்சாகத்துடன் கூறினாள் மலை அரசி.

"ஹர்பாசங்க்லா பெரிய வீரன் என்று கேள்விப்பட் டிருக்கிறேன். கோபிஷ்டர் என்றும் கேள்வி" என்றான் ஜோடா சிறிது சந்தேகத்துடன்.

மலை அரசி ஜோடாவை நெருங்கி பின்புறமாக அவன் மார்புமீது சாய்ந்துகொண்டாள். "கோபமிருக்கும் இடத்தில்தான் குணமிருக்கும்" என்று கூறினாள். அதைக் கூறியபடியே மார்பின்மீது மல்லாந்த நிலையில் ஜோடாவை ஏறிட்டு நோக்கினாள்.

ஜோடா இரு கைகளாலும் அவளை அணைத்தான். "மலை அரசி! எனக்கு ஹர்பாசங்க்லாவின் துணை வேண் டாம்" என்று கூறினான்.

"ஏன் ஜோடா?"

"எனக்கு அரசு வேண்டாம்."

"ஏன் வேண்டாம்?"

"சாம்ராஜ்ஜியத்தை அடைந்துவிட்டவனுக்கு உலகச் சிறு அரசுகள் எதற்கு?"

"எந்த சாம்ராஜ்ஜியத்தை?" என்று கேட்டாள் மலை அரசி மெலிவிய குரலில்.

"இந்த சாம்ராஜ்ஜியத்தை" என்ற ராவ்ஜோடா தனது கைகளால் அவளை இறுக்கினான். அத்துடன் அவள் காதுக்கு அருகில் குனிந்து "மலை அரசி! நீ எனக்கு சாம்ராஜ்ஜியம். நீ இருக்கும் இடம் அரண்மனை. உன் சமீபம் சொர்க்கம்" என்று சொல்லிவிட்டு அவள் கன்னத்தில் இதழ்களைப் புதைத்தான்.

இத்தனையிலும் மலை அரசி, சிறிதும் நெகிழ்ச்சி அடையவில்லை. ஜோடா! கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. நமது அனுபவத்துக்குக் காலம் இருக்கிறது. அதற்கு முன்பு அரசனான உனக்கு மக்கள்பால், உன் வம்சத்தின்பால் கடமையிருக்கிறது" என்றாள். "நாளை கழித்து மறுநாள் ஹர்பா சங்க்லாவின் காட்டுக்குப் புறப்படுகிறோம். சுத்த விரதத்தன்று அவரை யாசிப்போம்."

இதைக் கேட்ட ஜோடா சிறிதே வெகுண்டான். "யாசிப்பதா?" என்றும் வினவினான்.

"ஆம்." மலை அரசி உணர்ச்சி ஏதுமின்றி சொன்னாள்.

"மார்வார் வம்சத்தவன் எவனும் யாசித்ததில்லை" என்றான் ஜோடா.

"கடவுளே யாசித்திருக்கிறார் வாமன மூர்த்தியாக. மனிதர்கள் அவரைவிட உயர்ந்தவர்கள் இல்லை" என்ற மலை அரசி, "ஜோடா! நீ யாசிக்கப் போகும் மனிதன் சாதாரணமானவன் அல்ல. மகாவீரன். அவன் சுத்த விரதத்தன்று வருஷம் முழுவதும் சம்பாதித்த பொருள்கள் அனைத்தையும் தானம் செய்துவிடுகிறான். யார் எதைக் கேட்டாலும் மறுப்பதில்லை. ஆசையால்தான் உன்னை அன்று வரச் சொன்னார். அவர் அனுஷ்டானத்தை அன்று பார். மன்னனான உனக்கே பிரமிப்பாயிருக்கும்" என்று கூறினாள்.

ஜோடாவின் முகத்தில் அப்பொழுதும் திருப்தியில்லை. "நான் யாசித்துத்தான் அவர் உதவ வேண்டுமா?" என்று கேட்டான் மிகுந்த அதிருப்தியுடன்.

"இல்லை. ஆனால் நீ பாவம் செய்தவன் என்று அவர் கருதுகிறார். ஆனால் சுத்த விரதத்தன்று அவர் யார், எவர் என்பதைக் கவனிப்பதில்லை. அன்று யார் கேட்டாலும் கொடுப்பார். ஆசையால்தான் மறுக்காதிருக்கும் பொருட்டு அந்த விரத தினத்தில் வரச் சொல்லியிருக்கிறார். நீயே பார்க்கப் போகிறாய் ஜோடா, அவர் விரத மகிமையை" என்ற மலை அரசி மார்வார் மன்னன் கைகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அடுத்த நாள் மிக ரம்மியமாகக் கழிந்தது மலை அரசிக்கும் மார்வார் மன்னனுக்கும். காட்டில் உலாவியும் பேசியும் காலங் கழித்தார்கள். மூன்றாவது நாள் இருவரும் மற்ற வீரர்களையும் அழைத்துக்கொண்டு ஹர்பாசங்க்லாவின் இருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

அங்கு ஜோடா கண்ட காட்சி அவனைத் திகிலுறச் செய்தது. ஹர்பாசங்க்லா தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தார். மலை அரசியையும் ஜோடாவையும் பார்த்தவுடன் முகத்தில் துன்பத்தைப் படரவிட்டுக் கொண்டார். "காலம் கடந்து வந்திருக்கிறாய்" என்று ஜோடாவை நோக்கிக் கூறினார்.

16. அந்தி வானம்

அதிர்ஷ்டம் என்பது ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டால் அவனை அது லேசில் விடுவது இல்லை. கூடியவரையில் விடாமல் தொடர்கிறது. துரதிர்ஷ்டக்காரனுக்கு புத்தி பேதலிக்கிறது. காலம் கைகொடுப்பது இல்லை. எதையும் காலங்கடந்து செய்கிறான். அதிர்ஷ்டம் கெட்டவன். இதற்கு இணையிலா உதாரணமாக விளங்கினான். அரசை இழந்த மார்வார் மன்னன் ராவ்ஜோடா.

ஹர்பாசங்க்லாவின் இருப்பிடத்தை அவன் அடைந்த போது, விளக்கு வைத்து அதிக நேரமாகிவிட்டது. சுத்த விரதத்தன்று செய்ய வேண்டிய தர்மங்களை எல்லாம் செய்துவிட்டு, எல்லோருக்கும் உணவையெல்லாம் அளித்து விட்டு அவன் இருந்த காட்டு மாளிகையின் கூடத்தில் தன்னந்தனியாக உட்கார்ந்து இருந்தான், ராஜபுதன பீஷ்மனான ஹர்பாசங்க்லா. உள்ளே அன்ன விடுதியில் சமாப்தியாகி அறைகளைப் பரிசாரகர்கள் அலம்பிக்கொண்டு இருந்தார்கள். அது தவிர, ஹர்பாசங்க்லாவின் பக்கத்தில் வைக்கப்பட்டு இருந்த பணப்பெட்டி வாயைத் திறந்துகொண்டு தன்னிடம் ஏதும் இல்லை என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் ஜோடா உள்ளே நுழைந்ததும் பெரும் துன்பத்திற்கு உள்ளானான், பிருமச்சாரியும் மகா வீரனுமான சங்க்லா. "காலங்கடந்து வந்திருக்கிறாய், ஜோடா" என்று கூறினான், உள்ளே நுழைந்த ஜோடாவை நோக்கி.

ஜோடாவுக்கு விரதங்களில் அதிகமாகப் பழக்கமில்லையாதலால் "சுத்த விரதம் இன்றைக்குத்தானே? இன்றைக்குத்தானே வரச் சொன்னீர்கள்?" என்றான்.

அதற்குப் பிறகு ஜோடாவுடன் பேசவில்லை அந்த ராட்சதப் பிருமச்சாரி. ஜோடாவின் பின்னால் நின்ற மலை அரசியை அவள் இயற்கைப் பெயரால் அழைத்து, "கிரிஜா! சுத்த விரதத்தைப் பற்றி நீ ஏதும் சொல்லவில்லையா இவருக்கு?" என்று வினவினான்.

இல்லையென்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிய மலை அரசி சொன்னாள்: "காலத்தில் வந்திருப்போம்! இவருடைய படைத்தலைவனுடன் ஏற்பட்ட சிறிய சச்சரவால் காலதாமதம் ஆகிவிட்டது. இவர் அதிர்ஷ்டம் அப்படியிருக்கிறது" என்றாள்.

"கௌத்ஸன் மாதிரி" என்ற ராஜபுதன பீஷ்மர் பெருமூச்செறிந்தான்.

"யாரது கௌத்ஸன்?" என்று ஜோடா கேட்டான்.

"கிரிஜா! இவருக்கு படிப்பும் குறைவு போலிருக்கிறது. நீயே சொல்" என்றார் பிரமச்சாரி.

ராவ்ஜோடாவை நோக்கித் திரும்பிச் சொன்னாள் மலை அரசி: "கௌத்ஸன், வரதந்து முனிவரின் சீடன். குரு தட்சணைக்கு பதினான்கு கோடி பவுன் வேண்டியிருந்தது. அதற்காக எதையும் மறுக்காத ரகு மகாராஜாவிடம் சென்றான் யாசிக்க. அப்பொழுது மகாராஜா ஒரு யாகம் செய்து எல்லாவற்றையும் தானம் செய்துவிட்டு ஓட்டாண்டியாக உட்கார்ந்து இருந்தார். ரிஷி சீடனான கௌத்ஸனுக்குப் பாத பூஜை செய்ய வெள்ளி சொம்புகூட இல்லாததால், மண் பாத்திரத்தால் தண்ணீர் விட்டார். அதில் இருந்தே தனது

தூரதிருஷ்டத்தை ஊகித்துக்கொண்டான், கௌத்ஸன். ஜோடா! இந்தக் கதைக்கும் உனக்கும் எத்தனை சம்பந்தமிருக்கிறது பார்."

இதைச் சொன்ன மலை அரசியின் குரலிலும் துன்பம் தோய்ந்திருந்தது. ஆனால், ஜோடாவின் முகத்தில் துன்பம் இல்லை. திடீரென நம்பிக்கையும் சந்தோஷமும் அவன் முகத்தில் சுடர் விட்டன. மலை அரசியும் சங்க்லாவும் திகைக்கும்படியாகப் பதில் சொன்னான், ஜோடா. "மலை அரசி! பாதிக் கதையைச் சொல்லிவிட்டாய். ரகு மகாராஜா, கௌத்ஸனை இருக்கச் சொல்லி, குபேர பட்டணத்துக்காகத் தனது தேரைத் திருப்பி வில்லையும் அம்பறாத் தூளியையும் அதில் வைத்ததையும், அன்று இரவு குபேரன் அவர் கஜானாவில் பொன்மழை பொழிந்ததையும், கேட்டதற்கு மேல் பல கோடி பொன்னுடன் கௌத்ஸன் திரும்பியதையும் சொல்லவில்லையே! பிருமச்சாரியிடம் நான் சரணடைந்து விட்டேன். அவர் ரகுவானால் என் காரியம் கண்டிப்பாய் சித்தியாகும்" என்று கூறி சங்க்லாவை வணங்கினான்.

அவன் சொற்களைக் கேட்ட மலை அரசி, ஹர்பாசங்க்லா இருவருமே மலைத்தார்கள். கௌத்ஸன் யார் என்று ஜோடா முதலில் கேட்டது அடக்கத்தினாலா, அல்லது தங்களைப் பரிசோதிக்கும் எண்ணத்திலா என்பதைப் பற்றி இருவருக்குமே விளங்காததால், இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

இதற்குப் பிறகு பிருமச்சாரி நீண்ட நேரம் மவுனமாயிருந்தார். பல நிமிடத்துக்குப் பிறகு மவுனத்தைக் கலைத்து, சமையல் அறைக்கு மலை அரசியை அழைத்துவந்த பிருமச்சாரி, "கிரிஜா! இங்கு உணவு ஏதுமில்லை. எல்லாவற்றையும் கொடுத்தாகிவிட்டது. என்ன செய்யலாம்?" என்று வினவினார்.

மலை அரசி சிறிது சிந்தித்தாள். "பிருமச்சாரி! என் தந்தை ஜோசி சொன்னது நினைவுக்கு வருகிறது–" என்றாள் மெதுவாக.

"சொல், கிரிஜா."

"முஜூத்."

பிரமச்சாரி வியப்பு நிரம்பிய கண்களுடன் மலை அரசியை நோக்கினார். "அதைப் பாகம் செய்ய முடியும் என்று கேட்டு இருக்கிறேன். அதன் பட்டையும் துளிரும் ருசியாக இருக்கும் என்றும் கேள்வி. ஆனால், அதை சமைத்து இங்கு யாருக்கும் பழக்கம் இல்லையே" என்றார்.

மலை அரசி சிறிது சிந்தித்தாள். பிறகு "எத்தனையோ நாள் ஜோசி அதன் பட்டையை மட்டும் சாப்பிட்டு இருக்கிறார். அது தெய்விகமானது என்றும், அதனால்தான் கூர்ஜரத்தில் உள்ள *ஆதிநாத் கோயில் கட்டவும் அதை உபயோகித்திருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். எகிப்தில் சாலமன் என்ற மன்னனின் ஆலயமும் இந்த மரத்தால்தான் கட்டப்பட்டு இருக்கிறதாம். இந்த மரத்தில் நெருப்பும் கொஞ்சத்தில் பிடிக்காதாம். அதற்காகவே அரபுக் கப்பல்கள் இங்கு வந்து இந்த மரங்களை வாங்கிச் சென்று இருக்கிறதாம்" என்று விவரித்தாள் மலை அரசி.

"அப்படியானால் மலை அரசி, பரிசாரகர்களைக் கொண்டு அடுப்பை மூட்டு. அண்டாவில் போதிய நீரை ஊற்றிக் கொதிக்க வை. நான் சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு கொல்லைப்புறமாகவே காட்டிற்குள் நுழைந்துவிட்டார் பிருமச்சாரி.

குறிப்பு: இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் அப்படியே சரித்திரத்தில் நிகழ்ந்தவை.

சிவப்பு நிறமுள்ள முஜ்ஜூத்தின் கொழுந்துவிட்ட இளம் காம்புகளையும் பட்டையையும் வெகுசீக்கிரம் கொண்டு வந்தார் பிருமச்சாரி. மலை அரசி அவற்றை வாங்கி சிறு சிறு துண்டங்களாகப் பணியாளரை நறுக்கச் சொல்லி உருத் தெரியாமல் அடித்தாள். அத்துடன் சங்க்லாவின் மாளிகையில் இருந்த மாவு, சர்க்கரை, கிராம்பு, ஏலக்காய், பெருஞ்சீரகம் இவற்றைக் கலந்து கொதிக்க வைத்துக் கூழாக்கினாள். கூழ் கெட்டிப்படுவதற்கும், விருந்தாளிகள் வருவதற்கும் சமயம் சரியாயிருக்கவே எல்லோருக்கும் இலைகள் போடப்பட்டன.

ஜோடாவும் அவன் வீரர்களும் இறுகி களியாகிவிட்ட அந்தக் கூழின் ருசியைக் கண்டு வியந்து சுவைத்து உண்டார்கள். "பிருமச்சாரி! இத்தனை சுவையான உணவை வரவழைக்க உங்களால்தான் முடியும். நீங்கள் ரகு மகாராஜாவைவிட சிறந்தவர்" என்று சிலாகித்தான், ஜோடா.

"இதற்கு மலைஅரசிதான் பொறுப்பாளி. அவள் உதவியால் தான் இந்த உணவு கிடைத்தது. நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது அவளுக்கு" என்று கூறிவிட்டு உள்ளே சென்றார் பிருமச்சாரி.

"ஜோடா! நீயும் வீரர்களும் இந்தக் கூடத்திலேயே படுக்க லாம்" என்று கூறிய மலை அரசி சாப்பாட்டு அறையை சுத்தம் செய்யச் சென்றாள்.

ஜோடாவும் அவன் வீரர்களும் அன்று இன்ப நித்திரை கொண்டார்கள். மறுநாள் காலை அவர்கள் முற்றும் எதிர் பாராத மாறுதல் ஒன்று நிகழ்ந்தது. ஜோடா எழுந்ததும் அவனை நோக்கிய ஒரு வீரன் "மகாராஜா!" என்று அதிர்ச்சியுடன் அழைத்தான்.

"என்ன?" ஜோடாவின் குரலில் சீற்றம் இருந்தது.

"தங்கள் மீசை_" இழுத்தான் வீரன்.

"என் மீசைக்கு என்ன?"

"சிவப்பாக மாறிவிட்டது."

ஜோடா திகைத்து வீரனை நோக்கினான். "அடேடே! உன் மீசையும் சிவப்பாக மாறிவிட்டதே" என்று வியப்புடன் கூவினான். மற்ற வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். எல்லோர் மீசையும் சிவப்பாயிருந்தது.

அந்தச் சமயத்தில் அங்கு வந்த பிருமச்சாரியை எல் லோரும் சூழ்ந்துகொண்டு "எங்கள் மீசை ஏன் சிவப் பாகிவிட்டது?" என்று கேட்டார்கள்.

பிருமச்சாரி புரிந்துகொண்டார், முஜ்ஜூதின் சாயம் அவர்கள் மீசைகளை சிவப்பாக அடித்துவிட்டது என்று. அதை எப்படிச் சொல்வது என்று அவர் திண்டாடிக்கொண்டு இருந்த சமயத்தில், மலை அரசி அங்கு தோன்றி, உள்ள நிலையை ஊகித்துக்கொண்டு ஒரு விநாடி திகைத்தாள். பிறகு சொன்னாள், உரத்த அதிகாரக் குரலில், "ஜோடா உனக்கும் உன் வீரர்களுக்கும் நல்ல காலம் பிறந்துவிட்டது. அதனால்தான் அருணோதயச் சிவப்பு உங்கள் மீசைக்கு வந்திருக்கிறது. அதிர்ஷ்டத்தின் அடையாளம் இது. நம்பிக்கையின் உதயம். ஆகையால் மகிழ்ச்சியடையுங்கள். இன்றைய நீராட்டத்துக்குப் பின் இது மறைந்துவிடும்" என்றாள். மேலும் பிருமச்சாரியை நோக்கித் திரும்பி, "பிருமச்சாரி! உமது சுத்த விரதம் சரியாக நிறைவேறி யிருக்கிறது. இனி நீங்கள் ஜோடாவுக்கு உதவியை மறுக்க முடியாது" என்றும் திட்டமான குரலில் தெரிவித்தாள்.

கதையை மலை அரசி அடியோடு மாற்றிவிட்டதையும் அதனால் தனது மானமும் தப்பியதையும் கண்ட பிருமச்சாரி மகிழ்ச்சிப் பெருமூச்செறிந்தார். "இனி என் வா[illegible] ஜோடாவின் பக்கத்தில் இருக்கும்" என்றார். "சீக்கிரம் நீரா[illegible] காலைக்கடனை முடித்து வாருங்கள். மண்டோ[illegible] விவாதிப்போம்" என்று உறுதியுடன் பேசினார்.

ஜோடாவும் வீரர்களும் நீராடச் சென்றார்கள். அவர்கள் சென்றதும் பிருமச்சாரி மலை அரசியை நோக்கினார், நன்றி நிரம்பிய கண்களுடன். "மலை அரசி! என் மானத்தைக் காப்பாற்றினாய், விரதத்தைக் காப்பாற்றினாய், ஜோடாவையும் காப்பாற்றிவிட்டாய். கிருஷ்ணபகவானால் செய்ய முடியாததை நீ செய்துவிட்டாய்" என்று கூறினார் நன்றியுணர்ச்சி குரலிலும் ஒலிக்க.

"கிருஷ்ணபகவான் செய்யமுடியாததை நான் என்ன சாதித்துவிட்டேன்?" என்று கேட்டாள் மலை அரசி.

"பீஷ்மரையும், விதுரரையும், கர்ணனையும் பாண்டவர் பக்கம் சேர்க்க முயன்றார், முடியவில்லை. நீ என்னை இவர்கள் பக்கம் திருப்பிவிட்டாய். நீ பெரிய ராஜதந்திரி" என்று பாராட்டினார்.

"பூமியின் பாரத்தைக் குறைக்க வந்த கிருஷ்ணன் பல தந்திரங்களைக் கையாண்டான். நான் அப்படி ஏதும் செய்யவில்லையே" என்ற மலை அரசி, "பிருமச்சாரி! எப்படியும் உங்கள் உதவி ஜோடாவுக்கு அவசியம்" என்றாள்.

"ஜோடாவிடம் உனக்கு என்ன இத்தனை அக்கறை?" என்று கேட்டார் பிருமச்சாரி.

மலை அரசி பதில் சொல்லவில்லை. அவள் முகம் அந்திவானமாயிற்று. அன்று அந்தி வேளையில் ஜோடாவுக்கு உதவி பிரமாணமும் செய்தார் பிருமச்சாரி.

17. வாளின் கதை!

ஜோடாவைப்பற்றி விசாரித்ததும் மலை அரசியின் மதிமுகம் அந்திவானம்போல் சிவந்துவிட்டதைக் கண்டதுமே நைஷ்டிக பிருமச்சாரியும், எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்துப் பார்க்காதவரும், பிருமச்சாரி விரதம் கெடக்கூடாது என்பதற்காகவே காட்டில் வாழ்ந்து வந்தவருமான ஹர்பா சங்க்லா உண்மையை ஊகித்துக்கொண்டார். "அப்படியா விஷயம்?" என்று கேட்டு மலை அரசியை நோக்கி சிறிது நகைக்கவும் செய்தார்.

மலை அரசியின் முகம் அந்திவானத்தைவிட அதிகமாகச் சிவந்தது. அவள் முகத்தில் வெட்கம், மகிழ்ச்சி, சங்கடம் ஆகிய மூன்று உணர்ச்சிகளும் கலந்து தாண்டவமாடின. யாரையும் துணிவுடன் நோக்கும் அவள் மலர்விழிகள் எதிரே நின்ற அந்த மகாவீரனைப் பார்க்காமல் தரையை நோக்கின. "என்ன அப்படிப் புரிந்துவிட்டது உங்களுக்கு? எதற்காக நகைக்கிறீர்கள்?" என்று வினவினாள் மலை அரசி, இதழ்களை சற்றே அசைத்து.

பதிலுக்குப் புன்முறுவல் செய்தார் பிருமச்சாரி. "நீ மந்திரத்தால் கட்டுண்டு இருக்கிறாய்" என்றும் சொன்ன அவர் குரலில் விஷமத்தின் ஒலி கூட இருந்தது.

"யார் போட்டார்கள் மந்திரம்? எனக்கு ஜோகி சொல்லிக் கொடுத்துள்ள மந்திரங்களால் உடைக்க முடியாத மந்திரம்

என்ன இருக்கிறது?" என்று சற்றே சினம் துளிர்த்த குரலில் கேட்டாள் மலை அரசி.

இதற்கு உடனடியாகப் பதில் சொன்னார் ஹர்பா சங்க்லா. "ஜோகியைவிட உயர்ந்த சக்தி சிருஷ்டித்த மந்திரம் அது" என்றார்.

"ஜோகியைவிட சிறந்த சக்தி உலகத்தில் கிடையாது" என்று உறுதியுடன் சொன்னாள், மலை அரசி.

"இருக்கிறது. ஜோகிகூட தப்ப முடியாத சக்தி அது."

"எது?"

"இயற்கை!"

"இயற்கையா?"

"ஆமாம். இயற்கை சொல்லிக் கொடுக்கும் மந்திரத்தை யாரும் வெல்ல முடியாது. விசுவாமித்திரனே வெல்ல முடியவில்லை" என்று சுட்டிக்காட்டிய பிருமச்சாரி, "கிரிஜா! தவசிரேஷ்டரும் உறுதியில் சிறந்தவருமான கவுசிகனே மேனகையின் உருவத்தில் மயங்கினான். தவத்தைத் துறந்தான் பல காலம். அப்படியிருக்க நீ யார், மோகத்தின் சக்தியை எதிர்த்து நிற்க? இந்த ஜோடா உனக்கு நன்றாக தூபம் போட்டிருக்கிறான்" என்றும் கூறினார்.

மலை அரசி முறுவல் காட்டினாள். "இது ஜோகியின் தவறு" என்று முணுமுணுத்தாள்.

"ஜோகிக்கும் உன் காதலுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் பிருமசாரி.

"ஜோடாவுடன் என்னை ஏன் அனுப்பினார்?" என்று கேட்டாள் மலை அரசி.

"அவரா அனுப்பினார்?"

"போ என்று வாய்விட்டுச் சொல்லவில்லை. ஆனால், அவர் எண்ணம் எனக்குத் தெரியும்."

"அப்படியானால் உங்கள் இருவர் மயக்கமும் அவர் சித்தப்படிதான் ஏற்பட்டிருக்க வேண்டும்!"

"ஆமாம், அவர் எண்ணாத எதுவும் ஜோடாகிர் பகுதியில் நடப்பதில்லை. விலங்குகள்கூட அவர் எண்ணத்தை உணர்ந்து நடக்கின்றன. அப்படியிருக்க" என்று பேசிக்கொண்டு போன மலை அரசி சட்டென்று பேச்சை நிறுத்தி, கூடத்தின் வாயிற்படியை நோக்கினாள்.

ஹர்பாசங்க்லாவை நோக்கி வந்த ராவ்ஜோடா, பிருமச்சாரியையும் மலை அரசியையும் மாறிமாறி நோக்கினான். மலை அரசியின் தலை குனிந்த நிலை அவன் சந்தேகத்தைக் கிளறவே, "பிருமச்சாரி! இங்கு என்ன, ஏதாவது..." என்று கேட்டுத் தடுமாறினான்.

"விசேஷந்தான்" என்றார் பிருமச்சாரி.

"உங்கள் இரகசியத்தில் நான் கலந்துகொள்ளலாமா?" என்று வினவினான் ஜோடா.

"விஷயமே உன்னைப் பற்றியதுதான்" என்றார் பிருமச்சாரி.

"அப்படியா!" ஜோடா திகைத்தான்.

"ஆமாம்" என்ற பிருமச்சாரியின் பதில் திட்டமாகவும் இருந்தது; விஷமமாகவும் இருந்தது.

அவர் குரலில் இருந்த உறுதியைத்தான் கண்டான் ஜோடா. விஷமத்தை உணரவில்லை. "சிறிது விளக்கமாகச் சொல்லுங்கள். என்மேல் தவறு ஏதாவது இருந்தால் திருத்திக்கொள்கிறேன்" என்றேன் ஜோடா, சங்கடம் மிகுந்த குரலில்.

பிருமச்சாரி அவனை நெருங்கி அவன் தோள்மீது கையை வைத்தார். "விளக்கமுடியாத விஷயம் அது. அதைப்பற்றி இப்பொழுதென்ன!" என்று மழுப்பினார். மலை அரசியை ஓரக் கண்ணால் பார்த்து புன்முறுவல் செய்தார்.

ஜோடாவுக்கு எதும் புரியாததால் "மலை அரசி நீயாவது சொல்லேன். எனக்கும் உனக்கும் இரகசியம் ஏது?" என்று கேட்டான்.

மலை அரசி மற்ற இருவரையும் நோக்கவில்லை. சாளரத்தை நோக்கிச் சென்றாள். அந்தி கதிரவனின் செங்கதிர்கள் சில அந்தக் காட்டின் மரங்களையும் ஊடுருவி சாளரத்துக்குள் பாய்ந்தன. சட்டென்று திரும்பிய மலை அரசி உள்ளே சென்று ஒரு செம்புக் குவளையில் நீர் கொண்டுவந்து பிருமச்சாரியிடம் கொடுத்து "சந்தியா காலம் வந்துவிட்டது" என்றாள்.

பிருமச்சாரி தரையில் உட்கார்ந்து சந்தியாவந்தனத்தை முடித்தார். அதற்குள் அவரது பெரிய வாளை எடுத்து வந்த மலை அரசி "இதோ உங்கள் வாள்" என்று அவரிடம் கொடுத்தாள். அந்த வாளை பத்மாசனம் போட்டிருந்த தமது மடியில் வைத்துக்கொண்ட பிருமச்சாரி, அதன்மீது வலக்கையைப் பொருத்தினார். "இந்த வாள், மார்வாரின் பாவக்கறை துடைக்கப்படும்வரை ஜோடாவுக்கு உதவும்" என்று சபதம் செய்தார், உரத்த குரலில். அவர் கண்கள் தியானத்தில் மூடியிருந்தன. உதடுகள் மட்டுமே பிரமாணத்தை உதிர்த்தன பெரிதாக.

ஜோடா அவர் முன்பு மண்டியிட்டு வணங்கினான். அவன் தலையில் கையை வைத்து ஆசீர்வதித்தார், பிருமச்சாரி. பிறகு சட்டென்று எழுந்து, "ஜோடா, இப்படி வா" என்று மார்வார் மன்னனை அழைத்துக்கொண்டு தமது இல்லத்தின் பக்கவாட்டில் இருந்த ஒரு சிறு வீட்டுக்குச் சென்றார்.

அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டு கூடத்திலேயே நின்றாள் மலை அரசி மந்தகாச வதனத்துடன். தன் எண்ணம் ஈடேறிவிட்டதை நினைத்ததால் மிதமிஞ்சிய மகிழ்ச்சி அவள் மனத்தில் நிரம்பிக் கிடந்தது. "மார்வாருக்கு ஒரு புது சகாப்தம் உருவாகிறது" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டாள். பிறகு அவளும் அவர்கள் சென்ற திசையை நோக்கி நடந்தாள்.

தனி வீட்டுக்கு ஜோடாவை அழைத்துச் சென்ற பிருமச்சாரி அந்த வீட்டின் கதவைத் திறந்து உள்ளே சென்றார். அவருடன் நுழைந்த ஜோடா அந்த சிறு வீட்டின் உட்புறத்தை கவனித்ததும் பிரமிப்படைந்தான்; அந்த வீட்டில் அறை எதும் இல்லை. ஒரு கூடமே இருந்தது. அதன் சுவர்களில் பெரிய கனமான வாட்களும் கேடயங்களும், கோடரிகளும், மாட்சலாக் துப்பாக்கிகளும் மாட்டியிருந்தன. "இத்தனை ஆயுதங்கள் எதற்கு தங்கள் ஒருவருக்கு?" என்று கேட்டான் ஜோடா.

"நாம் படை திரட்டினால் எனது நண்பர்களின் உபயோகத்துக்கு" என்றார் பிருமசாரி. "ஆம், கிராமங்களில் இருந்து என்னிடம் வாள் பயிற்சி பெற சிலர் வருவார்கள். அவர்களுக்குப் பயிற்சியளிக்க இவை உபயோகப்படுகின்றன. இப்பொழுது பன்னிரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்களும் உன்னிடம் சேவைக்கு அமருவார்கள்" என்ற பிருமச்சாரி அந்த சுவரில் இருந்த மிகக் கனமும் நீளமுமான ஒரு வாளை எடுத்து "இதைப் பிடி" என்று ஜோடாவிடம் எறிந்தார்.

ஜோடா கையைச் சிறிது திருப்பி அதன் பிடியை மிக லாகவமாகப் பிடித்தான். வாள் மட்டுமின்றி பிடியும் மிகக் கனமாயிருந்ததைக் கண்ட ஜோடா "இதைக் கையாள்பவன் மிகச்சிறந்த வீரனாயிருக்க வேண்டும் பலசாலியாகவும் இருக்க வேண்டும்" என்றான்.

பிருமச்சாரி ஜோடாவை மிகுந்த திருப்தியுடன் நோக்கினார். "ஜோடா! நீ கூறியது உண்மை. இந்த வாளை

காலத்தில் என்னைத் தவிர வேறு யாரும் கையாண்டது கிடையாது. உன் வாள் இனி அதுதான்" என்றார்.

இதைக் கேட்ட ஜோடா சொன்னான், "எனக்கு என் சொந்த வாள் இருக்கிறது பிருமச்சாரி" என்று.

"அதை எடுத்துக்கொள் பார்ப்போம்" என்றார் பிருமச்சாரி.

கையிலிருந்த பெரிய வாளை பிருமச்சாரியிடம் கொடுத்து விட்டு இடைக்கச்சையிலிருந்த தனது வாளை உருவினான் ஜோடா.

"சரி, ஒரு சுற்று வருவோம்" என்று பிருமச்சாரி, சந்தியா வந்தனத்தை முன்னிட்டு சற்று முன்பு இடையில் அணிந்து இருந்த மான் தோல் ஆடையை நீக்காமலே அந்தப் பெரும் கத்தியை சுழற்றிக்கொண்டு பயிற்சிக்குத் தயாராக நின்றார்.

அந்தச் சிறு வீட்டின் ஒரே கூடம் போர்ப் பயிற்சிக்காகவே ஏற்பட்டு இருந்தது என்பதை உணர்ந்த ஜோடாவும், தனது வாளைக் கொண்டு பிருமச்சாரியை சந்தித்தான். ஆரம்பத்திலேயே அவன் எதிர்பாராத விந்தை நிகழ்ந்தது. வாளை நீட்டிப் போரிட வந்த ஜோடா, தனது வாள் பிருமச்சாரி வாளின் ஒரே அடியால் இரண்டாகத் துண்டிக்கப்பட்டு ஒரு பாதி கீழே பெரும் ஒலியுடன் விழுந்துவிட்டதைக் கண்டு பெரும் பிரமிப்பு அடைந்தான்.

கையில் பாதி வாளுடன் நின்ற ஜோடாவை நோக்கி வந்த பிருமச்சாரி "அந்தப் பாதியை எறிந்துவிடு. இனி இதுதான் உன் வாள்" என்று கூறி தமது கையில் இருந்த பெரிய வாளை ஜோடாவிடம் கொடுத்தார். ஜோடா! இந்த வாள் செய்து நீண்ட காலமாகிறது. என்னிடம் சில ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்தது. இது உனக்குத்தான் சொந்தம். சந்தேகம் இருந்தால் பிடியைப் பார்" என்றார்.

பிடியை நோக்கிய ஜோடா மகிழ்ச்சியும் பிரமிப்பும் ஒருங்கே அடைந்தான். பலமான அந்த வாளின் பிடியில் வைரம் மரகதம் இவற்றைக் கொண்டு மார்வார் ராஜகுலச் சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது. "பிருமச்சாரி! இது தங்களிடம் எப்படி வந்தது?" என்று விசாரித்தான்.

"ஜோகி கொடுத்தார்."

"எப்பொழுது?"

"அதுதான் சொன்னேனே, சில ஆண்டுகளுக்கு முன்பு."

"எதற்காக உங்களிடம் கொடுத்தார்?"

"தகுந்த வீரனுக்குக் கொடுக்க" என்றார் பிருமச்சாரி.

"அது மட்டுமல்ல" என்ற ஹர்பாசங்க்லா "இது கன்யா சுல்கமுங்கூட" என்றும் கூறினார்.

வியப்புடன் வாளையும் நோக்கி பிருமச்சாரியையும் நோக்கினான் ஜோடா. "கன்னி மலை அரசி" என்றும் ஓர் அதிர்வெடியை வீசினார் பிருமச்சாரி. "இதைக் கொண்டு சம்ராஜ்ஜியத்தை நிறுவுபவன்தான் மலைஅரசியை அடைய முடியும்" என்றும் சொன்னார்.

திகைத்துப் பல விநாடி நின்ற மார்வார் மன்னனுக்கு வாளின் கதையை விவரிக்க முற்பட்டார் ஹர்பாசங்க்லா.

விசித்திரக் கதை அது.

18. தேடி வந்த அதிர்ஷ்டம்!

மார்வார் மன்னனையும் மலைக்க வைத்த அந்த விசித்திரக் கதையைச் சொல்லுமுன்பு பிருமச்சாரி அந்தச் சிறு வீட்டின் முற்றத்தை வளைத்திருந்த சுற்றுக் கட்டடத்தின்மீது உட்கார்ந்து கீழ் இருந்த முற்றத்தில் தமது கால்களை நன்றாக நீட்டிக் கொண்டார். இரும்பு உலக்கைகள் மாதிரி திண்மையான சதைப் பிடிப்புடன் இருந்த அந்தக் கால்களை தமது இரு கைகளாலும் தடவியும் கொடுத்துக் கொண்டார். எதிரே வாளும் கையுமாக நின்ற ஜோடாவை ஒருமுறை ஏறெடுத்து நோக்கினார். பிறகு அவர் கண்கள் முற்றத்தில் தாழ்ந்து நிலைத்தன. கண்களில் ஏதோ பெரும் கனவு தெரிந்தது. சொற்களிலும் அந்தக் கனவு பிரதிபலித்தது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு சென்றுவிட்டார் ஹர்பாசங்க்லா. அந்த நிலையில் புன்முறுவல் ஒன்று உதடுகளில் எழுந்து முகம் பூராவும் பரவலாயிற்று. "இப்பொழுது நினைத்தால் கூட வேடிக்கையாக இருக்கிறது" என்று கதையைத் தொடங்கிய சங்க்லா சொன்னார்:

"இருபது ஆண்டுகளுக்கு முன்னால் வனப்பிரஸ்த ஜோகி என்னைப்போல் ஒரு வீரனாயிருந்தார் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். உணவைக் குறைத்து, உடலை வருத்தி அவர் யோகி நிலையை அடையு முன்பு என்னால் கூட அவரை வாட்போரில் வெற்றி கொண்டிருக்க முடியாது. இத்தனைக்கும் அந்த நாளில்கூட அவர் சரீரத்தில் அதிகச் சதைப்பிடிப்பு கிடையாது. ஆனால், இளைத்து ஒல்லியாய்

நெட்டையான உருவத்தின் சக்தியும் உரமும் இரும்பைவிட வலு உள்ளதாயிருந்தது. அவர் வாளைச் சுழற்றினால் அந்த வாளின் நுனி எந்தச் சமயத்தில் நமது உடலின் எந்த பாகத்தின் மீது தோன்றும் என்று சொல்ல முடியாதபடி பெரும் பிரமிப்பை ஊட்டுவதாயிருக்கும். வாள் சுழற்றும் தந்திரங்களையும் மர்மங்களையும் எனக்கு போதித்தவரும் ஜோகிதான்.

அவர் சாதாரண வீரனாயிருந்த காலத்தில் மேவார் அரசுக்குப் பணிபுரிந்து வந்தார். ஆனால் அவர்கள் படையில் சேரவில்லை. எப்பொழுதும் ஆரவல்லி மலைத்தொடரின் காடுகளிலும் இந்த பாகுர்ச்சிரா மலைத்தொடரின் வனப்பிரதேசங்களிலும் இருந்து வந்தார். அவருக்குச் சொல்லியனுப்பினால் குறிப்பிட்ட பணியைச் செய்துவிட்டு திரும்ப பாகுர்ச்சிராவுக்குப் போய்விடுவார். எத்தனையோ பணிகளை துணை யாருமின்றி தனியாகவே செய்து முடித்திருக்கிறார். அவருக்குத் துணையெல்லாம் ஒரு புரவி, ஒரு வாள்—இவைதாம். அவர் நுழைந்த கோட்டைகள் பல. போராடிய இடங்கள் பல. பாவம் செய்யும் யாரும் அவரிடம் தப்பியது கிடையாது. நல்லவர் யாருக்கும் அவர் உதவாமல் இருந்ததும் இல்லை. தர்மத்தையே அடிப்படையாகக் கொண்டு தமது வாளை அதை நிலை நிறுத்தவே உபயோகப்படுத்தி வந்தார்.

அத்தகைய பணிகளில் ஒன்றை அவர் முடித்த பிறகு திடீரென சுவடு தெரியாமல் மறைந்துவிட்டார். அதைப்பற்றி பலர் பலபடி பேசிக்கொண்டார்கள். அவர் வேதம் படிக்க இமாலயம் சென்றுவிட்டதாக வதந்தி உலாவியது. யாரோ திராவிட நாட்டில் இருந்து ஒரு சித்தர் வந்ததாகவும் அவர் பின்னால் அவர் போய்விட்டதாகவும் வதந்தி இருந்தது. இப்படி வதந்திகள் பலவிதமாயிருந்தபோது திடீரென அவர் பாகுர்ச்சிராவில் இருக்கிறார் என்று செய்தி கிடைத்தது. உடனடியாக நான் அங்கு விரைந்தேன்.

"ஜோடா! நீ வந்த அதே குகை வாயிலில் ஜோகி நின்றிருந்தார். அவர் கையில் ஒரு பெண் குழந்தை இருந்தது. ஒரு கோவணத்தை மட்டும் அணிந்திருந்தார். தலைமுடியும் தாடியும் மீசையும் அசாத்தியமாக வளர்ந்திருந்தன. உடலும் பெரும்பாலும் ரோமத்தால் மூடப்பட்டுக் கிடந்தது. இத்தனைக்கும் அந்தக் கண்களில் அந்தப் பழைய ஒளி தெரிந்தது. அந்தக் கோலத்தையும் பார்த்து அவர் கையில் இருந்த குழந்தையையும் பார்த்து பிரமித்து நின்றேன்.

என்னைப் பார்த்ததும் அவர் இடியிடி என பைத்தியம் போல் நகைத்தார். ஒருவேளை சித்தப்பிரமையோ என்றுகூட நினைத்தேன்.

ஆரம்பித்த வேகத்தில் அவர் சிரிப்பை நிறுத்தினார். வனப்பிரஸ்த ஜோகிக்கும் ஒரு பந்தம் வந்துவிட்டது என்று சொன்னார். கையில் இருந்த குழந்தையையும் காட்டினார்."

இப்படிக் கதை சொல்லிக்கொண்டு வந்த ஹர்பாசங்க்லா சிறிது நேரம் மவுனமானார். சில விநாடிக்குப் பிறகு மீண்டும் பேசினார்.

"அந்தக் கோலத்தில் அந்த மகாவீரனைக் கண்ட நான் ண் கலங்கினேன். வனப்பிரஸ்த ஜோகியா! நீங்களா! என்று கேட்டேன்.

"ஆம்" என்றார் ஜோகி நகைத்துக்கொண்டு.

"மகாவீரரான நீங்கள் எப்படித் துறவியாக முடியும்?" ன்று கேட்டேன்.

"மகாவீரனான கவுசிகன் துறவியாகவில்லையா?" என்று ர் பதிலுக்குக் கேட்டார்.

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நகைத்தேன். "அப்படி னால் இது மேனகையின் குழந்தையா?" என்று கேட்டேன்.

"அந்தத் தவற்றை நான் செய்யவில்லை. விசுவாமித்திரன் விரதத்தை மட்டும், துறவியான பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டேன். இருந்தும் கிரிஜா என்னிடம் வந்து சேர்ந்தாள். இவளிடம் உள்ள பற்றை, பாசத்தை நீக்குகிறேனா என்று பார்க்க விதி செய்யும் சோதனை இது. என் குகையின் முன்பு யாரோ இந்தக் குழந்தையைக் கிடத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்று காலை வெளியே வந்தபோது இதைப் பார்த்தேன்! என்றார்".

"இதன் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன்.

"இந்த ஓலை குழந்தையின் இடுப்புக் கயிற்றில் கட்டியிருந்தது" என்று அந்த ஓலையை என்னிடம் காட்டினார். அந்த ஓலையில் பெயர் எழுதியிருந்தது. கீழே ஒரு வாளின் குறியும் இருந்தது" என்றார்.

அதற்குப் பிறகு வனப்பிரஸ்த ஜோகி "எதற்கும் ஒரு வாரம் கழித்து இங்கு வா" என்று உத்தரவிட்டு குகைக்குள் சென்றுவிட்டார். ஒருவாரம் கழித்துச் சென்றேன். ஜோகி குகைவாயிலில் இரண்டு யாதவ குலப் பெண்கள் உட்கார்ந்து குழந்தையை சீராட்டிக்கொண்டு இருந்தார்கள். ஜோகி சிறிதுநேரம் கழித்து வெளியே வந்தார். என்னை உள்ளே வரும்படி சைகை செய்தார். அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றேன். அங்கு வைத்திருந்த அகல் விளக்கு முன்பு இந்தப் பெரிய வாள் இருந்தது. "இதை யாரோ இரண்டு நாள் முன்பு குகைவாயிலில் குழந்தை இருந்த இடத்தில் வைத்திருந்தார்கள். இதை நீ எடுத்துக்கொள்" என்றார்.

"எதற்கு?" என்றேன்.

"வீரனான உன்னிடம் இதற்கு உபயோகம் இருக்கும் மலை அரசிக்குத் திருமணம் செய்ய இது உபயோகமாயிருக்கும் இதைக்கொண்டு பெரிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கு

பலனுக்கு இவளைக் கொடு" என்றார். அத்துடன் சொன்னார், "நீ திருமணம் செய்துகொள்ளாதே" என்று.

"ஏன்?" என்று நான் கேட்டேன்.

"உனக்குத்தான் இந்தப் பெண் சந்ததி இருக்கிறதே, போதும்" என்றார்.

"இருபது ஆண்டில் ஜோகி பெரிய மகான் ஆனார். அவர் உடல் இளைத்து உள்ளத்தில் சுடர்விட்டது. இடையே ஐந்து ஆண்டு அவர் மவுனமாகவே இருந்தார். உணவு அடியோடு கிடையாது. அந்தச் சூழ்நிலையில் யாதவகுல மாதர்கள் வளர்த்த மலை அரசி பருவம் எய்தினாள். அதற்குப் பிறகு அவள் ஜோகியின் சீடப் பெண்ணானாள். காட்டுப்பெண் மாதிரி வளர்ந்தாள். மிருகங்களும் பறவைகளும் அவளுக்கு நண்பர்கள்..." என்ற சங்க்லாவின் பேச்சை இடைமறித்த ஜோடா, "ஆம் ஆம். அதை நானே நேரில் பார்த்தேன்" என்றான்.

"மலை அரசியின் பிறப்பு மர்மம் அப்பொழுது ஜோகிக்குத் தெரியுமோ தெரியாதோ, இப்பொழுது தெரியும். ல்லாவற்றையும் அவர் விளக்கில் பார்க்கிறார். ஆனால், அவசியமான சமயத்தில்தான் விஷயத்தைச் சொல்வார். ன்ன காரணத்தாலோ உனக்கு உதவச் சொல்லியிருக்கிறார். ந்த வாளுடன் உன் வாழ்க்கை, மலை அரசியின் வாழ்க்கை— ரண்டும் பிணைக்கப்பட்டு இருக்கின்றன. வாளை இடைக் சையில் அணிந்துகொள். இதை தர்ம காரியங்களுக்கே ன்படுத்து. நீ மண்டோரைக் கைப்பற்றியதும் மலை சியை மணக்கலாம்."

இப்படிக் கதையை முடித்த ஹர்பாசங்க்லா, "வா! நமது டுக்குச் செல்வோம்" என்று கூறி ஜோடாவை பழையபடி விடுதிக்கு அழைத்துச் சென்றார். அன்று இரவு உணவை வரும் அருந்திய பிறகு ஹர்பாசங்க்லா சொன்னார்:

"ஜோடா! இன்று படுத்து உறங்கு. நாளை விடியற்காலையில் புறப்படுகிறோம்" என்று.

"எனது வீரர்களை காலையில் கிளம்ப உத்தரவிடுகிறேன்" என்றான் ஜோடா.

"வேண்டாம். அவர்கள் இங்கேயே தங்கியிருக்கட்டும். நாம் இருவர் மட்டும் நாளைக் காலையில் பயணப்படுகிறோம்" என்ற சங்க்லா தமது படுக்கை அறையை நோக்கி நடந்தார்.

"பிருமச்சாரி!" என்று குரல் கொடுத்தான் ஜோடா.

அறைக்குள் காலை வைத்துவிட்ட பிருமச்சாரி திரும்பி "என்ன ஜோடா?" என்று வினவினான்.

"மலை அரசியை அழைத்துப் போவோமா?" என்று கேட்டான், ஜோடா.

"வேண்டாம்."

"ஏன் பிருமச்சாரி?"

"இங்கு அவளுக்கு வேலை இருக்கிறது."

"என்ன வேலை?"

"என் விடுதியைப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆயுதம் பழக வரும் நண்பர்களுக்கு உதவ வேண்டும். தவிர உன் வீரர்களையும் கவனிக்க வேண்டும். எனக்குப் பிரதிநிதியாக இந்த மாளிகை அலுவல்களை மலை அரசி கவனிப்பாள்" என்று கூறிய ஹர்பாசங்க்லா சற்று நிதானித்தார். "தவிர நாம் ஆயிரத்து ஐந்நூறு புரவிகளை ஓட்டிக்கொண்டு வரும்போது மலை அரசி உடன் வருவதை புரவிகளின் சொந்தக்காரரர் விரும்பமாட்டார்" என்று கூறிவிட்டு, "மலை அரசியையே கேள், பாபுஜி எப்பேர்ப்பட்டவர் என்று" எனவும் சொன்னார். அடுத்த விநாடி அறைக்குள் சென்று கதவைச் சாத்திவிட்டார்.

ஜோடா மலை அரசியைத் திரும்பி நோக்கினான்.

அவள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. நம்பிக்கை கண்களில் சுடர்விட்டது. "ஜோடா! இப்படி வா" என்று அவனை சாளரத்தண்டை அழைத்துச் சென்றாள். சட்டென்று ஜோடாவின் தலையை இழுத்து அவன் இதழ்களுடன் தனது இதழ்களைப் பொருத்தினாள்.

இதழ்கள் மீண்டபோது சொன்னாள், "ஜோடா! உன்னை அதிர்ஷ்டம் தேடி வந்துவிட்டது. இந்த ராஜபுதனத்தில் யாராலும் வெற்றி கொள்ள முடியாத இருவர் உன் பக்கத்தில் இருக்கிறார்கள். இந்த ராஜபுதனத்தை ஆட்டிவைக்க ஹர்பா சங்க்லாவே போதும். பாபுஜியும் சேர்ந்துவிட்டால் மண்டோர் உன் கையில் விழுந்தது போலத்தான்'' என்றாள்.

மேலும் ஏதோ பேச முயன்றாள். ஆனால், இதழ்கள் அவள் வசத்தில் இல்லை. ஜோடாவின் முரட்டு உதடுகள் அவள் உதடுகளில் அழுந்தப் பதிந்தன. கைகள் அவள் உடலைச் சுற்றி இறுக்கின.

19. பாலைவனக் கூடாரம்

இரவு தந்த இருளில், மலைக்காடு வீசிய இதமான காற்றில், சாளரத்துக்கு அருகில் இருந்த மகிழ மரம் பரவவிட்ட சுகந்தத்தின் சூழ்நிலையில், மலை அரசியை சூழ்ந்து நெருக்கிய ஜோடாவின் கரங்கள் நெருக்கியதோடு நில்லாமல் இன்ப இடங்களையும் தேடிச் சென்றதால், மலை அரசி அவன் கைகளில் லேசாகச் சுழல முற்பட்டாள்.

அப்படிச் சுழல முற்பட்டதால் ஏற்கனவே அவன் மார்பில் புதைந்திருந்த அவள் கவர்ச்சிப் பிரதேசம் அழுந்தி அசைந்ததன் காரணமாக ஜோடாவின் உணர்ச்சிகள் அவனை நிலை குலையச் செய்தன. அவன் தனது கைகளை நீக்கி அவளை அப்படியே தூக்கி சாளரக்கட்டையில் உட்கார வைத்தான். தானும் மண்டியிட்டு அவள் மடியில் தனது முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

அபயத்தையும் அமைதியையும் நாடுவதுபோல் மடியில் புதைந்த தலையின் குழல்களை ஆதரவுடன் கோதிவிட்ட மலை அரசி, மெல்ல தனது உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்தாள். "ஜோடா! இதற்கு இன்னும் காலம் இருக்கிறது" என்று மெதுவாகக் கூறினாள், தனது தலையைக் குனிந்து இதழ்களை அவன் காதுக்கு அருகில் கொண்டுபோய். அந்த சமயத்தில் ஜோடா தலையைத் திருப்பியதால் அவள் பூவிதழ்கள் அவன் கன்னத்தைத் தடவின.

இந்த நிலையில் அவள் சொன்னதற்குப் பதிலேதும் சொல்லவில்லை, ஜோடா. ஆனால் மலை அரசி மட்டும் சில விநாடியில் சுயநிலை அடைந்து, "ஜோடா! உனக்குத்தான் சொன்னேன்" என்றாள், இன்னொரு முறை.

மடியில் படுத்திருந்த ஜோடா சிறிது தலைநிமிர்ந்தான். "என்ன சொன்னாய் மலை அரசி?" என்றும் வினவினான்.

"இதற்கு இன்னும் காலம் இருக்கிறது என்று சொன்னேன்" என்று முதலில் சொன்னதை மீண்டும் கூறினாள் மலை அரசி.

"எதற்கு மலை அரசி?" என்று வினவிய ஜோடா, மண்டியிட்ட நிலையிலேயே உடலை நிமிர்த்தி தலையை அவள் மார்பில் புதைத்துக்கொண்டான்.

மலை அரசி மீண்டும் அவன் குழல்களில் தனது விரல்களைக் கொடுத்து அவற்றைப் பிரித்தாள். "இதற்குத்தான்" என்றும் சொன்னாள்.

"என் தலைக்குழலை சிக்கு எடுப்பதற்கா?" என்று கேட்டு மெள்ள நகைத்தான் ஜோடா.

"இல்லை ஜோடா, உன் வாழ்க்கைச் சிக்கலை சரிப்படுத்துவதற்கு" என்று மலை அரசி சொன்னாள், துயரம் தோய்ந்த குரலில்.

"மலை அரசி! அது அனாவசியமான வேலை. உன்னை ன்று பாகுர்ச்சிராவின் குகை வாயிலில் சந்தித்தேனோ அன்றே போய்விட்டது, எனது வாழ்க்கைச் சிக்கல். இன்று ன் மடியில் கிடந்தபோது நான் மண்ணில் இல்லை..." ன்றான், ஜோடா.

"வேறு எங்கு இருந்தீர்கள்?" மலை அரசியின் இதழ்களில் ன்னகை அரும்பிற்று.

"சொர்க்கத்தில்."

"இது தற்காலிக சொர்க்கம், ஜோடா."

"நிரந்தர சொர்க்கத்துக்கு என்ன குறுக்கே நிற்கிறது?" என்று கேட்ட ஜோடா, எழுந்திருந்து அவளை மீண்டும் தூக்க முயன்றான்.

ஆனால், மலை அரசியின் நகைப்பு அவன் கைகளை, ஏன் ஆசையையுங்கூட, சட்டென்று தேக்கியது.

"ஏன் நகைக்கிறாய் பெண்ணே?" என்று வினவிய ஜோடாவின் குரலில் ஏமாற்றமும், அதனால் ஏற்பட்ட சினமும் இருந்தன.

"ஆண்களின் மறதியைப் பற்றி நினைத்துச் சிரித்தேன்" என்றாள் மலை அரசி.

"எனக்கு என்ன அப்பேர்ப்பட்ட மறதி ஏற்பட்டு விட்டது?"

"என்னை நீ அடைய வேண்டுமானால் சாம்ராஜ்யத்தை முதலில் அடைய வேண்டும் என்று பிருமச்சாரி சொல்லவில்லையா? அதை கன்னியா சுல்கம் என்று ஜோகி சொன்னதாக அவர் தெரிவிக்கவில்லையா?" என்று கேட்டாள் மலை அரசி.

"ஆம், ஆம், அதற்காகத்தானே இந்த வாளையும் கொடுத்தார் பிருமச்சாரி" என்ற ஜோடாவின் குரலில் ஏமாற்றம் இருந்தது. அடுத்த விநாடி அந்த ஏமாற்றத்தாலோ என்னவோ நகைத்தான் ஜோடா.

"ஏன் நகைக்கிறாய் ஜோடா?" என்று மலை அரசி கேட்டாள். அவள் கண்களில் ஒரு தனிப்பட்ட சோகை இருந்தது, சந்தேகமும் இருந்தது.

ஜோடா அவள் முன்பு நின்றான், தலைகுனிந்து பல விநாடிகள். "ஜோகியின் சோதிடம்கூட தவறிவிட்டதை நினைத்தேன். அதனால் நகைத்தேன், மலை அரசி" என்று சொன்னான், சிறிது நேரத்துக்குப் பிறகு.

மலை அரசியின் முகத்தில் வியப்பின் சாயை பெரிதும் விரிந்தது. "ஜோகியின் சொற்கள் பொய்ப்பது இல்லை. அது சத்திய வாக்கு" என்று மலை அரசி கூறினாள் உறுதியான குரலில்.

ஜோடா சாளரத்தின் தண்டில் ராணிபோல் உட்கார்ந்திருந்த மலை அரசி முன்பாக இருமுறை அப்படியும் இப்படியும் நடந்தான். பிறகு சட்டென்று நின்று கேட்டான். "மலை அரசி! உன்னை மணப்பதற்கு சுல்கம் வைத்தது சரி. ஆனால், அதற்குமுன்பு நமது மனம் ஒன்றிவிட்டதே. நாம் இருவரும் சற்றுமுன் இருந்த நிலையை எண்ணிப்பார். சுல்கம் உடைந்துவிட்டது உனக்கே தெரியும். அப்படி இருக்க நாம் சாம்ராஜ்யாதிபதி ஆகாவிட்டாலும் நீயோ நானோ ஒருவரை ஒருவர் எப்படிப் பிரிய முடியும்?" என்று.

பதில் சொல்ல மலை அரசி சிறிதும் சிந்தித்தாள் இல்லை. "ஜோடா! நீ சாம்ராஜ்யத்தை நிறுவ முடியாது என்றால் உன்னுடன் என்னை அனுப்பியிருக்கமாட்டார் ஜோகி. என் மன உறுதியில் நம்பிக்கையில்லாவிட்டால் உன்னைத் தொடர்ந்து நானும் மண்டோர் வந்திருக்கமாட்டேன். நீ என்று ஜோகியை சரண் அடைந்தாயோ அன்றே உன் பாவம், தோல்வி அத்தனையும் அகன்றுவிட்டன. நீ சாம்ராஜ்யம் நிறுவுவதும் நிச்சயம். நான் ராணியாவதும் நிச்சயம்" என்று கூறினாள். "அது மட்டும் அல்ல, ஜோடா..." என்ற மலை அரசி சிறிது தயங்கினாள்.

"சொல், மலை அரசி."

"என் அருகில்கூட இதுவரை யாரும் வந்தது இல்லை. உனக்கு நான் எவ்வளவு இடமளித்துவிட்டேன்! அதற்குக் காரணம்....."

"காரணம்..."

"நீ உத்தமன், வீரன். இப்பொழுது உனக்கு ஏற்பட்டது இடைக்கால கஷ்டம். நீ சாம்ராஜ்யத்தை அவசியம் நிறுவுவாய். இது என் மனம் சொல்லியது."

ஜோடா அவளை நெருங்கினான். ஆனால், தொடவில்லை. "மலை அரசி! நீ மண்டோர் அரசியாகும் நாள் அதிக தூரத்தில் இல்லை இது சத்தியம்" என்று கூறிவிட்டு சரேலெனத் திரும்பிச் சென்றுவிட்டான், அந்த விடுதிக்கு வெளியில். வெளிக்கதவை அவன் திறந்து சாத்தும் சத்தம் அவள் காதில் விழுந்தது.

மலை அரசி மீண்டும் சாளரக்கட்டையில் ஏறி உட்கார்ந்து வெளியே நோக்கினாள். மகிடமரம் தனது சிறு மலர்களை உதிர்த்தது. குயில் ஒன்று இன்பமாகக் கூவியது. அவள் இன்பப் பெருமூச்சு விட்டாள். கண்களை மூடினாள்.

இரவு கழிந்து பொழுது புலர இருந்த நேரத்தில் தமது அறையை விட்டு வெளியே வந்த பிருமச்சாரி, சாளரத்து அருகில் கீழே தரையில் படுத்துக்கிடந்த மலை அரசியைப் பார்த்தார். கிட்டேவந்து "மலை அரசி! மலை அரசி! கிரிஜா" என்று மும்முறை அழைத்தார்.

அவள் மெள்ள கண்விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். "என்ன பிருமச்சாரி?" என்றும் மெதுவாகக் கேட்டாள்.

பிருமச்சாரி ஒரு விநாடிதான் யோசித்தார். "ஏன் இங்கு படுத்திருக்கிறாய்?" என்று கேட்கவில்லை. "பொழுது புலர அதிக நேரமில்லை. சீக்கிரம் நீராடி வா. பூஜை அறைக்கு" என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

வெளியே ஒரு மரத்தடியில் படுத்துக்கிடந்த ஜோடாவுக்கும் அதே உத்தரவை இட்டுவிட்டு, சுனையை நோக்கிச் சென்றார்.

அவர் திரும்புவதற்குள் ஜோடா, மலை அரசி இருவருமே நீராடி மாற்றுடை புனைந்து, பூஜை அறையில் நின்று இருந்தார்கள்.

பயணத்துக்கு சரியாக உடையணிந்து வாளை இடுப்பில் கட்டிக்கொண்டு வந்த பிருமச்சாரி, பூஜை அறையில் இருந்த பெரிய லிங்கத்தைச் சுட்டிக்காட்டி, "மலை அரசி! இந்த மலர்களை பகவான்மீது தூவு" என்று தமது கையில் இருந்த பூக்களை மலை அரசியின் கையில் கொடுத்தார்.

மலர்களை அவள் லிங்கத்தின்மீது தூவினாள். ஹர்பா சங்க்லா ஏதோ மந்திரங்களை முணுமுணுத்தார். பிறகு நெடுஞ்சாண் கட்டையாக லிங்கத்தின் முன்பு விழுந்து வணங்கினார்.

மற்ற இருவரையும் வணங்கச் சொன்னார். அவர்கள் வணங்கி எழுந்த பின்பு மலை அரசியை நோக்கிச் சொன்னார். "கிரிஜா! நாங்கள் பாபுஜியைப் பார்க்கச் செல்கிறோம். நாங்கள் திரும்பும்வரை ஜோடாவின் வீரர்களுக்கும், என்னிடம் வாள் பயிற்சியை நாடி வரும் என் நண்பர்களுக்கும் நீயே பயிற்சி அளித்துவிடு" என்று கூறினார்.

"ஜோடா! நாம் நட்பை மட்டுமல்ல, அபாயத்தையும் நாடிச் செல்கிறோம். பாபுஜியின் இருப்பிடத்தை அடையுமுன்பு எதிரி நிலத்தின் வழியாகப் பயணம் செய்யவேண்டும். உன் வாளும் புத்தியும் தயாராயிருக்கட்டும், எந்த விநாடியிலும் இயங்க" என்று உத்தரவிட்டு, வாயிலில் தயாராயிருந்த தமது புரவி மீது தாவினார்.

ஜோடாவும் தனது புரவியில் ஏறினான்.

அடுத்த விநாடி இரு புரவிகளும் மலைச்சரிவில் விரைந்து ஓடின.

அன்று பகல் முழுவதும் ஹர்பாசங்க்லா மலைப்பகுதிக்கு முன்பு இருந்த மாருஸ்தலியின் பாலைவனத்தில் பயணம் செய்தார். கடும் வெயிலை அவர் லட்சியம் செய்யவில்லை. எங்கும் நில்லாமல் புரவியைச் செலுத்தினார்.

அந்தி வேளை வந்தது. இரவு மூண்ட வேளையில் சற்று புரவியை நிறுத்தி, அங்குமிங்கும் நோக்கினார். தூரத்தில் ஒரு கூடாரம் தெரிந்தது. அதிலிருந்து சிறிது வெளிச்சமும் வந்துகொண்டிருந்தது.

"ஜோடா! இன்று இரவு கூடாரத்தில் தங்குவோம், வா" என்று சொல்லி புரவியைத் தூண்டினார்.

இருவரும் கூடாரத்தை அடைந்தபோது, அதைச் சுற்றிலும் காவல் இருந்தது. காவலை அலட்சியம் செய்து, மறித்த ஈட்டிகளைக் கையால் விலக்கிக்கொண்டு ஜோடாவுடன் கூடாரத்தை அடைந்தார் பிருமச்சாரி. "யார் கூடாரத்தில்?" என்று உரக்கக் கூவவும் செய்தார்.

இரு வாலிபர்கள் கூடாரத்துள் இருந்து வெளிவந்தனர். "யார், பிருமச்சாரியா?" என்று வியப்புடன் வினவினான், அவ்விருவரில் ஒருவன்.

"அண்ணா! அவர் பின்னால் பார், ஜோடா நிற்கிறான்" என்று வியப்புடனும் சினத்துடனும் கூவினான் இன்னொருவன்.

அவன் கூவியதோடு நிற்கவில்லை. தனது வாளை உருவிக் கொண்டு ஜோடாவின் புரவியை நோக்கிச் சென்றான். காவல் இருந்த வீரர்களும் ஜோடாவை வளைக்க மெள்ள நெருங்கினர். கண நேரத்தில் பதினைந்து வீரர்கள் ஜோடாவைச் சூழ்ந்தனர்.

20. கரிய புரவி! கழுத்தில் ஈட்டி!

ஜோடாவின் பரம விரோதியான சந்தசிம்மனின் மூத்த மகன் காந்தாஜி தன் வாளை உருவிக்கொண்டு ராவ் ஜோடாவை அணுகுவதற்கு முன்பே ஜோடா பிருமச்சாரியளித்த தனது பெரிய வாளை உருவி எதிரியைத் தடுத்தான். அவனைச் சேர்ந்த பத்து பதினைந்து வீரர்களையும் தனது புரவியில் சுழன்று தாக்கினான். ஏதோ மந்திரத்தால் இயக்கப்பட்டது போல் சுழன்ற அந்த வாளின் லாகவத்தைக் கண்டு ஜோடாவே பெரு வியப்புக்கு உட்பட்டான்.

அப்படி அவன் போராடிக்கொண்டு இருக்கையில் அவனை மற்றொருபுறம் எதிர்க்கச் சென்ற சந்தசிம்மனின் இளைய மகன் மஞ்சாஜியை சரேலென்று பிருமச்சாரியின் வாள் மட்டுமன்றி குரலும் தடுத்தது. "காந்தாஜியையும் ஜோடாவையும் தவிர மற்றவர்கள் விலகி நில்லுங்கள்" என்று கர்ஜித்தார் பிருமச்சாரி. அவர் குரலைக் கேட்ட மற்ற வீரர்கள் விலகிவிட்டனர். சில விநாடிகளில் மஞ்சாஜி மாத்திரம் கேட்டான், "பிருமச்சாரி! எங்கள் குல எதிரியைத் தாக்குவதில் நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்?" என்று.

"மஞ்சா! நீ சிறுவன். வீரர்களின் வழிகளை அறிய மாட்டாய். என்றாவது ஒருநாள் நீ அற்பாயுசாக மடிவது நிச்சயம். நீ முயல்வது ஜோடாவைத் தாக்குவதோ போரிடுவதோ அல்ல. பத்து பதினைந்து பேர் தனி மனிதனைச்

—

சூழ்ந்து வெட்ட முயல்வது போர் அல்ல, கொலை. அதை நான் அனுமதிக்க முடியாது. க்ஷத்திரிய தர்மமும் முக்கியமான மேவார் தர்மமும் இதை அனுமதிக்காது" என்று மஞ்சாஜியைக் கண்டித்த பிருமச்சாரி, அவன் கையைப் பிடித்து இழுத்துத் தன்னுடன் தனியாக நிற்க வைத்துக்கொண்டார்.

இரும்பு உலக்கை போன்ற பிருமச்சாரியின் ராட்சதக் கையால் பிடித்து நிறுத்தப்பட்ட மஞ்சாஜியின் கோபம் எல்லை கடந்தது. "என்னைத் தடுக்க நீ யார்?" என்று சீறி திமிற முயன்றான். அவன் கை உடையும் நிலைக்கு வந்ததேயொழிய பிருமச்சாரியின் பிடியில் இருந்து அவனால் தப்ப இயலவில்லை.

அவனது இளமைத் துடிப்பையும் திமிறலையும் கண்ட பிருமச்சாரி பெரியதாக நகைத்தார். "நான் யார் என்று கேட்கிறாய்? உன் தந்தையைக் கேட்டுப்பார். ராஜஸ்தானத்தில் உள்ள யாரை வேண்டுமானாலும் கேள். தர்மம் இருக்கும் இடத்தில் பிருமச்சாரி இருப்பான் என்று சொல்வார்கள். தர்மம் மட்டும் என் கையைத் தடுத்திராவிட்டால் நீயும் உன் அண்ணனும் உன் வீரர்கள் கூட்டமும் இத்தனை நாழி எமன் உலகில் இருப்பீர்கள்" என்றார் நகைப்பின் ஊடே.

அதுவரை பொறுமையாயிருந்த மஞ்சாஜி "இந்தத் துரோகியையும் பிடியுங்கள்" என்று தன் வீரர்களை நோக்கிக் கூவினான்.

ஆனால், அவனது கூவலையோ அதில் வெளிவந்த அவன் உத்தரவையோ ஒரு வீரன்கூட காதில் வாங்கவில்லை. அவர்கள் கவனம் எல்லாம் ஜோடாவுக்கும் காந்தாஜிக்கும் நடந்துகொண்டிருந்த வாள் போரில் நிலைத்திருந்தது.

இரு எதிரிகளும் மிக அழகாகப் போரிட்டார்கள். காந்தாஜி தனித்து தரையில் நின்று போரிட்டதால் ஜோடாவும் தனது புரவியில் இருந்து மணலில் குதித்துப் போராடினான். வேகமாகச் சுழன்ற அவன் மூதாதைகளின் பெருவாள்

தற்காப்புப் போரையே நடத்தியது. ஜோடாவுக்கு காந்தாஜியைக் கொல்லும் நோக்கம் அணுவளவும் இல்லை. காந்தாஜி கத்தியைச் சுழற்றிய முறையிலேயே ஒரு கவர்ச்சியும் தனிப்பட்ட திடமும் இருந்ததால் அதன் அழகை லாகவத்தை வியந்த வண்ணம் போரிட்டான். காந்தாஜியின் ஒவ்வொரு தாக்குதலையும் ஜோடாவின் வாள் தடுத்தது. அப்படித் தடுத்த ஓரிரு சமயங்களில் எதிரியின் மார்பை ஊடுருவ சந்தர்ப்பம் கிடைத்தும் ஜோடா அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தனது வாளைப் பின்னுக்கு இழுத்தே போரிட்டான்.

எதிரி தன்னிடம் தயவு காட்டுவதைக் கண்ட காந்தாஜி கோபத்தின் உச்ச நிலையை அடைந்தான். ஜோடாவின் பெருவாள் சுழலும் சக்கிர நிலத்துக்குள் தான் நுழைய முடியாது என்பதை உணர்ந்துகொண்டதால் சண்டைக்கு ஒரு முடிவுகட்ட ஜோடாவின்மீது தனது வாளை ஓங்கி அடித்தான். ஜோடாவின் தலைக்குமேல் இறங்கிய அந்த வாள் அடுத்த விநாடி வானில் பறந்தது. காந்தாஜி நிராயுதபாணியாய் நின்றான்.

அடுத்து மஞ்சாஜி, அண்ணன் பணியைத் தொடர முயன்றபோது பிருமச்சாரி அவன் கையைத் தனது கையில் இருந்து விடுவித்தார். சந்தசிம்மன் புதல்வர்களுக்கும் ஜோடாவுக்கும் குறுக்கே நின்றார். "இத்துடன் இன்றைய சண்டை முடிவடைகிறது" என்று உத்தரவிடும் தோரணையில் கூறினார்.

காந்தாஜியைப் பார்த்து மேலும் சொன்னார் "சந்தசிம்மன் மகனே! ஜோடாவிடம் இன்று நீ அடைந்தது தோல்வி அல்ல. உன்னைவிட ஜோடா பெரியவன். வாள் போரில் நிகரற்றவன் என்று பெயர் பெற்றவன். இவன் வாள் உங்கள் மேவாருக்குத் துணையிருக்க வேண்டும். ஆனால், ராஜபுதனத்தின் துரதிர்ஷ்டம் மேவாருக்கும் மார்வாருக்கும் பூசலைக் கிளப்பிவிட்டது. பெரும் போர்கள் நிகழ இருக்கின்றன. ரத்தம்

இந்தப் பாலைவனத்தில் ஆறாக ஓடும். அதற்குக் காலம் இருக்கிறது. இந்த சண்டை இத்துடன் முடியட்டும்" என்ற அவர் குரலில் வருத்தம் தோய்ந்து கிடந்தது.

"இப்படி என்னை அவமானப்படுத்தியதைவிட கொன்று இருக்கலாமே!" என்று கேட்டான் காந்தாஜி.

"கொல்லும் உத்தேசம் ஜோடாவுக்கு இல்லை. ஜோடா அவன் தந்தையின் பேராசைக்குப் பலியானவன். ஆனால், தர்மயுத்தம் செய்பவன். இன்று உன்னைக் கொல்ல அவனுக்கு நியாயம் இருக்கிறது. அவனை அவன் ஆட்சியில் இருந்து ஓட்டி விட்டீர்கள். நாடோடியாக அலைகிறான். அந்த சினத்தில் உன்னைக் கொன்று இருக்கலாம். இருப்பினும் செய்யவில்லை பார்" என்று சமாதானப்படுத்தினார் பிருமச்சாரி. "ஜோடா! நாம் போகலாம் வா! இங்கு நாம் தங்குவது இவர்களுக்கும் நல்லது அல்ல, உனக்கும் நல்லது அல்ல" என்று கூறிவிட்டு, தமது புரவியில் ஏறினார். ஜோடாவும் புரவியில் ஏறிக்கொள்ள இருவரும் பாலைவன மணலில் விரைந்தனர்.

இருள் கவிந்துவிட்ட அந்த நேரத்திலும் பிருமச்சாரி ஏதோ திசையைக் குறி வைத்துக்கொண்டு வேகமாகப் புரவியைச் செலுத்தினார். இருவரும் லூனி ஆற்றின் கரைக்கு வந்ததும் அங்கேயே அன்று இரவைக் கழிக்கத் தீர்மானித்த பிருமச்சாரி புரவியில் இருந்து இறங்கி லூனியில் கைகால்களைக் கழுவிக்கொண்டார். அதன் உப்பு நீரைக் கைநிறைய எடுத்து வாயைக் கொப்புளித்தார். பிறகு மணலில் தமது தலைப் பாகைத் துணியை எடுத்து விரித்துப் படுத்துக்கொண்டார்.

ஜோடாவும் அவரைப் பின்பற்றித் தரையில் எதையும் விரிக்காமல் படுத்துக்கொண்டபின் பிருமச்சாரி ஆகாயத்தைப் பார்த்து நட்சத்திரங்களைக் கணக்கு எடுத்த வண்ணம் "ஜோடா, இன்று நேரம் கழித்துத்தான் நிலவு வரும். கிருஷ்ணபட்சம் அல்லவா?" என்றார்.

ஏதோ யோசித்தவண்ணம் வானைப் பார்த்துக் கொண்டிருந்த ஜோடா கேட்டான், "அதனால் என்ன?" என்று.

"சந்திர வெளிச்சமாவது இருந்தால் பயணப்படலாம்" என்றார்.

"இருள் பயணத்துக்குத் தடையா?" என்று வினவினான் ஜோடா.

"இந்தப் பயணத்துக்குத் தடைதான்" என்றார் பிருமச்சாரி.

"ஏன்?"

"பாபுஜி பொல்லாதவர். அவர் மலைக்குள் நாம் நுழையும்போது வெளிச்சம் இருந்தால் எச்சரிக்கை மட்டும் வரும். இல்லாவிட்டால் வேல்கள் பாய்ந்து வரும். அது கூட பாதகமில்லை..." என்ற பிருமச்சாரி இழுத்தார்.

"வேறு என்ன?" என்று கேட்டான் ஜோடா.

"அவர் குழந்தைகள் பாய்ந்து வராதிருக்க வேண்டும். அவை வந்தால் பேராபத்து" என்றார் பிருமச்சாரி.

பிருமச்சாரியே அஞ்சும் அந்த பேராபத்து எதுவாயிருக்க முடியும் என்று யோசித்த ஜோடாவுக்கு ஏதும் விளங்கவில்லை. குழந்தைகள் என்று அவர் குறிப்பிடுவது பாபுஜியின் புத்திரர்களாயிருக்க வேண்டும் என்று தீர்மானித்ததால் கேட்டான், "அவருக்கு எத்தனை குழந்தைகள்?" என்று.

"முன்பு நான் பார்த்தபோது நூறு; இப்பொழுது எத்தனையோ!"

"நூறா! பாபுஜி திருதிராஷ்டிரனா, நூறு குழந்தைகளைப் பெற?"

இதைக் கேட்ட பிருமச்சாரி அந்த இருளில் பேய்போல் நகைத்தார். "குழந்தைகள் என்றால் பிள்ளைகள் அல்ல," என்றார் நகைப்பின் ஊடே.

ஜோடாவின் பிரமை அதிகமாயிற்று. "பெண்களா?" என்று கேட்டான்.

"அவருக்குப் பிள்ளைகளும் இல்லை, பெண்களும் இல்லை. என்னைப்போல பிருமச்சாரி அவர்" என்ற பிருமச்சாரி, "சரி, ஜோடா! தூங்கு. சந்திர வெளிச்சம் வந்த பின்பு தான் பயணத்தைத் தொடங்குவோம்" என்று கூறிக் கண்களை மூடினார்.

ஜோடாவும் கண்களை மூடினாலும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. வந்தபோதும் மனம் ஒரு நிலையில் இல்லை. மலை அரசியின் அழகிய வதனம் அவ்வப்பொழுது அவன் கண் முன்பு எழுந்து, அவன் உணர்ச்சிகளை அலைக்கழித்தது, பல திசைகளில். அவள் லாவண்யம் மயக்கத்தைத் தந்தது நித்திரையிலும்.

அப்படியே உறங்கிவிட்ட ஜோடா திடீரென விழித்துக்கொண்டு உட்கார முயன்றான். எழுந்திருக்க முடியாததால் திணறினான். அவன் கழுத்தில் நீண்ட ஓர் ஈட்டி பதிந்து நின்றது.

மல்லாந்து படுத்த வண்ணம் கண்களை கசக்கிக்கொண்டு மேலே நோக்கினான். அவன் கண்ட இடம் எல்லாம் பிரமாண்டமான ஒரு கறுப்புப் புரவியின் கால்களும், நீண்ட வயிறும் தெரிந்தன. அந்த வயிற்றின் ஒரு புறத்தில் உலக்கை போன்ற ஒரு கால் தொங்கிக்கொண்டிருந்தது. ஈட்டியைப் பற்றிய கையில் கணுக்கைக்குமேல் ரோமம் கரேல் என்று அடர்த்தியாகத் தெரிந்தது.

"அப்படியே படுத்திரு. எழுந்திருக்காதே" என்று ஜோடாவை எச்சரித்த குரல் மிகக் கடுமையாக இருந்தது.

21. மலைச்சாரல் ஓசை

கழுத்தில் பதித்திருந்த ஈட்டி சற்றும் அசையாமல் இருந்தாலும் அதில் ஒரு திடமும், ஈட்டியைப் பிடித்திருந்தவன் கையில் ஈவு இரக்கமற்ற ஓர் உறுதியும் இருந்ததைக் கவனித்த ராவ்ஜோடா, தான் சிறிது அசைந்தாலும் அந்த ஈட்டி வாழைப்பழத்தில் இறங்கும் ஊசியைப்போல் தனது ஊட்டியில் இறங்கிவிட முடியும் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றிப் புரிந்துகொண்டான்.

எழுந்திருக்க வேண்டாம் என்று எச்சரித்த அந்தக் குரலின் கரகரப்பில் இருந்தே அதன் கடுமையையும் உணர்ந்து கொண்டதால், எதிர்ப்பு எந்தவித பலனையும் அளிக்காது என்பதை உணர்ந்த ஜோடா, சிலைபோல் படுத்துக் கிடந்தா னானாலும், அவன் புத்தி மட்டும் வெகு வேகமாக வேலை செய்துகொண்டு இருந்தது.

சந்திரன் உதித்துவிட்டதால் பிருமச்சாரி எந்த விநாடியிலும் விழித்துக்கொள்ளலாம் என்பதும், அப்படி விழித்துக் கொண்டால் வந்தவன் கதி அதோ கதிதான் என்பதும் ஜோடாவுக்குத் தெரிந்தாலும், தனக்கு வந்த அபாயத்தைத் தானே சமாளிப்பதே தனது வீரத்துக்கு அத்தாட்சியாக முடியும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டான்.

அந்த மனிதன் அடுத்து வார்த்தைகளை உதிர்க்கு முன்பாக மின்னல் வேகத்தில் செயலில் இறங்கினான், ஜோடா.

எதிரி முற்றும் எதிர்பாராத நிலையில் அவன் ஈட்டியைத் தனது இரு கைகளாலும் பிடித்து சற்று உயரத் தூக்கிக் கழுத்தில் இருந்த ஈட்டியை அகற்றியதுடன், வேகமாக மணலில் புரண்டு எழுந்திருக்கவும் முயன்றான்.

ஈட்டி அப்படி வலுவுள்ள இரு கைகளால் நீக்கப்பட்டதை அறிந்த அந்த கறுப்புக் குதிரை வீரன் மேற்கொண்டு எந்த செயலிலும் ஈடுபடவில்லை. அவன் புரவி மட்டும் பெரிதாகக் கனைத்து தனது இரு முன்னங்கால்களை மேலே தூக்கி புரண்டுவிட்ட ஜோடாவின் மார்பில் ஒரு குளம்பையும் வயிற்றில் ஒரு குளம்பையும் பதித்து அவனை மீண்டும் எழுந்திருக்க முடியாமல் செய்துவிட்டது. அவனை நோக்கித் தனது முகத்தைத் தாழ்த்தி தனது வெள்ளைப் பற்களை பயங்கரமாகக் காட்டியது.

புரவி தனது ஊட்டியைக் கடித்துக் குதறிவிட முற்படுகிறது என்பதை அறிந்த ஜோடா, ‘இப்படியும் ஒரு ராட்சதப் புரவி உண்டா?’ என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். தன்னைக் கடித்துக் குதற முயன்ற அந்தப்புரவியின் கழுத்தை சரேலெனக் கட்டிக்கொண்டு எழுந்திருக்கவும் முன்றான் ஜோடா. ஆனால், புரவி எதற்கும் மசிவதாகத் தெரியவில்லை. மெள்ள அவன் ஊட்டியைக் கவ்வியும் விட்டது. இனி எம லோகம் தனக்கு வெகு அருகில் வந்துவிட்டதை ஜோடா உணர்ந்தான். “இத்தனைக்கும் அந்தப் பிருமச்சாரி எப்படித் தூங்குகிறார்? அவர் என்ன கும்பகர்ணன் வாரிசா?” என்று எரிந்து விழுந்துகொண்டான், தனக்குள்ளேயே.

அவன் மனதுக்குள் எண்ணியது பிருமச்சாரியின் மனதையும் தொட்டிருக்க வேண்டும். “போதும், ஜோடாவை விட்டுவிடு” என்ற அவர் குரல் கணீரெனக் கேட்டது.

அதைக் கேட்ட மாத்திரத்தில் புரவி சட்டென்று ஜோடாவை விட்டு விலகியது. புரவிமீது அமர்ந்து இரு

தலையும் பெருவியப்பை எய்தி, "யார் ஹர்பாசங்க்லா!" என்று பெரிய குரலில் அழைத்துக்கொண்டே புரவியில் இருந்து கீழே குதித்தான்.

பிருமச்சாரி சரேலென்று எழுந்து, "விசித்திரம்! விசித்திரம்! நீ எதற்காக இங்கு வந்தாய், உன் மறைவிடத்தை விட்டு" என்று உற்சாகத்துடன் கூவினார். இப்படிக் கூறிக்கொண்டே எழுந்த வேகத்தில் கரிக்குதிரை வீரனைத் தழுவியும் கொண்டார்.

அந்த இருவரின் தழுவலில் இருந்து புரவியும் ஏதோ தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அது ஜோடாவிடம் இருந்து விலகி நின்றது. தலையைத் தூக்கி, தழுவி நின்ற இருவரையும் பார்த்து ஒருமுறை பெரிதாகக் கனைத்தது. அந்தக் கனைப்பு புரவியின் நகைப்பாகத் தெரியவில்லை. யாரோ ஒரு ராட்சதன் நகைப்பதுபோல், பாதி மனிதக் குரலும் பாதி மிருகக் குரலுமாக மிகப் பயங்கரமாயிருந்தது ஜோடாவின் காதுக்கு.

ஆனால், தழுவி நின்ற இருவரும் புரவியையோ அதன் கனைப்பையோ கவனித்ததாகத் தெரியவில்லை. சற்று நேரம் இறுகத் தழுவி நின்ற பிறகு விலகிய இருவரில் பிருமசாரியே பேசினார். "பாபுஜி! நான் உனக்கு எழுதியனுப்பியதில் தவறு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

"பிருமச்சாரி போடும் எடையில் ஏதாவது தவறு இருக்குமா?" என்று கேட்ட பாபுஜி, அப்பொழுதுதான் எழுந்து உடையிலிருந்த மணலைத் தட்டிக்கொண்டிருந்த ஜோடாவை, நன்றாக எழுந்துவிட்ட சந்திர வெளிச்சத்தில் கவனித்தார். நன்றாகக் கன்னம் புடைத்திருந்தாலும் கரிய புருவங்களின் அளவுக்கு மீறிய அடர்த்தியாலும், நுதலும் சற்றே மேடிட்டு இருந்ததாலும் சின்னஞ்சிறிதாக இருந்த பாபுஜியின் கண்கள் ஜோடாவை நன்றாக அளவெடுத்தன. திருப்திக்கு

அறிகுறியாக அவர் தலையும் அசைந்தது. "வீரன்தான், சந்தேகமில்லை" என்று சற்று இரைந்தே சொன்னார் அவர். பிறகு எட்ட நின்றிருந்த பிருமச்சாரியின் புரவியையும் ஜோடாவின் புரவியையும் கவனித்த பாபுஜி "இவை இரண்டும் உங்கள் புரவிகளா?" என்று வினவினார். அவர் குரலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது. "இவையா உங்களைத் தாங்கி வந்தன?" என்று இரண்டாவது கேள்வியையும் வீசினார் பாபுஜி.

"ஆம்" என்றார், பிருமச்சாரி.

"இந்தப் பாலைவன மணலில்?" என்று வினவினார் பாபுஜி இகழ்ச்சியுடன்.

"ஆம். ராஜபுதனமே பாலைவனந்தானே?" என்றார் பிருமச்சாரி.

"அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்" என்றார் பாபுஜி.

"மணலைச் சொல்லவில்லை." பிருமச்சாரியின் குரல் சர்வ சாதாரணமாயிருந்தது.

"வேறு எதைச் சொல்கிறீர்?"

"ராஜபுதனத்தின் மனதைச் சொல்கிறேன்."

"அதற்கென்ன கெடுதல் வந்துவிட்டது?"

"கருணை என்ற நீர் அதில் சிறிதளவும் இல்லை. வீரர்கள் ஓடுபவர்களை விரட்டுகிறார்கள்."

"ஏன் ஓட வேண்டும்? வீரனாயிருப்பவர் திரும்பி எதிர்க்க வேண்டியதுதானே?"

"திரும்பிப் போரிடுவதும் அல்லாததும் எண்ணிக்கையையும் பொறுத்தது."

"அல்ல: துணிவைப் பொறுத்தது. என்னிடம் இருக்கும் இருநூறு வீரர்கள் எந்தக் கோட்டையையும் பிடித்து அழித்துவிடுவார்கள்."

"இருநூறு பேரை வைத்துக்கொண்டு கோட்டையைப் பிடிக்க முடியுமா? வெட்டிப்பேச்சு" என்றார் ஹர்பாசங்க்லா.

"சந்தர்ப்பம் வரட்டும் காட்டுகிறேன்!" என்றார், பாபுஜி.

சற்று நிதானித்தார் ஹர்பாசங்க்லா. பிறகு சொன்னார், "சந்தர்ப்பம் வந்திருக்கிறது" என்று. இதைச் சொல்லி ஜோடாவை நோக்கிக் கையையும் நீட்டினார்.

பாபுஜியின் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்தது. "இவர்தான் ராவ்ஜோடாவா?" என்று வினவினார். அந்தக் கேள்வியில் வெறுப்பு பெரிதும் மண்டிக் கிடந்தது.

"ஆம்." அதற்குமேல் ஏதும் சொல்லவில்லை ஹர்பா சங்க்லா.

"தோற்று ஓடியவர் ஏன் உதவியை நாடி வந்திருக்கிறார்" என்று வினவினார் பாபுஜி.

"தோற்காதவர்கள் உங்கள் உதவியை நாடிவர அவசியம் என்ன?" என்று கேட்டார் பிருமச்சாரி.

கடைசியாக ஒரு கேள்வி கேட்டார் பாபுஜி, "இவர் பக்கத்தில் என்னைச் சேர்க்க வந்திருக்கிறீர்?" என்று.

"ஆம்."

"இவனிடம் தர்மம் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"வீரம் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"தர்மமும் வீரமும் உள்ள இடத்தில் வெற்றியும் இருக்க வேண்டுமே?"

"அவசியமில்லை. சந்தர்ப்பங்கள் எந்த வீரனுடைய வாழ்க்கையையும் நசிக்கச் செய்யும்" என்ற பிருமச்சாரி பாபுஜியை அர்த்தபுஷ்டியுடன் நோக்கினார்.

பாபுஜி நீண்டநேரம் சிந்தனை வசப்பட்டு நின்றார். "சரி, எதற்கும் இவனுக்கு நாளைக் காலையில் பரீட்சை வைப்போம்" என்று சொன்னார்.

இதை அனுமதிக்கவில்லை பிருமச்சாரி. "இப்பொழுது நீங்கள் நடத்திய பரீட்சை போதாதா?" என்று கேட்டார்.

"போதாது" என்று பாபுஜி சொன்னார்.

"'என்ன! உறங்கியிருந்தவன் கழுத்தில் ஈட்டியை ஊன்றினீர். அதிலிருந்து தப்பினான். அந்தக் கறுப்பு ராட்சதன் பற்களால் இவன் கழுத்தை கடிக்க முயன்றான். அதையும் சமாளித்தான். உங்களைப் போன்ற இரு ராட்சதர்களைச் சமாளித்தது போதாதா?" என்று எரிச்சலுடன் கேட்டார் பிருமச்சாரி.

"போதாது. ஈட்டியில் இருந்தும் கிருஷ்ணனிடம் இருந்தும் தப்பியது லாகவத்தைக் குறிக்கிறது. வீரத்தைக் குறிக்கவில்லை. இவனுக்குப் பரீட்சை வைத்துத்தானாக வேண்டும்" என்று கண்டிப்பாகச் சொன்னார் பாபுஜி.

அதுவரை வாளாயிருந்த ஜோடா "பாபுஜி! எந்தப் பரீட்சைக்கும் தயாராக இருக்கிறேன்" என்றான், அவர்கள் உரையாடலில் இடைபுகுந்து.

"அதைவிட நீ இங்கேயே பிராணனை விடலாம்" என்று எச்சரித்தார் பிருமச்சாரி.

"அப்படியென்ன அபாயப் பரீட்சை?" என்று வினவினான், ஜோடா.

"நூறு குழந்தைகளில் ஒரு முரட்டுக் குழந்தையுடன் உன்னை விளையாட விடுவார்" என்றார் சங்க்லா.

"அது எனக்கு மகிழ்ச்சிதான்" என்றான் ஜோடா.

"விஷயம் புரியாமல் உளறாதே. நூறும் நூறு எமன்" என்று சுட்டிக் காட்டினார் பிருமச்சாரி.

"அதனால் பாதகமில்லை" என்றான் ஜோடா.

அதற்குப் பிறகு மௌன விரதத்தைக் கடைப்பிடித்தார் பிருமச்சாரி. ஏதும் பேசாமல் தமது புரவியிருந்த இடத்துக்குப் போய் அதன்மீது தாவி ஏறினார்.

அவர் வழியை ஜோடாவும் பின்பற்ற, பாபுஜியும் "கிருஷ்ணா! வா! வீட்டுக்குப் போவோம்" என்று தமது கரிய புரவியை அசைத்து அதன்மீது ஏறிக்கொண்டார். மூவரும் சற்று தூரத்தில் இருந்த மலைக்காட்டை நோக்கிச் சென்றனர்.

வழியில் யாரும் பேசவில்லை. விடிய சிறிதுநேரம் இருக்கையில் மலைக்காட்டுக்குள் புகுந்த மூவரும் தொடர்ந்து பயணம் செய்தனர். மரங்கள் மிக அடர்த்தியாயிருந்தன. எங்கும் பறவைகளின் ஓசை ஒலித்தது. அதற்கும் மேலாக புயல்போல் பெரிய சத்தம் கேட்டது. மலைச்சரிவில் இருந்து "ஜோடா" என்ற பெரிய பயங்கர ஒலி மூவர் காதிலும் விழுந்தது. பாபுஜி மட்டும் பேசினார், "குழந்தைகள் நம்மை எதிர்கொள்ள வந்துவிட்டன" என்று.

இதைச் சொன்ன பாபுஜி பெரிதாக நகைத்தார். அந்த நகைப்பு மலையின் பல பகுதிகளில் தாக்கியதால் பெரிதாக எதிரொலி செய்து, ஜோடாவின் காதில் மிகப் பயங்கரமாக விழுந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த விபத்து நேர்ந்துவிட்டது. ஜோடா தனது புரவியிலிருந்து தூக்கி எறியப்பட்டான். பல கால்கள் அவனை மிதித்துத் துவைத்துவிட முயன்றன. ஜோடா ஒழிந்தான் என்றே நினைத்தார் பிருமச்சாரி.

22. பரீட்சை

பாபுஜியின் நூறு புரவிகள் ஏதோ பெரும் புயலைப் போல் மலைச்சரிவில் வந்ததாலும், அவை கண்ணிமைக்கும் நேரத்தில் தனது புரவியில் இருந்து தன்னை வீழ்த்தி விட்டதாலும் மலைப்பாறையில் புரண்ட ஜோடா வெகு துரிதமாகப் பாறையில் உருண்டான். தன்னைத் துவைக்க இருந்த நான்கு குளம்புகளுக்குமேல் கைக்கு அகப்பட்ட இரு கால்களைப் பிடித்து வளைத்துத் திருகித் தள்ளிவிட்டு எழுந்து கும்பலாகவும் ஏதோ ராணுவத்திற்காகப் பழக்கப்பட்டவை போல் வரிசை தவறாமலும் வந்த புரவித் தொடரில் இருந்த ஒரு புரவியின்மேல் தாவி உட்கார்ந்தும் விட்டான். அதன் வயிற்றைத் தனது இரு கால்களாலும் பக்கவாட்டில் உதைத்துக் கழுத்தை வளைத்துத் திருப்பி தன்னுடைய புரவிக்கு அருகில் வந்து அதன்மீது தாவி அதன் கடிவாளத்தைப் பிடித்து அதை சற்று நகர்த்தியும் நிறுத்திக் கொண்டான். அந்தச் சமயத்தில் பாபுஜி "ஹோ" என்று ஏதோ சத்தம் கொடுக்கவே அந்த ராட்சதப் புரவிகள் மந்திரத்தால் இயக்கப்பட்டவைபோல் சட்டென்று நின்றன. பாபுஜியைச் சுற்றிக்கொண்டு, அவர் கால்கள்மீது முகங்களால் உராய்ந்தன.

பாபுஜி அப்படி வந்த சில புரவிகளைத் தடவிக் கொடுத்தார் தமது கைகளால், அந்தப் புரவிகள் சிலவற்றை ஈட்டியால் முதுகில் தட்டினார். கடைசியாக ஈட்டியை உயரத் தூக்

"சலோ" என்று கூவினார். வந்த புரவிகள் வந்த முறையில் வரிசையாக, ஆனால் அடக்கமாக மலைச்சரிவில் ஏறிச் சென்றன. ஓரிரண்டு மட்டும் தலைகளைத் திருப்பி பாபுஜி வருகிறாரா இல்லையா என்று தங்கள் பெரிய கண்களை விழித்துக் கேள்வி கேட்டன.

பாபுஜி அந்த குதிரைகளையே வெறிபிடித்தவர் போல் பார்த்துக் கொண்டிருந்தார். நிலத்தில் உருண்டு மாள இருந்து மீண்டும் எழுந்த ஜோடாவைப்பற்றி அவர் எந்த அக்கறையும் காட்டவில்லை. பிருமச்சாரியைக்கூட கவனித்தார் இல்லை. கடைசியாகக் கவனித்தபோது சொன்னார். "பிருமச்சாரி! இனியும் நாம் போகாதிருந்தால் குழந்தைகள் பொறுக்க மாட்டார்கள். வாருங்கள் போவோம்" என்று கூறிவிட்டு, தமது கரிய புரவியை மலைச்சரிவில் ஏறவிட்டார். பிருமச்சாரி அவருக்கு ஏதும் பதில் சொல்லவில்லை. பாபுஜியின் போக்கிலும் அவருக்கு ஏதோ கசப்பு இருந்திருக்க வேண்டும். ஆகையால் மௌனமாகவே தமது புரவியை நடக்கவிட்டார். புரவியைத் தூண்டுமுன்பு ஜோடாவை ஒருமுறை கவனித்து உடன் வரும்படி தலையால் சைகை செய்தார். ஜோடா தனது புரவியைத் தட்டிவிட்டான்.

இரண்டரை நாழிகை நேரம் பயணம் செய்தபின்பு ஒரு சமவெளிக்கு வந்தார்கள். நான்கு மலைச்சரிவுகளுக்கு இடையில் இருந்த அந்த சமவெளியின் பசும்புல் தரை மிக ரமணியமாயிருந்தது. பல குடிசைகளும், மண் கட்டடங்களும்கூட அந்த வட்டத் தட்டில் தெரிந்தன. அவற்றின் கூரைமீது சுற்றிலும் மரங்கள் நானாவித வண்ண மலர்களை உதிர்த்திருந்தன. அந்த வீடுகளைத் தள்ளி சிறிது தூரத்தில் அவற்றுக்கு எல்லாம் நடுநாயகமாய் தனிவீடு ஒன்று பெரிதாகத் தெரிந்தது. அந்த வீட்டை அணுகியதும் அதன் முன்பு இறங்கிய பாபுஜி, பின்னால் வந்த இருவருக்கும் முகமன் கூற முற்பட்டு "இதுதான் இந்த ஏழையின் குடிசை, உள்ளே வர வேண்டும்" என்றார்.

பிருமச்சாரி இறங்கவில்லை. அந்த வீட்டைச் சுற்றிலும் நடந்தும், அடக்கமாக மேய்ந்தும் கொண்டிருந்த அந்த நூறு அசுரப் புரவிகள்மீது கண்களை ஓட்டினார். இந்தப் புரவிகளை இஷ்டப்படி நடத்த பாபுஜியிடம் என்ன மந்திரம் இருக்கும் என்று எண்ணிப் பார்த்தார். ஏதும் விளங்காததால் அதைப்பற்றிய சிந்தனையை விட்டு முடிவில் தமது புரவியில் இருந்து இறங்கினார். ஜோடாவும் இறங்கினான் தனது புரவியில் இருந்து. அதன் கடிவாளத்தை அதன் முதுகிலேயே போட்டுவிட்டு, பாபுஜியின் வீட்டு முகப்பில் இருந்த பெரிய திண்ணையில் உட்கார்ந்துகொண்டான்.

பிருமச்சாரி உட்காரவில்லை. பாபுஜியை நோக்கி "அடுத்து என்ன வித்தை காட்டப் போகிறீர்கள்?" என்று சற்று சூடாகக் கேட்டார்.

தமது கரிய புரவியில் இருந்து குதித்து உடனே உள்ளே செல்லாமல் கீழே உட்கார்ந்து அதன் கால்களை உருவிவிட்டுக் கொண்டிருந்த பாபுஜி, சற்றே தலையை நிமிர்த்தி "இதுவரை என்ன வித்தை காட்டிவிட்டேன்?" என்று கேட்டார்.

"இந்தப் புரவிகளை ஏதோ வித்தைக்குப் பழக்கியிருப்பதுபோல் பழக்கியிருப்பதைக் காட்டினீர். வேறு ஏதாவது உண்டா?" என்று வினவினார் பிருமச்சாரி. அவர் குரலில் வெறுப்பு இருந்தது.

பாபுஜி தமது புரவியின் கால்களை உருவிக்கொண்டே சொன்னார், "இங்கு யாரும் வித்தை காட்டவில்லை. நல்ல சாதிப் புரவிகள் மனிதனைப் புரிந்துகொள்கின்றன" என்று. "இவற்றைக் குழந்தைகளாக வளர்க்கிறேன். எனக்கு வேறு குழந்தைகள் இல்லை. மனிதக் குழந்தைகளாக இருந்தால் ஏற்படும் தொல்லை இவற்றால் இல்லை. அன்புக்குக் கட்டுப்படும். மண்ணாசை, பொன்னாசை கிடையாது. அவை இருப்பது எல்லைக் சொத்தில் பாசம் சேட்கமாட்டா.

காக்க, எனக்குச் சேவை செய்ய. எனக்கு மட்டுமல்ல, எனது நண்பர்களுக்கும் உதவும் நான் சொன்னால்" என்றும் தொடர்ந்து சொன்னார் பாபுஜி.

இப்படிப் பேசிக்கொண்டே கரிய புரவியின் கால்களை உருவிவிட்டு, முதுகையும் உருவி அதைத் தட்டி, "கிருஷ்ணா, போ" என்று சொல்ல, அந்தப் புரவி தாவிச் சென்று மற்ற புரவிகளுடன் கலந்துகொண்டது. மெள்ள மெள்ள அந்தக் காட்டில் பொழுதும் புலரத் தொடங்கியது. பிருமச்சாரி பாபுஜியைப் பார்த்து "நானும் ஜோடாவும் காலைக் கடனை முடித்து வருகிறோம்" என்று கூறிவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஜோடாவை அழைத்துக்கொண்டு சென்றார்.

பாபுஜியின் வீட்டில் இருந்து கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு மலை அருவிக்கு வந்ததும் பிருமச்சாரி, ராவ்ஜோடாவை நோக்கி "பாபுஜியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று வினவினார்.

"சாதி குதிரைகளைப் பழக்கி வைத்திருக்கிறார்" என்றான் ஜோடா.

"இந்தப் புரவிகளை ஒருமுறை பார்த்திருக்கிறேன். ஆனால், இன்று மாதிரி விந்தையைப் பார்த்ததில்லை. இவர் புரவிகளை நடத்தி வருகிறார் என்றால் ராஜபுதனத்தில் பலருக்குக் குலை நடுக்கம். போர்க்களத்தில் இவை மனிதர்களை விடத் திறமையாக இயங்கும் என்று கேள்வி" என்றார் பிருமச்சாரி.

"அப்படி இயங்குமானால் பாபுஜியின் புரவிப்படையை அழிப்பது பிரும்மப் பிரயத்தனம்" என்று ஒப்புக்கொண்ட ஜோடா, "இன்று ஏதோ எனக்குப் பரீட்சை வைக்கப் போவதாகச் சொன்னாரே, அது என்ன?" என்று கேட்டான்.

"நாம் நீராடிச் சென்றதும் அது தெரியும்" என்ற பிருமசாரி, தமக்குப் பின்னால் வந்து நின்ற தமது புரவியைக்

குளிப்பாட்டிவிட்டு நீராடினார். அருவியின் கீழ்ப்புறத்தில் சற்று தள்ளியிருந்த இடத்தில் தனது புரவியையும் குளிப்பாட்டிவிட்டுத் தானும் நீராடினான் ஜோடா.

இருவரும் திரும்பி வந்தபோது பாபுஜி வீட்டின் வெளியில் இருந்த சமதரையில் வேலும் வாளும் தாங்கிய நூறு வீரர்கள் ஒவ்வொரு புரவிக்கு அருகிலும் நின்று இருந்தார்கள். அந்த முரட்டுப் புரவிகள் எல்லாமே சேணமிட்டு நின்றன. வீட்டின் முகப்பில் நின்ற பாபுஜி "மேவார் சமஸ்தான வீரர்களே! இதோ போரில் இணையற்ற பிருமச்சாரி ஹர்பாசங்லா. இதோ ராவ்ஜோடா, மார்வார் வம்சத் தலைவன், மண்டோர் அரசன். இவர்களுக்கு நமது உதவியை அளிக்கப் போகிறோம். அதற்குமுன்பு மார்வார் மன்னன் நமது கிருஷ்ணன்மீது ஏறி அதைத் தமது பக்கம் சேர்த்துக்கொள்வார்" என்று கூறினார்.

வீரர்கள் கரகோஷம் செய்தார்கள் ஒருமுறை, ஏதோ சம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவர்கள்போல. பாபுஜி தமது பெரிய ஈட்டியுடன் வீட்டின் முகப்பில் அசையாமல் நின்றிருந்தார். அவருக்கு நேர் எதிரில் பத்தடி தள்ளி, தலை குனிந்த வண்ணம் நின்றிருந்தது 'கிருஷ்ணன்'. ராவ் ஜோடா பாபுஜியின் அறிவிப்பைக் கேட்டதும் பிருமச்சாரியை வணங்கிவிட்டு அந்தப் புரவியிடம் சென்றான். அசுவ லட்சணங்களை முற்றும் அறிந்திருந்த ஜோடா அந்தப் புரவியை வலம் வந்தான் ஒருமுறை. அதன் உடல் அமைப்பைக் கவனித்தான். பிறகு திரும்பி தனது கூரிய கண்களால் பாபுஜியை நோக்கினான். "பாபுஜி! நான் இந்தப் புரவிமீது ஏறுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை" என்றான்.

"என்ன?" என்று கேட்டார் பாபுஜி.

"இதை எனக்குக் கொடுத்துவிட வேண்டும்" என்றான் ஜோடா.

"அதைவிட என் ராஜ்ஜியத்தைக் கேள்" என்றார் பாபுஜி சினத்துடன்.

"எனக்கு வேண்டியது இந்தப் புரவி" என்று பிடிவாதமாகச் சொன்னான் ஜோடா.

"நீ வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகலாம்" என்றார் பாபுஜி உஷ்ணத்துடன்.

"நான் இந்த இடத்தைவிட்டு நகரும்போது இந்தப் புரவியின் மீதுதான் நகருவேன்" என்றான் ஜோடா.

இதைக் கேட்ட பாபுஜியின் கண்கள் தீயைக் கக்கின. "பிரும்மச்சாரி! உமது சீடனுக்கு ஏதும் மூளைக்கோளாறு இல்லையே?" என்று வினவினார்.

"இருப்பதாகத்தான் தெரிகிறது" என்றார் பிருமச்சாரி.

"பிருமச்சாரி!" என்று அழைத்தான், கிருஷ்ணன் பக்கத்தில் நின்ற ஜோடா.

"ஏன்?"

"எனக்கு மூளைக்கோளாறு இல்லை."

"நல்ல புத்தியுடன் இருந்தால் அந்தப் புரவியின்மீது ஏறத் துணியமாட்டாய்."

இதைக் கேட்டதும் ஜோடா நகைத்தான். "பிருமச்சாரி! நான் சித்தூரில் இருந்து ஓடியிருக்கலாம். மண்டோரில் இருந்து ஓடியிருக்கலாம். ஆனால், எந்தப் புரவியிடம் இருந்தும் ஓடியது இல்லை" என்று கூறிக்கொண்டே அந்தக் கரிய புரவியின் முகத்துக்கு எதிரே நின்றுகொண்டு அதன் கண்களை உற்று நோக்கினான். பிறகு, அதன் வாயை இறுக்கிப் பிடித்தான், ஒரு கையால். அந்த ராட்சதப் புரவி தலையை ஒருமுறை ஆட்டியது. பிறகு அவன் கையை உதறியது. வாயைத் திறந்து தனது பெரிய பற்களால் அவனைக் கடிக்க வந்தது. ஜோடா அதன் வாயை மீண்டும் பிடித்தான், இறுக்க. புரவி திணறியது, திமிறியது. ஆனால், ஜோடாவின் இரும்புப் பிடியை அகற்ற முடியவில்லை. தானாகவே அதன் வாயை விட்ட ஜோடா, பக்கவாட்டில் வந்து திடீரென அதன் முதுகின்மீது தாவி கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டான்.

அடுத்த விநாடி கரிய புரவி ஆகாசத்தில் எழுந்தது, உடலை உதறியது, கடுவேகத்துடன் கனைத்தது பயங்கரமாக. திடீரெனக் கீழே விழவும் முயன்றது ஒரு புறமாக. அதன் நோக்கத்தைப் புரிந்துகொண்ட ஜோடா, கடிவாளத்தை இறுகப் பிடித்துத் தனது கால்களை அதன் வயிற்றில் இறுக்கினான். பலமாக இறுக்கப்பட்ட கடிவாளத்தால் புரவியின் தலை நிமிர்ந்தது.

அடுத்து தொடர்ந்தது அந்தப் புரவியின் பேயாட்டம். திடீரெனக் குதித்தது, சுழன்றது. முன்னும் பின்னும் நகர்ந்தது. பாய்ந்தது பக்கவாட்டில். இப்படிப் பலபடியாக ஜோடாவைத் தள்ள முயன்றும் முடியாமல் தவித்தது.

ஜோடா அதன்மீது பதுமைபோல் உட்கார்ந்திருந்தான். அவன் கைகள் கடிவாளத்தை ஏதோ யந்திரங்கள்போல் இயக்கின. கால்கள் வயிற்றில் இருந்து விலாப்பக்கம் உதைத்தன. 'கிருஷ்ணன்' அந்த உதையினால் எதிரேயிருந்த மரங்கள் இடையே பாய்ந்து சென்றது.

அரை நாழிகை, புரவி—மனிதன் இருவரையும் காணோம்.

பாபுஜி வீட்டின் சதுக்கத்தின் எதிரில் பயங்கர அமைதி நிலவியிருந்தது. முதன் முதலாக பாபுஜியின் முகத்தில் பயத்தின் சாயை விரிந்தது. "அந்த வாலிபன் என்ன ஆகியிருப்பானோ?" என்று கேட்டார் பிருமச்சாரியை நோக்கி.

பிருமச்சாரி முகத்தில் கவலை லவலேசமில்லை. "சீக்கிரம் திரும்புவான். கவலை வேண்டாம்" என்று கூறினார் சர்வ

அவர் இதைச் சொல்வதற்கும் ராவ்ஜோடா அந்தக் கரிய புரவியின்மீது திரும்புவதற்கும் சமயம் சரியாயிருந்தது. புரவி வெகு அடக்கமாக வந்தது. ராவ்ஜோடா அரச தோரணையில் அதன்மீது அமர்ந்திருந்தான். பாபுஜிக்கும் பிரும்மச்சாரிக்கும் எதிரே வந்து இறங்கினான்.

பாபுஜி ஆறுதல் பெருமூச்சு விட்டார். "ராஜபுதனத்தின் இணையற்ற வீரனே! பரீட்சையில் தேறிவிட்டாய். இனி பாபுஜி உன் நண்பன். என்ன வேண்டும். கேள்" என்றார்.

ஜோடா எதும் கேட்கவில்லை. "அடுத்த பௌர்ணமி உங்களை இருநூறு வீரர்களுடன் மண்டோர் கோட்டை வாசலின் முன்பு எதிர்பார்க்கிறேன்" என்றார் பிருமச்சாரி.

"அப்படியே" என்று தலைவணங்கினார் பாபுஜி.

23. அடவியில் ஒரு காட்சி!

நீண்டநாள் பிரிந்த மகனை ஆர்வத்துடன் தழுவும் தந்தை போல ஜோடாவை பல விநாடி தழுவி நின்ற பாபுஜி, கடைசியில் அவனுக்குத் தமது கைகளில் இருந்து விடுதலை அளித்தபோது அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர்த் துளிகள் இரண்டு தேங்கியிருந்ததை பிருமச்சாரியும் பார்த்தார். ஜோடாவும் கண்டான். "மண்டோர் மன்னனே! இனி கிருஷ்ணன் உன்னைச் சேர்ந்தவன். அவனை அழைத்துப் போய் உன் சொந்த மகனைப்போல் காப்பாற்று" என்று கூறிய பாபுஜியின் சொற்கள் தழுதழுத்து வந்ததையும் இருவரும் கவனித்தார்கள்.

அப்பொழுது ஜோடா பாபுஜியைப் பார்த்துச் சொன்னான், "பாபுஜி! உங்களிடம் இருந்து கிருஷ்ணனைப் பிரிக்க நான் விரும்பவில்லை. அவனை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று.

இதைக் கேட்டதும் பாபுஜி சுயநிலை அடைந்து தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, "ராவ்ஜோடா! நீ கிருஷ்ணனை பரீட்சையின் பரிசாக வைத்துவிட்டேன். நீ பரீட்சையில் தேறியதால் கிருஷ்ணன் உன் சொத்தாகி விட்டான்" என்றார். அவர் குரலில் சாந்தம் தெரிந்தது. சிறிது கடுமையும் ஒலித்தது.

ஜோடா பதிலேதும் பேசாமல் கிருஷ்ணனிடம் சென்று அதன் கடிவாளத்தைப் பிடித்து பாபுஜியிடம் அழைத்து வந்து, பாபுஜியின் கைகளில் கொடுத்து, "பாபுஜி! ஜோடா தாயையும் குழந்தையையும் பிரிக்க விரும்பவில்லை" என்று கூறினான்.

பாபுஜியின் கண்கள் உயர்ந்தன, ஜோடாவின் முகத்தை நோக்கி, "கொடுத்துவிட்டதைத் திரும்பிப் பெறும் வழக்கம் பாபுஜியிடம் கிடையாது" என்றார்.

"எனக்கும் கிடையாது" என்றான் ஜோடா, புன்முறுவல் இதழ்களில் படர.

"நீ இப்பொழுது கொடுப்பது தானம்" என்று சுட்டிக் காட்டினார் பாபுஜி.

"இந்த மேவார் சிற்றரசு மார்வாரின் ஆட்சிக்கு உட்பட்டது. மார்வார் மன்னனான நான் கொடுக்கும் எதையும் நீங்கள் மறுக்க முடியாது" என்று பதிலுக்குச் சுட்டிக் காட்டினான் ஜோடா.

பாபுஜி பதிலேதும் பேசவில்லை. கிருஷ்ணனின் சேணத்தைக் கையில் இறுகப் பிடித்துக்கொண்டார். "நான் உன்னைக் கொடிய பரீட்சைக்கு இலக்காக்கிக் கொல்லப் பார்த்தேன். நீ என்னைக் கருணையால் கொல்லுகிறாய்" என்று கூறினார் பாபுஜி. அத்துடன் பிருமச்சாரியைத் திரும்பி நோக்கி "கிருஷ்ணனை நான் திரும்பப் பெறுவது நியாயத்துக்கும் தர்மத்துக்கும் ஒத்ததா?" என்று கேட்டார்.

"அந்தப் புரவியையும் உம்மையும் இணைத்துத்தான் ராஜபுதனம் பேசுகிறது. பாபுஜி என்ற பெயரைவிட கரிய புரவி வீரன் என்ற பெயர்தான் பிரசித்தம். அந்தப் புரவி மீது நீர் அமர்ந்து போர்க்களத்துக்கு வருவது அரசனுக்குப் பணிபுரிவதாகும். அதனால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நியாயத்துக்கும் பொருந்தும், தர்மத்துக்கும்

பொருந்தும், ஏன் நீர் நிறைவேற்ற ஒப்புக்கொண்ட கடமைக்கும் அது பொருந்தும்" என்று விவரித்தார் பிருமச்சாரி.

அதைக் கேட்டதும் பிருமச்சாரியை அணுகி அவர் கைகளை நன்றியுடன் பிடித்துக்கொண்டார் பாபுஜி. "நீங்கள் சொன்ன நேரத்தில் மண்டோர் முன்பு என் புரவிப் படையுடன் நிற்பேன். பிருமச்சாரி! மண்டோரில் ராவ்ஜோடா அரியணையில் உட்கார்ந்த பின்பு திரும்புகிறேன் என்றும் சொன்னார் உறுதி சுடர்விட்ட குரலில். அத்துடன் அவர் கைகளை வீசி, எதிரே நின்ற புரவி வீரர்கள் புரவிகளை செலுத்திக்கொண்டு செல்ல சைகை செய்யவே, எதிரில் இருந்த சதுக்கம் சில நிமிடத்தில் காலி ஆயிற்று. "வாருங்கள், நாம் உள்ளே செல்வோம்" என்று பாபுஜி பிருமச்சாரியையும் ஜோடாவையும் அழைத்துச் சென்றார். உள்ளேயிருந்த முற்றத் தாழ்வாரத்தில் மூவரும் அமர்ந்ததும் பாபுஜி மண்டோரைப் பற்றிய விவரங்களைக் கேட்கத் தொடங்கினார். "ஜோடா! மண்டோர் கோட்டையின் பலவீனமான பாகம் எது?" என்று வினவினார்.

"எதுவும் கிடையாது" என்றான் ஜோடா பெருமிதத்துடன்.

"நல்லது. பாபுஜி சொத்தைக் கோட்டையைப் பிடித்தான் என்ற அவதூறு கிடையாது" என்று மகிழ்ச்சியுடன் கூறினார் பாபுஜி.

"என் வீரர்களைத் தவிர, உன்னிடம் இருக்கும் படைபலம் எத்தனை?" என்று விசாரித்தார் பாபுஜி.

சிறிது தயங்கினான் பதில் சொல்வதற்கு. பிறகு மெதுவாகச் சொன்னான் "நூற்று இருபத்து ஐந்து புரவி வீரர்" என்று.

பாபுஜியின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன மேல் நோக்கி. "நூற்று இருபத்து ஐந்து போர்தானா?" என்று கேட்கவும் செய்தார், வியப்பு குரலிலும் ஒலிக்க.

"அவ்வளவு பேர்தான் என்னுடன் ஓடிவந்தார்கள்" என்று சொன்னான் ஜோடா.

மகிழ்ச்சியை முகத்தில் காட்டினார் பாபுஜி. "என்னிடம் தற்சமயம் நூறு வீரர்கள் கொண்ட புரவிப்படை இருக்கிறது. இதை இருநூறாகவும் செய்ய வசதி இருக்கிறது. ஆனால், மீதி நூறு புரவிகள் முழுவதும் பழக்கப்படவில்லை..." என்று ஏதோ சிந்தித்தார் பாபுஜி.

அதுவரை ஏதும் பேசாமல் இருவர் உரையாடலையும் கேட்ட ஹர்பாசங்க்லா எழுந்து நின்றார் ராட்சதன்போல. "பழக்கப்பட வேண்டிய புரவிகள் வேண்டாம். பழக்கப்பட்ட நூறு வீரர் படை போதும். ஜோடாவின் நூற்று இருபத்து ஐந்து பேரும் சாமானிய வீரர்கள் அல்ல. தவிர, அவர்கள் இப்பொழுது சிறந்த ஒருவரால் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இந்த இருநூற்று இருபத்து ஐந்து புரவி வீரர்களைக் கொண்டு மண்டோரை நாம் தாக்குவோம்" என்று சொன்னார்.

"பயிற்சி அளிப்பது யார்?" என்று கேட்டார் பாபுஜி.

"மலை அரசி" என்றார் பிருமச்சாரி.

"பெண்ணா!" என்று வாயைப் பிளந்தார் பாபுஜி.

"ஆம்"

"பெண்ணால்..."

"பயிற்சி அளிக்க முடியுமா என்று கேட்கிறீர்கள்?"

"ஆம்."

"நாம் மண்டோரைத் தாக்குமுன்பு ஒருநாள் என் இருப்பிடத்துக்கு வாரும். அப்பொழுது புரியும்."

இதைச் சொன்ன பிருமச்சாரி புன்முறுவல் கொண்டார். பாபுஜியின் முகத்தில் வியப்பும், ஏதோ வேட்கையும்கூட விரிந்தது. "இந்த விநோதத்தைப் பார்க்க வேண்டும் அவசியமாக. இப்பொழுதே உங்களுடன் வருகிறேன்" என்று கூறினார் பாபுஜி.

அன்று பகல், மூவருமே கிளம்பினார்கள் பிருமச்சாரியின் இருப்பிடத்தை நோக்கி. புறப்படுமுன்பு தமது வீரர்களில் ஒருவனை அழைத்து மற்ற வீரர்களைப் போருக்குத் தயார் செய்யுமாறு கூறிய பாபுஜி, பிருமச்சாரியையும் ஜோடாவையும் தொடர்ந்து சென்றார்.

அன்று பகல் முழுவதும் பயணம் செய்த மூவரும் அடிக்கடி மலைப்பகுதிகளால் மறைந்தும், இரவு தலைகாட்டிய சமயத்தில் பாலைவனத்தில் சஞ்சரித்தும் பயணம் செய்தார்கள். இடையிடையே பிருமச்சாரி மட்டும் அவர்களை விட்டுப் பிரிந்து பாலைவனத்தில் சிறிதுதூரம் பயணம் செய்து வந்தார்.

கடைசியாக பிருமச்சாரி வந்தபோது "சந்தசிம்மன் புதல்வர் இருவரும் மண்டோருக்குச் சென்றுவிட்டார்கள். இன்னும் ஒரு படைப்பிரிவும் சென்றிருக்கிறது" என்று அறிவித்தார்.

பிருமச்சாரி அடிக்கடி பிரிந்து பயணம் செய்த காரணத்தை முன்னதாக அறிந்திருந்த ஜோடா "அப்படியானால் மண்டோரின் தற்காப்பு பலப்படுத்தப்படுகிறது" என்றான்.

ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தார் பிருமச்சாரி. அதற்குப் பிறகு அவர் ஏதும் பேசவில்லை. தீவிர சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார். அதே சிந்தனையுடன் மௌனமாகவே பயணம் செய்த பிருமச்சாரி தமது இருப்பிடம் வந்ததும் பாபுஜியையும் ஜோடாவையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளே நுழைந்தபோதே "கிரிஜா! மலை அரசி" என்று அழைத்துக்கொண்டே நுழைந்தார். அவரது அழைப்புக்கு பதிலேதும் கிடைக்காது போகவே "யாரது?" என்று குரல்

கொடுத்தார். வெளியில் இருந்த வீரன் ஒருவன் ஓடிவரவே "மலை அரசி எங்கே?" என்று அவனை நோக்கிக் கேட்டார்.

"காட்டுக்குள் போயிருக்கிறார்கள்" என்றான் வீரன்.

"இந்த இரவிலா?" ஜோடா கவலையுடன் வினவினான்.

"முன்பே போய்விட்டார்கள். வரும் சமயமாகிவிட்டது" என்றான் வீரன்.

அவன் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெளியே ஒரு புரவி துள்ளும் ஒலி கேட்கவே மூவரும் வெளியே ஓடினார்கள். மூவரில் முன்னே ஓடிய ஜோடா அங்கு கண்ட காட்சியால் அதிர்ச்சி அடைந்தான். "மலை அரசி! இறங்கிவிடு. அந்தப் புரவி உன்னைக் கொன்றுவிடும்" என்று கூவினான். பின்னால் வந்த இருவரில் பிருமச்சாரி திகைத்து நின்றார். பாபுஜி "கிருஷ்ணா! நில்! அசையாதே!" என்று கடுமையுடன் உத்தரவிட்டார்.

அவர் குரலைக் கேட்டதும் புரவி சிறிது நின்றது. ஆனால், மலை அரசி அதை நிற்க விடவில்லை. பெரிதாக நகைத்து தனது கால்களால் அதன் வயிற்றில் உதைக்கவே புரவி பயங்கரமாக ஒருமுறை சுழன்றது. விரைந்தது, புயல்போல் காட்டுக்குள்ளே. மலை அரசி என்ன ஆனாளோ என்ற பயத்தில் புரவி சென்ற திக்கில் ஜோடா வெகு வேகமாக ஓடினான்.

பிருமச்சாரி மிகுந்த உஷ்ணத்துடன் பாபுஜியைப் பார்த்தார். "என்னிடம் கோபித்துப் பயனில்லை. நான் நிறுத்திய புரவியை ஏவிவிட்டாள் அந்த முரட்டுப் பெண்" என்றார் பாபுஜி. அவர் குரலிலும் மிதமிஞ்சிய திகைப்பு இருந்தது.

அவர்கள் இருவரில் பிருமச்சாரி ஒரு முக்கிய விஷயத்தை மறந்துவிட்டார். ஆகவே நெடுநேரம் மலை அரசியோ ஜோடாவோ திரும்பாததில் இருந்து ஏதோ பெரிய விபரீதம் நேர்ந்துவிட்டது என்று பிருமச்சாரி தீர்மானித்துவிட்டார். அவர் தீர்மானத்துக்கு அத்தாட்சி காட்டுவதுபோல கிருஷ்ணன் மட்டும் காட்டுக்குள் இருந்து திரும்பி வந்தது. ஜோடா, மலை அரசி இருவருமே காணவில்லை.

வந்த அந்த கரிய புரவியும் சற்று நின்றது. பிறகு காதுகளை உயரத் தூக்கி எதையோ கேட்டது. மீண்டும் திரும்பி வேகமாக காட்டுக்குள் அம்புபோல் பாய்ந்து சென்றது. அதன் சைகை பிருமச்சாரி, பாபுஜி இருவருக்கும் புரிந்ததால் இருவரும் புரவி சென்ற திக்கில் சென்றனர்.

காட்டுக்குள் சிறிது தூரத்தில் புரவி தனித்து நின்றது. அதை அடுத்துத் தெரிந்த காட்சி பிருமச்சாரியை அசர வைத்தது. பாபுஜிக்கு ஏதும் புரியவில்லை.

24. காதல் பாபமா?

அடர்ந்த அந்த அடவிக்குள் நாலைந்து பங்கஜங்களை ர்மட்டத்துக்குமேல் காட்டிக்கொண்டிருந்த சிறு வாவியின் ரையில் மலை அரசியும் ஜோடாவும் உட்கார்ந்திருந்த லையைக் கண்டதும் இரண்டு பிருமச்சாரிகளும் தங்கள் ிருமச்சாரியத்துக்கு பெரும் ஆபத்து நேர்ந்துவிட்டதை னைத்து ஒருவரை ஒருவர் திகிலுடன் பார்த்துக் காண்டார்கள்.

வாவிக் கரையில் உட்கார்ந்திருந்த இருவரும் பரஸ்பர ணைப்பில் இருந்தார்கள்.

அந்த நிலையிலும் ஜோடா மட்டும் தனது தலையை சிறிது லக்கி, மலை அரசியின் மலர் வதனத்தையும் செங்கமல ன்னங்களையும் சங்குக் கழுத்தையும் தனது உதடுகளால் ரும்பத் திரும்பத் தடவினான். தனது நாசியால் அவள் மல முகத்தை முகரவும் செய்தான். அவள் கன்னம், கழுத்து, வற்றின் சுகந்தத்தை அனுபவித்த ஜோடா, "மலை அரசி!" ன்று மெதுவாக அழைத்தான்.

"என்ன!" என்று அவள் மிக இரகசியமாக வினவினாள்.

"பெண்களின் உடலில் இத்தனை நறுமணம் இருக்கும் என்று இத்தனை நாள் வரை எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு அவள் கழுத்தில், முகம் புராவையும் புதைத்துக்கொண்டு, இடையை இறுக்கிய இடக்கையால் அதற்குமேல் எதையோ தேடினான்.

மலை அரசியின் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. "உம்!" என்று அதட்டினாள்.

"என்ன மலை அரசி!" கழுத்தில் இருந்த உதடுகள் திறந்து சொற்களை உதிர்த்ததால் அவள் இன்ப இம்சை அதிக மாயிற்று.

"உங்கள் கை......" என்று தடுமாறினாள் மலை அரசி.

"அதற்கென்ன?"

"என்ன தேடுகிறது?"

"எனக்குத் தெரியாது."

"உங்கள் கைதானே அது?"

"எது என் கை, என்ன செய்கிறது என்று எனக்கே தெரியவில்லை."

இதைக் கேட்ட மலை அரசி அவன் முகத்தில் தன் கழுத்தை நன்றாக அழுத்தி "தெரியாது, தெரியாது. எப்படித் தெரியும்?" என்று முனகினாள்.

அந்த முனகல் அவனுக்குச் சங்கீதமாயிருந்தது. அவன் எதுவுமே பேசவில்லை. தலையை கழுத்திலிருந்து அகற்றி அவள் கண்களைச் சந்திக்க முயன்றான். அந்தக் கண்கள் திறக்கவில்லை. அந்தி வேளை பங்கஜங்கள் போல் மூடிக் கிடந்தன. முகம் பூராவிலும் ஏதோ ஒரு சாந்தியும் வேட்கையும் கலந்த சாயை படர்ந்து கிடந்தது. ஜோடா அவளை நன்றாகத் தன்னை நோக்கித் திருப்பி அவள் கழுத்துக்குச் சிறிது கீழே

முகத்தை வேகமாகப் பதித்தான். அவள் உடல் நடுங்கியது. ஆனால், அவள் சுவர்ச்சிப் பிரதேசங்களின் உச்சி அவன் முகத்தை நோக்கி அழுந்தவே செய்தது.

அந்த அழுத்தம் அவனுக்குத் துணிவை அளித்திருக்க வேண்டும். ஜோடாவின் வலது கை ஆராய்ச்சியில் இறங்கியது. அவன் இடது கைவிரல்களும் வலது கைவிரல்களும் இணைந்து அவளை இறுக்கிச் சிறை செய்தன. சிறையிலும் இன்பம் உண்டு என்பதை மலை அரசி புரிந்துகொண்டாள்.

அன்றுவரை அவளுக்கு இருந்த திடசித்தம் எங்கோ பறந்து பலவீனத்துக்கு இடம் கொடுத்தது. ஜோடாவின் கையில் தான் ஈரக்களிமண் என்பதை அவள் உணர்ந்தாள். அவன் தன்னை எப்படி வேண்டுமானாலும் உருட்டலாம் துவைக்கலாம் என்பது அவளுக்கு சந்தேகமறத் தெரிந்தது. அவன் கைகளை அவள் வேகமாக ஒதுக்கினாள். தலையைக்கூட தனது மார்பகத்தைவிட்டுப் பலவந்தமாகப் பிடித்துத் தள்ளினாள். பிறகு தரையில் மெல்ல மல்லாந்து படுத்தாள். வாவிக்கரையில் தழைத்துக் கிடந்த ஒரு முல்லைக் கொடியின் மலர்கள் அவள் மீது விழுந்தன.

ஜோடா அவளை நோக்கிக் குனிந்தான். அவள்மீது கிடந்த முல்லை மலர்களைப் பொறுக்கி முகர்ந்தான். "மலை அரசி! இந்த மலர்கள் உன்மீது விழுந்ததால் அதிகமாக நறுமணத்தைக் கொடுக்கின்றன" என்றான்.

அவள் பதில் கூறவில்லை. கண்களையும் திறக்கவில்லை. ஜோடா அவள் கன்னங்களை வருடினான். அவளை லேசாக ஒருக்களிக்கும்படிப் புரட்டினான். இடைக்குக் கீழிருந்த திண்ணிய எழுச்சியில் இடதுகையை ஊன்றி, வலதுகையை அவள் உடலுக்குக் குறுக்கே போட்டு அவளை நோக்கிக் குனிந்து "மலை அரசி!" என்று அவள் காதுக்கருகில் மெதுவாக அழைத்தான்.

"உம்" என்று உம் கொட்டினாள் மலை அரசி.

"நீ படுத்திருக்கிற நிலை..." என்றான் ஜோடா.

"அதற்கென்ன?"

"சகுந்தலைமாதிரி இருக்கிறது."

"நீங்கள்தான் சகுந்தலை ஆக்கினீர்கள்."

"நானா?"

"ஆம். என்னைப் புரட்டி ஒருக்களிக்க வைத்திருக்கிறீர்கள்."

ஜோடா புன்முறுவல் கொண்டான். "நாடகத்தை மாற்றுகிறாய் மலை அரசி. துஷ்யந்தன் திருப்பவில்லை சகுந்தலையை. அவளே திரும்பிப் படுத்திருந்தாள், தாமரை இலையில் ஓலை தீட்ட. அந்தச் சந்தர்ப்பமே வேறு" என்று காளிதாசன் நாடகத்தை அவிழ்த்தான் ஜோடா.

"இருக்கலாம்" என்று மலை அரசி நகைத்தாள். முகத்தை லேசாகத் திருப்பி அவனைப் பார்த்தாள்.

அவள் உதடுகளின் ஈரம், அந்த உதடுகளை நீரோட்டமுள்ள சிவப்பு கற்கள்போல் அடித்திருந்தன. அவள் திரும்பித் தரையில் படுத்திருந்ததால் ஒரு கன்னத்தில் ஒரு சிறு கல் லேசாகப் பதிந்து அந்த இடத்தை மட்டும் சிவக்க அடித்திருந்தது. அதைக் கண்ட ஜோடா பதறினான்.

"மலை அரசி! இது என்ன?" என்று அந்த இடத்தைத் தொட்டான்.

"ஒன்றுமில்லை, சிறு கல் குத்தியது" என்றாள் மலை அரசி.

"வேறு எங்காவது குத்தியிருக்கிறதா, பார்க்கட்டுமா?" என்று அவள் விலாப்புறத்திலும் கீழேயும் வலது கையால் தடவினான்.

"எங்கும் எதுவும் குத்தவில்லை. சும்மா இருங்கள். உங்கள் திருட்டுத்தனம் எனக்குத் தெரியும்" என்ற மலை அரசி சற்று திரும்பி சட்டென்று எழுந்திருக்க முயன்றாள்.

அவளை எழுந்திருக்க விடாமல் பிடித்துப் படுக்க வைத்த ஜோடா "என்ன அவசரம் இதற்குள் மலை அரசி?" என்று கேட்டான்.

"உங்களுக்கு என்ன அவசரம் இதற்குள்?" என்று மலை அரசி கேட்டாள்.

"எதைக் கேட்கிறாய்?"

"உங்கள் மனதைக் கேளுங்கள் தெரியும்"

மனதைக் கேட்க அவசியமே இல்லை ஜோடாவுக்கு. இருவருக்குமே தங்கள் நிலைகளின் காரணம் தெரிந்திருந்தது. அப்பொழுது திடீரென ஒரு சந்தேகம் வரவே ஜோடா அவளைக் கேட்டான், "மலை அரசி, எனக்கு ஒரு சந்தேகம்" என்று.

"என்ன சந்தேகம்?" என்று கேட்டாள் அவள்.

"இத்தனை நாள் நீ என்னை ஜோடா என்று பெயர் சொல்லி அழைத்தாய். நீ, போ என்று ஏக வசனத்தில் கூப்பிட்டுக் கொண்டிருந்தாய்" என்று அவன் சொன்னான்.

"ஆமாம்" என்றாள் அவள், இதழ்களில் முறுவல் கொட்டி

"இப்பொழுது நீங்கள், போங்கள், என்று மரியாதையில் திரும்பிவிட்டாயே."

"அதை கவனிக்கவில்லை நான்."

"ஒன்று சொன்னால் கேட்பாயா மலை அரசி?"

"சொல்லுங்கள்."

"இனிமேல் பழையபடி அழைக்கவேண்டும்."

"முடியாது."

"ஏன் முடியாது?"

"நாலுபேர் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"இதற்கு முன்பு என்ன நினைத்தார்கள்?"

மலை அரசி நகைத்தாள், "அப்பொழுது நிலை வேறு" என்றாள்.

"எந்த நிலை?"

"நமது பரஸ்பர உறவு."

"இப்பொழுது மாறிவிட்டதா என்ன?"

"மாறாமலா இத்தனை நேரம்..." மலை அரசி சொற்களை முடிக்கவில்லை. ஜோடா எழுந்தான் உட்கார்ந்த நிலைவிட்டு. அவளை அப்படியே இரு கைகளாலும் தூக்கினான்.

மலை அரசிக்கு பழைய முரட்டுத்தனம், இயற்கைக் குணம் எங்கிருந்தோ திரும்பிவிட்டது. "ஜோடா! விடு என்னை" என்று கூவினாள்.

"விடாவிட்டால் என்ன செய்வாயாம்?" என்று கேட்டான் ஜோடா.

"கத்துவேன்" என்றாள் மலை அரசி.

"கத்து" என்றான் ஜோடா.

"கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று கூவினாள் மலை அரசி.

"நான் என்ன துச்சாதனனா? நீ என்ன திரௌபதியா? எந்த கிருஷ்ணனும் இங்கு வரமாட்டான்" என்று கூறிக்கொண்டே நடக்க முயன்றான் ஜோடா.

அடுத்த விநாடி அவன் அதிர்ச்சியடைந்து நின்றான். கிருஷ்ணன் தன் பெரிய பற்களைக் காட்டிக்கொண்டு சற்று எட்ட நின்றிருந்தது. பெரிதாக ஒரு கனைப்பு கனைத்துக்

கொண்டு கால்களை நிலத்தில் கீறிவிட்டு அவனை நோக்கி சீற்றத்துடன் நடந்து வந்தது. அருகில் வந்ததும் அவன் முகத்தை நோக்கி வாயை உயர்த்தியது. அடுத்த விநாடி ஜோடாவின் முகச்சதைகள் பிய்ந்து இருக்கும். மலை அரசி இடைபுகுந்து "வேண்டாம் கிருஷ்ணா! அவரை ஒன்றும் செய்யாதே" என்று சுதறினாள்.

கிருஷ்ணன் திறந்த வாயை மூடாது முகத்தை மலை அரசியின் முகத்தை நோக்கித் திருப்பி அதை முகர்ந்தது செல்லமாக.

"ஜோடா! பார்த்தாயா?" என்று கேட்டாள் மலை அரசி.

"மிருகம் உன் முகத்தை முகர்கிறது" என்று அலுத்துக் கொண்டான் ஜோடா.

"நீயுந்தான் சற்றுமுன் முகர்ந்தாய். நீயும் மிருகந்தானே!" என்று மலை அரசி மதுரமாக நகைத்தாள்.

அவளைக் கோபத்தால் கீழே போட்டான் ஜோடா. அவள் கால்களை ஊன்றி நின்றாள். "கிருஷ்ணா, வா!" என்று அழைத்து அந்தக் கரிய புரவியின்மீது ஏறிக்கொண்டாள்.

அதை அவள் நகர்த்த முற்பட்ட சமயத்தில் இரு பிருமச்சாரிகளும் மறைவிடத்தில் இருந்து வெளியில் வந்தார்கள். அவர்களை நோக்கிப் புன்முறுவல் செய்தாள் மலை அரசி.

"மன்னிக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே ஜோடா அவர்களை நோக்கி வந்தான்.

"ஜோடா!" என்று கடிந்த குரலில் அழைத்தார் ஹர்பா சங்க்லா.

"மலை அரசி!" என்று அதைவிடக் கடுமையான குரலில் அழைத்தார் பாபுஜி.

"ஏன் பாபுஜி?" மலை அரசியின் குரல் மதுரமாக இருந்தது.

"இங்கு நடந்ததை எல்லாம் பார்த்தோம்" என்று சீறினார் பாபுஜி.

"ஜோடா! உன் நிலையை நீ புரிந்துகொள்ளவில்லை," என்று கண்டித்தார் பிருமசாரி.

"நான் எந்தத் தவறும் செய்யவில்லையே!" என்று மன்றாடினான் ஜோடா.

"மீண்டும் பாவத்தைத் தேடிக்கொண்டாய். மலை அரசியை சுல்கமாக வைத்திருக்கிறார் ஜோகி. சாம்ராஜ்ஜியத்தை நிறுவுபவனைத் தவிர அவளை வேறு யாரும் தொட முடியாது" என்று சுட்டிக் காட்டினார் சங்க்லா.

"நான்தான் சாம்ராஜ்ஜியத்தை நிறுவப் போகிறேனே!" என்றான் ஜோடா.

"அதற்கு முன்பு மலை அரசியை ஏன் தொட்டாய்?" என்று சீறினார் பிருமச்சாரி.

"அவள் ஏன் உடன்பட்டாள்?" என்று கேட்டார் பாபுஜி.

மலை அரசி தலையைக் கவிழ்த்துக்கொண்டு நகைத்தாள். "பிருமச்சாரிகள் இருவரையும் இங்கு யார் வரச்சொன்னது?" என்று சொல்லிவிட்டு புரவியைப் பறக்கவிட்டாள் மலை அரசி.

இரண்டு பிருமச்சாரிகளுக்கு இடையில் ஜோடா அகப்பட்டுக் கொண்டான். "கிருஷ்ணன் அவள் சொல்படி கேட்கிறதே!" என்று வியந்தார் பாபுஜி.

"கிருஷ்ணன் என்ன, எந்த கோவிந்தனும் அவள் சொல்படி கேட்கும். மிருகங்களிடமும் பட்சிகளிடமும் அவளுக்கு அசாத்திய பிடிப்பு. இதை நான் மறந்துவிட்டேன்" என்றார் சங்க்லா.

"இதை என் முன்பே சொல்லவில்லை?" என்று பாபுஜி கேட்டார்.

"சொல்லியிருந்தால் என்ன செய்துவிடுவீராம்?" என்று சங்க்லா வினவினார்.

"இங்கு வந்தே இருக்க வேண்டாமே!" என்றார் பாபுஜி.

இதைக் கேட்ட ஜோடா பெரிதாக நகைத்தான். அவ்விருவரும் அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டார்கள் பலமாக. "வா! இந்தப் பாவத்துக்கு பரிகாரம் செய்ய வேண்டும்" என்றார் சங்க்லா.

"காதலிப்பது பாவமா?" என்று கேட்டான் ஜோடா உஷ்ணத்துடன்.

"தகாத சமயத்தில் பாவந்தான்" என்றார் பிருமச்சாரி.

"உண்மை" என்றார் பாபுஜி.

ஜோடாவின் பொறுமை எல்லை கடந்தது. "காதலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான் மிகுந்த உஷ்ணத்துடன்.

இரண்டு பிருமச்சாரிகளும் பரஸ்பரம் பார்த்து விழித்துக் கொண்டார்கள்.

25. ஜோடாவின் துணிவு!

பாபுஜியும், பிருமச்சாரியும் விழிப்பதைப் பார்த்த ஜோடா, "உங்கள் இருவருக்கும் வரவர சுயநம்பிக்கை போய்விட்டது" என்று ஓர் அம்பை வீசினான்.

அதுவரை தாங்கள் கண்ட காட்சியால் குழப்பத்தில் இருந்த இரு பிருமச்சாரிகளும் ஜோடாவை சீற்றத்துடன் நோக்கினார்கள். "யார் சொன்னது?" என்று கேட்டார் ஹர்பா சங்க்லா.

"எந்த முட்டாள் சொன்னான்?" என்று வினவினார் பாபுஜி.

"இந்த முட்டாள்தான்" என்று தன்னைச் சுட்டிக்காட்டி மார்பில் தனது வலது கை நடுவிரலை ஊன்றினான் ஜோடா.

இதைக் கேட்ட பாபுஜியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. "எதைக்கொண்டு எங்கள் சுயநம்பிக்கையை எடை போட்டாய்?" என்று கேட்டார் குரலில் கோபச்சாயை துலங்க.

ஹர்பாசங்க்லா கேள்வி ஏதும் கேட்கவில்லை. அவர் பார்வையிலேயே கேள்வி தொக்கி நின்றது. அவர் உஷ்ணப்பார்வை கலந்த கேள்விக்கோ, வெளிப்படையாக சீறிய பாபுஜியின் வினாவுக்கோ சிறிதும் அஞ்சாத ஜோடா "நான் சாம்ராஜ்ஜியத்தை ராஜபுதனத்தில் அமைப்பதைப் பற்றி சந்தேகம் தெரிவித்தீர்கள்" என்று சுட்டிக் காட்டினான்.

"ஆம்." ஏக காலத்தில் வந்தது மற்ற இருவர் பதிலும்.

ஜோடா சிறிது சிந்தித்துவிட்டு மெள்ள சொன்னான். "நீங்கள் இருவரும் ராஜபுதனத்தின் மகாவீரர்கள்" என்று.

ஜோடாவின் புகழ்ச்சி இருவருக்குமே பிடிக்கவில்லை. "நாங்கள் சொன்னோமா அப்படி உன்னிடம்?" என்று கேட்டார் ஹர்பாசங்க்லா.

"நீங்கள் சொல்லவில்லை, ராஜபுதனம் சொல்கிறது. இல்லாவிட்டால் வனப்பிரஸ்த ஜோகி உங்களிடம் என்னை அனுப்பியிருக்கமாட்டார். கரிய புரவி வீரரைப்பற்றி எங்கும் பேச்சு அடிபடுகிறது" என்று விளக்கினான் ராவ்ஜோடா.

"அதற்கும் உனது துர்நடத்தைக்கும் என்ன சம்பந்தம்?" என்று சீறினார் பாபுஜி.

"எது துர்நடத்தை?" ஜோடா கேட்டான், குழப்பம் இல்லாத குரலில்.

"கிரிஜாவைத் தொட்டது. தவிர..." இழுத்தார் சங்க்லா.

"ஜோடா புன்முறுவல் கொண்டான். "உங்களுக்குத் தெரியாதது அல்ல பிருமச்சாரி. க்ஷத்திரிய தர்மம் எங்கள் காதலை அனுமதிக்கிறது. திருமணத்தைக்கூட அனுமதிக்கிறது" என்று கூறினான் ஜோடா.

சங்க்லாவின் முகத்தில் மறுபடியும் கோபத்தின் சாயை விரிந்தது. "அது சாதாரண நியாயம். கிரிஜா சுல்கத்தால் கட்டுப்பட்டவள். சாம்ராஜ்ஜியத்தை சிருஷ்டிக்காமல் அவளை நீ அடைய முடியாது" என்றார் குரலில் சினம் துளிர்க்க.

"சாம்ராஜ்ஜியத்தைத்தான் ஸ்தாபிக்கப் போகிறேனே."

"எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறாய்?"

"ராஜபுதனத்தின் இரண்டு மகாவீரர்களின் துணை இருக்கும்போது அதில் சந்தேகம் எதற்கு? உங்களுக்கு சுயநம்பிக்கை இருந்தால் இந்த ஆட்சேபணையைக் கிளப்பியே இருக்கவேண்டாம். அடக்கத்தினால் உங்கள் இருவர் பலமும் உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் இருவரும் அனுமார் மாதிரி. பிறர் சொல்லித்தான் உங்கள் பலம் தெரியும்."

"அப்படியானால் நீ ஜாம்பவானா, எங்கள் பலத்தை எடுத்துரைக்க?"

"அத்தனை வயதாகவில்லை. இருந்தாலும் காரியக் கிரமத்துக்கு அப்படி வைத்துக்கொள்ளலாம்" என்ற ராவ் ஜோடா "பிருமச்சாரி! பாபுஜி! இன்றிலிருந்து இன்னும் ஒரு மாதத்திற்குள் நாம் மண்டோரைப் பிடிக்கிறோம், சந்தேகம் வேண்டாம்" என்று வேகத்துடன் கூறிவிட்டு விடுவிடு என்று பிருமசாரியின் விடுதியை நோக்கி நடந்தான். மற்ற இருவரும் அவனைப் பின்பற்றிச் சென்றார்கள்.

விடுதியின் வாசலிலேயே மலை அரசி நின்றிருந்தாள் மந்தகாச வதனத்துடன்.

"வாருங்கள். உணவு தயாராயிருக்கிறது" என்று மூவரையும் முகமன் கூறி அழைத்தாள். மூவருக்கும் அவளே உணவும் பரிமாறினாள். மூவரும் பேசாமல் மௌனமாகவே உணவருந்தி முடித்தார்கள். பிறகு, மலை அரசியையும் அழைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த போர்ப் பயிற்சி அரங்கத்திற்குச் சென்றார்கள். அங்கு முற்றத்துத் தாழ்வரையில் அமர்ந்ததும் ஹர்பாசங்க்லா பேச்சை நேர்முகமாகத் துவக்கி "நடந்ததை மறந்துவிடுவோம். நடக்கப் போவதைக் கவனிப்போம்" என்றார்.

அவர் நடந்தது என்று எதைக் குறிப்பிடுகிறார் என்பதை மலை அரசியும் ஜோடாவும் உணர்ந்துகொண்டதால் இருவர் கண்களும் ஒரு விநாடி சந்தித்துப் பிரிந்தன.

அதைக் கவனித்தும் கவனிக்காததுபோல் பேச்சைத் துவங்கிய பிருமச்சாரி "மேவார் சம்பவங்கள் நடந்து மாதங்கள் ஓடிவிட்டன. சந்தசிம்மன் மண்டோர் கோட்டையை நன்றாகப்

பலப்படுத்திவிட்டான். அதிசப்படி படைகளை வரவழைத்து அந்தக் கோட்டையை தனது மைந்தர் இருவரிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். இன்னும் ஒரு மாதத்திற்குள் நாம் அதைத் தாக்க வேண்டும். அவர்கள் மண்டோரை திடப்படுத்த மேலும் அவகாசம் கொடுத்து அவர்கள் காலை ஊன்றிவிட்டால் அந்தக் கோட்டையைப் பிடிப்பது சுலபம் அல்ல" என்று விளக்கினார். தாம் சொல்வது மற்றவர் மனதில் இறங்கட்டும் என்பதற்காக சில விநாடிகள் மௌனம் சாதித்தார்.

"இன்னும் ஒரு மாதத்தில் தாக்கலாம்" என்றான் ஜோடா மெதுவாக.

ஹர்பாசங்லா அவன்மீது கண்களை நிலைக்கவிட்டார். "எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறாய்?" என்று வினவினார்.

"இங்கு தங்களிடம் பயிற்சி பெறும் வீரர்கள் இருநூறு பேருக்குமேல் இருக்கிறார்கள்..." என்றான்.

"ஆம்." பிருமச்சாரியின் குரலில் உணர்ச்சி ஏதுமில்லை.

"நாம் இங்கில்லாதபோது மலை அரசி அவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறாள்."

"அதனால்?"

"மிருகங்களையே அவள் பழக்கும்போது வீரர்களைப் பழக்குவது கஷ்டமா?"

இந்தக் கேள்வியைக் கேட்ட பாபுஜி கோபநகை நகைத்தார். "மிருகங்களைப் பழக்குவதும் மனிதர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிப்பதும் ஒன்றா?" என்று வினவினார் குரலில் கோபம் தொனிக்க.

ஜோடா அவரைப் பார்த்து, "பிந்தியது சுலபம்" என்றான். அத்துடன் மேலும் சொன்னான்: "மலை அரசியே வாள்

எடுத்துப் போரிடுவாள். ஆனால் நான் அதை அனுமதிக்க மாட்டேன். மண்டோரை வெல்ல மூன்று சக்திகள் இருக்கின்றன. ஒன்று, உங்கள் புரவிப்படை; இரண்டு, எனது புரவி வீரர்களும், பிருமச்சாரியால் பயிற்சி பெற்ற வீரர்களும்; மூன்றாவது, முந்தைய இரண்டையும்விட பலமானது..." இந்த இடத்தில் சிறிது நிறுத்தினான்.

பிருமச்சாரி முகத்தில் குழப்பம் தெரிந்தது. "அந்த மூன்றாவது என்ன?" என்று கேட்டார்.

ஜோடாவின் முகத்தில் பெருமிதம் படர்ந்தது. "மார்வார் மக்கள் சுயமரியாதை உள்ளவர்கள். ராஜபக்தி உள்ளவர்கள். இன்னொரு அரசு தங்களை ஆள விடமாட்டார்கள். இந்த ஜன சக்தி இப்பொழுது பொங்கிக்கொண்டிருக்கும். நாம் கோட்டை முன்பு தோன்றும்போதே உள்ளே கிளர்ச்சி ஏற்படும்" என்று திட்டமாகக் கூறினான்.

பாபுஜி ஜோடாவை நோக்கினார் வெறுப்புடன். "அந்த ராஜ பக்தி, ஜனசக்தி இத்தனை நாள் தூங்கிக் கொண்டிருந்ததா?" என்று வினவினார் வெறுப்பு சந்தேகமின்றி ஒலித்த குரலில்.

"தூங்கவில்லை. மக்கள் தூங்களாக இயங்குவதற்கு நாள் பிடிக்கும். தவிர, உள்ளே புதிதாக வருபவன் அநீதியும் அதிகப்பட வேண்டும். ஆக்கிரமித்த படையில் யாராவது ஒருவன் மக்களைக் கொடுமைப்படுத்தினால் போதும், அந்த ஒரு பொறி, தீயாகப் பிடிக்கும்" என்ற ஜோடா "அங்கு நிலைமை தற்சமயம் என்ன என்பதை அறிய வேண்டும்" என்றான்.

"எப்படி அறிவது?" என்று கேட்டாள் மலை அரசி.

"மார்க்கம் இருக்கிறது" என்ற ஜோடா "இன்னும் ஒரே வாரத்தில் நிலைமையை அறிந்து வருகிறேன்" என்றான்.

மலை அரசியின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "நீங்களா?" அதிர்ச்சியுடன் கேட்கவும் செய்தாள்.

"ஆம்."

"எப்படி?"

"ஊருக்குள் போய்."

"எப்படிப் போக முடியும்?"

"இப்பொழுது அங்கிருப்பவர்களுக்குத் தெரியாத வழி எனக்குத் தெரியும்."

இதைக் கேட்ட மூவரும் அவன் திட்டத்தை எதிர்த்தார்கள். "நீ அங்கு வெட்டப்பட்டால் இத்தனை நாள் ஏற்பாடும் குலைந்துவிடும்" என்றாள் மலை அரசி.

பாபுஜி அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். "அப்படியானால் மலை அரசியின் கதி என்ன?" என்று கேட்டார் பிருமச்சாரி.

ஜோடா அவர்கள் ஆட்சேபணையை உதறினான். "என் மக்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. மண்டோருக்குள் என்னை யாரும் தொட முடியாது. நான் இருக்கும் இடத்தையும் அறிய முடியாது. கவலைப்படாதீர்கள்" என்று திட்டமாகச் சொன்ன ஜோடா அன்று இரவே மண்டோருக்குப் பயணமானான்.

மூவரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தார்கள். ஒரு வாரம் ஜோடாவைப் பற்றி செய்தி ஏதுமில்லை. பாபுஜி தமது இருப்பிடம் கிளம்பினார். "என் வாக்குப்படி நான் அடுத்த பவுர்ணமி அன்று மண்டோர் வாசலில் இருப்பேன்" என்று கூறிச் சென்றார்.

ஒரு வார காலம் மலை அரசி மரண அவஸ்தையில் இருந்தாள். ஜோடா திரும்பவில்லை.

26. சாவுகாரைப் பிடித்த சனியன்!

மண்டோர் அரசின் முதலமைச்சராயிருந்து, சந்தசிம்மன் ஆக்கிரமிப்புக்குப் பின்பு அந்தப் பதவியில் இருந்து விலகி, அரண்மனையில் தமக்கு முன்னாள் மன்னனால் அளிக்கப்பட்டு இருந்த இடத்தையும் சந்தசிம்மனிடம் ஒப்புடைத்துவிட்டு, வணிகர் வீதியில் இருந்த ஒரு சாதாரண வீட்டில் குடியேறிவிட்ட பெருமகன், இரவு ஏறிவிட்ட பிறகும் தூக்கம் வராமல் தமது படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

மண்டோரின் பழைய நிலைமையையும் சிறப்பையும், மேவாரையும் இணைத்துவிட வேண்டும் என்ற பேராசையில் சொந்த அரசையும், உயிரையுங்கூட துறந்த ராவ் ரின்மல் மகாவீரனான ஜோடாவின் பிற்காலத்தையும் பாழ்படுத்தி விட்டுச் சென்றதை நினைத்து ஏங்கிக்கொண்டு இருந்தார். அவரது ஏக்கமும் தூக்கமின்மையும் அவர் பக்கத்தில் படுத்திருந்த அவரது வயோதிக மனைவிக்கும் புரிந்திருந்ததால், அவள் சொன்னாள் மெதுவாக, "மேவார் சிங்கங்கள் இரண்டு மண்டோரை ஆளுகின்றன. நீங்கள் உறக்கம் விழித்தால் உடம்புதான் கெடும். மண்டோர் உருப்படாது" என்று.

பெயருக்கு மூடியிருந்த கண்ணை விழித்த முதன் மந்திரி மோட்டுவளையை நோக்கினார்.

அதைக் கவனித்த மனைவி சொன்னாள் "இரவு உச்சியைத் தாண்டிவிட்டது" என்று.

"அதனால் என்ன?" என்று வினவினார் முதல்வர்.

"நாளை நாம் ஏழைகளுக்கு அன்னம் அளிக்கும் நாள். விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டும்" என்று சுட்டிக் காட்டினாள்.

இதைக் கேட்ட முதல்வர் பெருமூச்செறிந்தார். "சந்தினி! இந்த ஒரு வருடம் அதை நிறுத்திக்கொண்டால் என்ன?" என்று வினவினார்.

குழப்பம் மிகுந்த கண்களை மூதாட்டி கணவன்மீது திருப்பினாள். "ஏன் நிறுத்த வேண்டும்?" என்று கேட்டாள்.

"இப்பொழுது நம்மிடம் பணம் ஏது, பழையபடி உணவளிக்க?" என்று வினவினார்.

"அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் ஏற்பாடு செய்துவிட்டேன்" என்றாள் மூதாட்டி.

பெருவியப்பாக இருந்தது முதல்வருக்கு. "எப்படி ஏற்பாடு செய்தாய்? என் பதவிக்கு உண்டான மகர கண்ட தங்கக் கேடயம் எல்லாவற்றையும் சந்தசிம்மன் மக்களிடம் ஒப்படைத்து விட்டேனே" என்று வினவினார்.

"எனது சீதன நகைகள் எங்கு போயின?" என்று மூதாட்டி வினவினாள்.

முதல்வரின் முகத்தில் கோபம் துளிர்த்தது. "அவற்றை யார் விற்கச் சொன்னது உன்னை?" என்று சீறினார். படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்.

"விற்கவில்லை. என்னுடைய ஆபரணத்தை மட்டும் அடகு வைத்தேன்."

"அதற்கு என்ன பிரமாத பணம் கிடைத்துவிடப் போகிறது?"

"ஆயிரம் மோகராக்கள் வாங்கி வந்திருக்கிறேன்."

"ஆயிரம் மோகராக்களா! எந்த மடையன் கொடுத்தான் ஆயிரம் மோகராக்கள் ஓர் ஆபரணத்துக்கு?"

"நமது வணிகர் வீதியில் பெரிய கடை சாவுகார் இல்லையா?"

"ஆம் அவரா கொடுத்தார்? எப்படிக் கொடுத்தார்? பெரிய கஞ்சன் ஆயிற்றே!"

"என்னவோ கொடுத்தார். நல்ல காரியம், பாதகமில்லை, எடுத்துப் போங்கள் என்று சொன்னார்."

"இதில் ஏதோ சூது இருக்கிறது. நாளை விசாரிக்கிறேன்" என்ற முதலமைச்சர் படுத்தார். சிறிது நேரத்தில் அலுப்பால் கண்ணயர்ந்தார்.

மறுநாள் காலையில் வீட்டிலும் வீட்டுக்கு எதிரிலும் கேட்ட பேரிரைச்சலால் கண்விழித்து சாளரத்தின் மூலம் வெளியே பார்த்தார்.

வீட்டுக்கு எதிரில் ஏராளமான பிச்சைக்காரக் கும்பல் நின்றிருந்தது. முதல்வர் வேகமாக எழுந்து நீராடி காலைக் கடன்களை முடித்து வெளியே வந்தார். இரண்டு பெரிய அண்டாக்களில் சப்பாத்திகளும் இன்னொரு பாத்திரத்தில் பருப்புக்கறி வகையறாக்களும் தயாராக இருந்தன.

முதல்வர் ஓர் அண்டாவின் பக்கத்தில் நின்றுகொண்டார். அன்று வெள்ளிக்கிழமை விரதத்தை விடியற்காலையில் முடித்து நல்ல குங்குமப் பொட்டுடனும் தலையில் குழல் வகிட்டில் நீட்டித் தீட்டப்பட்ட குங்குமக் கோட்டுடனும் மகாலட்சுமிபோல் காட்சியளித்த அவர் மனைவி பக்கத்துப் பாத்திரத்தில் இருந்த பருப்புக்கறியை எடுக்க தனது கையில் ஒரு சிறு கரண்டியை ஏந்திக் கொண்டாள். திண்ணையில் நறுக்கி வைக்கப்பட்டு இருந்த இலைகளை ஒவ்வொரு பிச்சைக்காரராக எடுத்துக்கொண்டு முன்னே வர, முதல்வர்

அண்டாவில் இருந்த ரொட்டிகளை இரண்டு இரண்டாகக் கொடுக்க, அவற்றின்மீது கரண்டியால் "தாலை" எடுத்து மூதாட்டி வைக்க, வெள்ளி விரத தர்மம் தொடங்கிற்று.

வந்த பிச்சைக்காரர்கள் ஒருவர்மேல் ஒருவர் இடித்துக் கொண்டு வந்துங்கூட பொறுமை இழக்காமல் அந்த வயோதிக தம்பதிகள் தர்மம் செய்தனர். அந்தப் பிச்சைக்காரர்களில் ரொம்ப குடு குடு கிழவராக இருந்த ஒருவன் மற்றவர்களின் இடிகளைத் தாங்க முடியாமல் விழுந்து மிதிபட இருந்தான்.

முதல்வர் சட்டென்று கூட்டத்தை விலக்கிக்கொண்டு அவனை நோக்கி விரைந்து மெள்ள அவனைத் தூக்கி வந்து திண்ணையில் உட்கார வைத்தார். அங்கேயே இலையைப் போட்டு இரண்டு சப்பாத்திகளை வைத்து பருப்பையும் தாமே வைத்தார். இருந்தும் அவனால் உண்ண முடியவில்லை. நரைத்த தாடியும் தலைமுடியும் சுருக்கங்கள் நிறைந்ததால் கிழக்கண்கள் பஞ்சடைந்த நிலையில் இருந்த அந்தக் கிழவன் உணவைத் தொடவில்லை. அப்படியே மயக்கமுற்று சாய்ந்து விட்டான். அவன் கண்களைப் பிரித்துப் பார்த்தார் முதல்வர். கண்கள் சரியாகத் திறக்க முடியவில்லை.

அங்கு இருந்த ஒருவனை அழைத்து "மருத்துவரைக் கூப்பிட்டு வா" என்று கூறிய முதல்வர் மிகத் துரிதமாக சப்பாத்திகளைக் கொடுத்தார். அப்படியும் கிட்டத்தட்ட நடுப்பகலில்தான் அந்த தர்ம கைங்கர்யம் முடிந்தது. அதற்கு வெகுநேரம் முன்பே வந்து விட்ட மருத்துவர் அந்தக் கிழவனை இருவரை விட்டு தூக்கி வரச்சொல்லி அந்த விடுதியின் கூடத்துக்கு எடுத்துச் சென்று பக்கத்தில் இருந்த ஓர் அறையில் அவனைப் படுக்க வைத்தார். பிறகு தாதுவைப் பார்த்தார் நீண்ட நேரம். "இவன் வயதுக்கு தாது பலமாகத் தான் இருக்கிறது" என்று கூறி அவனை நிம்மதியாகப் படுக்கவிட்டார்.

அதற்குள் உள்ளே வந்த முதல்வர் மனைவியை சிறிது நீர் கொண்டுவரச் சொல்லி "மருத்துவரே! இதைப் புகட்டலாமா?" என்று வினவினார்.

"கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டுங்கள். திடீர் என்று விக்கினால் கஷ்டம்" என்ற மருத்துவர் பாத்திரத்தைத் தாமே வாங்கி சிறிது சிறிதாக நீரைப் புகட்டலானார்.

நான்கு வாய் நீரை விழுங்கியதும் சற்று கண்ணை விழித்த அந்தக் கிழவன் மிரள மிரள விழித்தான்.

"பேசாமல் படுத்திரு. இன்னும் ஒரு மணி நேரத்தில் கொஞ்சம் சுரணை வரும். அப்புறம் உணவு அருந்தலாம்" என்றார் மருத்துவர்.

கிழவன் பதில் பேசவில்லை. தனது கையைப் பக்கவாட்டில் துழாவினான். "என்ன தேடுகிறாய்?" என்று மருத்துவர் வினவினார்.

"என்..." என முக்கிய கிழவன் பிறகு சமாளித்துக் கொண்டு "என் ரொட்டி..." என்று முனகினான்.

"அட தரித்திரப் பிணமே, உன் ரொட்டி எங்கும் போகாது. சற்று இளைப்பாறு" என்று எரிந்து விழுந்தார் மருத்துவர். பிறகு தனது பையில் இருந்து ஒரு குளிகையை எடுத்து நீரில் இழைத்து "முதல்வரே! இதை இவன் நாக்கில் தடவுங்கள்" என்றார். பிறகு, "இவன் அழுக்கு ஆடைகளை அகற்றுங்கள். இவன் இருக்கிற அழகுக்கு கிழிந்த அங்கி வேறா? அதையும் கழற்றுங்கள்" என்றார்.

முதல்வர் கழற்றத் துவங்கினார். அடுத்த விநாடி கிழவனின் இரும்புக் கைகள் முதல்வரின் கைகளைச் சிறை செய்தன. "அங்கியைக் கழற்ற வேண்டாம். கதவை மூடுங்கள்" என்று ஆணையிட்டான் கிழவன்.

முதல்வர், மருத்துவர் இருவருமே திகைத்தார்கள். அந்தக் குரல் இருவருக்கும் புதியது அல்ல. இருவரும் ஏதோ பேச வாயெடுத்தார்கள். பேச வேண்டாம் என்ற எச்சரிக்கை அவன் கண்களில் இருந்து வந்தது. பஞ்சடைந்த கண்கள் பளிச்சிட்டன. முதல்வர் வேகமாகக் கதவைத் தாளிட்டார். ஜோடா எழுந்து உட்கார்ந்துகொண்டான். "இன்று நல்ல நாள், அதனால்தான் வந்தேன்" என்றான்.

முதலமைச்சர் முகத்தில் கிலி விரிந்தது. "எப்படி வந்தீர்கள்? ஏன் வந்தீர்கள்?" என்று வினவினார் முதல்வர்.

"மிகுந்த அபாயம்," என்றார் மருத்துவர்.

ஜோடா மிக நிதானமாகப் பேசினான். "மனிதனுடன் அபாயம் பிறக்கிறது. சிலர் அதை நினைத்து அஞ்சிச் சாகிறார்கள். சிலர் அதை அலட்சியப்படுத்தி கடமையைப் புரிகிறார்கள். அது கிடக்கட்டும். இப்பொழுது மண்டோர் நிலைமை என்ன?" என்று கேட்டான்.

"மக்கள் அடங்கிக் கிடக்கிறார்கள். மேவார் படைவீரரின் ஜரூர் மக்களை அடக்கி வைத்திருக்கிறது" என்றார் முதல்வர்.

"நல்லது. மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்களா?" வினவினான் ஜோடா.

இல்லை. அடிமை மக்கள் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?" என்ற முதலமைச்சர் வருத்தம் கலந்த குரலில் கூறினார்.

"மிக நல்லது, முதலமைச்சரே! மக்களில் முக்கியமானவர்களை அழைத்து ஊரில் சிறிது அமைதியின்மையை ஏற்படுத்தும். அடுத்த பவுர்ணமி அன்று நான் இங்கு வருவேன்" என்ற ஜோடா, "மருத்துவரே! அரண்மனைக்கு இப்பொழுதும் நீர்தான் மருத்துவரா?" என்று மருத்துவரை நோக்கி வினவினான்.

"இந்த ஊரில் வேறு மருத்துவர் ஏது?" என்று பெருமையுடன் மருத்துவர் சொன்னார். அத்துடன் விடவில்லை. "நாளடைவில் கொல்லும் விஷம் இருக்கிறது. சந்திசிம்மன் புதல்வர்களுக்கு அதைக் கொடுக்கட்டுமா?" என்று வினவினார்.

ஜோடா அவரைக் கோபத்துடன் பார்த்தான். "மருத்துவரே! சந்தசிம்மனின் மக்கள் மகாவீரர்கள். அவர்களை அதர்ம வழியில் அழிக்க நான் விரும்பவில்லை. நான் விரும்புவது ஒன்றுதான். எனது படைகள் இங்கு வரும்போது உள்ளிருக்கும் மக்கள் எழ வேண்டும்" என்று கூறினார்.

"அதற்கு தனி முயற்சி தேவையில்லை. இப்பொழுதே மக்கள் வெறுப்புடன் இருக்கிறார்கள்" என்றார் முதல்வர்.

ஜோடா மீண்டும் படுத்துக்கொண்டான். "என்னை இப்படியே தூக்கிப்போய் பெரிய சாவுகாரின் வீட்டில் விட்டு விடுங்கள்" என்றான்.

முதல்வர் நகர்ந்துகொண்டார். வேறு ஏதும் சொல்லாமல் ஆள்களை விட்டு பெரிய சாவுகாரின் வீட்டில் ஜோடாவைக் கொண்டு சேர்த்தார். சாவுகார் அந்தப் பிச்சைக்காரனை தமது பள்ளியறைக்குக் கொண்டுவரச் சொல்லி பஞ்சணையில் படுக்க வைத்தார்.

அதற்குள் இரவும் வந்தது. அரண்மனையில் காந்தோஜியின் முன்பு நின்றுகொண்டு இருந்த வீரன் ஒருவன் "ஆம், மகாராஜா! நானே பார்த்தேன்" என்றான்.

"பிச்சைக்காரனை பெரிய சாவுகார் பஞ்சணையில் படுக்க வைத்தாரா?" என்று வியப்புடனும் சந்தேகத்துடனும் வினவினான் காந்தோஜி.

"ஆம்" திட்டமாக வந்தது வீரன் பதில்.

இதைக் கேட்ட காந்தோஜி, "மஞ்சாஜி! மஞ்சாஜி!" என்று இரு முறை குரல் கொடுக்க, மஞ்சாஜி பக்கத்தில் இருந்து விரைந்து வந்தான். "என்ன அண்ணா?" என்று வினவினான்.

"வாளை எடுத்துக்கொள்."

"எதற்கு?"

"பெரிய சாவுகாரைப் பார்க்க வேண்டும்."

மஞ்சாஜி பதில் ஏதும் சொல்லவில்லை. சிறிது நேரத்திற் கெல்லாம் இரு இளவல்களும் சாவுகார் இல்லத்தை நோக்கிச் சென்றனர். "தம்பி! சாதாரணமாக நடந்துகொள். நம்மை சாவுகார் சந்தேகிக்கக்கூடாது" என்றான்.

இருவரும் சாவுகார் வீட்டை அடைந்ததும் கதவை மெதுவாகத் தட்டினார்கள்.

"யாரது?" உள்ளிருந்து சாவுகாரின் குரல் கேட்டது.

"முதலமைச்சர், சத்தம் வேண்டாம்" என்று குரல் மாற்றிப் பேசினான் மஞ்சாஜி.

சாவுகார் மெள்ள கதவைத் திறந்தார். அடுத்த விநாடி காந்தோஜியின் குறுவாள் அவர் கழுத்தில் அழுந்தியது. "சத்தம் செய்ய வேண்டாம். முன்னே செல்லுங்கள்" என்றான் மஞ்சாஜி.

27. அடைத்த கதவு!

காந்தோஜியின் குறுவாள் அழுந்தியதாலும், எச்சரிக்கையாலும், அவன் பின்னால் நின்றிருந்த மஞ்சாஜியின் உதடுகளில் துளிர்த்திருந்த குரூரப் புன்முறுவலாலும், சாவுகார் அஞ்சி நடுநடுங்கிவிடுவார் என்றோ, முன்னே நடந்துவிடுவார் என்றோ மேவார் ராஜ வம்ச இளவல்கள் நினைத்திருந்ததால் ஏமாந்தே போனார்கள்.

சாவுகார் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இடித்த புளியென நின்ற இடத்தில் நின்றிருந்தார்.

"உம்! நட முன்னே!" என்று காந்தோஜி இரண்டாம் முறை எச்சரித்தபோதுகூட அவர் நகரவில்லை. "உங்கள் கத்தி என் கழுத்தில் நேராகப் பதிந்து இருக்கும்போது நான் எப்படித் திரும்புவது?" என்று வினவினார். பிறகு நகைத்தார் இகழ்ச்சியாக.

மஞ்சாஜியின் சினம் எல்லை கடந்தது. அவர் நெஞ்சின் அழுத்தத்தையும், சிரிப்பில் கண்ட இகழ்ச்சியையும் கண்டு, "எதற்காக நகைக்கிறீர்?" என்று வினவினான் மஞ்சாஜி, சினத்தின் சாயை குரலில் தெரிய.

சாவுகார் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். "ஆயுதமற்ற ஒரு சாவுகாரை மிரட்ட அரசகுமாரர் இருவர் வந்திருக்கிறீர்கள். சாதாரணமாக இதற்கெல்லாம் சாதாரண வீரர்கள் வருவது வழக்கம்" என்று சுட்டிக் காட்டினார் சாவுகார்.

காந்தோஜி அவரது கழுத்தில் இருந்த கத்தியை எடுத்தான். "நீர் சாதாரண சாவுகார் அல்லர். அதனால், நாங்களே வந்தோம்" என்றான் காந்தோஜி.

"என்ன அசாதாரணத்தை என்னிடம் கண்டுவிட்டீர்கள்" என்று மேலும் பேச்சுக் கொடுத்தார் சாவுகார்.

மஞ்சாஜி அவரை கண்களில் இகழ்ச்சி ததும்ப நோக்கினான். "நீர் இந்த நகரத்தின் பெரிய சாவுகார்..." என்று வாசகத்தை இழுத்தான்.

"அது தவிர சமநோக்குள்ளவர்" என்றான் காந்தோஜி.

"சமநோக்கா!" வியப்பைக் காட்டினார், சாவுகார்.

"ஆம்." காந்தோஜியின் குரலில் நகைப்பு இருந்தது.

"எப்படி?"

"உமக்கு பிச்சைக்காரர், பணக்காரர் வித்தியாசம் கிடையாது."

"யார் சொன்னது?"

"ஊரில் அப்படிப் பேசிக்கொள்கிறார்கள்" என்றான் காந்தோஜி.

"அதைப் பார்க்க வந்தோம்" என்றான் மஞ்சாஜி.

சாவுகார் மேலும் பேச்சு கொடுக்க முயன்றார். "டேய்! சாவுகார்! நட முன்னே. நீ ஆடிய நாடகம் போதும்" என்றான் காந்தோஜி.

மஞ்சாஜி அவரைப் பிடித்து பலவந்தமாகத் திருப்பி ஒரு தள்ளு தள்ளினான். தனது நீண்ட வாளையும் உருவிப் பிடித்துக் கொண்டான்.

சாவுகார் தள்ளாடி இரண்டு மூன்று அடிகள் விழுந்து விடுவதுபோல் ஓடினார். பிறகு சமாளித்துக்கொண்டு முன்னே நடந்தார். "ராஜதுரோகி! உன்னை அப்பொழுதே வெட்டிப் போட்டு உள்ளே சென்று இருக்க வேண்டும். இத்தனை நேரம் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தது தவறு" என்றான் மஞ்சாஜி.

சாவுகார் சட்டென்று திரும்பினார், "ராஜத்துரோகக் குற்றம் சாட்டுவது தவறு" என்று வாதித்தார்.

"ஏன்?" என்று வினவினான் காந்தோஜி, அவரை நோக்கி இரண்டடி நடந்து.

"நீங்கள் மண்டோர் அரசர்கள் அல்லர், ஆகையால் அரசத்துரோகம் இதில் எதுவும் கிடையாது" என்றார் சாவுகார்.

இதனால் வெகுண்ட மஞ்சாஜி "அண்ணா, இவனுடன் நமக்குப் பேச்சென்ன? இவனை ஒழித்துவிட்டு வந்தவனைப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு சாவுகார் முதுகில் வாளைப் பாய்ச்சிவிட இழுத்தான். ஆனால் அவன் வாள் பாயவில்லை. சாவுகார் புலிபோல் துள்ளி ஓடினார். "இறப்பதானால் என் மார்பில் காயத்துடன் இறப்பேன். முதுகுக் காயம் வீரனுக்கு அழகல்ல" என்று கூறிக்கொண்டு ஒரு மூலைக்கு ஓடி அங்கிருந்த வாளை எடுத்து இருமுறை சுழற்றினார்.

இந்த புது சாவுகாரைக் கண்ட இரு இளவல்களும் பிரமித்தனர். "வணிகர்களுக்கு போர் முறை ஏது? க்ஷத்திரிய தர்மம் ஏது?" என்று வினவினான் காந்தோஜி.

பதிலுக்கு சாவுகார் தமது தலையில் இடது கையைக் கொடுத்து பொய் முடியை அகற்றினார். வயோதிக சாவுகாரின் இடத்தில் ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் முகத்தில் வீரக்களை சுடர்விட்டது. இந்த மாற்றத்தைக் கண்ட இரு இளவல்களின் முகத்திலும் பிரமை விரிந்தது பெரியதாக.

"நீ யார்?" என்று வினவினான் காந்தோஜி.

"மண்டோரின் படைத்தலைவன் ஜகத்சிம்மன்" என்று பதில் வந்தது. பதிலைத் தொடர்ந்து நகைப்பும் வந்தது.

"ஜகத்சிம்மனா! இரவில் அதர்மயுத்தம் செய்பவன்" என்றான் மஞ்சாஜி வெறுப்புடன்.

ஜகத்சிம்மன் மீண்டும் நகைத்தான். "பேசிக்கொண்டு இருப்பதைவிட போர் தொடங்குவது இருவருக்கும் பயன்தரும்" என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

காந்தோஜி சிறிது சிந்தித்தான். "சரி மஞ்சாஜி! நீ இவனுடன் போரிடு. ராஜபுத்திரர்கள் இரண்டு பேர் சேர்ந்து ஒருவனைக் கொல்லும் வழக்கம் கிடையாது" என்று கூறிவிட்டு பின்னால் நகர்ந்து விட்டான். இருவரும் போரிட இடமளித்து.

அப்பொழுது அவனுக்குப் பின்னால் இருந்து யாரோ கனைத்தார்கள். "அவசியமில்லை காந்தோஜி! இருவருக்கும் இருவர் இருக்கிறோம்" என்ற கனைப்பைத் தொடர்ந்து குரலும் வந்தது.

காந்தோஜி திரும்பினான். பெரிய வாளை உருவிப் பிடித்துக்கொண்டு பிச்சைக்காரன் நின்றிருந்தான். அவனுக்குப் பின்னாலிருந்த வாயிற் கதவு மூடப்பட்டிருந்தது. காந்தோஜி நிலைமையைப் புரிந்துகொண்டான். ஜகத்சிம்மன் கதவைத் திறக்கையில் போலிப் பிச்சைக்காரன் கதவுக்கருகில் ஒளிந்துகொண்டிருக்க வேண்டும் என்றும், தாங்கள் உள்ளே வந்ததும் கதவை ஓசைப்படாமல் தாளிட்டுவிட்டான் என்பதையும் உணர்ந்துகொண்டதால் அவனும் வாளை உருவிக்கொண்டான். "ஜோடா! உன் வேஷம் சரியாகத் தானிருக்கிறது. நீ நாடிழந்த பிச்சைக்காரன்" என்றும் கூறினான் காந்தோஜி.

ஜோடா நகைத்தான். "நாடிழந்தது உண்மை. ஆனால் வீரம் இழக்கவில்லை" என்றான். வாளைச் சிறிது நீட்டவும் செய்தான்.

"இருமுறை ஓடிய மகாவீரன்" என்றான் மஞ்சாஜி.

அதனால் ஜோடா சினம் கொள்வான் நிதானமிழப்பான் என்று எதிர்பார்த்தான் காந்தோஜி. ஆனால் சர்வ நிதானத்தைக் காட்டினான் ஜோடா. சொல்லம்புக்குப் பதிலாக வாளைச் சுழற்றினான். நான்கு வாட்கள் சந்தித்தன. இளவல் இருவரும் சிங்கத்தின் குட்டிகள் என்பதை நிரூபித்தார்கள் அவர்கள். சந்தசிம்மனின் அரிய வாள் திறன், போர் நுணுக்கம் அத்தனையும் அவர்கள் வாள் சுழற்றலில் இருந்ததைக் கவனித்தான் ஜோடா. ஆனால் பல மாதங்களின் சோதனையும் விடாத வாள் பயிற்சியும் அவன் போர்த்திறத்தை முந்திய நாள்களைவிட திடமுள்ளதாகச் செய்திருந்தன.

ஜகத்சிம்மனின் மூர்க்கத்தனமான போராட்டத்துக்கும் ஜோடாவின் நிதானமான போராட்டத்துக்கும் பெரு வித்தியாசம் இருப்பதை இரு இளவல்களும் கவனித்ததால் இருவரும் பதற்றத்தைச் சிறிதுங் காட்டாமல் போராடினார்கள். அதிகநேரம் போர் நீடிக்கவில்லை. நேரம் ஆக ஆக பொழுது விடியும் நேரம் நெருங்கிவிட்டால் ஆபத்து என்ற காரணத்தால் வாளைக் கொண்டு காந்தோஜியைத் தாக்காமல் ஒரு சுழற்றி சுழற்றி காந்தோஜியின் வாளைக் கையிலிருந்து பறக்கச் செய்தான். "மஞ்சாஜி! வாளைக் கீழே எறிந்துவிடு" என்றும் உத்தரவிட்டான். அதைக் கேட்ட மஞ்சாஜி திரும்பிய நேரத்தில் அவன்மீது வாளைப் பாய்ச்சிட எண்ணிய ஜகத்சிம்மன் முயற்சியை "நிறுத்து" என்ற ஜோடாவின் அதிகாரச் சொல் தேக்கியது. அடுத்த விநாடி மஞ்சாஜிமீது பாய்ந்து அவன் கையிலிருந்த வாளைப் பறித்துக் கொண்டான் ஜோடா. அடுத்து இரு இளவல்களையும் நோக்கி, "சந்தசிம்மன் மக்களே! நான் படுத்திருந்த அந்த அறைக்குள் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

இருவருமே நகர மறுத்ததால் பணிவுடன் கேட்டான் ஜோடா, "வீரர்களான உங்களை ரணகளத்தில் சந்திக்கிறேன், தயைசெய்து ஒத்துழையுங்கள்" என்று.

அவன் குரலையும் அதில் ஒலித்த பணிவையும் கண்ட இளவல்கள் சிங்கநடை நடந்து பள்ளியறைக்குள் புகுந்தார்கள். அடுத்த விநாடி அறை பூட்டப்பட்டது. வெளியே இருந்த ஜகத்சிம்மன் கேட்டான். "வெளியே செல்லும் சுரங்க வழி அந்த அறையில்தானே இருக்கிறது?" என்று.

"ஆம்."

"இப்பொழுது எப்படி வெளியே செல்வதாக உத்தேசம்?"

"நீ பழையபடி சாவுகார் ஆகிறாய்?" என்றான் ஜோடா.

"நீங்கள்?"

"உன் குமாஸ்தா."

"உங்கள் முகத்தைப் பார்த்தால் குமாஸ்தா ஆகவா தெரிகிறது!" என்று கேட்டான் ஜகத்சிம்மன்.

"சற்று நேரத்தில் பார்" என்றான் ஜோடா.

அடுத்த சில நிமிடத்தில் அந்த இல்லத்தை விட்டுக் கிளம்பிய பழைய சாவுகாருடன் அசட்டுக்களை வழிந்த முகத்துடனும் பெரிய முண்டாசுடனும் குமாஸ்தா தொடர்ந்தான். வாயிலில் நின்றிருந்த இரண்டு கோவேறு கழுதைகளின்மீது ஏறி இருவரும் கோட்டை வாசலுக்கு வந்தனர்.

கோட்டை வாசலில் காவல் பலமாயிருந்தது. வாசலின் பெருங்கதவுகள் மூடியும் இருந்தன.

"கதவைத் திறவுங்கள்" என்று சாவுகார் அட்டகாசமாக அதட்டினார். "எந்த அரசாங்கத்திலும் வணிகர்களைத் தடை செய்யும் பழக்கம் கிடையாது" என்று கூறினார்.

குமாஸ்தாவின் அசட்டுக்களை அதிகமாயிற்று. "கோட்டைக் கதவை ஏன் சாத்தியிருக்கிறீர்கள்? பயமா?" என்று உளறினான் குமாஸ்தா.

கோட்டை வாயில் காவலன் சொன்ன பதில் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

"இரவில் அரண்மனையில் இருந்து சென்ற இரு இளவரசர்களையும் காணோமாம். அதனால் காலை முதல் கதவைத் திறக்க வேண்டாம் என்று உத்தரவு. திரும்பிப் போய் விடிந்ததும் வாருங்கள்" என்றான் கோட்டை வாயில் காவலன்.

இதைக் கேட்ட சாவுகார், குமாஸ்தா இருவருமே திகைத்து நின்றனர்.

28. வேடர் குடிசை மர்மம்!

கோட்டைக் காவலன் சொன்ன செய்தியால் மலைத்த இருவரில் சாவுகாரே முதலில் திகைப்பை உதறிக்கொண்ட தன்றி சமயாசந்தர்ப்பம் தெரியாமல் கோப்தையும் காட்டினார். "காவலனே! வணிகர்களைத் தடை செய்யும் வழக்கம் மார்வாரில் கிடையாது என்பது உனக்குத் தெரியுமா தெரியாதா?" என்று சீறினார்.

காவலன் நகைத்தான் பெரிதாக. "இங்கு இப்பொழுது நடப்பது மேவார் அரசு. இது உனக்குத் தெரியுமா தெரியாதா?" என்று சாவுகாரின் சொற்களையே திருப்பி கேலியாகப் பேசினான்.

சாவுகார் மேலும் தமது அசட்டுத் துணிவைக் காட்டினார். "நீ மேவாரின் அடிமையா? அது தெரியாது எனக்கு" என்று சொல்லிக்கொண்டே காவலனை நெருங்கினார்.

காவலன் அவரை இகழ்ச்சியுடன் நோக்கினான். "தெரிந்தால் என்ன செய்வாய்?" என்று வினவினான்.

காவலன் பதில் சொல்லுமுன்பே அவனை நெருங்கிவிட்ட சாவுகார் "இதைச் செய்வேன்" என்று சொல்லி காவலன் முகத்தோடு தமது முகத்தைச் சேர்த்தார். பிறகு அவன் காதில் ஏதோ முணுமுணுத்தார்.

காவலனின் முகம் ஒரு விநாடி பெரும் பீதியைக் காட்டினாலும், அடுத்த விநாடி மந்தகாசத்தால் விரிந்தது.

"இதை என் முன்பே சொல்லவில்லை நீங்கள்?" என்று வினவினான். அடுத்து மற்ற காவலருக்கு அவனிடம் இருந்து உத்தரவு பறந்தது, "கதவுகளைத் திறவு,ங்கள், இவர்கள் போகட்டும்" என்று.

இந்த உத்தரவு மற்ற காவலருக்கு வியப்பைத் தந்தாலும் தங்கள் தலைவன் உத்தரவை மறுக்க முடியாமல் கதவுகளைத் திறந்தார்கள். திறந்ததும் சாவுகாரும் குமாஸ்தாவும் மட்டுமின்றி காவலர் தலைவனும் அவர்களுக்கு முன்பு வெளியே சென்றான். கதவுகளைச் சாத்திவிடும்படி சைகையும் செய்தான்.

கோட்டைப் பெருங்கதவுகள் சாத்தப்பட்டு மூவரும் பத்தடி தூரம் சென்றதும் காவலர் தலைவன் சாவுகாரை நோக்கி "எப்பொழுது இந்த வேடம் தரித்தீர்கள்?" என்று வினவினான்.

"சில நாள்களாக" என்ற ஜகத்சிம்மன் தனது வேடத்தைக் கலைத்து "மகாராஜா! இவனுக்கு சகலமும் தெரியும், நீங்களும் இந்தப் பைத்தியக்கார வேடத்தைக் கலைக்கலாம்" என்று கூறினான்.

மன்னன் வேடத்தைக் கலைத்ததும் அவர் முன்பு மண்டியிட்டு வணங்கிய கோட்டைக் காவலன், "மகாராஜா! தங்களை எப்பொழுது மண்டோரில் எதிர்பார்க்கலாம்?" என்று வினவினான்.

"அடுத்த பவுர்ணமி அன்று" என்று ஜோடா தெரிவித்தான். அத்துடன் கேட்டான், "மண்டோர் மக்கள் நிலை எப்படியிருக்கிறது" என்று.

"பெரியவர் இருந்தவரை சரியாக இருந்தது..." என்று இழுத்தான் காவலர் தலைவன்.

"யார் பெரியவர்?" என்று ஜோடா வினவினான்.

"மேவாரின் ராஜப் பிரதிநிதி. மேவாரின் அரியணையில் அமர்ந்திருக்க வேண்டிய தியாகி. மகாவீரன் சந்தசிம்மன்." இதை மிகுந்த பணிவுடன் சொன்னான் காவலன்.

"இப்பொழுது?"

"சிறுவர்கள் ஆட்சி நடக்கிறது. மண்டோர் மக்கள் அனாவசியமாகத் துன்புறுத்தப்படுகிறார்கள். சில வேளைகளில் அவமானப்படுத்தப்படுகிறார்கள்."

"எப்படி?"

"மேவாரைப்பற்றி எதைப் பேசினாலும் ராஜத்துரோகக் குற்றம் என்று கருதப்படுகிறது. பலர் சிறையில் இருக்கிறார்கள்."

ஜோடா புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். அத்துடன் அவனையும் உடன் அழைத்துக்கொண்டு சற்று தூரத்தில் இருந்த சிறு மலைப்புதர்களை நாடிச் சென்றான். அங்கிருந்த ஒரு புதருக்கு அருகில் கட்டப்பட்டிருந்த தனது புரவியை அவிழ்த்துக்கொண்டு "ஜகத்சிம்மா! உனக்கு இனி மண்டோரில் வேலை இல்லை. இவனையும் அழைத்துக் கொண்டு பிருமச்சாரி இருப்பிடம் வந்து சேர்" என்று உத்தரவிட்டு மலைக்காடுகளின் வழியே புரவியைச் செலுத்தினான்.

ஜகத்சிம்மனுக்கும் காவலனுக்கும் புரவி இல்லாததால் கால்நடையாகவே பயணம் செய்தார்கள். அடிக்கடி மண்டோர் புரவி வீரர்கள் தப்பிச் சென்றவர்களைத் தேடியதால் துரிதமாகப் பயணம் செய்ய முடியாததன் விளைவாக அவ்வப்பொழுது காடுகளிலும் மலைப்பாறைகளிலும் மறைந்தே நடந்தார்கள். மலைப்பகுதியும் தேடப்பட்டதால் வழியை மாற்றி சுற்றுப்புறமாகச் சென்ற ஜகத்சிம்மன் காவலனை நோக்கி, "நாம் நேராக பிருமச்சாரி இருப்பிடம் செல்ல முடியாது. நம்மைப் பிடிக்கும் முயற்சி தணியும்வரை

மலையின் அடுத்த பக்கத்தில் உள்ள யாதவர் குடிசைகளில் தங்குவோம்" என்று கூறினான்.

காவலன் சிறிது சிந்தித்தான். "அதுவும் அபாயம்" என்றான்.

"வேறு எங்கு தங்கலாம்?" என்று ஜகத்சிம்மன் வினவினான்.

"ஒருநாள் பயணத்தில் வேடர் இல்லங்கள் இருக்கின்றன. அங்கு யாரும் வருவது கிடையாது" என்று காவலன் கூறினான்.

ஜகத்சிம்மன் அதற்கு ஒப்புக்கொள்ளவே மலைப் பகுதியைச் சுற்றிச் சென்று மறுநாள் பகல், வேடர்கள் இருப்பிடத்துக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். அந்தக் குடிசைகளை அவர்கள் அணுகுமுன்பே, இரண்டு வேடர்களால் தடுக்கப்பட்டார்கள். அவர்கள் இருவர் கைகளிலும் இருந்த விற்களில் கணைகள் பூட்டப்பட்டு இருந்தன. நாண்களும் இழுக்கப்பட்டு அம்புகள் இருவர் மார்புக்கும் குறி வைக்கப்பட்டு இருந்ததால் இருவரும் சட்டென்று நின்றார்கள்.

வேடர் ஜாதியால் நிறுத்தப்பட்டதால் வெகுண்ட ஜகத்சிம்மன் தனது வாளை உருவ முயன்றான். "அந்த முட்டாள்தனத்தைச் செய்யாதே. உன் வாள் வெளிப்படுமுன்பு அந்த அம்பு உன் மார்பை ஊடுருவிவிடும்" என்று எச்சரித்தான் வேடரில் ஒருவன்.

"நான் யார் தெரியுமா?" என்று ஜகத்சிம்மன் வினவினான்.

"யாராக இருந்தாலும் இந்தக் குடிசைகளுக்கு அருகில் வரமுடியாது" என்றான் வேடன்.

"ஏன்?"

"காரணம் சொல்வதற்கில்லை."

"இத்தனை ஆண்டுகளாக இப்படி தடையில்லையே. வேடர்களின் விருந்தோம்பல் பிரசித்தமாயிற்றே."

"உண்மை. ஆனால், பழக்கம் இந்த ஆண்டு மாறி யிருக்கிறது."

வேடன் பேச்சு பரம விசித்திரமாக இருந்தது ஜகத் சிம்மனுக்கு. "எல்லா முடிவும் நீங்களே எடுக்கிறீர்களா? உங்கள் தலைவர் எடுக்கிறாரா?" என்று வினவினான்.

"தலைவர்தான்" தடங்கல் இன்றி பதில் வந்தது.

"அப்படியானால் உங்கள் தலைவரிடம் அழைத்துச் செல்லுங்கள் என்னை" என்று உத்தரவிட்டான் ஜகத்சிம்மன்.

வேடர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "தலைவர்கள் இவர்களைப் பார்ப் பார்களா?" என்று ஒரு வேடன் மற்றொருவனைக் கேட்டான்.

"எதற்கும் பழைய தலைவரைக் கேட்போம்" என்றான் ஒரு வேடன்.

அவர்கள் பேச்சு கோட்டைக் காவலனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. "பழைய தலைவர், புதிய தலைவர் என்பது உண்டா?" என்று கேட்டான்.

"இப்பொழுது ஏற்பட்டு இருக்கிறது" என்ற வேடன் "சரி, உங்கள் வாட்களைக் கழற்றிக் கொடுங்கள்" என்று கையை நீட்டினான்.

ஜகத்சிம்மனின் கோபம் எல்லை கடந்தது. "என் வாளை என்னிடம் இருந்து பிரிப்பதற்கு புதிதாக ஒருவன் பிறக்க வேண்டும்" என்று சீறினான்.

வேடன் அதற்குமேல் பேச்சை வளர்க்கவில்லை. "நீங்கள் யாராயிருந்தாலும் அக்கறையில்லை. உங்கள் வாளின் அழகைக் கண்டு நாங்கள் அதைக் கேட்கவில்லை. நீங்கள்

வந்த வழி செல்லலாம். இங்கு எங்கள் எல்லைக்குள் வருவதானால் நிராயுதப் பணிகளாகத்தான் வரவேண்டும்" என்று திட்டமாகக் கூறினான்.

வேடர் குடிசை வட்டாரத்தில் இந்த மாதிரி ஒரு விசித்திரமுண்டு என்பதை அன்றுவரை கேள்விப்படாத ஜகத்சிம்மன், அங்கு என்னதான் நடக்கிறது என்பதை அறிய தனது வாளைக் கழற்றிக் கொடுத்தான். காவலனும் வாளைக் கொடுத்ததும் இருவரையும் வேடர்கள், குடிசைகளின் கூட்டத்துக்குள் அழைத்துச் சென்றனர். குடிசைகள் கூட்டம் பெரிய அரணாக அமைந்திருந்தது. ஒவ்வொரு குடிசை வாயிலிலும் வில் ஏந்திய வேடனொருவன் காவல் புரிந்துகொண்டு இருந்தான். இப்படிப் பல குடிசைகளைத் தாண்டியவுடன் தலைவன் குடிசைக்கு வந்த இருவரையும் வெளியிலேயே நிறுத்திய வேடர்கள் உள்ளே சென்றனர். சில விநாடிகளுக்கெல்லாம் வயோதிகனான ஒருவன் வெளியே வந்தான்.

வந்தவன், "யார், படைத்தலைவரா?" என்று வியப்பு துலங்க வினவினான்.

ஜகத்சிம்மன் கண்கள் அவனை ஏறெடுத்து நோக்கின. ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். வேடர் தலைவன் அவனை நோக்கி "உங்களை நாங்கள் இங்கு எதிர்பார்க்கவில்லை" என்றான்.

ஜகத்சிம்மனுக்கு வியப்பு தாங்க முடியவில்லை. "எதிர்பார்க்கவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"புதுத் தலைவர் நீங்கள் வருவதாகச் சொல்லவில்லை."

"யார் அவர்?"

"சற்று என் குடிசையிலேயே இளைப்பாறுங்கள். நானே அழைத்து வருகிறேன்" என்று கூறிய வேடர் தலைவன் மற்ற இரு வேடர்களையும் நோக்கி "படைத்தலைவருக்கு உணவளியுங்கள். வேண்டிய பணிவிடையைச் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டு எட்ட இருந்த வேறு குடிசைகளை நோக்கிச் சென்றான்.

மாலைவரை அவன் திரும்பவில்லை. பொறுமை இழந்த ஜகத்சிம்மன் குடிசைகளில் இருந்து வெளியே வந்து மற்ற வேடர்களை விசாரித்தான், "உங்கள் தலைவர் எங்கே?" என்று.

யாரும் நேரடியாக பதில் சொல்ல மறுத்தார்கள். அந்த வேடர் குடிசைகளை ஏதோ பெரிய மர்மம் சூழ்ந்திருப்பதை ஜகத்சிம்மன் புரிந்துகொண்டான்.

29. உள்ளே ஒரு பெண் குரல்!

அன்று பகல் முழுவதும் மார்வார் படைத்தலைவனான ஜகத்சிம்மனுக்கும் மண்டோர் கோட்டை காவலனுக்கும் உணவு முதலிய விஷயங்களில் ராஜோபசாரம் நடந்தாலும், அவ்விருவரும் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் எந்த வேடனும் நேரடியாக பதில் சொல்ல மறுத்தான். புதுத் தலைவரை அழைத்து வருவதாகச் சொல்லிச் சென்ற பழைய தலைவனும் மாலைவரை திரும்பி வராததால் ஜகத்சிம்மன் பொறுமையின் எல்லையைக் கடந்தான். விளக்கு வைத்ததும் அவன் தான் தங்கியிருந்த குடிசையில் இருந்து வெளியே வந்து, "உங்கள் புதுத் தலைவர் எக்கேடும் கெட்டுப் போகட்டும், எங்கள் வாட்களைக் கொடுங்கள். நாங்கள் வந்த வழியே போகிறோம்" என்று குடிசை வாயிலில் இருந்த இரு வேடர்களை நோக்கிக் கேட்டான்.

ஒரு வேடன் சொன்னான், "உங்கள் வாட்கள் எங்களிடம் இல்லை" என்று.

"பின் யாரிடம் இருக்கிறது?" என்று ஜகத்சிம்மன் வினவினான் உஷ்ணத்துடன்.

"உங்களை இங்கு அழைத்து வந்தவர்களிடம் இருக்கிறது" என்று இரண்டாவது வேடன் பதில் சொன்னான்.

அதுவரை வாளாவிருந்த கோட்டைக் காவலனுக்கு கோபம் அதிகமாகவே "எங்கே எங்களை அழைத்து வந்தவர்கள்?" என்று சீறினான்.

ஜகத்சிம்மன் சினத்தையோ, காவலன் சீற்றத்தையோ அந்த வேடர்கள் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. ஒரு வேடன் மட்டும் பதில் சொன்னான். "புதுத் தலைவர் குடிசையில் இருக்கிறார்கள்" என்று.

"எங்கே அந்த குடிசை?"

"பழைய தலைவர் வந்ததும் காட்டுவார்."

"பழைய தலைவர் எப்பொழுது வருவார்?"

"புதுத் தலைவரைப் பார்த்ததும்."

"காலையிலேயே போனாரே."

"போனார்."

"ஏன் இன்னும் திரும்பவில்லை? குடிசை மிக தூரமா?"

ஜகத்சிம்மனின் இந்தக் கேள்விக்கு அதுவரை பதில் சொன்ன வேடன் எந்த பதிலும் சொல்லவில்லை. "சரி நானே அந்தக் குடிசையைக் கண்டுபிடிக்கிறேன்" என்று வேடன்மீது எரிந்து விழுந்த ஜகத்சிம்மன் காவலனை உடன் வரும்படி சைகை காட்டி எட்ட இருந்த குடிசைகளை நோக்கிச் சென்றான்.

குடிசைகள் வரிசையாகக் கட்டப்படவில்லை. தாறுமாறாக நாற்புறமும் பார்த்துக் கட்டப்பபட்டு இருந்ததால் "எது தலைவன் குடிசையாயிருக்க முடியும்?" என்று சிந்தித்த ஜகத்சிம்மனுக்கு ஏதும் விளங்காததால் ஒவ்வொரு குடிசையாக விசாரிக்க எண்ணி காவலனை நோக்கி, "நீ அதோ இருக்கும் இரண்டு குடிசைகளில் விசாரி. நான் இந்தப் புறமிருக்கும் குடிசைகளில் விசாரிக்கிறேன்" என்று கூறிவிட்டு ஒரு குடிசை வாயிலை நோக்கிச் சென்று "யார் உள்ளே?" என்று குரல்

கொடுத்தான். ஒரு வயோதிகப் பெண் வெளியே வந்தாள். "என்னப்பா வேணும்? நீ யார்?" என்று விசாரித்தாள்.

கிழவி மிக விகாரமாயிருந்ததால் முகத்தைச் சுளித்த ஜகத்சிம்மன் "ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லி நகரப் பார்த்தான்.

"ஏனப்பா கூப்பிட்டாய், என்னை?" என்று கிழவி கேட்டுக்கொண்டே அவனை நெருங்கினாள்.

"யார் இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காகக் கூப்பிட்டேன்" என்று பதில் சொல்லிக்கொண்டே நகரப் பார்த்தான் படைத்தலைவன்.

அடுத்த விநாடி கிழவியின் கை அவன் கையைப் பிடித்து அசையவிடாமல் நிறுத்தியது. "ஏனப்பா, இஷ்டப்பட்டால் இங்கு வந்து அழைப்பது. பிறகு சும்மா போய்விடுவது என்பது முறையா? வந்து காரணத்தைச் சொல்" என்று வினவிய கிழவியின் குரல் மிகக் கடுமையாக இருந்தது.

தனது கையைப் பிடித்த கிழவியின் இரும்புக் கையைப் பற்றி பேராச்சரியம் அடைந்தான் படைத்தலைவன். கிழவியின் பிடியில் அவன் கை எலும்புகள் முறிந்துவிடும்போல் இருந்தன. அதனால் வியப்பெய்திய ஜகத்சிம்மன் கிழவியை உற்று நோக்கினான்.

"அவன் தன்னை உற்றுப் பார்த்ததைக் கண்ட கிழவி நகைத்தாள். "ஏனப்பா கிழவியை அப்படிப் பார்க்கிறாய்? சிறு பெண்களாக இருந்தால் உன்னிடம் பேராபத்து போலிருக்கிறதே" என்று நகைப்பின் ஊடே பேசிய கிழவி "வா உள்ளே! சோறு போடுகிறேன்" என்று அழைத்தாள். அழைத்தது மட்டும் அல்ல; கையைப் பிடித்து இழுத்து ஒரே வீச்சில் ஜகத்சிம்மனை குடிசைக்குள் தள்ளினாள்.

அந்த வேகத்தால் குடிசைக்குள் விழுந்த ஜகத்சிம்மன் எழுந்திருக்கும் முன்பாக குடிசைக் கதவு தாளிடப்பட்டது.

கதவுமீது சாய்ந்து கிழவி நின்றிருந்தாள். "உன்னை யார் இங்கு வரச் சொன்னது?" என்று சீற்றத்துடன் வினவினாள் கிழவி.

இந்தக் கேள்வியைக் கேட்டபோது கிழவியின் குரல் அடியோடு மாறிவிட்டது. அதுவரை ஆடிய குரல் வலுப் பெற்றது. அவள் தனது தலையில் இருந்த நரைத்த குழலைக் சுழற்றி எறிந்தாள். சுற்றியிருந்த புடைவையையும் அவிழ்க்க லானாள். சிறிது நேரத்திற்குள் எல்லாம் ஜோடா, படைத் தலைவன் முன்பு நின்றான்.

"மகாராஜா, தாங்களா!" என்று அதிர்ச்சியும் வியப்பும் நிரம்பிய குரலில் கேட்டான், ஜகத்சிம்மன்.

"ஆம். ஏன், தெரியவில்லையா உனக்கு?"

"தெரிகிறது மகாராஜா. ஆனால் என்னை ஏன் பார்க்க மறுத்தீர்கள்"?

ராவ்ஜோடா தனது படைத்தலைவனை உற்று நோக்கினான். "இந்த வில்லவர் கூட்டம், மண்டோருக்கு வெகு அருகில் இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினான்.

"ஆம், மகாராஜா" என்றான் படைத்தலைவன்.

"உங்களைத் தேடிக்கொண்டு மேவார் வீரர்கள் அலைகிறார்கள்" என்றான் ஜோடா.

"ஆம், மகாராஜா! அதனால்தான் நானும் கோட்டைக் காவலனும் பதுங்கியும் சுற்றியும் நேர் வழியில் போகமால் இங்கு வந்தோம்."

"நீங்கள் மட்டுமல்ல, இங்கு வந்தது. மண்டோரின் மேவார் படைவீரரும் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் இங்கு வந்திருப்பது தெரிந்தால் இந்தக் குடிசைகளின் கூட்டம் ரணகளமாகும். இந்த வில்லவர்கள் சாதாரணமானவர்கள்

அல்லர். அவர்கள் அம்புகள் நீண்ட தூரம் பாயவல்லவை. இஷ்டப் பட்டிருந்தால் உன்னை தூரத்தில் வரும்போதே இவர்கள் கொன்றிருப்பார்கள். ஆனால் யாரோ ஒருவன் அடையாளம் கண்டுகொண்டதால் தப்பினாய்" என்று கூறிய ஜோடா, "இப்பொழுதே புறப்படு பிருமச்சாரியின் இருப்பிடத்திற்கு. நான் நாளை விட்டு மறுநாள் வருவதாகச் சொல்" என்றான்.

தரையில் கிடந்த ஜகத்சிம்மன் எழுந்தான். "நாளை வரையில் இங்கு என்ன வேலை மகாராஜா? அதுவும் எதிரிகளுக்கு அருகில் தாங்கள் இருப்பது நல்லதா?" என்று வினவினான்.

"எனக்கு இங்கு எந்தவித ஆபத்தும் இல்லை. நான் இருப்பது மண்டோர் வீரர்களுக்குத் தெரியாது. உன்னை அவர்கள் தொடர்ந்திருப்பதால் நீ இருப்பது தெரியலாம். ஆகவே உன்னுடன் நான் வந்தால் மூவரும் எதிரிகள் கையில் சிக்குவோம். ஆகையால் நீ போய்வா. உன்னை வேறு வழியில் அழைத்துச் செல்ல இரு வேடர்களை அனுப்புகிறேன்" என்றான்.

"இங்கு உங்களுக்குத் துணை?" என்று வினவினான் ஜகத்சிம்மன்.

ஜோடா நகைத்தான் பதிலுக்கு. "இந்த வில்லவரைவிட வேறு துணை தேவையில்லை. இந்தக் கூட்டத்தில் நானூறு வீரர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் விஷம் தோய்த்த வாள்கள் இருக்கின்றன. இவர்களை வெல்வது அத்தனை சுலபமல்ல" என்றான் ஜோடா நகைப்பின் ஊடே.

"நாகரிகமற்ற கூட்டம்" என்று ஜகத்சிம்மன் அலுத்துக் கொண்டான்.

"இவர்களது நாகரிகம் நகரத்தில் இருப்பவர்களுக்குக் கிடையாது. இவர்கள் பொய் பேசமாட்டார்கள். விருந் தோம்பலில் இவர்களுக்கு இணையில்லை" என்றான் ஜோடா.

"காட்டுவாசிகள்" என்று முணுமுணுத்தான் படைத் தலைவன்.

"ஆனால் வந்தவர்களைக் காட்டிக் கொடுக்காதவர்கள்" என்ற ஜோடா "ஜகத்சிம்மா! எனக்கும் காட்டு வாசிகளுக்கும் நிரம்பப் பொருத்தம் இருக்கிறது. வேறு காட்டுத் துணையும் இருக்கிறது எனக்கு. ஆகையால் அஞ்சாதே, போய்வா" என்ற ஜோடா குடிசைக் கதவைத் திறந்து வெளியே செல்ல ஜாடை காட்டினான்.

ஜகத்சிம்மன் வெளியே சென்றான். ஜோடாவின் போக்கு பரம விசித்திரமாயிருந்தது அவனுக்கு. தன்னை குடிசைக்குள் தள்ளியும் மன்னன் ஏன் விளக்கை ஏற்றாமல் குடிசையில் இருளிலேயே பேசினான் என்பது விளங்கவில்லை படைத்தலைவனுக்கு. சிறிது தூரம் நடந்ததும் திரும்பிப் பார்த்தான் குடிசையை. குடிசைக் கதவு தாளிடப்பட்டு இருந்தது. ஏதோ சிந்தித்துக்கொண்டு மீண்டும் குடிசையை நோக்கிச் சென்றான்.

கதவைத் தட்ட முயன்றவன் சட்டென்று நின்றான். உள்ளே இருவர் இரகசியமாகப் பேசுவது ஜகத்சிம்மன் காதில் விழுந்தது. அவற்றில் ஒன்று, பெண் குரல். தன்னுடன் பேசிய நேரத்தில் ஜோடா விளக்கேற்றாத காரணத்தை புரிந்துகொண்டான் படைத்தலைவன். தானும் மன்னனும் பேசுகையில் மூன்றுவது ஒருவர் அந்தக் குடிசையின் மூலையில் இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக்கொண்டான் ஜகத்சிம்மன். மன்னன் ஒரு பெண்ணை அத்தனை எச்சரிக்கையுடன் மறைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்தான். ஏதும் விளங்கவில்லை அவனுக்கு.

"யார் இந்த புதுப் பெண்?" மர்மமாயிருந்தது படைத்தலைவனுக்கு.

30. ஜோடாவின் துன்மார்க்கம்!

மூன்று குணங்களை மனிதன் தவிர்ப்பது நல்லது. தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் அக்கறை காட்டுவது, ஒன்று. ஒட்டுக் கேட்பது, இரண்டு. காலதாமதம் செய்வது, மூன்று. இந்த மூன்றில் ஏதாவது ஒரு குணமே யாரையும் இக்கட்டில் மாட்டவல்லது. மூன்றும் சேர்ந்தால் முடிவு விபரீதம்.

இந்த மூன்றையும் அந்த இரவில் இணைத்துக்கொண்டான் ஜகத்சிம்மன். மன்னனிடம் விடைபெற்றதும் நேராகப் போக வேண்டியவன் திரும்பி வந்தான். உள்ளே ஒரு பெண் குரல் கேட்பதை ஒட்டுக்கேட்டான். அது யார், என்ன விஷயம் என்பதை அறிவதில் அக்கறை காட்டினான். பயணத்தில் துரிதத்தைக் காட்டாமல் காலதாமதம் செய்தான். இதனால் அவனுக்கு ஏற்பட்டது பெருங்கேடு.

குடிசைக்குள்ளே ஜோடாவின் குரலுடன் பெண் குரலொன்றும் கேட்கவே அது யாராயிருக்கும்? யாராக இருந்தாலும் தன்னிடமிருந்து அவளை மறைக்க மன்னன் முயலுவானேன்? என்று சிந்திக்கலானான் மண்டோர் படைத்தலைவன். அந்தப்பெண் குரல் அவனுக்குத் தெரிந்த குரலாயில்லை. ஆனால் அவள் தெளிவாக அரசாங்க விஷயங்களையே பேசினாள்.

"போருக்கு படைகள் சித்தமாயிருக்கின்றன. நீங்கள் இன்னும் இங்கு காலதாமதம் செய்வது உசிதமல்ல" என்றாள் அந்தப்பெண்.

"நீ யார்? அதை முதலில் சொல்" என்று வினவினான் ஜோடா.

அந்தப் பெண் பதில் சொல்லத் தயங்கினாளில்லை. "நான் யார் என்பதைப் பற்றி கவலையில்லை. விஷயம் இது தான், நீங்கள் உடனடியாகப் புறப்பட வேண்டும்" என்று திட்டமாகச் சொன்னாள் அந்தப்பெண். அவள் குரலில் பணிவில்லை, அதிகார தோரணையிருந்தது.

ஜோடா சிறிது சிந்தித்தான். "உன் போக்கு விசித்திரமாக இருக்கிறது. என் குடிசையில் இருளில் மறைந்து நிற்கிறாய். எனக்கும் தெரியாமல் நுழைந்திருக்கிறாய். இத்தனைக்கும் பருவப்பெண். யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்று வினவினான் ஜோடா, சில விநாடிகளுக்குப் பிறகு.

பதிலுக்கு அந்தப் பெண் மிக மதுரமாக நகைத்தாள். "ஜோடாவின் கீர்த்தி மகத்தானது. எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்காத உத்தமர் என்பது ராஜபுதனத்தில் பிரசித்தம்" என்றாள் அவள் நகைப்பின் ஊடே. மேலும் சொன்னாள் "அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு புருஷர்களின் சந்தேகபுத்தி காரணமாக நற்பெயர் கெடவும் செய்யலாம். ஆனால் நாட்டுக்குத் தியாகம் செய்ய விரும்புவர்கள் இதை லட்சியம் செய்ய முடியாது" என்று.

அடுத்து அந்தக் குடிசைக்குள் இருந்து பேச்சு எதுவும் கேட்கவில்லை. ஏன் இருவரும் திடீரென மவுனமாகி விட்டார்கள் என்று புரியவில்லை மண்டோர் சேனாதிபதிக்கு. இருப்பினும் அவன் அதுவரை கேட்ட உரையாடல் ரசமாயிருந்ததால் மேலும் அங்கேயே நின்றான். சில விநாடிகளுக்குப் பிறகு உரையாடல் மீண்டும் துவங்கிற்று. "நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஆனால் எதிரிப் படைகள் வழியில் சதா உலாவும்போது நீ வந்தது சரியல்ல" என்ற ராவ்ஜோடா "சரி பெண்ணே! உன்னை அனுப்பியது யார்?" என்று விசாரித்தான்.

அந்தப் பெண் லேசாகச் சிரித்தாள். "நீங்கள்தான் ஊகித்துப் பாருங்களேன்" என்ற அவள் பதிலிலும் நகைப் பொலி இருந்தது.

"பிருமச்சாரியா?" என்று வினவினான் ஜோடா.

"பிருமச்சாரியைவிட அக்கறையுள்ளவர்" என்றாள் அவள்.

"வனப்பிரஸ்த ஜோகியா?" என்று மீண்டும் வினவினான், ஜோடா.

"அவரையும் விட உங்களிடம் அக்கறையுள்ளவர்" என்று அந்தப் பெண் வலியுறுத்திச்சொன்னாள்.

"புரியவில்லை எனக்கு" என்று ஜோடா கூறினான் அவன் குரலில் சிந்தனை ஒலித்தது.

"எந்தப் புருஷனிடமும் பூர்ண அக்கறை உள்ளவள் அவனை விரும்பும் பெண்தான். இது புரியவில்லையே மகாராஜா உங்களுக்கு. மண்டோர் வந்ததும் அவளை மறந்துவிட்டீர்களே" என்று குற்றம் சாட்டினாள் அவள்.

"மறக்கவில்லை பெண்ணே. ஆனால் படை திரட்டிய விஷயமாகையால் ஹர்பாசங்க்லாவாக இருக்குமோ என்று எண்ணினேன்" என்ற ஜோடா, "பெண்ணே! இந்த இருட்டில் நான் உன்னுடன் நிற்பது தவறு. எதற்கும் அந்த மூலையிலுள்ள அகல்விளக்கை ஏற்று ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசுவோம்" என்றான்.

அதற்கு அவள் பதிலும் சொல்லவில்லை. குடிசை மூலைக்குச் செல்லவும் இல்லை. "மகாராஜா! என் முகத்தை நீங்கள் பார்க்கக் கூடாது" என்றாள்.

"ஏன்? பார்த்தால் என்ன?" சந்தேகத்துடன் கேட்டான் ஜோடா.

"நான் பர்தாவுக்குள் இருப்பவள், ராஜஸ்திரீ. என் முகத்தை நீங்கள் பார்ப்பதற்கில்லை" என்றாள் அவள். "தவிர முகத்தைப் பார்த்தாலும் உங்களுக்கு அடையாளம் புரியாது. முகம் பார்ப்பதற்கு அழகாயிருக்காது" என்றும் சொன்னாள்.

"அது நான் தீர்மானிக்க வேண்டிய விஷயம்" என்றான் ஜோடா.

"எது?" அந்தப் பெண்ணின் கேள்வியில் கேலி இருந்தது.

"உன் முகம் அழகா இல்லையா என்பது."

"முகத்தில் என்ன இருக்கிறது மகாராஜா?"

"எதில்தான் எது இருக்கிறது?"

"ஏன்? ஒரு பெண்ணின் அவயவ லாவண்யங்கள் போதாதா?"

"அப்படியா! உன் அழகு அப்படியானால் நான் அதைப் பார்க்கத்தான் வேண்டும்."

ஜோடாவின் இந்தப் பேச்சை வெளியிலிருந்து கேட்ட ஜகத்சிம்மன் 'அடபாவி! இவ்வளவுதானா நீ?' என்று வெறுத்துக்கொண்டான்.

"மகாராஜா!" என்று அச்சத்துடன் பேசினாள் அந்தப் பெண்.

"என்ன பெண்ணே?"

"நீங்கள் பேசுவது அதர்மம்."

"தர்மாதர்மங்களை நிர்ணயிக்கும் நேரமல்ல இது."

"வேறு அதை நிர்ணயிக்கும் நேரம்?"

"அனுபவ நேரம்."

"என்ன மகாராஜா சொல்கிறீர்கள்?" என்று அவள் வினவினாள். அவள் குரலில் அச்சம் பெரிதும் ஒலித்தது.

"பெண்ணே! நீ எந்த ஊர்?"

"மண்டோர்."

"அப்படியானால் என் பிரஜை."

"ஆம்!"

"ஒவ்வொரு பிரஜையும் மன்னனைச் சேர்ந்தவள். உன் அங்கலாவண்யத்தை நான் பார்த்தே தீர வேண்டும்" என்று கூறிக்கொண்டே அவளை நெருங்கினான் ஜோடா.

"மகாராஜா! அருகே வராதீர்கள்?"

"வந்தால் என்ன செய்வாய்?"

"வந்து பாருங்கள் தெரியும்."

"அப்படியா!"

"அது மட்டுமல்ல மகாராஜா, உங்கள் படைத்தலைவர் போகாதிருந்தால் உங்களுக்கு ஆபத்து. எந்த ராஜபுத்திரனும் ஒரு பெண்ணுக்காக உயிர் விடவும் தயங்கமாட்டான்" என்று எச்சரித்தாள் அவள்.

இதைக் கேட்ட ஜோடா நகைத்தான் பெரிதாக. "அடி பைத்தியக்காரி! எனது படைத்தலைவன் இந்தக் குடிசையை விட்டு நேராகக் கிளம்பிச் சென்று இருக்காவிட்டால் அவன் மீது விஷக்கணைகளைப் பாய்ச்சிட வில்லவர் தயாராயிருப்பார்கள். இந்தக் குடிசைக் கதவை அவன் தொட வேண்டியதுதான். அடுத்த விநாடி பிணமாகிவிடுவான்" என்ற ஜோடா அந்தப் பெண்ணை நெருங்கினான்.

ஜகத்சிம்மன் ஏதும் செய்ய இயலாமல் நின்றான். குடிசைக் கதவைத் தொட்டால் தன் உயிர் அரைக் காசு பெறாது என்பது அவனுக்குத் திடமாகத் தெரிந்திருந்தது. ஆனால் உள்ளே ஜோடா தொடங்க இருந்த துன்மார்க்கச் செய்கையை அவனால் சகிக்க இயலாமலும் இருந்தது. என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். அந்தப் பெண்ணைக் காக்க வேண்டியது தனது கடமை என நினைத்தான். ஒரு

பெண்ணுக்காக உயிர்விடத் தயங்கமாட்டான் என்று உள்ளே அந்தப் பெண் கூறியதை நினைத்ததும் அவன் ஆத்திரம் அதிகமாயிற்று. அப்படியும் போதிய துணிவு இல்லாததால் சிறிது நிதானித்தான்.

அப்பொழுது மீண்டும் கேட்டது அந்தக்குரல், "மகாராஜா! வேண்டாம். என்னைத் தொடாதீர்கள்" என்று. ஆனால் அதில் வேட்கை மறைமுகமாக இருந்ததே தவிர அச்சம் இல்லை என்பதை உணர்ச்சிகளை இழந்து நின்ற ஜகத்சிம்மன் அறியவில்லை.

அந்தப்பெண் அடுத்துச் சொன்ன வார்த்தை விபரீதமாயிருந்தன. "மகாராஜா! என்னைத் தூக்காதீர்கள்" என்று கெஞ்சினாள் அவள்.

"பெண்ணே! அருகில் அமுதத்தை வைத்து அருந்தாமல் இரு என்று கட்டளை இட்டால் எவன் சும்மா இருக்க முடியும்? உன் அங்க லாவண்யங்களை சிறிது பார்க்கிறேன்" என்ற ஜோடா அடுத்து என்ன செய்தானோ ஏது செய்தானோ தெரியாது. அந்தப் பெண்ணின் பெருமூச்சும் வேறு சில இன்ப ஒலிகளுமே குடிசையில் இருந்து வெளிவந்தன. அடுத்து அவள் முணுமுணுத்தாள், "மகாராஜா! இது கட்டாந்தாரை" என்று.

ஜோடா நகைத்தான் மெல்ல. "அடி பைத்தியமே, கட்டாந்தாரை கட்டிலைவிட சிறந்து விளங்கும் சமயம் உண்டு. இன்பம் உணர்ச்சிகளைப் பொறுத்தது, இடத்தைப் பொறுத்ததல்ல" என்றான் ஜோடா மெதுவாக நகைப்பின் ஊடே.

அடுத்து தரையில் யாரோ தட்டென்று விழும் சத்தம் கேட்டது.

அதற்குமேல் ஜகத்சிம்மன் அங்கு நிற்கவில்லை. திரும்பி வெகு வேகமாக ஓடினான்.

31. மணக்கோலம்!

வீரனாகப் படைகளை இயக்கி, இழந்த அரசை மீட்பதில் சித்தத்தை செலுத்த வேண்டிய மார்வார் மன்னன், கேவலம், பெண் மோகம் கொண்டவனாகக் குடிசையில் மறைந்து கொண்டு காலத்தை ஓட்டுவதை நினைத்த ஜகத்சிம்மன் வேடவர் குடிசைக் கூட்டத்தில் இருந்து வெளியே வரும்வரை தனது ஓட்டத்தை நிறுத்தவில்லை. ராவ்ஜோடாவின் இந்த விபரீத வாழ்க்கையை பிரும்மச்சாரி ஹர்பாசங்க்லாவிடம் சொல்லுவது எத்தனை அவசியம் என்பதை உணர்ந்த ஜகத்சிம்மன், தன்னுடன் வந்த காவலன் நின்றிருந்த இடத்தை அடைந்தவுடன் "மண்டோர் கோட்டைக் காவலரே! தாமதிப்பதற்கு நேரமில்லை; உடனே புறப்படும்" என்று அவனையும் துரிதப்படுத்தி மலைச்சரிவில் அவனுக்கு முன்பாகவே இறங்கலானான்.

படைத்தலைவன் துரிதத்துக்குக் காரணம் தெரியாத காவலனும் படைத்தலைவனைப் பின்பற்றி இறங்கிக்கொண்டே வினவினான், "ஏன் இத்தனை அவசரம்? எதிரி சோதனைப் படையினர் விலகினால் நாம் பயணம் செய்வது சவுகரியமாகயிருக்கும். ஆகவே இன்னும் ஒரு நாள் தாமதித்தால் என்ன?" என்று.

ஜகத்சிம்மன் காவலனைக் திரும்பியும் பார்க்காமல் இறங்கிக்கொண்டே "ஒரு நாளா! ஒரு நிமிடம் கூட இங்கு நாம் தாமதிக்க முடியாது" என்று கூறினான் கடுப்புடன்.

"நம்மைப் பிடிக்க சதா சுற்றிக்கொண்டிருக்கும் மேவார் வீரர்கள் வசம் அகப்பட அத்தனை அவசரமாக்கும் உங்களுக்கு?" என்று விஷமமாகப் பேசினான், மண்டோர் கோட்டைக் காவலன்.

படைத்தலைவன் அந்த ஏளனப் பேச்சில் கலந்து கொள்ளவுமில்லை, உடனடியாகப் பதில் சொல்லவுமில்லை. பதில் சொன்ன போது பேச்சு மிகத் திட்டமாயிருந்தது. "கடமை அழைக்கும்போது நாம் துரிதத்தைக் காட்டுவது விவேகம்" என்று கூறினான் ஜகத்சிம்மன்.

காவலன் மேலும் தன் விஷமத்தைக் காட்டினான். "உங்கள் துரிதம் ஏற்கனவே பலன் அளித்திருக்கிறது. அரசரின் உத்தரவுக்கு விரோதமாக நீங்கள் சந்தசிம்மனை இரவில் தாக்கியிராவிட்டால் மகாராஜா ஊர் சிரிக்க, ஊரை விட்டு ஓட அவசியம் இருந்திருக்காது" என்று பழைய கதையைச் சுட்டிக் காட்டினான் காவலன்.

ஜகத்சிம்மன் தனது வேகத்தை சிறிது தளர்த்தித் திரும்பி காவலனை நோக்கி "மகாராஜாவைப் பார்த்து ஊர் சிரிக்க நமது முயற்சி எதுவும் இனிமேல் தேவையில்லை" என்று கூறினான்.

"ஏன்?" காவலன் கேள்வியில் வியப்பு இருந்தது.

"அவரே அதற்கு ஏற்பாடு செய்துகொள்கிறார்" என்றான் ஜகத்சிம்மன்.

"எதற்கு?"

"ஊர் சிரிப்பதற்கு."

"நீங்கள் சொல்வது புரியவில்லை எனக்கு."

"பிருமச்சாரியிடம் போனதும் புரியும்."

"அதற்கு முன்பு நீங்கள் சொல்ல மாட்டீர்களாக்கும்?"

"மாட்டேன்."

"ஏன்?"

"நானும் மார்வார் ராஜவம்சத்தைச் சேர்ந்தவன். இந்த மகாராஜா இல்லாவிட்டால்—" என்ற ஜகத்சிம்மன் சொற்களை முடிக்கவில்லை.

காவலன் நன்றாகப் புரிந்துகொண்டான். மார்வார் அரியணைமீது ஜகத்சிம்மன் ஒரு கண் வைத்து இருக்கிறான் என்பதையும், இந்த துர் எண்ணம் அவனுக்கு நீண்ட நாளாக இருந்து இருக்க வேண்டும் என்பதையும், சந்தசிம்மனை இரவில் தாக்கியது, ஜோடாவை ஓடவைத்தது, இப்பொழுது மீண்டும் ஜோடாவின் மதிப்பை ஏதோ கட்டுக்கதை சொல்லி கீழே இழுக்கப் பார்ப்பது ஆகிய அனைத்தும் மார்வார் அரியணைக்காகத் திட்டமிட்டுச் செய்யப்படும் சதி என்பதைப் புரிந்துகொண்ட காவலன் மேலும் அவனைத் தன் வலையில் இழுக்கப் பார்த்து "படைத்தலைவரைப் போன்ற ஒரு மகாவீரர் இருக்கும்வரை மார்வார் மக்களுக்கு என்ன குறை இருக்க முடியும்." என்று அவனுக்குச் சாதகமாகவும், மேல் பூச்சாகவும் பேசினான் காவலன்.

ஜகத்சிம்மன் காவலனைத் தனது பக்கத்தில் நடந்து வரும்படி சைகை செய்தான். வந்ததும் அவனிடம் கேட்டான், "உன் பேச்சு இதயத்தில் இருந்து வருகிறதா?" என்று.

காவலன் மீண்டும் ஜகத்சிம்மனின் ஆசை நெருப்பைத் தூண்டினான். "என் இதயத்தில் மட்டும் அல்ல, மார்வார் மக்கள் இதயத்திலும் இதுதான் இருக்கிறது" என்று.

"எது?"

"தங்கள் வீரதீர பராக்கிரமம், நன்னடத்தை."

"கடைசியாகச் சொன்னதைத் திரும்பச் சொல்."

"நன்னடத்தை."

"மன்னனுக்கு அது வேண்டும் அல்லவா?"

"அவசியம் வேண்டும்." இதைச் சற்று அழுத்தியே காவலன் சொன்னான்.

ஜகத்சிம்மன் போலிப் பெருமூச்செறிந்தான். "அதுதான் நமது மன்னனிடம் இல்லை" என்றும் கூறினான், பெருமூச்சின் ஊடே துன்பச் சாயலைப் படரவிட்டு.

காவலன் சட்டென்று நடையை நிறுத்தினான். "யார் சொன்னது?" என்று போலி சீற்றத்துடன் வினவினான்.

"யாரும் சொல்லத் தேவையில்லை. என் காதார நானே கேட்டேன்" என்றான் ஜகத்சிம்மன் துன்பக்குரலில்.

காவலன் முகத்தில் விவரிக்க இயலாத வியப்பு விரிந்தது. "என்ன கேட்டீர்கள்?" என்று வினவினான், வியப்பு குரலிலும் ஒலிக்க.

"சரச மொழிகள்."

"என்ன?"

"ஆமாம். நமது மன்னர் யாரோ ஒரு பெண்ணிடம் வேடவர் குடியில் சரசமாடிக்கொண்டிருக்கிறார்."

"மன்னரைப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன் பேசினேன். புதுத்தலைவர் என்று வேடவர்கள் சொன்னார்களே அது வேறு யாரும் அல்லர். நமது மன்னர்தான்."

"போர் மூள இருக்கும் சமயத்தில் இங்கு என்ன செய்கிறார் மன்னர்?"

"அதைத்தான் ஏற்கெனவே சொன்னேனே."

"நீங்கள் சொல்வதை நான் நம்பவில்லை. நமது மன்னர் குணம் எல்லோருக்கும் தெரியும்."

"உலகத்தில் எத்தனையோ பெரிய மனிதர்கள் உள்ளொரு வாழ்க்கையும், புறமொரு வாழ்க்கையும் நடத்தி உலகை

ஏமாற்றுகிறார்கள். வா சீக்கிரம். நமது மன்னன் சாயத்தை வெளுக்கிறேன்" என்ற ஜகத்சிம்மன் மீண்டும் நடையில் வேகத்தைக் காட்டினான். காவலனும் மேற்கொண்டு பேசாமல் அவனைப் பின்தொடர்ந்தான்.

ஜகத்சிம்மன் எத்தனை வேகத்தைக் காட்டினாலும் சாந்தோஜியின் வீரர்கள் பாலைவனப் புறங்களையும் மலையடிவாரங்களையும் சல்லடை போட்டு சலித்துக் கொண்டிருந்த படியால் துரிதமாகப் பயணம் செய்ய முடியவில்லை.

பொழுது விடிந்த சமயத்திலும் பாதி தூரத்தை அவன் கடக்க முடியவில்லை. மலைக் குகைகளில் பதுங்கியும், மரக் கூட்டங்களில் மறைந்தும் பயணம் செய்தான் ஜகத்சிம்மன். சில சமயங்களில் மேவார் வீரர்கள் ஜகத்சிம்மனும் காவலனும் பதுங்கியிருந்த இடத்தைக்கூட அணுகிவிட்டார்கள். அப்படியும் குகை வாயிலில் பாறையொன்றை சாமர்த்தியமாக ஜகத்சிம்மன் நகர்த்தி அடைத்திருந்ததால் வீரர்கள் திரும்பிச் சென்றார்கள். அந்த மலைக்குகையில் அன்று மாலை வரை கழித்த ஜகத்சிம்மன் சற்று இருட்டியதும் வெளியில் வந்து காவலனுடன் பயணம் செய்தான்.

ஒருநாள் முழுவதும் பட்டினியிருந்ததாலும், கரடுமுரடான மலைப்பாதையிலேயே முக்கால்வாசிப் பயணத்தை முடிக்க வேண்டியிருந்ததாலும் ஜகத்சிம்மன் மன்னனைப் பார்த்த மறுநாளைக்கு மறுநாள் காலை மிகுந்த ஆயாசத்துடன் ஹர்பா சங்க்லாவின் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கு இருந்த நிலை கண்டு பிரமிப்படைந்தான்.

ஹர்பாசங்க்லாவின் விடுதியெங்கும் மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வாயிலில் நீர் தெளித்து வண்ணக் கோலங்கள் போடப்பட்டு இருந்தன. ராஜபுதன இசை வாத்தியங்கள் விடுதிக்குள் பலமாக முழங்கிக் கொண்டிருந்தன. "பிருமச்சாரி! இங்கு என்ன விசேஷம்?

சுத்த விரதம் இனிமேல் அடுத்த வருடம்தானே?" என்று வினவினான் ஜகத்சிம்மன். காவலன் ஏதும் புரியாமல் வாயைப் பிளந்துகொண்டு நின்றான்.

ஹர்பாசங்க்லா ஜகத்சிம்மன் முதுகில் தட்டிக் கொடுத்தார். ஏதோ பேய் அறைவதுபோல் விழுந்த அந்த அடியால் முகம் சுளித்த ஜகத்சிம்மனைப் பார்த்து "படைத்தலைவரே! நமது ஆயுத விடுதியில் உங்கள் இருவருக்கும் புது துணிமணிகள் இருக்கின்றன. அருவியில் நீராடி சீக்கிரம் புத்தாடை அணிந்து வாருங்கள்" என்றார்.

"என்ன விசேஷம், நாங்கள் புத்தாடை புனைய?" என்று வினவினான் ஜகத்சிம்மன்.

"போய் சீக்கிரம் வாரும். நேரம் அதிகம் இல்லை" என்று துரிதப்படுத்தினார் ஹர்பாசங்க்லா.

அதற்குமேல் அவரை ஏதாவது கேட்டால் முதுகில் இன்னொரு தட்டுக் கிடைக்கும் என்ற அச்சத்தால் ஜகத்சிம்மன் காவலனுடன் சென்று அருவியில் நீராடி ஆயுத விடுதிக்கு வந்தான். அங்கிருந்த இரு வீரர்கள் அவனுக்கும் காவலனுக்கும் விலை உயர்ந்த உடைகளைக் கொடுத்து "இவற்றை அணிந்து வாருங்கள். இங்கேயே சிற்றுண்டி அருந்தலாம். பிறகு போகலாம் பக்க விடுதிக்கு" என்று உபசாரம் செய்தார்கள்.

ஜகத்சிம்மன் பேசாமல் புத்தாடை புனைந்தான். காவலனும் உடைமாற்றிக் கொண்டான். சிற்றுண்டி பேருண்டியாகவே இருந்தது. பலவகைப் பலகாரங்கள் இருவருக்கும் அளிக்கப் பட்டும்கூட ஜகத்சிம்மனால் சரிவர உண்ண முடியவில்லை. சீக்கிரம் ஆகாரத்தை முடித்துக்கொண்டு பெரிய விடுதிக்குக் கிளம்பினான் காவலனுடன். அங்கு வாயிலில் அவனுக்கு பன்னீர் தெளிக்கப்பட்டது. கையில் புஷ்பமும் சந்தனமும் அளிக்கப்பட்டன. ஜகத்சிம்மனைக் கண்டதும் மங்கள வாத்தியங்கள் சிறிது அதிகமாகவே முழங்கன.

அதற்குமேல் பொறுக்க முடியாத படைத்தலைவன் ஹர்பாசங்க்லாவை நோக்கி, "தங்களுடன் ஒருசில வார்த்தைகள் பேச வேண்டும்" என்றான்.

"பிறகு பேசலாம், முதலில் உள்ளே போவோம்" என்றார் பிருமசாரி.

"விஷயம் மிக முக்கியம். அவசரம்" என்றான் படைத் தலைவன்.

"எதைப் பற்றி?"

"யாரைப் பற்றி என்று கேளுங்கள் பிருமச்சாரி."

"சரி, யாரைப் பற்றி?"

"மன்னரைப் பற்றி."

"எந்த மன்னரைப் பற்றி."

"மண்டோருக்கு இரண்டு மன்னர்கள் உண்டா?"

"உண்டு. மண்டோரை விட்டவர் ஒருவர், பிடித்தவர் ஒருவர்."

ஜகத்சிம்மன் சீற்றம் மிகுதியால் "விட்டவரைப் பற்றித்தான்" என்று கூறினான் குரலில் உஷ்ணத்தைக் காட்டி.

"யார்? ராவ்ஜோடாவைப் பற்றியா?" என்று கேட்டார் பிருமச்சாரி.

"ஆம்" என்றான் ஜகத்சிம்மன்.

"சரி, உள்ளே வாரும். அங்கேயே ஒருபுறமாய் உட்கார்ந்து பேசுவோம்" என்ற பிருமச்சாரி, அவனை வலுக்கட்டாயமாய் உள்ளே இழுத்துச் சென்றார். காவலனும் பின்தொடர்ந்தான் குழப்பமும் வியப்பும் கலந்த சிந்தையுடன்.

உள்ளே கூடத்துக்கு வந்ததும் ஜகத்சிம்மன் வாயடைத்து நின்றான். காவலன் வியப்பினால் வாயைப் பெரியதாகட்

பிளந்தான். கூடத்தில் ராவ்ஜோடாவும் மலை அரசியும் திருமணக்கோலத்தில் காட்சியளித்தார்கள். அவன் வந்த சமயம் ராவ்ஜோடா மலை அரசிக்கு மங்கலக் கங்கணத்தைக் கட்ட முற்பட்டான். வாத்தியங்கள் பெரிதாக முழங்கின. அதைவிடப் பெரிதாக எழுந்தது ஜகத்சிம்மன் குரல். "நிறுத்துங்கள். இந்த விவாகம் நடக்கக்கூடாது" என்று கூறினான் படைத்தலைவன்.

கடும் கண்கள் பல அவனை நோக்கித் திரும்பின. இரு வீரர்கள் அவனை அங்கேயே வெட்டிப்போட வாளையும் உருவினார்கள்.

32. சந்திர முகம்

மண்டோர் படைத்தலைவனான ஜகத்சிம்மன் தனது மன்னனின் திருமணத்தையே நிறுத்த முயன்றதும், அதற்காகக் கூச்சலிட்டதும் பலருக்கு கோபத்தையும் சிலருக்கு வியப்பையும் உண்டாக்கினாலும், பிருமச்சாரி ஹர்பாசங்க்லாவோ, திருமணப் பந்தலில் உட்கார்ந்திருந்த ராவ்ஜோடாவோ மலை அரசியோ படைத்தலைவன் போக்கை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. ஜகத்சிம்மனை வெட்டிப்போட வாட்களை உருவிய இரு வீரர்களை பிருமச்சாரி தமது கையசைப்பினால் தடுத்துவிட்டு, ஏதுமே நடக்காததுபோல் மணப்பந்தலைக் கவனிக்கலானார்.

ராவ்ஜோடாவும் மங்கல கங்கணத்தை மகிழ்ச்சியுடன் மலை அரசியின் கையில் முடிந்தான். வாத்தியங்கள் மீண்டும் முழங்கின. மங்கல சூத்திரமும் மலை அரசியின் கழுத்தில் புனையப்பட்டது.

விஷயம் அத்துடன் முடிந்திருக்க வேண்டியது நியாயமாக இருந்தாலும் முடியவிடாத படைத்தலைவன், "மன்னர் திருமணம் முடிந்துவிட்டாலும் ராஜபுத்திரன் என்ற முறையில் நான் என் கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது. நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று துவங்கினான். அவன் பேச்சை மேலே ஓடவிடாத பிருமச்சாரி, "அதைப் பின்னால் கேட்போம். பேசாமல் உட்கார்" என்று சர்வசாதாரணமாகச் சொன்னார்.

ஆனால் அவர் வார்த்தையைக் கேளாத ஜகத்சிம்மன் மேலும் கூவினான். "மன்னருக்கு மலை அரசி முதல் மனைவியல்ல" என்று.

"அதனால் என்ன?" என்று கேட்டார் பிருமசாரி சற்றே தலையை அவனை நோக்கித் திருப்பி.

"அதனால் என்னவா?" ஜகத்சிம்மன் குரலில் வியப்பு ஒலித்தது.

"ஆம், அதனாலென்ன? ராஜபுதன மன்னர்கள் பல பெண்களை மணம்புரிவது வழக்கந்தானே!" என்று வினவினார் பிருமச்சாரி.

"வழக்கந்தான்—" குழம்பினான் ஜகத்சிம்மன்.

"அப்படியானால் பேசாதிரு" என்ற பிருமச்சாரி, வாளை உருவிய இரு வீரர்களையும் நோக்கி "படைத் தலைவரை சிறிதுநேரம் பக்கத்து விடுதிக்கு அழைத்துச் சென்று உணவு அளியுங்கள்" என்றும் சிபாரிசு செய்யவே ஜகத்சிம்மன் பலவந்தமாக இரு வீரர்களால் இழுத்துச் செல்லப்பட்டான்.

உள்ளே திருமண வைபவம் கோலாகலமாக நடந்துகொண்டிருந்தது. அடுத்த விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜகத்சிம்மனுக்கும் மண்டோர் கோட்டைக் காவலனுக்கும் தெளிவாகக் காதில் விழுந்தது. உணவு விடுதிக்குச் சென்ற பின்பும் ஜகத்சிம்மன் உணவருந்த மறுத்து வாசலிலேயே உட்கார்ந்தான். அவனை அழைத்துவந்த, அதாவது பிடித்து இழுத்து வந்த இரு வீரரும் "படைத் தலைவரை உணவருந்துமாறு பிருமச்சாரி உத்தர விட்டிருக்கிறார்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

ஜகத்சிம்மன் அவர்களை கடும் கண்களுடன் நோக்கினான். "நான் பிருமச்சாரியின் அடிமையில்லை" என்று சீறினான்.

வீரர்கள் இருவரும் தலைவணங்கி, "உண்மை" என்றார்கள்.

ஜகத்சிம்மனுடன் வந்த கோட்டைக் காவலன் மட்டும் "படைத் தலைவரே! உங்களுக்கு திடீரெனக் கோபம் வரக் காரணம் என்ன?" என்று வினவினான்.

ஜகத்சிம்மன் கண்கள் காவலனை சீற்றத்துடன் நோக்கின. "மன்னர் மணம் புரிந்துகொண்டு விட்டார்" என்று குறிப்பிட்டான்.

காவலன் கேட்டான் "அது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா?" என்று.

"இல்லை" என்றான் ஜகத்சிம்மன் திட்டமாக.

காவலன் ஜகத்சிம்மனை சந்தேகப் பார்வையாகப் பார்த்தான். அவனை இழுத்து வந்த காவலரையும் நோக்கினான். ஆமாம் என்பதற்கு அறிகுறியாக இருவரும் தலையசைத்தார்கள்.

"பயப்பட வேண்டாம். நீங்கள் செல்லுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று காவலன் தைரியம் சொன்னான் அந்த வீரர்களுக்கு.

வீரர்களில் ஒருவன் வினவினான், "இவரை உங்கள் ஒருவரால் சமாளிக்க முடியுமா?" என்று.

"முடியும். கவலைப்படாதீர்கள்" என்று காவலன் கூற இரு வீரரும் சென்றார்கள் திருமண விடுதியை நோக்கி.

அவர்கள் சென்ற பின்பு ஜகத்சிம்மன் காவலனை நோக்கி "என்னை பைத்தியம் என்று தீர்மானித்துவிட்டாய்?" என்று சீறினான்.

"சேசே! அப்படியொன்றும் இல்லை. வாருங்கள் சாப்பி[டு]வோம். சாப்பிட்டால் சிறிது நிதானத்துக்கு வருவீர்கள்" என்றான் காவலன்.

"மனிதனுக்கு சாப்பாடுதான் முக்கியமா?" ஜகத்சிம்ம[ன்] கேள்வியில் வெறுப்பு இருந்தது.

"சந்தேகமாக இருக்கிறதா உங்களுக்கு? இரண்டு நாளாக நாம் கிடந்த உபவாசம்..." காவலன் சொற்களை முடிக்கவில்லை.

"பத்துநாள் வேண்டுமானாலும் பட்டினி கிடக்க என்னால் முடியும்" என்றான் ஜகத்சிம்மன் காவலனை மறுத்து ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக.

"அது சரி. இப்பொழுது உணவு கிடைக்கும்போது சாப்பிட்டால் என்ன?" என்று காவலன் கேட்டான்.

ஜகத்சிம்மன் பதில் சொல்லாததால் காவலன் தான் மாத்திரம் உள்ளே சென்று உணவருந்தி வந்தான். ஜகத்சிம்மன் முகத்தில் அப்பொழுதும் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. அவன் கண்களில் விவரிக்க இயலாத ஒரு வெறியும் துளிர்த்தது. இந்த விபரீதக் குறிகளைக் கண்ட காவலன் "படைத்ததலைவரே!" என்று மெள்ள அழைத்தான்.

"என்ன?" உஷ்ணமாக வந்தது படைத்தலைவன் பதில்.

"மன்னர் திருமணத்துக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான் காவலன்.

"மண்டோருக்கும் மன்னனுக்கும் உள்ள சம்பந்தம்."

"அது என்ன சம்பந்தமோ?"

"மலை அரசி! பாவம்!"

"இஷ்டப்பட்டுத்தானே மணந்துகொள்கிறாள்."

"ஆம், ஆனால் அவளுக்கு மன்னனைப் பற்றி உண்மை தெரியாது."

"என்ன உண்மை?"

"வேறொரு பெண்ணை மன்னர் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார் என்பது."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஒட்டுக் கேட்டேன்."

"ஒட்டுக் கேட்டீர்களா?" காவலன் குரலில் பிரமிப்பு இருந்தது.

"ஆம்" என்றான் ஜகத்சிம்மன்.

"எங்கு?"

"வேடவர் குடிசையில்."

"ஒட்டுக் கேட்பது வீரனுக்கு அழகல்லவே."

"அது சமய சந்தர்ப்பங்களை மனிதர்களைப் பொறுத்தது."

"தாங்கள் அப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவர் போலிருக்கிறது?"

இதற்கு ஜகத்சிம்மன் பதில் சொல்லவில்லை. எழுந்து வெளியே சென்றுவிட்டான். பகல் முழுவதும் அவன் திரும்பவில்லை. அவனைப்பற்றி யாரும் விசாரிக்கவும் இல்லை. இரவும் வந்தது. ஐந்தாம் பிறைச்சந்திரன் வானத்தில் உலாவலானான்.

அதை தமது விடுதி வாயிலில் நின்று கவனித்த பிருமச்சாரி "இன்னும் சரியாக பத்து நாட்கள் இருக்கின்றன" என்று முணுமுணுத்துக் கொண்டார். பிறகு தமது பக்கத்தில் யாரோ வந்து நிற்பதை அறிந்து திரும்பி நோக்கினார். மண்டோர் கோட்டைக் காவலன் நின்றுகொண்டிருந்தான்.

"நீங்கள்தான் மண்டோர் கோட்டைக் காவலரா?" என்று வினவினார் பிருமச்சாரி.

"ஆம்" என்றான் காவலன் அவருக்குத் தலைவணங்கி.

"நாம் மண்டோரை முற்றுகையிட்டால் ஊர் நிலைமை எப்படியிருக்கும்?" என்று பிருமச்சாரி வினவினார்.

"மக்கள் புரட்சி செய்வார்கள். கோட்டைக் கதவுகள் திறக்கப்படும்" என்றான் காவலன்.

"இப்பொழுது இருக்கும் ஆட்சி..."

"மக்களுக்குப் பிடிக்கவில்லை."

"ஏன்?"

"ராவ்ஜோடாவை மக்கள் நேசிக்கிறார்கள். தவிர மார்வாருக்கும் மேவாருக்கும் சில காலமாகவே பூசல் இருந்து வருகிறது. இப்பொழுது சந்தசிம்மன் புதல்வர் ஆட்சியில் மக்கள் வெறுப்பு அதிகப்பட்டிருக்கிறது."

திருப்திக்கு அறிகுறியாகத் தலையசைத்தார் பிருமச்சாரி. திடீரென்று "படைத்தலைவர் எங்கே?" என்று விசாரித்தார் காவலனை.

"காணவில்லை" என்றான் காவலன்.

அதை பிருமச்சாரி பொருட்படுத்தவில்லை. "நல்லது. படைத்தலைவர்கள் அதிகமாக ஆக தொல்லைதானே தவிர வேறில்லை" என்றார்.

இதைக்கேட்டு பிரமித்தான் காவலன். "மன்னருக்கு வேறு படைத்தலைவர் இருக்கிறாரா?" என்று வினவவும் செய்தான், பிரமிப்பு குரலிலும் ஊடுருவ.

"இரண்டு பேர் இருக்கிறார்கள்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன பிருமச்சாரி "நான் ஒருவன் இங்கிருக்கும் படைகளுக்கு; தெற்கில் இருந்துவரும் புரவிப் படைகளுக்குப் பாபுஜி இருக்கிறார்" என்று விளக்கினார்.

இதைக் கேட்ட காவலன் பிரமித்தான். "மண்டோரை இரண்டு படைகள் தாக்கப் போகின்றனவா?" என்றும் வினவினான்.

"ஆம்" என்ற பிருமச்சாரி "ஆகையால் ஜகத்சிம்மன் தேவையில்லை" என்று தெரிவித்துவிட்டு உள்ளே சென்றார்.

காவலன் அதிர்சிசியுற்று நின்றான். "இந்த நிலையில் படைத்தலைவர் எங்குதான் போயிருப்பார்" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அதே சமயத்தில் காவலனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை அடைந்திருந்தான் ஜகத்சிம்மன். அன்று பகல் முழுவதும் எதிரேயிருந்த அடவிக்குள் அலைந்த அவன், இரவு மூண்டுங்கூட அங்கிருந்த மரத்தடி ஒன்றில் சாய்ந்து தீவிர சிந்தனையில் இருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அடுத்திருந்த புதர்களுக்கு அப்பால் இருவர் பேசும் குரல் கேட்டது. அதனால் எழுந்திருந்த ஜகத்சிம்மன், தான் இருந்த மரத்தின் மறைவில் இருந்து ஓசைப்படாமல் நடந்து சென்று புதருக்கு சற்று எட்ட இருந்த மரத்தடியில் மறைந்து நின்றான். அவன் காதில் ஜோடாவின் குரலைத் தவிர, வேறொரு பெண் குரலும் கேட்டது. அதுவும் அன்று வேடவர் குடிசையில் கேட்ட அதே குரல். மன்னன் தன் கையில் சிக்கிவிட்டான் என்ற குதூகலத்துடன் குரல் வந்த திசையை நோக்கினான்.

அங்கு ராவ்ஜோடாவின் அணைப்பில் ஒரு பெண் இருந்தாள். அவள் சற்றே தலையைத் தூக்கி நகைத்தபோது அவள் முகத்தில் சந்திர வெளிச்சம் பூரணமாக விழுந்தது. அந்தப் பெண்ணின் முகத்தைக் கண்ட ஜகத்சிம்மன் ஏதும் புரியாமல் மிதமிஞ்சிய குழப்பத்தாலும் அதிர்ச்சியாலும் பல நிமிடங்கள் அசைவற்று நின்றுவிட்டான். அவன் தலை சுற்றும் நிலைக்கு வந்துவிட்டது. சந்திரனையும் பழிக்கும் முகம் அத அவனுக்கு நன்றாகப் பரிச்சயமான முகமுங்கூட

33. இழந்த சொர்க்கம்

ராவ்ஜோடாவின் அணைப்பில் இருந்த அழகியின் சந்திர வதனத்தைக் கண்டதும் ஜகத்சிம்மன் திகைப்பும் அதிர்ச்சியும் ஒருங்கே அடைந்தான் என்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அந்த முகம் மலை அரசியின் முகம்!

முகத்தில் அத்தனை ஒற்றுமையிருந்தும் அது மலை அரசியாக இருக்க முடியாது என்று திட்டவட்டமாக எண்ணினான் ஜகத்சிம்மன். மலை அரசியின் குரலை அவன் ஏற்கனவே கேட்டிருந்ததால், அந்தக் குரலுக்கும் இந்த மலை அரசியின் பிரதிபிம்பத்தின் குரலுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருந்ததை சந்தேகத்துக்கு இடமின்றி உணர்ந்திருந்தான். மலை அரசியின் குரலும் மதுரம் என்றாலும் அதில் சற்று அதிகாரமும் திட்டவட்டமான திடகாத்திரமும் உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால், இந்தப் பெண்ணின் குரல், குயிலின் குரல். பெரிதும் குழைந்து கொஞ்சுவது போன்ற மெல்லிய குரல். மலை அரசியின் குரலின் திடம் இதில் கிடையாது. அச்சம் கலந்த சங்கீதம் இழைந்தோடும் இன்பக் குரல். சிறிது கீச்சுக் குரலும்கூட. "இருவர் குரலுக்கும் இருந்த வித்தியாசம் மலைக்கும் அருவிக்கும் உள்ள வித்தியாசம்" என்று உவமையும் சொல்லிக்கொண்டான் படைத்தலைவன்.

அந்தச் சமயத்தில் சந்திரனை நோக்கி மல்லாந்து தலைதாழ்த்திய அந்தப் பெண் லேசாக நகைத்து "இன்று உங்கள் திருமண நாள்" என்று கொஞ்சிப் பேசினாள்.

பின்னால் அவள் தலையைச் சாய்த்ததால் தன் அணைப்பில் இருந்த இடைக்கு மேலேயிருந்த அவள் அழகிய மார்பகங்கள் இரண்டும் ஜோடாவின் கண்ணுக்கு இலக்காகவே அவன் பதிலேதும் சொல்லாமல் அவற்றை வெறித்து நோக்கினான்.

அவள் மேலும் லேசாக நகைத்தாள். "ஏன் நான் சொன்னது உங்கள் காதில் விழவில்லையா?" என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

இந்தக் கேள்வி ஜகத்சிம்மன் எண்ணத்தை உறுதி செய்தது. "ஆம், இவள் வேறுதான், ஒருவேளை மலை அரசியின் இரட்டைப் பிறவியாயிருப்பாளோ?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

மேற் கொண்டு எதுவும் எண்ண அவனுக்கு அவகாசமில்லை. ஜோடா திடீரெனக் குனிந்து அவள் வெண்மைக் கழுத்தில் தன் முகத்தைப் புதைத்தான். அவள் தனது கண்களை உணர்ச்சி மிகுதியால் மூடிக்கொண்டாள். ஜோடாவின் உதடுகள் அவள் கழுத்தில் ஆழப் புதைந்திருக்க அவன் தலை மட்டும் இப்படியும் அப்படியும் லேசாக அசைந்து அவள் உணர்ச்சிகளுக்குத் தீ மூட்டியது. அவள் உணர்ச்சி மிகுதியால் "இன்று உங்கள் மணநாள். இது முறையல்ல. இன்று நீங்கள் அவள் இருக்கும் அறைக்குப் போக வேண்டும்" என்று கண்களை மூடியவண்ணம் பேசினாள்.

"யார் அவள்?" என்று சற்று இறைந்து கேட்டான் ஜோடா.

பதிலுக்கு அவள் "உஸ்" என்று எச்சரித்தாள் அவனை. கண்ணையும் விழித்தாள். "அதற்குள் மறந்துவிட்டீர்களா?" என்றும் கேட்டாள்.

"எதை?" ஜோடா கேட்டான் சொப்பன சொர்க்கத்தில் இருந்தபடி.

"உம். விழித்துக் கொள்ளுங்கள். யாராவது வரப் போகிறார்கள்."

"யார் வந்தாலும் கொன்றுவிடுகிறேன்."

"கொல்லும் நாள் இல்லை, இது."

"ஏன் இல்லை. நீதான் என்னைக் கொல்லுகிறாயே."

"நானா!"

"ஆம்."

"பொய்."

"உண்மை. உன் உள்ளத்தைக் கேட்டுப் பார்."

"சரி சரி, விடுங்கள் என்னை."

அவளுடைய இந்த கோரிக்கைக்குப்பின் ஜோடா நிதானத்தை இழந்தான். "உன்னை விடுவதா? அடிகள்ளி. நீ ஆட்டும் பொம்மையா நான்?" என்று இன்பவெறி காட்டி அவள் மார்பகச் சீலையை விலக்க முயன்றான். அவள் இரண்டு கைகளும் அவன் கையைப் பிடித்துத் தடை செய்தன. "வாருங்கள் மாளிகைக்குச் செல்வோம்" என்று கூறி மெள்ள தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றாள்.

இந்தச் சமயத்தில் நல்ல கரிய மேகம் ஒன்று சந்திரனை மூடிவிடவே காட்டில் அந்தகாரம் புகுந்தது. அந்த அந்தகாரத்தில் எட்ட நடந்தது என்னவென்று தெரியவில்லை ஜகத்சிம்மனுக்கு. ஏதோ இருவர் அசையும் ஒலி மட்டும் கேட்டது. "சரி வா! மாளிகைக்குப் போவோம். அங்கு உன்னை பக்கத்து விடுதிக்கு அழைத்துப் போகிறேன்" என்ற ஜோடாவின் குரலும் தெளிவாகக் கேட்டது.

"என்ன துணிவு இவனுக்கு? கட்டிய மனைவி மாளிகையில் இருக்க, அவள் பள்ளியறைக்குச் செல்லாமல்,

பக்கத்து விடுதிக்கு இவளை அழைத்துப் போகிறானாமே. பார்ப்போம் இவன் போவதை" என்று சீறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அவன் மாளிகையை அடைந்தபோது நள்ளிரவு. வாயிலில் பிருமச்சாரி உலாவிக்கொண்டு இருந்தார் தீர்க்க சிந்தனையுடன்.

அவரை நோக்கிச் சென்ற படைத்தலைவன் "பிருமச்சாரி! என்ன யோசிக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"மன்னரைக் காணவில்லை" என்றார் ஹர்பாசங்க்லா.

"இப்பொழுது வருவார்" என்றான் ஜகத்சிம்மன்.

"எங்கிருந்து?"

"காட்டுக்குள் இருந்து."

"அங்கு யார் இருக்கிறார்கள்?"

"மலை அரசியின் இரட்டைப் பிறவி."

"என்ன உளறுகிறீர்?"

"உளறுகிறேனா அல்லவா என்பது இன்னும் சிறிதுநேரத்தில் தெரியும்."

பிருமச்சாரி படைத்தலைவனைக் கூர்ந்து நோக்கினார். "அடபாவமே" என்று அனுதாபப்பட்டுக் கொண்டார்.

"என் மூளை சரியாகத்தான் இருக்கிறது" என்றான் ஜகத்சிம்மன் கோபத்துடன்.

"அப்படியா?" என்றும் படைத்தலைவன் முகத்தை ஆராய்ந்தார் பிருமச்சாரி.

"சந்தேகமாக இருக்கிறதா?" சீறினான் படைத்தலைவன்.

"இல்லை. அணுவளவும் சந்தேகமில்லை" என்ற பிருமச்சாரி, "எதற்கும் நீங்கள் போய் படுத்துக்கொள்ளுங்கள்" என்று உபதேசமும் செய்தார்.

"படுத்துக் கொள்கிறேன். ஆனால், என்னைப் பைத்தியம் என்று நினைக்க வேண்டாம்" என்றான் ஜகத்சிம்மன்.

"இல்லை."

"ஒப்புக்கொள்கிறீர்களா?"

"ஆம்."

இதற்குமேல் பிருமச்சாரி பேசவில்லை. ஒரு காவலனை மட்டும் விளித்து "இவருக்கு படுக்க வசதி செய்யுங்கள்" என்று கூறினார்.

காவலனுடன் ஜகத்சிம்மன் சென்றான். அவனை அடுத்த விடுதிக்கு அழைத்துச் சென்ற காவலன் ஓர் அறையைக் காட்டி "இங்கு நீங்கள் படுக்கலாம்" என்றான்.

அறை சிறியதுதான். பஞ்சணை ஏதுமில்லை. ஒரு பெரிய மான்தோல் மட்டும் விரிக்கப்பட்டுக் கிடந்தது கீழே. அதில் படுத்த ஜகத்சிம்மனுக்கு உறக்கம் வரவில்லை. சென்ற சில நாட்களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவன் மனதில் எழுந்து அவனைப் பெரிதும் உருட்டிக் கலக்கிக் கொண்டிருந்தன. அவன் தன்னையே பல கேள்விகள் கேட்டு பதில் சொல்லிக்கொண்டான்.

"நான் கண்டதெல்லாம் கனவா?"

"இல்லை."

"கேட்டதெல்லாம்?"

"பொய்யல்ல, உண்மை எப்படிப் பொய்யாகும்?"

"மலை அரசி இன்னொருத்தி இருக்க முடியுமா?"

"ஏன் முடியாது? இரட்டைப் பிறவிகள் உலகத்தில் இயற்கைதானே?"

"அப்படியானால் அது மலை அரசிக்குத் தெரியாதிருக்குமா?"

"தெரிந்திருக்கலாம். ராஜபுதனச் சூழ்நிலையில், சதா போர் விளையும் பூமியில் நகரங்களைவிட்டு மக்கள் ஓடும் நிலையில் எதுவும் நிகழலாம். இரட்டைப் பிறவிகள் பிரிக்கப்பட்டிருக்கலாம் குழந்தைப் பருவத்திலேயே."

"ஆனால், ஜோடாவினால் இந்தப் பெண்ணை இங்கு எப்படி மறைக்க முடிந்தது?"

"கொண்டுவந்து காட்டில் வைத்திருக்கலாம்."

"இங்கு இந்த விடுதிக்கு அழைத்துவரப் போவதாகச் சொன்னாரே."

"வந்தால் முடிந்தது கதை. பிருமச்சாரி அவரை சும்மா விடமாட்டார்."

இப்படிக் கேள்வியும் பதிலும் தானே சொல்லி சுய விசாரணையில் இறங்கியபோதுதான் பக்கத்து அறையில் பேச்சு அரவம் கேட்டது. "சொன்னபடி செய்துவிட்டேன், பார்த்தாயா?" என்று கேட்டான் ஜோடா.

"நீங்கள் பலே கெட்டிக்காரர்" என்றாள் அந்தப் பெண்.

"பிருமச்சாரி கண்ணில்..."

"மண்ணைத் தூவிவிட்டீர்கள்."

"இந்த விடுதிக்கு இந்த வழியிருப்பது அவருக்குத் தெரியாது."

"இந்த இடத்துக்கு அவர் சொந்தக்காரர் அல்லவா?" என்று கேட்டாள் அவள்.

"அவர் பிருமச்சாரி. இந்தத் திருட்டு வழியை அவர் கண்டுபிடிக்க அவசியமில்லை" என்றான் ஜோடா.

இதைக் கேட்ட அவள் நகைத்தாள். அதே இன்ப நகைப்பு. குழந்தைக் குரல். "உங்கள் மனைவி தனித்திருப்பாளே" என்றாள் அவள் நகைப்பின் ஊடே.

"உன்னால் மட்டும் தனித்திருக்க முடியுமா?" என்ற ஜோடா "சரி! இரவு முழுவதையும் பேசியே கழிக்க வேண்டாம்" என்றான்.

அதே சமயத்தில் பிருமச்சாரியின் குரல் பலமாக ஒலித்தது.

"யார் இந்த விடுதிக்குள் வந்தது சற்று முன்பாக?" என்று ர்ச்சித்தார் பிருமச்சாரி. அத்துடன் வேகமாக உள்ளேயும் வந்தார். அவர் காலடிகள் தாழ்வரையில் உலக்கை ட்டுவதுபோல் ஒலித்தன.

அடுத்த விநாடி, அடுத்த அறை பலமாகத் தட்டப்பட்டது. ஜோடாவின் சொர்க்கமே இடிந்துவிழப் போவதாக நினைத்தான் ஜகத்சிம்மன்.

34. பதவி இறக்கம்!

மலை அரசியின் மறுபிம்பம் போன்ற மின்னிடையாளுடன், ஜோடா கலந்து விளையாட இருந்த சமயத்தில் பிருமச்சாரி ஹர்பாசங்க்லா அங்கு தோன்றியதும் கதவைத் தட்டியதும் பரமானந்தமாயிருந்தது, மண்டோர் படைத் தலைவன் ஜகத்சிம்மனுக்கு. ஜோடாவின் திருட்டுக் காதல் களியாட்டம் இன்றுடன் முடிந்துவிட்டது என்றும், அவனுக்கு பிருமச்சாரி உதவுவதுகூட சந்தேகம் என்றும் நினைத்த படைத்தலைவன், அடுத்த நிகழ்ச்சியை நேரில் பார்க்க முடியாவிட்டாலும் நடப்பதைக் கேட்க காதுகளை நன்றாகத் தீட்டிக்கொண்டான்.

பிருமச்சாரி அடுத்த அறையை பலமாகத் தட்டியதோடு நில்லாமல் "திற, கதவை சீக்கிரம்" என்று அதட்டியது ஜகத்சிம்மன் காதில் தெளிவாக விழுந்தது.

பிருமச்சாரியின் கேள்விக்கோ அதட்டலுக்கோ அடுத்த அறையில் இருந்து எந்த பதிலும் வராததையும் படைத் தலைவன் கவனித்தான். "கதவைத் திறக்கிறாயா? உடைக் கட்டுமா?" என்று மீண்டும் எழுந்தது பிருமச்சாரியின் குரல்.

"யார் இப்படி அநாகரிகமாக கதவை உடைப்பது?" என்ற கேள்வி எழுந்தது அடுத்த அறையில் இருந்து. அத ஜோடாவின் குரல் என்பதைப் புரிந்துகொண்ட ஜகத்சிம்மன் அதில் ஒலித்த அதிகாரத்தைக் கண்டு பிரமித்தான். "மன்ன

மன உரம் அதிகந்தான்" என்று தன்னுள் சொல்லியும் கொண்டான் பிரமிப்பு ஒலித்த குரலில்.

பிருமச்சாரியின் குரல் முன்னைவிட பலமாக ஒலித்தது. "நான்தான் ஹர்பாசங்லா" என்று.

"இந்த நேரத்தில் என்னை ஏன் எழுப்புகிறீர்?" என்றான் ஜோடா.

"காரணம் இருக்கிறது" என்று சீறினார் பிருமச்சாரி.

"என்ன காரணம்?"

"மன்னர் படுக்க வேண்டிய இடம் இது அல்ல."

"எந்த இடத்தில் படுக்கவேண்டும் என்பதற்கு நிபந்தனை உண்டா?"

"இன்று உண்டு. மணநாளில் படுக்க வேண்டிய இடம் வேறு."

இதற்குப் பிறகு சிறிது மௌன நிலை. "சரி போங்கள். நான் வருகிறேன் விடுதிக்கு, சிறிதுநேரம் கழித்து" என்றான் ஜோடா.

"எதற்காக சிறிதுநேரம் கழிக்க வேண்டும்?" என்று கேட்டார் பிருமச்சாரி தமது முரட்டுக் குரலில்.

"இங்கு சிறிது வேலை இருக்கிறது" என்றான் ஜோடா.

இதைக் கேட்டதும் குமுறினான் ஜகத்சிம்மன், "என்ன துணிவு! என்ன அயோக்கியத்தனம்!" என்று வியந்தான் படைத்தலைவன்.

ஆனால், அடுத்த விநாடி எழுந்த ஹர்பாசங்லாவின் சொற்கள், அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தன.

"உடனே கதவைத் திறக்காவிட்டால் கதவை உடைப்பேன் ஒரே உதையில்" என்று சீற்றம் மிகுந்த சொற்களை இடியெனக் கொட்டினார் பிருமச்சாரி.

சிறிதுநேரத்திற்கு எல்லாம் பக்கத்து அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. தனது அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே போய் மன்னன் நாடகத்தின் முடிவுப் பகுதியைக் காணலாமா என்று எண்ணிய ஜகத்சிம்மன், அதில் ஆபத்து இருப்பதைப் புரிந்துகொண்டதால் தனது அறையின் கதவோரத்துக்கு வந்து உற்றுக் கேட்டான்.

அடுத்த நிகழ்ச்சிகள் அவன் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. பக்கத்து அறை திறந்ததும் பெரிதாக நகைத்தார் பிருமச்சாரி. "மகாராஜா! நீர் பெரிய பேர்வழி. இதை ஏன் எனக்கு முன்னமே சொல்லவில்லை?" என்று கேட்டார் நகைப்பின் ஊடே.

அவருடன் சேர்ந்து நகைத்தான் ஜோடா. "சொன்னால் சுவாரசியம் கெட்டுவிடும்" என்று கூறி, மீண்டும் நகைத்தான்.

"இப்பொழுது?" விஷமமாகக் கேட்டார் பிருமச்சாரி.

"சுவாரசியம் அதிகமாகும்" என்று ஜோடா கூறினான்.

"ஆம் ஆம் அதிகமாகும்" என்று பிருமச்சாரி குதூகலித்தார்.

பிருமச்சாரியான ஹர்பாசங்லா இந்த மாதிரி விரசமான உரையாடலில் இறங்கியது விசித்திரமாக இருந்தது ஜகத்சிம்மனுக்கு. ஒருவேளை அவரது பிருமச்சாரி ஆசிரமம் வெளிவேடமோ என்று நினைத்தான்.

அவன் நினைப்புப்படி ஒரு கேள்வியை ஜோடா கேட்டான், "இவளை நான் தனித்து அழைத்து வந்ததில் தவறு ஏதுமில்லையே?" என்று.

"ஒரு தவறுமில்லை. தவிர, இது உங்கள் கடமையுங்கூட" என்றார் பிருமச்சாரி.

"பார்ப்பவர்கள் ஏதாவது தவறாக நினைத்தால்?" என்று ஜோடா கேட்டான்.

"நினைத்துவிட்டுப் போகட்டுமே!" பிருமச்சாரியின் குரலில் அலட்சியம் இருந்தது.

"ஏதாவது பேசினால்?" ஜோடாவின் குரலில் கவலை தெரிந்தது.

"அவன் நாக்கை வெட்டிவிடுவேன்" என்று உறுதி கூறினார் பிருமச்சாரி.

பிருமச்சாரியின் போக்கு பரம விசித்திரமாக இருந்தது ஜகத்சிம்மனுக்கு. வேறொரு பெண்ணுடன் மண நாளன்று சரசமாட முற்பட்ட மன்னனுடன் அவர் எப்படி உறவாட முடியும் என்று எண்ணியும் ஏதும் புரியவில்லை அவனுக்கு.

அந்தச் சமயத்தில் பிருமச்சாரி அந்தப் பெண்ணைப் பார்த்து சொன்னார், "மன்னனை கைக்குள் ஒரே நாளில் போட்டுக் கொண்டுவிட்டாய்" என்று.

"இல்லை. நீண்டநாள் ஆயிற்று" என்று வெட்கம் இல்லாமல் அந்தப் பெண் பேசினாள்.

அதையும் ஆட்சேபிக்கவில்லை பிருமச்சாரி. "அம்மா! நீ உள்ளே போ. நானும் இவரும் சிறிது பேசவேண்டும்" என்று கூற, பக்கத்து கதவு மீண்டும் மூடப்பட்டது. ஆனால் இருவரும் என்ன பேசுகிறார்கள் என்று மட்டும் தெரியவில்லை ஜகத்சிம்மனுக்கு. திடீரென்று அவன் மனதில் பெரிய சந்தேகம் ஒன்று உதித்தது. உடனே அவன் சற்று இரைந்தே சொல்லிக் கொண்டான், "இருக்காது. ஒருகாலும் இருக்காது" என்று.

அது, வெளியே இரகசியம் பேசிக்கொண்டு இருந்த இருவர் காதிலும் விழுந்திருக்க வேண்டும். இருவர் இரகசியப் பேச்சும் சட்டென்று நின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். "நன்றாக வலை விரித்தீர்கள் மகாராஜா" என்று சொல்லி புன்முறுவல் பூத்தார் பிருமச்சாரி.

"வலை இருந்தால்தான் பறவைகள் விழுகின்றன" என்றான் ஜோடா, சட்டென்று சமாளித்துக்கொண்டு.

"இப்பொழுது விழுந்திருக்கும் பட்சி எப்படி?" என்று கேட்டான்.

"அழகான பட்சி" என்று பாராட்டினார் பிருமச்சாரி.

அத்துடன் பிருமச்சாரி நடந்து செல்லும் சத்தம் கேட்டது. சிறிதுநேரம் கழித்து ஜகத்சிம்மன் வெளியே வந்தான். அப்படியும் இப்படியும் பார்த்தான். தாழ்வரையில் இருந்த ஒரே விளக்கு சிறிது மங்கலாகவே எரிந்து கொண்டிருந்தது. பக்கத்து அறையில் சிரிப்பு ஒலி சற்று நேரத்திற்கு ஒருமுறை வந்துகொண்டு இருந்தது. அதை ஒரு விநாடி நின்று கேட்ட ஜகத்சிம்மன் வாயிலை நோக்கி நடந்தான்.

வாயிலில் அவனை எதிர்பார்த்ததுபோல் நின்றிருந்தார் பிருமச்சாரி. அவன் காலடி ஓசை கேட்டதும் திரும்பினார். "யார் படைத்தலைவரா? இன்னும் ஏன் உறங்கவில்லை?" என்று கேட்டார்.

"உறக்கம் வரவில்லை" என்றான் படைத்தலைவன்.

பிருமச்சாரி படைத்தலைவனை அனுதாபத்துடன் பார்த்தார். "ஆம் ஆம், எப்படி வரும்?" என்று சொன்னார் அனுதாபம் குரலிலும் ஊடுருவ.

"பிருமச்சாரி!" என்று சற்றுக் கடுமையான குரலில் அழைத்தான் ஜகத்சிம்மன்.

"என்ன படைத்தலைவரே?" என்று பிருமச்சாரி வினவினார்.

"நீங்கள்..." இழுத்தான் ஜகத்சிம்மன்.

"உம்."

"தர்மம் தெரிந்தவர்."

"மகிழ்ச்சி."

"அப்படிப்பட்டவர் அதர்மத்துக்குக் கைகொடுக்கக் கூடாது."

"நியாயம்."

"நீர் நியாயமாக நடக்கவில்லை."

"அப்படியா?"

"ஆமாம். சற்று முன்பு நீங்களும் மன்னரும் பேசியதைக் கேட்டுக்கொண்டு இருந்தேன்."

"ஒட்டுக் கேட்டீரா?"

"இல்லை. அதற்கு அவசியம் இல்லை. உங்கள் இருவர் குரலும் பலமாக இருந்தது."

பிருமச்சாரி படைத்தலைவனை உற்று நோக்கினார். "எங்கள் உரையாடலில் இருந்து என்ன தெரிந்துகொண்டீர்?" என்று வினவினார்.

"ஏதும் தெரியவில்லை."

"அதர்மம் ஏதும் நடக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டீர் அல்லவா?"

"இல்லை."

"என்ன இல்லை?"

"பிருமச்சாரி!"

"சொல்லும்."

"என் மூளை குழம்பி இருக்கிறது."

"இரண்டு மூன்று நாட்களாக நீர் நடக்கும் முறையில் இருந்து அது தெளிவாகத் தெரிகிறது" என்ற பிருமச்சாரி, படைத்தலைவனை நோக்கி "படைத்தலைவரே! வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம். மனதில் உள்ள மாசு களைக் களைந்துவிடும். அது உமக்கும் நல்லது" என்று உபதேசம் செய்தார்.

அத்துடன் அவனை விட்டுச் சென்றார். உளைந்த மனதுடன் ஜகத்சிம்மன் வாயிலிலேயே நீண்டநேரம் நின்றான். ஆகாயத்தில் இருந்த வெண்மதியை நோக்கினான். "போருக்கு அதிகநாள் இல்லை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். நீண்டநேரம் வாயிலில் உலாவிக்கொண்டு இருந்துவிட்டு படுக்கச் சென்றான். பழையபடி நேரம் ஓடிவிட்டதால் அவனையும் அறியாமல் கண்கள் மூடின. நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள்.

நீண்டநேரம் கழித்தே எழுந்திருந்த ஜகத்சிம்மன் காதில் வெளியே வீரர்கள் அணிவகுத்து நடமாடும் சத்தம் கேட்டது. வெளியே வேகமாக வந்தான் படைத்தலைவன். அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது.

சுமார் ஐந்நூறு வீரர்கள் பூர்ண ஆயுதங்களுடன் புரவிகளில் ஏறி இருந்தார்கள். புரவிகள் அணிவகுப்புக்கு நடை போட்டன. அவற்றை இஷ்டப்படி திருப்பியும் நேராக நடக்கச் சொல்லியும் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார் பிருமச்சாரி.

வெளியே வந்த ஜகத்சிம்மனை அருகில் அழைத்த ஜோடா "நமக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது" என்று கூவினான்.

"என்ன அதிர்ஷ்டம் மகாராஜா?" என்று வினவினான் ஜகத்சிம்மன்.

"நமது படைகளுக்குத் தலைவராயிருக்க பிருமச்சாரி சம்மதித்துவிட்டார்" என்று கூவினான் உற்சாகத்துடன்.

"அப்படியானால் நான்?" என்ற ஜகத்சிம்மன் கேள்வியில் அதிர்ச்சி தெரிந்தது.

"பிருமச்சாரிக்கு அடுத்தபடி உபதளபதி" என்றான் ஜோடா.

தனது பதவி இறக்கத்தைப் புரிந்துகொண்ட ஜகத்சிம்மன் சிலையென நின்றான்.

35. மீண்டும் வந்தாள்!

மண்டோரின் படைத்தலைவனாக இருந்த தன்னை திடீரென உபதளபதியாக்கிவிட்ட மன்னன் செயலைக் கண்டு மனம் துடித்த ஜகத்சிம்மன் அந்த அவமானத்தில் இருந்து எப்படி மீளலாம் என்று சிந்தித்தான். அது தவிர இந்த திடீர் பதவி இறக்கத்துக்குக் காரணம் எதுவாக இருக்கும் என்ற ஆராய்ச்சியிலும் இறங்கினான்.

மன்னனையும் அந்த புதுப்பெண்ணையும் பற்றிதான் துப்பறிய முயன்றது ஒருவேளை காரணமாக இருக்குமோ என்று ஒரு விநாடி நினைத்தாலும் அந்த நினைப்பை உதறிவிட்டான். "நான் எத்தனை ஜாக்கிரதையாக அவர்களைக் கவனித்தேன்! அவர்கள் ஒருநாளும் நான் பார்ப்பதை ஊகித்திருக்கக்கூட முடியாது" என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டான். ஒருவேளை இந்த மாற்றத்துக்கு பிருமச்சாரியின் வீரம் காரணமாக இருக்குமோ என்றும் எண்ணினான். "அது இருக்க முடியாது. பிருமச்சாரி பெரிய வீரர். ஆனால் படைகளை நடத்தி பழக்கம் கிடையாது. போரில் வீரம் மட்டும் போதாது. படைகளை அமைப்பதும், அவற்றை நடத்துவதும் முக்கியம். போர் என்பது தனிமனிதன் சண்டையல்ல" என்று அந்த யோசனையையும் உதறினான்.

வேறொரு எண்ணமும் அவன் உள்ளத்தே எழுந்தது. மேவார் தலைநகர் நிகழ்ச்சிகள் காரணமாய் இருக்கலாமா

என்றும் எண்ணமிட்டான். "இருக்க முடியாது. அது மகா இரகசியம்" என்று அதையும் தீர்த்துக் கட்டினான்.

இப்படிப் பலவாறு சிந்தித்தும் தனது பதவி இறக்கத்துக்கு உண்மைக் காரணம் புரியாததால் குழம்பிய மனதுடன் வீரர்களின் அணிவகுப்பைப் பார்த்துக்கொண்டே பிருமச்சாரியின் பக்கத்தில் நின்றான் ஜகத்சிம்மன்.

அணிவகுப்பின் தோரணை அவன் உள்ளத்துக்கு சிறிது சாந்தியையும் அளித்தது. பிருமச்சாரி புரவி வீரர்களை கண்டபடி இயக்கினார். அவர் இயக்கிய முறை சம்பிரதாயப் போருக்கோ, போரின் இலக்கண முறைக்கோ சிறிதும் சம்பந்தம் இல்லாது இருந்தது. படைப் பிரிவுகளை அனாவசியமாகத் திடீர் எனத் திருப்பினார். பத்தடி ஒரு பிரிவு நகர்ந்ததும் அதன்மீது பின் பிரிவை வேகமாக ஏவினார். முதல் பிரிவு பின்வந்த பிரிவில் இருந்து தப்ப வெகு வேகமாக அகன்றது.

வேறு மார்க்கத்தில், சில வேளைகளில் இரண்டு பிரிவுகளும் மோதும்படியாக குறுக்கே நகர்த்த முயன்றார் பிருமசாரி. அவ்வப்பொழுது சங்கடப்பட்ட பிரிவுகளைக் கண்டு ராட்சச் சிரிப்பாகச் சிரித்தார்.

இதனால் வெகுண்ட ஜகத்சிம்மன், "பிருமச்சாரி, எதற்காக நகைக்கிறீர்?" என்று வினவினான்.

பிருமச்சாரி பதில் சொல்லவில்லை. அதனால், மீண்டும் சுட்டிக்காட்டினான் மாஜி படைத்தலைவன், "உங்களைத்தான் கேட்கிறேன் பிருமச்சாரி" என்று.

பிருமச்சாரி படைப் பிரிவுகளின் அணிவகுப்பை பார்த்துக் கொண்டே "உமது கேள்வி சரியாயில்லை" என்று சீறினார்.

"என்ன தவறோ?" எரிச்சலுடன் கேட்டான் படைத்தலைவன்.

"என்னை பிருமச்சாரி என்று அழைத்தீர்."

"நீர் பிருமச்சாரி இல்லையா?"

"தனி வாழ்க்கையில் பிருமச்சாரிதான். இப்பொழுது படைத்தலைவன். நீர் சாதாரண, எனக்கு அடங்கிய உபதளபதி. ஆகையால் அழைக்க வேண்டியபடி அழையும்." இதை உஷ்ணமாகவே சொன்னார் ஹர்பாசங்க்லா.

ஜகத்சிம்மனுக்கு இதைக் கேட்டதும் உள்ளூரக் கோபம் எழுந்தாலும் அதை அடக்கிக்கொண்டு "படைத்தலைவரே!" என்று அழைத்தான்.

"என்ன உபதளபதி?" இந்தக் கேள்வியில் உபதளபதி என்ற சொல்லை சிறிது அழுத்தியே சொன்னார் ஹர்பா சங்க்லா.

ஜகத்சிம்மன் அவரை ஏறெடுத்து நோக்கினான். "உமது அணிவகுப்பு முறை சரியாயில்லை" என்று கூவினான் வெறுப்பு நிரம்பிய குரலில்.

"காரணம்?"

"சம்பிரதாயத்துக்குச் சம்பந்தம் இல்லாதிருக்கிறது."

"அவ்வளவுதானே?"

"ஆம்."

"சம்பிரதாயங்களை அவசியமானால் உடைக்க வேண்டும்"

"சம்பிரதாயங்களை உடைத்தால் நீர் வெற்றி பெற முடியாது."

"பார்ப்போம்."

"பார்ப்பதற்கு ஏதும் இல்லை இதில் முறைப்படி அணிவகுப்பை நடத்தும்."

அதுவரை ஜகத்சிம்மனைப் பார்க்காமலே பதில் சொல்லிக் கொண்டு இருந்த பிருமச்சாரி சற்றே திரும்பினார் பழைய

படைத்தலைவனை நோக்கி. "இந்தப் பிரிவுகளில் எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா?" என்று வினவவும் செய்தார் இகழ்ச்சியுடன்.

ஜகத்சிம்மன் ஒருமுறை தனது கண்களை படைமீது ஓட்டினான். "சுமார் ஐந்நூறு பேர்" என்றான்.

"பேஷ்! உமது பார்வை ஆராய்ச்சி பார்வை. சரியாக ஐந்நூறு பேர்தான்" என்று சொன்ன பிருமச்சாரி "மண்டோரில் எதிரிப் படையின் பலம் தெரியுமா?" எனக் கேட்டார்.

"தெரியாது" என்றான் ஜகத்சிம்மன்.

பிருமச்சாரியின் கண்களில் விஷம் துளிர்த்தது. "அதை அறிவது உமது கடமை. அதைப் பார்க்கவில்லை. மன்னர் யாருடன் சரசமாடுகிறார் என்று பார்ப்பதில் காலத்தை விரயமாக்கியிருக்கிறீர்" என்று விஷமத்தைக் குரலிலும் காட்டினார் பிருமச்சாரி. "மன்னர் யாருடன் சரசமாடுகிறார் என்பது அவர் சொந்த விஷயம். போர் அரசாங்கத்தைப் பற்றியது. படைத்தலைவரான நீர் அதில் அக்கறை காட்டியிருக்க வேண்டும். மண்டோரில் மறைந்திருந்த உமக்கு, எதிரியின் படைபலத்தை அறிய முடியவில்லை. இங்கு இருக்கும் நான் சொல்கிறேன், கேளும். எதிரி வசம் நாலாயிரம் புரவி வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களை நடத்தும் காந்தோஜியும், மஞ்சாஜியும் மகாவீரர்கள். போரில் இணையற்றவர்கள். சம்பிரதாயப் போர் அவர்களிடம் செல்லாது. ஆகையால் சிறிது முறையை மாற்றியிருக்கிறேன். இந்தப் புதுமுறையை நீங்கள் ஏற்றுக்கொள்வது நல்லது. நாளை முதல் இதை உமக்கு சொல்லித் தருகிறேன்" என்று அவர் மேலும் சொன்னார்.

இதைக் கேட்ட ஜகத்சிம்மன் பிரமை பிடித்து நின்றான். நீண்ட காலம் படைத்தலைவனாக இருந்த அவனுக்கு பிருமச்சாரி பள்ளிக்கூடம் நடத்த முயல்வது பெரிய விநோதமாக இருந்தது.

அத்தனைக்கும் ஜகத்சிம்மன் நிதானத்தை இழக்கவில்லை. ஒப்புக்கொள்வதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்துவிட்டு, விடுதிக்குள் சென்றான்.

விடுதியின் வாயில் படியில் இருந்து சகலத்தையும் கவனித்துக்கொண்டு இருந்த ராவ்ஜோடா ஜகத்சிம்மன் அருகே வந்ததும் அவன் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்து "உபதளபதி! உமக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது" என்று கூறினான் உற்சாகத்துடன்.

ஜகத்சிம்மன் மன்னனை ஏறெடுத்து நோக்கினான். அவன் பார்வையில் விஷமம் மிதமிஞ்சியிருந்தது. "உபதளபதி ஆனது அதிர்ஷ்டமா மன்னவா?" என்று வினவினான் துயரம் நிரம்பிய குரலில்.

"பிருமச்சாரி எல்லோரையும் உபதளபதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார். ஏற்றுக்கொண்டாலும் தமது புதுமுறை களை கற்றுக்கொள்ள அனுமதிக்கமாட்டார். உம்மை பிருமச்சாரி பெரிதும் மதிக்கிறார்" என்று உற்சாகத்துடன் கூறிய மன்னன், ஜகத்சிம்மனை அழைத்துக்கொண்டு காலை உணவு அருந்தச் சென்றான்.

உணவுச்சாலையில் மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது ஜகத்சிம்மனுக்கு. இருவருக்கும் சிற்றுண்டியை மலை அரசியே பரிமாறினாள்.

அவள் மலை அரசியா அல்லது அவளது இரட்டைப் பிறவியா என்பதை அறிய முடியாததால் சிறிது தயங்கிய ஜகத்சிம்மன் "மண்டோர் மகாராணி! நீங்கள் உணவு படைப்பது சரியா! அதுவும் கேவலம் ஓர் உபதளபதிக்கு உங்கள் கையால் பரிமாறுகிறீர்கள்..." என்றான்.

மலைஅரசி மதுரமாக நகைத்தாள். "நீங்கள் இப்பொழுது உபதளபதி அல்ல" என்றாள்.

ஜகத்சிம்மன் அதிர்ச்சி அடைந்து மலை அரசியையும் மன்னனையும் நோக்கினான். "அந்தப் பதவியும் போய் விட்டதா எனக்கு?" என்று கேட்டான் அச்சத்துடன்.

மலை அரசி மீண்டும் சிரித்தாள். "உங்களுக்கு எந்தப் பதவியும் போகவில்லை. இங்கு உணவு அருந்தும்போது உங்களுக்கு மன்னரின் நண்பர் என்ற ஒரே பதவிதான். எனக்கும் மனைவி என்ற ஒரே பதவிதான். ஆகையால் உங்களுக்குப் பரிமாறுவதில் எனக்கு எந்தவிதக் குறைபாடும் கிடையாது" என்று கூறிவிட்டுப் பரிமாறினாள்.

காலை உணவை அருந்திய ஜகத்சிம்மன் அன்று முழுவதும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். எப்படியும் அந்த இன்னொரு பெண்ணைக் கண்டுபிடித்து இரகசியத்தை உடைத்துவிட்டால் மன்னன் வண்டவாளம் வெளிப்பட்டுவிடும் என்று நினைத் தான். அப்புறம் தத்தளிக்க வேண்டியது மன்னன்தான் என்றும் தீர்மானித்தான்.

ஆனால் அன்றும் மறுநாளும் அந்த இரட்டைப் பிறவி யைக் காணவில்லை. இரவில் காட்டுக்குள் சென்றும் பார்த்தான். அங்கு மன்னனும் வரவில்லை, அவன் ஆசை நாயகியும் வரவில்லை. அடுத்த மூன்று நாளும் இதே கதிதான். போதாக்குறைக்கு பிற்பகலில் பிருமச்சாரி அவனுக்கு பள்ளிக்கூடம் நடத்தினார். அதற்கு மன்னனும் வந்தான். புதுமுறைப் போர் நுட்பங்களை பிருமச்சாரி இருவருக்கும் போதித்தார். முதலில் புது முறையை சுத்த பைத்தியக் காரத்தனம் என்று நினைத்த ஜகத்சிம்மன், அதன் நுட்பங்களைக் கண்டு பிரமித்தான். மன்னனுக்கும் அந்த முறைகள் வியப்பையும் மகிழ்ச்சியையும் புது அறிவையும் ஒருங்கே அளித்தன.

நாட்கள் ஓடின.

ஜகத்சிம்மனுக்கும் மன்னனுக்கும் புதுமுறைப் போரை தொடர்ந்து போதித்தார் பிருமச்சாரி. உபதளபதியையும்

மன்னனையும் இரண்டு பிரிவுகளுக்குத் தலைவர்கள் ஆக்கி வேகமாக அவற்றை இயக்கினார். அப்பொழுது இருவருமே புரிந்துகொண்டனர், அந்த வாயுவேகப் போரை எதிரி சமாளிப்பது நடவாது என்ற உண்மையை.

இத்தனையிலும் ஜகத்சிம்மன் மனம் அந்த இன்னொரு பெண்மீதே இருந்தது. ஆனால் அவள் அடியோடு சுவடு தெரியாமல் மறைந்துவிட்டாள். பவுர்ணமியும் நெருங்கிக் கொண்டிருந்தது. பவுர்ணமிக்கு இரண்டு நாள் முன்பு படைகளுடன் பிருமச்சாரி புறப்பட்டார், மண்டோரை நோக்கி.

மன்னனும் உபதளபதியும் அவருக்குப் பின்னால் புரவிகளில் சென்றார்கள். பவுர்ணமியின் காலையில் பிருமச்சாரி மண்டோர் முன்பாக பாசறை அமைத்தார். தமக்கும் மன்னருக்கும் உபதளபதிக்கும் தனித்தனி கூடாரங்களை அமைத்தார். அன்று பகலில் உபதளபதியை அழைத்து "உபதளபதி! நீர் தூது செல்லும், சந்தசிம்மன் புத்திரர்களிடம். மண்டோரை விட்டு அவர்களை விலகச் சொல்லுங்கள். இல்லையேல் இன்றே போர் என்று கூறுங்கள்" என்று உத்தரவிட்டார்.

அதே சமயத்தில் ராவ்ஜோடாவின் போர் முரசுகள் பயங்கரமாக ஒலித்தன.

தூது செல்ல புரவிமீது அமர்ந்து கிளம்பினான் ஜகத்சிம்மன். கிளம்பிய சமயத்தில் தூரத்தே தெரிந்த வேட்டுவர் மலையையும் நோக்கினான் ஒருமுறை. புரவியின் கடிவாளத்தை இழுத்துவிட்டு புரவியை நடத்த முயன்றவன் சட்டென்று நின்றான்.

வேடர் மலை இருந்த திக்கில் இருந்து அந்த இரட்டைப் பிறவி வந்துகொண்டிருந்தாள், புரவி மீது ஏறி. அப்பொழுது அவள் உடையில் பெரும் மாற்றம் இருந்தது. வேட்டுவர் உடையை அவளும் அணிந்திருந்தாள். உடலை அரைகுறை

யாகச் சுற்றிப் புலித்தோல் ஆடை, தலைக்குழலில் ஒரு பறவை இறகு கையில் வில்லும் அம்பும். இந்தக் கோலத்தில் புரவியை ராஜ நடைபோட்டு நடக்க வைத்து பிருமச்சாரியின் பாசறையை அணுகினாள். ஜகத்சிம்மனை அசரவைத்தது. இது மட்டும் அல்ல. கூடாரத்தை விட்டு வெளிவந்த பிருமச்சாரி அவளை மிகுந்த குதூகலத்துடன் வரவேற்றார், அவளுக்குத் தலையும் வணங்கினார். புரவியில் இருந்து அவள் இறங்க தனது இரு கைகளில், விரல்களையும் சேர்த்துப் படியாக்கி அவள் காலை நோக்கி நீட்டினார்.

36. மண்டோர் சமர்

கேவலம், ஒரு பெண், புரவியில் இருந்து இறங்க, அவள் காலுக்குப் படியாக தனது இரு கைகளையும் கோத்து நீட்டிய பிருமச்சாரியிடம் பெரிதும் வெறுப்புக் கொண்டான், ஜகத்சிம்மன். பிருமச்சாரி உண்மையில் பெரும் போலி பிரும சாரியாக இருக்க வேண்டும் என்றும் நினைத்தான். அவன் நினைப்பு ஊர்ஜிதமாக பிருமச்சாரி இன்னொரு பணியிலும் இறங்கினார்.

ராவ்ஜோடாவின் கூடாரத்துக்கு அந்தப் பெண்ணை அழைத்துச் சென்ற பிருமச்சாரி, அவளை அவன் கூடாரத் துக்குள் செல்லப் பணித்து, மேலே செருகியிருந்த கூடார வாசல் படுதாவையும் இழுத்துத் தொங்கவிட்டு மன்னருக்கும் அந்த மங்கைக்கும் சிறிது அந்தரங்கத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது அவன் இதயத்தை எரிமலையாக்கியது. ஆகவே, மீண்டும் அவர் அவனிடம் வந்தபோது "உங்கள் பணி வர வர சிறப்பாக இருக்கிறது" என்று இகழ்ச்சி ததும்பும் குரலில் கூறினான் ஜகத்சிம்மன்.

பிருமச்சாரி உபதளபதியை விஷமப் பார்வையாகப் பார்த்து "சிறப்பான பணியைத் தவிர வேறு எதிலும் இறங்கும் பழக்கம் ஹர்பாசங்க்லாவுக்குக் கிடையாது என்பதை ராஜபுதனம் அறியும்" என்று கூறினார்.

"நீர் இப்பொழுது செய்தது..." என்று இழுத்தான் உபதளபதி.

"கடமை" என்ற பிருமச்சாரி அதற்குமேல் உபதளபதியைப் பேசவிடக் கூடாது என்றுதான் நினைத்தார். ஆனால் உப தளபதி வாயை மூட மறுத்து "அரசரிடம் பெண்ணைச் சேர்ப் பதுதான் உமது கடமையா?" என்று கேட்டான்.

"அரசியை பெண் என்று சாதாரணமாக அழைப்பது ராஜத் துரோகம். இதற்கு உமது தலையைச் சீவலாம்" என்று பிருமச்சாரி சர்வ சாதாரணமாகச் சொன்னார்.

"இவள் அரசியா!" பெரும் வியப்பு ஒலித்தது ஜகத்சிம்மன் குரலில்.

"வேறு எப்படி நினைக்கிறீர்?" பிருமச்சாரி நகைத்தார்.

"அப்படியானால் மலை அரசி?"

"அவளும் அரசிதான்."

"மன்னருக்கு இரண்டு ராணிகளா?"

"இல்லை. ஒரு ராணிதான்."

"பிருமச்சாரி!"

"உப தளபதி."

"நீர் உளறுகிறீர்."

"அதனால் உமக்கு என்ன நஷ்டம்?"

"உள்ளே சென்றவள் வேட்டுவச்சி."

"அதனால் என்ன? வேட்டுவச்சி அரசியாகக்கூடாது என்று எங்கு சொல்லியிருக்கிறது?"

ஜகத்சிம்மனுக்கு என்ன பேசுவது என்று தெரியாததால் பிருமச்சாரியை மிரட்டலானான். "இது மலை அரசிக்குத் தெரிந்தால் என்ன ஆகும்?" என்று வினவினான்.

"எதுவும் ஆகாது" என்ற பிருமச்சாரி, மேற்கொண்டு விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, "உப தளபதி! உம்மை தூது செல்லப் பணித்தேன். முதலில் அதைக் கவனியும்" என்று திட்டவட்டமாக அறிவித்து, கையை அசைக்கவே இரண்டு தாரைகள் பலமாக ஊதப்பட்டன.

அதே சமயத்தில் மண்டோர் கோட்டைமீது ஒரு வீரன் தோன்றினான். "என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று இரைந்து வினவவும் செய்தான்.

அதுவரை புரவிமீது அமர்ந்து இருந்த ஜகத்சிம்மன் புரவியைக் கோட்டை வாசலை நோக்கி நடக்கவிட்டு "உங்கள் தலைவர்கள் இருவரையும் பார்க்க வேண்டும், கதவைத் திற என்று கூறினான்.

"எதற்காக?"

"தூது சொல்ல வேண்டும்."

இதை உப தளபதி கூறியதும் கதவுகள் திறந்தன. ஜகத்சிம்மன் புரவியை கம்பீரமாகச் செலுத்தி மண்டோர் நகரத்துக்குள் நுழைந்தான். காந்தோஜியும் மஞ்சாஜியும் அவனை ஆஸ்தான மண்டபத்தில் சந்தித்தார்கள். சந்தசிம்மன் புதல்வர்களும், போரில் இணையற்றவர்கள் என்று பிரசித்தி பெற்றவர்களுமான இரு ராஜபுத்திரர்களும் இரட்டையர் போல் ஒரே ஆசனத்தில் அக்கம் பக்கத்தில் அமர்ந்து இருந்தார்கள். அவர்கள் கம்பீரத்தையும் முகத்தில் துலங்கிய அலட்சியத்தையும் கவனித்த ஜகத்சிம்மன் "சந்தசிம்மன் புதல்வர்களே! நீங்கள் அமர்ந்து இருக்கும் ஆசனம் உங்களுடையது அல்ல. ராவ்ஜோடா உட்கார வேண்டிய இடத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். நீங்கள் உடனடியாக இந்த நகரத்தை விட்டு அகன்றால் உங்களைத் தடை செய்ய மாட்டோம். இல்லையேல் இன்றே போர் துவங்கும்" என்று தனது தூதைச் சொன்னான்.

உபதளபதியை ஏற இறங்கப் பார்த்தான், காந்தோஜி. "தளபதி! தூது வர உங்கள் படையில் யாரும் இல்லையா?" என்று வினவினான்.

ஜகத்சிம்மன் கண்களில் சிறிது கபடம் படர்ந்தது. "இப்பொழுது நான் தளபதி அல்ல" என்று பதில் அளித்தான்.

"வேறு யார் தளபதி?" மஞ்சாஜியின் குரல் சந்தேகத்துடன் ஒலித்தது.

"பிருமச்சாரி." ஜகத்சிம்மன் கபடமாகப் பேசினான்.

"யார், ஹர்பா சங்க்லாவா?" காந்தோஜி வினவினான் வியப்புடன்.

"ஆம்"

"நீர்?"

"உப தளபதி ஆக்கப்பட்டேன்."

"யாரால்?"

"பிருமச்சாரியால்?"

"இதற்கு உங்கள் மன்னனும் உடந்தையா?"

"ஆம்."

இதைக் கேட்ட மஞ்சாஜி நகைத்தான். "உம்மை சரியாகத்தான் எடைபோட்டு இருக்கிறான் ஜோடா" என்றும் சொன்னான்.

அந்த நகைப்பு ஜகத்சிம்மன் இதயத்தை எரிமலை ஆக்கியது. "மஞ்சாஜி, எங்கள் மன்னரின் நடவடிக்கைகளை விவாதிக்க நான் வரவில்லை. தூதுக்கு என்ன பதில்?" என்று வினவினான் கோபம் குரலிலும் அள்ளித் தெளிக்க.

"சந்தசிம்மன் புத்திரர்கள் சொல்லக்கூடியது ஒரே பதில் தான். நீர் வெளியே சென்ற நான்கு நாழிகைக்குள் உங்கள்

படை தாக்கப்படும். படையா அது? மொத்தம் எழுநூறு பேர்கூட இருக்காத ஒரு சிறு கூட்டம். நீங்கள் போராடுவதைவிட தற்கொலை செய்துகொள்ளலாம் என்றான் மஞ்சாஜி.

காந்தோஜி சொன்னான். "சொல் உங்கள் மன்னரிடம், வீணாக வீரர்களை பலிகொடுக்க வேண்டாம். இப்பொழுதே மண்டோர் வாசலை விட்டு அகன்றால் நாங்கள் துரத்த மாட்டோம்" என்று.

ஜகத்சிம்மன் இதழ்களில் இளநகை அரும்பியது. தலை தாழ்த்தி விடை பெற்று கோட்டைக்கு வெளியே வந்தான். அவனை ராவ்ஜோடா, அந்த வேட்டுவப்பெண், பிருமச்சாரி மூவரும் ஒன்றாய் நின்று வரவேற்றார்கள். காந்தோஜியின் பதிலை அவர்கள் மூவருக்கும் எதிரில் நின்று அறிவித்தான் ஜகத்சிம்மன்.

பிருமச்சாரி பதில் ஏதும் பேசவில்லை ஒரு விநாடி. அவர் முகத்தில் அனுதாபம் நிரம்பி நின்றது. "ஜோடா! ஜகத்சிம்மா! இருவரும் கேளுங்கள் உன்னிப்பாக. இன்று உள்ள நிலைமையை சந்தசிம்மன் மக்கள் சரியாக எடை போடவில்லை. அவர்கள் தோல்வி திண்ணம். ஆனால் ஒன்று சொல்கிறேன். அவர்கள் தப்ப முயன்றால் யாரும் தடை செய்யக்கூடாது. அவர்கள் ஓடினால் எல்லை வரை துரத்தலாம். ஆனால் மேவார் வம்ச இரத்தம் நமது மண்ணில் சிந்தக்கூடாது" என்று திட்டமாக அறிவித்த பிருமச்சாரி "சந்தசிம்மன் புதல்வர்கள் நமது எண்ணிக்கையைக் கண்டு அசட்டை செய்கிறார்கள். எண்ணிக்கை எப்பொழுதும் போரை வெற்றி கொண்டதில்லை. தவிர, எழுநூறு அல்ல நமது எண்ணிக்கை, அதோ பாருங்கள்" என்று கையைக் காட்டினார் தெற்கு நோக்கி. தூரத்தில் பெரும் தூசி கிளம்பிக் கொண்டு இருந்தது. போர் முரசை உடனே கொட்ட உத்தரவு இட்ட பிருமச்சாரி ஓடிச் சென்று தமது பெரும் புரவியில்

ஏறினார். ஜோடாவும் புரவியில் ஏறினான். அந்த இரட்டைப் பிறவியும் ஏறினாள். ஆனால் போர்க்களத்தில் நிற்கவில்லை அவள். வேட்டுவர் மலை இருந்த திசையை நோக்கி விரைந்தாள்.

பிருமச்சாரி தமது எழுநூறு பேரையும் மூன்றாகப் பிரித்தார். அதில் ஒரு பிரிவு பெரும் மரத்தண்டு ஒன்றைக் கொண்டு கோட்டைக் கதவுகளைப் பிளக்க முயன்றது. ஆனால் அதற்கு அவசியம் இல்லாது போயிற்று. கதவுகள் க்ஷணவேகத்தில் திறந்தன. வாட்களை உயர ஆட்டிய வண்ணம் சந்தசிம்மன் புதல்வர்கள் பிருமச்சாரியின் படைக்குள் தங்கள் படையை ஊடுருவ விட்டார்கள். எதிரி படை ஊடுருவ இடம் கொடுத்த பிருமச்சாரி கொம்பு ஒன்றை தாமே வாங்கி தெற்கு நோக்கி ஊதினார். தூரத்தே தெரிந்த புழுதி மறைந்து பாபுஜியின் புரவிப்படை அசுர வேகத்தில் வந்தது. அவை மொத்தம் ஐநூறுதான். இருந்தாலும் அவற்றின் வேகத்தை சந்தசிம்மன் புதல்வர்கள் தாங்க முடியாததால் மேவார் படை சிறிது பின்னடைந்தது. எதிரியை ஊடுருவ இடம் கொடுத்த பிருமச்சாரியின் படை திடீரென நெருங்கிற்று ஒரு பக்கத்தில். மற்றொரு பக்கத்தில் பாபுஜி வாயு வேகமாகப் பாய வைத்தார் தமது அசுரவேகப் புரவிகளை. அதே சமயத்தில் வடக்கே யிருந்த மலையில் இருந்து விஷந்தோய்ந்த அம்புகள் எதிரி படைகளை நோக்கிப் பறந்து வந்தன.

இத்தனைக்கும் காந்தோஜியின் படைபலம் அதிகமாதலாலும் சகோதரர் இருவரும் மகா வீரர்கள் ஆதலாலும் போர் மும்முரமாக நடந்தது.

பிருமச்சாரி பெரிய ராட்சசன் போல் மிக நீண்ட கோடரி ஆயுதத்தைக் கையில் எடுத்தார். அதைக் கொண்டு எதிரி வாட்களைத் தடுத்தும் எதிர்ப்பட்டவர்களை வெட்டி வீழ்த்தியும் அனாயாசமாக முன்னேறினார். அதேசமயத்தில் ராவ்ஜோடா காந்தோஜியையும் மஞ்சாஜியையும் நோக்கி முன்னேறினான்.

காந்தோஜியின் வாள் ஜோடாவின் வாளைத் தடுத்தது. மஞ்சாஜி வாளை ஓங்கவில்லை. அண்ணனையும் ஜோடாவையும் மட்டும் சமரிடவிட்டு வேறு பக்கம் திரும்பினான். அவனை நோக்கி வந்த பாபுஜியின் மலைச்சாரல் புரவிகள் அவன் படையை ஒரு கலக்கு கலக்கியது. அவன் புரவியில் இருந்து விசிறி எறியப்பட்டான். அதேசமயத்தில் ராவ் ஜோடாவின் வாள் காந்தோஜியின் வாளை ஆகாயத்தில் பறக்கவிட்டது.

சந்தசிம்மன் புதல்வர்களின் பெரும்படை கட்டுக்குலைந்துகொண்டிருந்தது. மீண்டும் சந்தசிம்மன் படை நகரத்திற்குள் செல்ல முயன்ற சமயத்தில் நகரத்தில் பெரும் கூச்சல் கிளம்பியது. ஆயிரக்கணக்கான பந்தங்களைப் பிடித்துக்கொண்டு மண்டோர் மக்கள் சந்தசிம்மன் புதல்வர் படையை பின்புறத்தில் தாக்கினார்கள். அடங்கிக் கிடந்த மக்கள் எழுந்துவிட்டார்கள் என்பதை சகோதரர்கள் புரிந்துகொண்டதால் கொம்பை எடுத்து ஊதினார்கள். பிருமச்சாரியின் சிறிய படையை தாங்கள் தவறாக எடை போட்டதை உணர்ந்துகொண்டதால் படையுடன் மேவாரை நோக்கிப் பின்வாங்க முற்பட்டார்கள்.

பிருமச்சாரியின் வீரர்கள் பிசாசுகள்போல் போரிட்டதால் எதிரியின் படை பெரிதும் நசித்தது. எந்த அணிவகுப்பு முறைக்கும் சம்பந்தம் இல்லாத அணிவகுப்பை அன்று சந்தசிம்மன் புதல்வர்கள் கண்டார்கள். அடிக்கடி சிறுசிறு கூட்டங்களாகப் படையைப் பிரித்துப் போராடும் முறையை அன்றுதான் அவர்கள் கண்டார்கள். கண்டதால் வியப்புடன் வேறு வழியின்றி பின்வாங்கினார்கள். அத்துடன் கதை முடிந்தது என்று நினைத்தான் ராவ்ஜோடா. ஆனால் முடியவில்லை. ஒரு பகுதிப் படையுடன் பின்வாங்கிய மேவார் சகோதரர்களை துரத்திச் சென்றான் ஜகத்சிம்மன். அப்பொழுதுதான் அந்த எதிர்பாராத விபரீதம் நிகழ்ந்தது.

37. மணலில் தோய்ந்த ரத்தம்

மண்டோர் போரில் மாவீரர்களான சந்தசிம்மன் புதல்வர்கள் அடைந்த தோல்விக்குக் காரணம் தாங்கள் போரிடும் எதிரிகளின் திறனை அவர்கள் தவறாக எடைபோட்டதுதான் என்று கர்னல் ஜேம்ஸ்டாட் தமது ராஜபுதன வரலாற்று நூலில் தெளிவாக எழுதியிருக்கிறார்.

சந்தசிம்மன் புதல்வர்களுக்கு போர் புதிதல்ல என்றாலும், அவர்கள் சமரிடும் திறமையும் அற்ப சொற்பமில்லை என்றாலும், எதிரியின் எண்ணிக்கைக் குறைவையும் பிருமச்சாரியின் தளபதிப் பதவியையும் நினைத்து அவர்கள் ஏமாந்தார்கள் என்று சரித்திரம் சொல்கிறது.

பிருமச்சாரி ஹர்பாசங்க்லா பெரிய வாள் வீரர் என்பது ராஜபுதனத்தில் பிரசித்தம். ஆனால் எங்கும் எந்தப் போரிலும் தளபதியாக இருந்து பணியாற்றியதாகவோ படைகளை அணிவகுத்ததாகவோ யாரும் கேள்விப்பட்டது இல்லை. ஆகையால் அனுபவம் இல்லாத ஒரு சிறு படையுடன், அனுபவம் இல்லாத ஒரு தளபதியுடன் ஜோடா தங்களை எதிர்க்க வந்தது சுத்த முட்டாள்தனம் என்றே சந்தசிம்மன் புதல்வர்கள் எண்ணினார்கள். அது மட்டுமல்ல, கோட்டைக் கதவுகளை எதிரி பெரும் மரம் கொண்டு உடைக்கத் தொடங்கியதும் தாங்களாகவே கதவுகளைத் திறந்துகொண்டு போர் முறைப்படி இரண்டு பிரிவுகளாக அணிவகுக்கப்பட்ட நாலாயிரம் புரவி வீரர்களுடன் சகோதரர் இருவரும் கோட்டைக்கு வெளியே வந்ததும் பிரமித்துப் போனார்கள்.

சுமார் எழுநூறுக்கு மேற்படாத ஒரு சிறு படை அவர்கள் கண் முன்பு தெரிந்தது. அதுவும் அவர்கள் வந்ததும் நூறு நூறு பேராகப் பிரிந்தது. அந்தப் பிரிவுகளில் ஒன்றுக்குத் தலைமை வகித்தவளோ ஒரு வேட்டுவச்சி. புரவிமீது அலட்சிய மாக அமர்ந்து, கையில் இருந்த வில்லை வளைத்து நாணில் அம்பை அமைத்து அதை இழுத்துப் பிடித்திருந்தாள் போருக்குத் தயாராக.

பிருமச்சாரி ஹர்பாசங்க்லாவும் ஜோடாவும் மற்றும் இரு சிறு பிரிவுகளுக்கு தலைமை வகித்து நின்றார்கள். இத்த னைக்கும் போரை அவர்கள் துவங்கவில்லை. அதனால் சற்று நிதானித்த சந்தசிம்மன் புதல்வர்களை நோக்கி போரை துவங்கலாம் என்பதற்கு அறிகுறியாகத் தமது பெரிய கோடரியை எடுத்துத் தலைமேல் ஆட்டி சைகை செய்தார் பிருமச்சாரி. அதற்குமேல் தாமதிக்காத காந்தோஜியும் மஞ்சாஜியும் தங்கள் பெரும் படையை எதிரிகளை நோக்கி நகர்த்தினார்கள்.

சுமார் நாலாயிரம் புரவி வீரர்களால் வேகமாகத் தாக்கப்பட்ட ஜோடாவின் படை ஒருமுறை சிறிது அசைந்து கொடுத்தது. ஆனால், பிருமச்சாரி பயங்கரமாக நகைத்து வெண் சங்கு ஒன்றை எடுத்து பலமாக ஊதவே சிறு சிறு பிரிவுகளாக நூறு நூறு வீரர்களைக் கொண்ட ஏழு பிரிவுகளும் எதிரி படைகளை பல இடங்களில் ஊடுருவியது. அதனால், ஏக காலத்தில் பல இடங்களில் ஊசிகளால் குத்தப்பட்ட சரீரத் தைப்போல் மேவார் படை சிறிது தெளிந்தது. அந்தத் தெளிய லால் கிடைத்த இடங்களில் பல அம்புகள்போல் பிருமச்சாரியின் படை நுழைந்துவிட்டது. பிருமச்சாரியின் புரவி வீரர்கள் ஏதோ வெறி பிடித்தவர்கள்போல் எதிரிகளை நாசம் செய்யத் தொடங்கினார்கள்.

சம்பிரதாயத்துக்கு நேர்விரோதமான இந்தப் போரைக் கண்டு இரு சகோதரர்களும் பிரமித்தனர். பிரமித்ததும் அன்றி தங்கள் படைப்பிரிவுகளால் எதிரிகளைச் சூழ்ந்து அழித்து விடவும் தீர்மானித்து வாட்களை உயரத் தூக்கி ஆட்டினார்கள். அவர்கள் பெரும்படையும் எழுநூறு பேரை நொறுக்கி நசித்துவிட முயன்றது. அந்தச் சமயத்தில்தான் பாபுஜியின் வாயுவேகப் புரவிப்படை திடீர் எனத் தோன்றி அவர்கள்மீது விழுந்தது. நிதானமற்ற புரவிகள் பயங்கரமாக சந்தசிம்மன் புதல்வர் படையை ஏதோ சூறாவளிபோல் தாக்கவே நாலாயிரம் எண்ணிக்கை திடீரென அர்த்தமற்றது ஆயிற்று. பாபுஜி புரவிகளைப் பழக்குபவர், விற்பவர் என்பது காந்தோஜிக்கும், மஞ்சாஜிக்கும் தெரிந்தாலும், அந்தப் புரவிகளை வீரர்கள் நடத்தி வருவார்கள் என்றும், போருக்கும் அவருக்கும் சம்பந்தம் உண்டு என்றும் அவர்கள் அறியாததால் வியப்பை எய்தி மும்முரமாகப் போரிட்டார்கள்.

பாபுஜியின் வாயுவேகப் புரவிப் படையால் வலப் பக்கத்திலும், பிருமச்சாரியின் நூறு நூறாகப் பிரிக்கப்பட்ட சின்னஞ்சிறு படைப் பிரிவுகள் நடுமத்தியிலும் ஊடுருவிவிட்டதன் விளைவாக மேவார் படை சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டுக் குலைந்தது. அதே சமயத்தில் கடோத்கஜனே போருக்கு வந்துவிட்டதுபோல் கோடரியை உயர்த்தியும் திடீரென இறக்கியும் பிருமச்சாரி எதிரிகளை வீழ்த்திக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் போதாக் குறைக்கு திடீரென பக்கத்து மலைப்பகுதியில் தோன்றிய இரு நூறு வேடர்களின் விஷ அம்புகள் பறந்து வந்தன மேவார் படையை நோக்கி.

இப்படி திடீர் திடீரென ஏற்பட்ட தொடர் போரால் கட்டுக் குலைந்து மேவார் படை பெரும் நாசத்திற்கு உள்ளான தால் சினம் மிகப்பெற்ற காந்தோஜியை ஜோடா தாக்கினான். காந்தோஜியின் வாளை அவன் தட்டிவிட்டபடியாலும், பாபுஜியின் புரவிகளின் மோதலால் மஞ்சாஜி புரவியில் இருந்து தூக்கி எறியப்பட்டதாலும் காந்தோஜியின் சைகையைக் கண்டு அவன் படை பாலைவனத்துக்குள் விரைந்து

பின்வாங்கியது. பின்வாங்கிய சமயத்தில் காந்தோஜி தான் சிறிது காலம் ஆண்ட மண்டோரரை நோக்கினான். பந்தங்களை ஏந்திய மக்கள் ஜெய முழக்கங்களுடன் கண்ட ஆயுதங்களுடன் வெளிவந்தார்கள் தங்கள் மன்னனை வரவேற்க.

அப்பொழுது சொன்னான் காந்தோஜி, பக்கத்தில் ஒரு புதுப் புரவியில் உட்கார்ந்து இருந்த தனது தம்பியை நோக்கி, "தம்பி! பார்த்தாயா! மண்டோர் மக்கள் தங்கள் மன்னனை எத்தனை நேசிக்கிறார்கள். இந்த மக்கள் பலத்துக்கு முன்பு நமது படைபலம் என்ன செய்ய முடியும்?" என்று கூறினான்.

"அது மட்டுமல்ல அண்ணா! பிருமச்சாரியையும் பாபுஜியையும் நாம் தவறாக எடைபோட்டோம். என்ன புதுவிதமான அணிவகுப்பு! புரவிகள் வேகம் என்ன! இந்த விந்தையாலும் நாம் ஏமாந்தோம்" என்றான் மஞ்சாஜி.

"ஆம் தம்பி! எண்ணிக்கை மட்டும் வெற்றியை அளிப்பதில்லை என்று கூறிய காந்தோஜி தனது புரவியை நடத்தினான் மேவார் இருந்த திசைநோக்கி. அவன் படை கிட்டத்தட்ட மார்வாருக்கும் மேவாருக்கும் இடையில் உள்ள லூனி ஆற்றை அடைந்த சமயத்தில் மண்டோர் திசையில் பெரும் தூள் கிளம்பியது.

"இதென்ன அண்ணா?" என்று வினவினான் மஞ்சாஜி.

"ஜோடா தன் கேவலத்தை நிரூபிக்கிறான். பின்வாங்கிய படையை அழிப்பது ராஜபுதன தர்மம் அல்ல" என்றான் காந்தோஜி.

"இருப்பினும் மேவார் சந்ததி கோழையல்ல என்பதை நிரூபிப்போம்" என்ற காந்தோஜி யுத்தத்தில் சிறுத்துவிட்ட படையை நிறுத்தித் திருப்பினான். அந்தப் படையின்மீது வேகமாக விழுந்தான் ஜகத்சிம்மன், சுமார் இருநூறு வீரர்களுடன். இரண்டு படைகளும் கை கலக்கு முன்பே ஜகத்சிம்மன் எறிந்த குறுவாள் ஒன்று மஞ்சாஜியின் மார்பில்

பாய்ந்தது. மஞ்சாஜி புரவியில் இருந்து சரிந்து பாலைவன மணலில் புரண்டான். அவன் இதயத்தில் இருந்து குபுகுபு வென்று கிளம்பிய இரத்தம் பாலைவன மணலை நனைத்தது.

தனது படைகளை ஜகத்சிம்மன்மீது ஏவ காந்தோஜி முயன்ற சமயத்தில் ஜகத்சிம்மன் புரவியில் இருந்து சரிந்து விழுந்தான் மணலில். அவன் இடையிலும் ஒரு குறுவாள் பாய்ந்திருந்தது. அடுத்த விநாடி வேகமாக வந்த இரு புரவிகள் மஞ்சாஜி விழுந்திருந்த இடத்தை அணுகின. அதில் இருந்து ராவ்ஜோடாவும் பிருமச்சாரியும் குதித்து மஞ்சாஜியின் உடலைப் புரட்டிப் பார்த்தார்கள். பிருமச்சாரி குறுவாளை மெள்ள மஞ்சாஜியின் இதயத்தில் இருந்து எடுத்து, பக்கத்தில் இருந்த ஜோடாவின் அங்கியைச் சிறிது கிழித்து காயத்தில் அடைத்து இரத்தத்தை நிறுத்தினார். மஞ்சாஜி மெள்ள கண் விழித்தான். ஆனால் அவன் சுவாசம் பெரிதாக வந்துகொண்டு இருந்தது. அவனைச் சுற்றி நின்ற ஜோடாவும், காந்தோஜியும் இதர வீரர்களும் அவன் உயிர் அதிக நேரம் நிலைக்காது என்பதைப் புரிந்துகொண்டதால் அனைவர் முகத்திலும் சோகக்களை அபரிமிதமாக விரிந்தது. தம்பியை நோக்கிக் கண்ணீர் உதிர்க்க வில்லை காந்தோஜி. அவன் கண்களில் நீருக்கு பதில் நெருப்பு நிரம்பி நின்றது.

"தம்பி! அஞ்சாதே. உன்னைக் கொன்றவனைப் பழி வாங்குகிறேன். அத்துடன்..." என்று மேலும் ஏதோ சொல்லப் போனான். அப்பொழுது பிருமச்சாரி காந்தோஜியைப் பார்த்தார் சினத்துடன். "காந்தோஜி! சபதம் எதையும் செய்யாதே. மார்வாரும் மேவாரும் சிந்திய ரத்தம் போதும். இந்த இரண்டு வம்சங்களின் போர்களில் ராஜபுதனப் பூண்டே அடியோடு அழிந்துவிடும்" என்றார். அத்துடன் மணலில் மற்றொருபுறம் கிடந்த ஜகத்சிம்மனை சுட்டிக்காட்டி, "இந்தத் துரோகிதான் இத்தனைக்கும் காரணம். அவனை அழைத்துச்செல். தூக்கிலிடு, வெட்டு, எதை வேண்டுமானாலும் செய்" என்றார்.

"அவனை வெட்டினால் என் தம்பியின் உயிர் வருமா?" என்று வினவினான், காந்தோஜி.

"யார் போனாலும் உயிர் வராது. அதைத் திரும்ப வரவழைப்பவன் மனித வரலாற்றில் இதுவரை யாரும் கிடையாது" என்றார்.

"ஜகத்சிம்மன் எனக்குத் தேவையில்லை" என்றான் காந்தோஜி.

"வேறு யார் தேவை?"

"உங்கள் மன்னன் ஜோடா" என்றான் காந்தோஜி.

ராவ்ஜோடா இதற்கு பதிலேதும் சொல்லவில்லை. மஞ்சாஜிக்கு அருகில் மண்டியிட்ட நிலையில் இருந்து எழுந்தான். "இதோ என் வாள்! எடுத்துக்கொள். உன்னுடன் வருகிறேன்" என்றான் மண்டோர் மன்னன்.

காந்தோஜியின் கண்களில் வியப்பு துலங்கியது. அந்த வியப்பை நூறு மடங்காக்க இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது. "அரசன்தான் வேண்டுமா? அல்லது அரசி வரலாமா உங்களுடன் கைதியாக" என்ற குரல் வந்தது. அதைத் தொடர்ந்து அந்த வேட்டுவப் பெண் சுற்றியிருந்த வீரர்களை விலக்கிக்கொண்டு முன்னே வந்தாள்.

"நீயா! அரசியா!" என்று வியப்புக் குரலில் துலங்க வினவினான் காந்தோஜி.

"ஆம்."

"எந்த ஊருக்கு அரசி?"

"முன்பு மலை அரசி. இப்பொழுது மண்டோரின் அரசி" என்ற அவள் கம்பீரமாக நடந்து தனது இரு கைகளையும் நீட்டினாள் காந்தோஜி முன்பு. "உம், கட்டுங்கள் என் கைகளை." என்றும் கேட்டுக் கொண்டாள்.

38. துரோகி!

மலை அரசி தனது வளையல் கரங்களை நீட்டி தன்னைக் கைது செய்யும்படிக் கேட்டுக்கொண்டதும் காந்தோஜி தனது தம்பியின் மரணத்தையும் மறந்து வியப்பையும் அதிர்ச்சியையும் ஒருங்கே அடைந்தான். அப்பொழுதும் மலை அரசி வேட்டுவர் உடையையே அணிந்திருந்ததால், காந்தோஜி அவள் கையில் காட்சியளித்த மங்கல கங்கணத்தை மட்டுமின்றி, கழுத்தில் துலங்கிய மங்கல சூத்திரத்தையும் பார்க்க முடிந்தது.

அவற்றில் இருந்து மலை அரசி ராவ்ஜோடாவுக்கு மாலையிட்ட மனைவி என்பதை உணர்ந்த காந்தோஜி மலை அரசியை உற்று நோக்கி, "மகாராணி! மேவார் அரச குமாரர்கள் இன்னும் பெண்களைச் சிறை செய்யும் அளவுக்குத் தாழ்ந்து விடவில்லை. ஆனால், பின்வாங்கிச் செல்லும் படைமீது விழுந்து அழிக்க முயலும் ராஜபுத்திரனை, அதாவது மண்டோர் மன்னனை நாங்கள் விட்டுச் செல்ல முடியாது" என்று கூறினான்.

இதைக் கேட்ட மலை அரசியின் கண்களில் துன்பச் சாயைக்குப் பதில் அனுதாபத்தின் சாயையே விரிந்தது. "காந்தோஜி! மன்னர், பிருமச்சாரியுடன் உங்களைத் தனியாக அனுகியிருக்கிறார் என்பதில் இருந்து ஏதும் புரியவில்லையா உங்களுக்கு?" என்று வினவினாள் மலை அரசி.

"என்ன புரிய வேண்டும்?" என்று சற்று கோபத்துடன் வினவிய காந்தோஜி மணலில் இருந்து பிருமச்சாரியால் தூக்கப்பட்ட தம்பியின் சடலத்தின்மீது தனது கண்களை ஓட்டினான்.

இதற்கு மலை அரசி பதில் சொல்லுமுன்பு பிருமச்சாரியே முந்திக்கொண்டார். "காந்தோஜி! இந்தப் போர் மூள்வதற்கு முன்பே, நீங்கள் பின்வாங்கும் பட்சத்தில் உங்களை துரத்தக் கூடாது என்றும், மண்டோர் மண்ணில் மேவார் ரத்தம் எதுவும் சிந்தக்கூடாது என்றும் மண்டோர் மன்னர் திட்டவட்டமாக உத்தரவு பிறப்பித்து இருக்கிறார். அதையும் மீறி வந்தான் ஜகத்சிம்மன். அதற்குக் காரணமும் இருக்கிறது. அவன் மேவாருக்கும் துரோகி; மண்டோருக்கும் துரோகி. ராஜபுதனத்தை அழிக்க வந்த கோடரிக்காம்பு அவன். அவன் மீது குறுவாளை வீசியது ராவ்ஜோடாதான். இதோ என் கையில் இருக்கும் உன் தம்பியின் சடலத்தின்மீது ஆணையாகச் சொல்கிறேன்" என்றார் பிருமச்சாரி. அத்துடன் மஞ்சாஜியை மேவார் வீரர்களிடம் ஒப்படைத்துவிட்டு மண்ணில் பொய் மயக்கம் கொண்டு கிடந்த ஜகத்சிம்மனைத் தூக்கி நிற்க வைத்தார். "இவன் காயம் அற்பமானது. இவனை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டும் என்றே ஜோடா தமது குறுவாளை இவன் இடைக்குக் குறி வைத்தார்" என்று கூறி அந்தக் குறுவாளைப் பிடுங்கி மன்னனிடம் கொடுத்து ஜகத்சிம்மன் காயத்துக்குக் கட்டும் கட்டினார்.

சுற்றிலும் தனது வீரர்களும் மேவார் வீரர்களும் நிற்க, பிருமச்சாரியால் பலவந்தமாகத் தூக்கி நிறுத்தப்பட்ட ஜகத்சிம்மன் மிரள மிரள விழித்தான் ஒரு விநாடி. பிறகு தைரியமாகக் கேட்டான், "நான் செய்ததில் தவறு என்ன?" என்று.

"பின்வாங்கிய எதிரிகளைத் துரத்தியது; மன்னர் உத்தரவுக்கு எதிராக நடந்துகொண்டது" என்றாள் மலை அரசி.

"இதில் தவறு என்ன? முன்பு ராவ்ஜோடா சித்தூரில் இருந்து தப்பி ஓடி வந்தபோது மேவார் வீரர்கள் அவரைத் துரத்தி வரவில்லையா? அவர்களைத் தலைமை வகித்து நடத்தி வந்ததும் சந்தசிம்மன் புதல்வர்கள்தானே?" என்று கேள்வியை வீசினான் ஜகத்சிம்மன்.

காந்தோஜியின் கண்கள் குறுகின ஒரு விநாடி. பிறகு, "ராவ் ஜோடா தப்பி ஓடியதைச் சொல்லி துரத்தச் சொன்னது நீதானே?" என்று கேட்டான் ஜகத்சிம்மனை நோக்கி காந்தோஜி.

"கதை நன்றாகத் தொடர்கிறது" என்றான் ராவ் ஜோடா.

"என்ன கதை ஜோடா" பிருமச்சாரி வினவினார் சிறிது சந்தேகத்துடன்.

ஜோடா, ஜகத்சிம்மனைக் கூர்ந்து நோக்கினான். "என் தந்தை வெட்டப்பட்டதை அறிவித்து சித்தூரைவிட்டு என்னை ஓடச் சொன்னவனும் ஜகத்சிம்மன்தான்" என்ற ராவ்ஜோடா, மேலும் சொன்னான், "அதுமட்டுமல்ல! என்மீது பிருமச்சாரிக்குப் பகை உண்டாக்க முயன்றவனும் இவன்தான். எனக்கும் இன்னொரு பெண்ணுக்கும் உறவு உண்டு என்று சொல்லி எங்கள் திருமணத்தையும் நிறுத்தப் பார்த்தான் இவன்" என்று சொல்லி மலை அரசியை நோக்கினான்.

"ஆம். இவன் மகா துரோகி" என்றாள் மலை அரசி.

அந்தக் குரலைக் கேட்ட ஜகத்சிம்மன் தேள் கொட்டியவன்போல் துள்ளினான். "இவள் மலை அரசி அல்ல, இவள்தான் அந்த வேட்டுவச்சி" என்று கூவினான்.

அப்பொழுதும் மலை அரசி மசிந்தாள் இல்லை. "இவன் மகா துரோகி" என்று இரண்டாம் முறை சொன்னாள்.

இம்முறை பேயறைந்தவன்போல் நின்றான். "இவள் மலை அரசிதான்; சந்தேகமில்லை. இந்தக் குரல் மலை அரசியுடையதுதான். இவள் அவள் அல்ல" என்று உளறினான்.

"எவள் எவளல்ல?" என்று சீறினான் காந்தோஜி.

"ஆம். சொல் ஜகத்சிம்மா?" என்று மரியாதையை விட்டுப் பேசினாள் மலை அரசி.

இதைக் கேட்டதும் திகைத்தான் ஜகத்சிம்மன். "இந்தக் குரல் வேட்டுவப் பெண்ணுடையது..." என்று கூறிய மண்டோர் படைத் தலைவன் "அடி மோசக்காரி! நீயே இரண்டு குரலில் பேசி என்னை மோசம் செய்தாயா?" என்று அவள்மீது பாயப் போனான்.

அவன் ஊட்டியை காந்தோஜியின் வாள் தடவி நின்றது. "நில் அப்படியே. இல்லையேல் பிணமாகிவிடுவாய்" என்று காந்தோஜியின் குரலும் கடுமையாக ஒலித்தது. அதனால் நின்ற இடத்தில் ஜகத்சிம்மன் நின்றுவிடவே காந்தோஜி வினவினான், "ராவ் ஜோடா! மலை அரசி எதற்காக இரு குரலில் பேசுகிறாள்?" என்று.

"ஜகத்சிம்மன் துரோகி என்பதை நான் அறியுமுன்பே இவள் அறிந்து இருந்தாள். என்னிடமும் சொன்னாள். நான் நம்பவில்லை. என்னை நம்பவைக்க இரட்டைப் பிறவியாக நடித்தாள், பேசினாள். அது புதிதும் அல்ல. இவளுக்கு ஜோகியின் குகைக்கு அருகே உள்ள காடுகளில் பறவைகளுடனும் மிருகங்களுடனும் பழகியிருக்கிறாள். அந்தப் பறவைகளின் மொழி இவளுக்குப் பழக்கம். ஆகையால் குரலை மாற்றிப் பேசுவது இவளுக்கு ஒரு கஷ்டமல்ல" என்ற ராவ்ஜோடா, "ஜகத்சிம்மன் முதலில் என்னை ஓடவைத்தான் சித்தூரில் இருந்து. என்னைக் கோழையென பறைசாற்றினான். பிறகு எனக்காக வேவு பார்ப்பதாகச் சொல்லி மண்டோர் நகரிலும் வசித்தான். ஆனால் அங்கு எனக்கு எதிராகப் பிரசாரம் செய்துகொண்டு இருந்தான். இவன் அறிவிக்காவிட்டால் நான் மாளிகையில் இருந்தது மேவார் வீரர்களுக்குத் தெரிய நியாயமில்லை. பலவித நாடகங்கள் ஆடினான், சதி செய்தான், மலை அரசியையும் என்னையும் பிரிக்க முயன்றான்" என்று விளக்கினான்.

"பொய்! பொய்! முழுவதும் கட்டுக்கதை" என்று கூவினான் ஜகத்சிம்மன். ஆனால் அவன் முகம் அவன் சொல்வது பொய் என்பதைத் தெளிவாகக் காட்டியது. மண்டோர் படைத்தலைவன் முகத்தில் அச்சமும் விவரிக்க இயலாத வெறுப்பும் கலந்து தாண்டவமாடின. "இந்த ஜோடா ஒரு கோழை, இவன் ஓடியதற்கு நான் பொறுப்பாளி அல்ல" என்றும் பதற்றத்துடன் பேசினான் ஜகத்சிம்மன்.

மன்னனிடம் அடியோடு மரியாதையைக் கைவிட்டு ஜகத்சிம்மன் பேசியதை அனைவரும் கவனித்தனர். ஆனால் வேறு யாரும் அவனுடன் பேசவில்லை. காந்தோஜியே கேட்டான், "எதற்காக நீ மண்டோரின் துரோகியாக மாறினாய்?" என்று.

"காரணம் நான் சொல்கிறேன்" என்ற ஜோடாவின் குரல் பயங்கரமாக ஒலித்தது.

"சொல் ஜோடா. இத்தனை நாள் நீ அடக்கி வைத்திருந்த உண்மை வெளிவரட்டும்" என்று ஊக்கினார் பிருமச்சாரி.

ஜோடா சிறிது தயங்கினான். பிறகு மெதுவாகச் சொன்னான், "மண்டோர் அரியணைக்கு எனக்கு அடுத்த வாரிசு ஜகத்சிம்மன்" என்று.

ஜோடா சொன்னது உண்மை என்பதற்கு சாட்சியம் தேவையில்லாமல் இருந்தது. ஜகத்சிம்மன் முகத்தில் சாட்சியம் எழுதி ஒட்டியிருந்தது. காந்தோஜி அந்த சமயத்தில் கேட்டான் கோபத்துடன், "என் வாளை இவன் கழுத்தில் இப்படியே அழுத்திக் கொன்றுவிடட்டுமா?" என்று.

"வேண்டாம்" என்றான் ஜோடா.

"ஏன்?" காந்தோஜியின் குரலில் வியப்பும் இருந்தது. வெறுப்பும் இருந்தது.

ஜோடா சொன்னான்: "முதலில் வீரனான மஞ்சாஜியின் ரத்தம் சிந்திய இடத்தில் இந்த துரோகியின் ரத்தம் சிந்தக்

கூடாது. இந்த இடத்தில் மஞ்சாஜியின் நினைவுச் சின்னமாக நான் பெரிய வெற்றித்தூணைக் கட்டப்போகிறேன். தவிர இவன் மாளவேண்டியது என் கையால்."

அத்துடன் ஜோடா தனது வாளை உருவிக்கொண்டான். "பிருமச்சாரி! இந்தத் துரோகியை நான் செல்லும் இடத்திற்கு அழைத்து வாருங்கள். எங்கள் சண்டையை லூனி ஆற்றங்கரையிலேயே தீர்த்துக்கொள்கிறோம்" என்று கூறி நதியின் கரையோரமாக நடந்து சென்றான்.

அவன் தீர்மானித்த இடத்தில் நின்றதும் ஜகத்சிம்மன் கையில் அவன் வாளும் கொடுக்கப்பட்டது.

ஜகத்சிம்மன், ஜோடா தயார் ஆகுமுன்பே அவன்மீது பாய்ந்தான் தனது வாளை உருவிக்கொண்டு. அதை அனாயாசமாகத் தடுத்த ஜோடா அந்த இரவில் பயங்கரமாக நகைத்தான். "உன்னிடம் நான் எதிர்பார்த்தேன் இதை" என்றும் கூறினான் நகைப்பின் ஊடே. பிறகு இருவருக்கும் மிகப் பயங்கரமாக சண்டை தொடர்ந்தது.

ஜகத்சிம்மன் பாய்ந்தும் முரட்டுத்தனமாகவும் போரிட்டான். அதனால் பலமுறை ஜோடாவின் வாள் முனையின் எல்லைக்குள் வந்தான். ஆனால், ஜோடா அவனைக் கொல்ல மறுத்தான். முதலில் ஜோடாவின் வாளின் நுனி ஜகத்சிம்மனின் ஒரு கண்ணில் பாய்ந்தது. பிறகு இந்திரஜாலம்போல் சுழன்று ஒரு காதை அறுத்து எறிந்தது. பிறகு மூக்கின் நுனியை மட்டும் சீவித் தள்ளியது. அடுத்து எதிரியின் உதடுகள் நடுவில் வெட்டப்பட்டன. கன்னத்தில் ஆழமான ஒரு காயம். அடுத்து ஜகத்சிம்மன் வாள் ஆகாயத்தில் பறந்தது. இத்துடன் போரை முடித்த ஜோடா "உன் உயிரைக் கொடுத்துவிட்டேன். போ" என்று வெறுப்புடன் கூறினான்.

அடுத்து நடந்தது யாரும் எதிர்பாராதது. ஜகத்சிம்மன் தனது குறுவாளைக் கச்சையில் இருந்து எடுத்து தனது

வயிற்றில் புதைத்துக்கொண்டான். பிறகு, தள்ளாடி நடந்து லூனியின் உப்பு நீரில் விழுந்தான். அவன் குருதி உப்பு நீரில் கலந்து அதை செந்நீர் ஆக்கியது. விதியின் விந்தையை நினைத்து வியந்தான் ராவ் ஜோடா. மேவாரில் இருந்து வந்த போது அதே இடத்தில்தான் அவன் முதன் முதலாக இறங்கினான்.

39. வேகம்! தாகம்!

மேவாரின் தலைநகரான சித்தூரில் இருந்து தப்பி ஓடிவந்து லூனி ஆற்றின் உப்பு நீரில் தந்தையின் மரணத்துக்கு நீராடிய அதே துறையில், கிட்டத்தட்ட அதே இடத்தில் தங்கள் வம்ச துர்ப்பாக்கியத்துக்கும் அவப் பெயருக்கும் காரணமான ஜகத்சிம்மன் தற்கொலை செய்துகொண்டு நீரின் நிர்மலத்தைத் தனது துரோக இரத்தத்தால் அசுத்தப்படுத்தியதைக் கண்டு, சில விநாடிகள் அந்த இரத்தத்தைப் பார்த்த வண்ணமே நின்றான், மண்டோர் மன்னன். பிறகு, பெருமூச்சு விட்டு "ஜகத்சிம்மா! மரணாந்தானி வைராணி (எந்த விரோதமும் மனிதனின் சாவு வரையில்தான்) என்ற மகாகவியின் உபதேசத்துக்குத் தலைவணங்குகிறேன். உன்னை மன்னித்து விட்டேன்" என்று கூறிவிட்டு, அந்த இடத்தைவிட்டு பிருமச்சாரியும் மற்றவர்களும் இருந்த இடத்துக்கு வந்தான்.

அவன் வருவதற்குள் பிருமச்சாரி, மஞ்சாஜியின் சடலத்தின் காயத்துக்குக் கட்டுப்போட்டு கைகால் விரல்களைப் பிணைத்து சடலத்தைக் காந்தோஜியின் புரவியின் முதுகில் குறுக்கே போட்டிருந்தார். ராவ்ஜோடாவுக்கு சந்தசிம்மன் புதல்வர்கள் இருந்த நிலை அவன் உயிரையே கொண்டுபோய் விடும்படியான வேதனையை அளிக்கவே, அவன் காந்தோஜியின் கண்களை ஏறெடுத்து நோக்கினான், தனது துயரம் தோய்ந்த கண்களால். பிறகு தனது வாளை எடுத்து காந்தோஜியின் கையில் கொடுத்தான்.

காந்தோஜியின் கண்களில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. வீரனான அவன் கண்கள் நீரைச் சிந்தவில்லை, தம்பியின் சடலம் தனது புரவிக்குக் குறுக்கே தன் கண்களுக்கு எதிரே கிடந்த சமயத்தில்கூட.

ஜோடா வாளைக் கொடுத்ததும், வாங்கவில்லை காந்தோஜி. "இது எதற்கு?" என்று வறண்ட குரலில் கேட்டான்.

"மேவார் மன்னனிடம் கொடுப்பதற்கு. அல்லது அவர் சார்பில் நீங்கள் வாங்கி என்னிடம் திரும்ப அளிப்பதற்கு" என்றான் ஜோடா சிறிதும் சலனம் அற்ற குரலில்.

"இதன் பொருள் தெரியுமா?" என்று காந்தோஜி வினவினான்.

"எந்த ராஜபுத்திரனுக்கும் தெரியும்" என்றான் ஜோடா.

"இந்த வாளை நான் ஏற்றுக்கொண்டால் மார்வார், மேவாரின் சிற்றரசு ஆகும்" என்று சுட்டிக் காட்டினான், காந்தோஜி.

"என்றும் அப்படித்தான் இருந்திருக்கிறது. இனியும் அப்படித்தான் இருக்கும். அதன் சுக துக்கங்களில் மார்வார் பங்கெடுத்துக் கொள்ளும். போர்க் காலங்களில் மார்வார், மேவாரின் பிரதம அடிமையாக இருக்கும்" என்றான் ஜோடா.

"மார்வார் விரிந்து பேரரசானால்?" காந்தோஜியின் கேள்வி திட்டமாயிருந்தது.

"பணிமகனுக்கு என்ன செல்வம் வந்தாலும் அவன் எஜமானன் ஆவதில்லை" ஜோடாவின் பதிலும் திட்டமாயிருந்தது.

இதைக் கேட்ட காந்தோஜி ஜோடாவின் வாளை தனது கையில் வாங்கி திருப்பிக் கொடுத்தான் மார்வார் மன்னனிடம். பிறகு புரவியைத் திருப்பினான், லூனி ஆற்றைக் கடந்து ஆரவல்லி மலைத் தொடருக்குச் செல்ல.

"காந்தோஜி" என்ற ஜோடாவின் குரல் காந்தோஜியை சிறிது தேக்கவே, அவன் புரவியில் இருந்த வண்ணம் திரும்பி நோக்கினான். அவன் வாயைத் திறந்து கேள்வி எதையும் கேட்காவிட்டாலும் அவன் கண்கள் கேட்டன "என்ன?" என்று.

"மஞ்சாஜியின் தகனத்துக்குப் பிறகு அஸ்திகளை எனக்கு அனுப்பிவிடு" என்றான் ஜோடா.

"எதற்கு?"

"அதன்மீது வெற்றித்தூணை இந்த இடத்திலேயே கட்டுகிறேன்."

"சரி" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு காந்தோஜி புரவியை நடக்கவிட்டான். அவன் வீரர்கள் அவனைத் தொடர்ந்தார்கள். அவர்கள் போவதை சில விநாடிகள் பார்த்துக்கொண்டே நின்ற ஜோடா ஒருமுறை பெருமூச்சு விட்டு தனது புரவியின்மீது ஏறினான். அதற்கு முன்பே பிருமச்சாரி தமது புரவியில் ஏறிச் சென்றுவிட்டார். அதனால் தனித்து விடப்பட்ட ஜோடாவும் மலை அரசியும் அக்கம் பக்கத்தில் புரவியை விட்டுக்கொண்டு மௌனமாகவும் மெதுவாகவும் சென்றார்கள்.

முழுமதியின் கதிர்வீச்சில் பாலைவன மணல் அசாத்திய மெருகு பெற்று இருந்தது. எங்கும் வெள்ளிமயம். தூரத்தே பாகுர்ச்சிராவின் வசீகர எழுச்சி, பக்கத்தில் அந்த மலையைப் போலவே அழகுடன் வந்த மலை அரசியின் இணையிலா லாவண்யம். அத்தனை அழகும் சூழ்நிலையும் ஜோடாவின் மனத்துயரத்தை ஆற்ற முடியவில்லை. அவன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே புரவியை நடத்திச் சென்றான்.

மலை அரசி தனது புரவியை அவன் புரவிக்கு வெகு அருகில் நடத்தி தனது வலது காலை அவனது இடது காலுடன் இடிக்க விட்டாள். அப்படியும் அவன் அசையாததையும், வெறித்து நேரே பார்த்துக்கொண்டு செல்வதையும் கண்ட

மலை அரசி இடது கையில் தனது புரவியின் கடிவாளத்தை ஏந்திக்கொண்டு, வலக்கையை அவன் முழந்தாளின் மீது வைத்தாள். புரவியின் அசைப்பில் அவள் கை அவன் முழந்தாளுடன் அசைந்தது.

சாதாரண சமயமாக இருந்தால் ஜோடாவின் உணர்ச்சிகளை அந்த நிலை பெரிதும் புரட்டியிருக்கும். ஆனால், அந்த சமயத்தில் அவன் இதயம் முழுவதையும் வீரனான மஞ்சாஜியும் துரோகியான ஜகத்சிம்மனுமே ஆட்கொண்டிருந்தபடியால் அவன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இதனால் வெகுண்ட மலை அரசி தனது புரவியை எதிரே இருந்த மலைப் பகுதியை நோக்கி வெகு வேகமாக ஓடவிட்டாள்.

பாபுஜியால் பயிற்சி அளிக்கப்பட்டதும் அராபியக் குதிரைகளில் உயர்ந்த ஜாதியுள்ளதுமான அந்தப் புரவி மணலில் அலட்சியமாகப் பாய்ந்து சென்றது. வெண்மதியின் வெள்ளிக் கிரணங்களுக்கு இடையில் அம்புபோல் பறந்த அந்தப் புரவியின் குளம்பு ஒலியால் கனவில் இருந்து மீண்ட ஜோடா, வேகமாகச் செல்லும் மலை அரசியைக் கண்டான்.

புரவியின் வேகத்தால் காற்றில் விரிந்த அவள் தலைக்குழல்களின் பகுதிகள் சில, வெள்ளிக் கிரணங்களில் மிகவும் பளபளத்தன. அவள் உட்கார்ந்து இருந்த தோரணையில் பெரிய அலட்சியம் இருந்தது. சிற்றிடை அசைந்ததால் புரவியின் முதுகில் இழைந்த அவள் பருத்த அழகிய பின்புறங்கள் ஜோடாவின் துக்கத்தையும் துடைத்தன. புரவியின் வயிற்றை இறுக்கிப் பிடித்த கால்களின் மேல் பரிமாணம் அவன் இதயத்தைப் பல கயிறுகளால் பிணைத்து இழுத்தன. அடுத்த விநாடி ஜோடாவும் தனது புரவியைப் பறக்கவிட்டான்.

அவன் துரத்தினான். அவள் புரவியை நிறுத்தவில்லை. ஓடினாள். இந்தத் துரத்தலும் ஓட்டமும் ஆதிகாலம் முதல்

இருந்துவரும் கதைதான். இருப்பினும் காலம் அதன் கதியை மாற்றவில்லை. வேகத்தைக் குறைக்கவில்லை. மலை அரசியைத் துரத்திய ஜோடா மெள்ள அவளைப் பிடித்தான், நீண்ட நேரத்துக்குப் பின்பு. பிடித்ததும் வெறி பிடித்தவன்போல் அவள் புரவிமீது தாவி அவளை இழுத்துக்கொண்டு மணலில் விழுந்தான். தெய்வகதியா, மனித விந்தையா, வேண்டும் என்றே அப்படி விழுந்த நிலையா? திட்டமாகச் சொல்ல முடியாது என்றாலும் மலை அரசியின்மீது ஜோடா விழுந்து கிடந்தான்.

அவள் செயலற்று மணலில் கிடந்தாள். புரவியை மிக வேகமாகச் செலுத்தியதால் அவளுக்குப் பெருமூச்சு வாங்கவே அவள் மார்பு, மேலே கிடந்த ஜோடாவின் கண்களுக்கு எதிரே எழுந்து எழுந்து தாழ்ந்தது. ஜோடா அவள்மீது கிடந்த நிலையில் அவள் ஒரு மார்புமீது முகத்தை வைத்தான். இன்னொன்றில் இதயவேகத்தைக் கவனித்தான். அவள் அழகுக்கு அபயமளித்த கையுடன் ஜோடா கேட்டான்: "எதற்காக இப்படி இறைக்க இறைக்க ஓட வேண்டும்?"

அவள் பதில் சொல்லவில்லை. அவள் அணிந்து இருந்த புலித்தோல் ஆடையை மேற்பக்கம் சிறிது விலக்கி "சற்று நிதானப்படுத்திக் கொள்" என்றான் ஜோடா.

அவள் நிதானம் எங்கோ பறந்துவிட்டது. மார்பை சற்றே நிமிர்த்தி அசைத்தாள் மலை அரசி. அவள் கன்னமொன்றில் ஏதோ முரட்டு முகடு ஒன்று தடவியது. அடுத்து அவள் தன்னை விடுவித்துக்கொண்டு சற்று எட்ட இருந்த மலையின் அடிவாரத்தை நோக்கிச் சென்றாள். ஜோடா நிதானமாகப் பின்தொடர்ந்தான். மலை அடிவாரப் புதர் ஒன்றன் மறைவில் அவள் படுத்துக் கிடந்தாள். அவன் விலக்கிய மார்பு ஆடையை அவள் மூடவில்லை. இடுப்பில் இருந்த புலித்தோலும் சிறிது சரிந்து கிடந்தது. ஜோடா வெறியுடன் அவளை அணுகினான். மோகத்தின் தாகம் அவனுக்கு வேகத்தை ஊட்டியது. துணிவும் தடைகளைத் தகர்த்தது.

40. அரசி ஆன, மலை அரசி!

மலை அடிவாரப் புதரில் மலை அரசி மல்லாந்து கிடந்த கோலம் மண்டோர் மன்னனின் வெறியைக் கிளறிவிடவே, அவன் உலகத்தையே மறந்து, அதுவரை நேர்ந்த நிகழ்ச்சிகளால் மனம் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளையும் தடைகளையும் உதறி அவள் பக்கத்தில் உட்கார்ந்து, இடது கையைத் தரையில் ஊன்றி வலது கையை அவள் பூவுடலின்மீது போட்டான். அதனால் அவள் சற்று நெகிழ்ந்த காரணத்தால், அவன் கையை நாடிவந்த திண்ணிய மார்பகம் ஒன்றன்மீது அவன் முரட்டுக்கரம் வளைய வரவே மலை அரசி நிதானத்தை அறவே இழந்தாள்.

அந்த நிலையில் அவன் அவள் அழகிய முகத்தை நோக்கிக் குனிந்து பங்கய விழிகளின்மீதும், கன்னத்தின் மீதும், முடிவில் அதர இதழ்கள்மீதும் அடுத்து அடுத்து அவன் தனது உதடுகளை மூர்க்கத்தனமாக பதியச் செய்யவே, அவள் சொர்க்கத்தில் இருந்தாள். இதழ்களில் இருந்து விலகிய அவன் வலிய உதடுகள் பிறகு அவள் காதுக்கு அருகில் சென்று சொற்களைப் பொழியலாயின.

உண்மையில் பேச்சுக்கு இடமில்லாத சமயந்தான் அது. இருப்பினும் சில நினைப்புகள், சில சொற்கள் இன்பத்துக்கு இசை ஊட்டும் வன்மை வாய்ந்தவையாகையால் அவன் மெதுவாக அவளை அழைத்தான் "மலை அரசி" என்று.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களை மூடிய வண்ணம் அந்திவேளை தாமரைபோல் கிடந்தாள். ஆனால் அவன் கை சரிந்து கிடந்த புலித்தோலை சரிப்படுத்தும் பாவனையில் அவள் அழகிய தொடைமீது பதியவே அவள் வேதனையும் இன்பமும் கலந்த "உம்" என்று ஓர் ஒலியை மட்டும் வெளிப்படுத்தினாள். அவன் கை அத்துமீறவே "உம் உம்" என்று இருமுறை "உம்" காரத்தில் தனது எதிர்ப்பைத் தெரிவித்தாள்.

ஆனால் எதிர்ப்பா அது? இல்லை இல்லை, அழைப்பு என்பதை ஜோடா புரிந்துகொண்டான். எனினும் "மலை, அரசி!..." என்று துவங்கினான்.

"என்னவாம்?" அவள் பூவிதழ்களில் இருந்து குழைந்து வந்தன சொற்கள்.

ஜோடா தரையில் ஊன்றியிருந்த இடது கையையும் எடுத்து அவள்மீது வைத்தான். "இன்னும் ஆட்சேபணையா?" என்று ரகசியமாக அவள் காதில் சொற்களை உச்சரித்தான்.

"எதற்கு?" தெரியாததுபோல் கேட்டாள் மலை அரசி.

"இந்த மலை..." ஏதோ உளறினான் ஜோடா. உளறும் சமயம்தானே, அது.

"இதற்கென்ன?" அவள் உறுதி அதிகமாயிற்று மேலுக்கு.

"ஜோடாகிர்ரின் ஒரு பகுதி" விளக்கினான் ஜோடா உதடுகளால். வலது கைகள் விளக்கத்தைத் தேடின.

உணர்ச்சிப் பிரவாகத்தில் ரஸானுபவத்தில் சிக்கியிருந்தாள் மலை அரசி. இருப்பினும் சமாளித்துக்கொண்டு "தெரியும் எனக்கு..." என்றாள். அத்துடன் முனகினாள்.

"இங்கு நான் வருமுன்பு இதற்கு பாகுர்ச்சிரா (பறவைகளின் சரணாலயம்) என்று பெயர் என்று ஜோகி சொன்னார்.

என் வருகையால் இது ஜோடாகிர் (போர் மலை) ஆகியது. நினைப்பிருக்கிறதா உனக்கு?" என்று கேட்டான் ஜோடா.

"உம் உம்." இதுதான் மலை அரசியின் பதில்.

"அப்பொழுது உன்னை பிரமச்சாரினி என்று அறிமுகப்படுத்தினார் எனக்கு" என்றான் ஜோடா.

"ஆம்." மலை அரசி நகைத்தாள்.

"அந்த பிரமச்சரியம்..." என்று துவங்கிய ஜோடா வார்த்தையை முடிக்கு முன்பு அவள் மீண்டும் நகைத்தாள். "அடுத்த ஆசிரமம் வந்ததும், முதல் ஆசிரமம் போயிற்று" என்றாள், உடலைத் திருப்பினாள் அவனை நோக்கி.

ஜோடாவின் வலது கை அவளைச் சுற்றி வளைத்து இறுக்கியது. "இரண்டாவது ஆசிரமமா?" என்று வினவினான் ஜோடா ஏதோ பேச வேண்டும் என்பதற்காக.

"பிருமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், பைக்ஷ்யம் என நான்கு ஆசிரமங்கள் இந்து மதத்தில் உண்டு" என்ற அவள், "முதல் ஆசிரமத்தை ஜோகி தந்தார். அதை நீங்கள் உடைத்துவிட்டீர்கள்."

"ஏன்? மூன்றாவது ஆசிரமத்துக்குப் போவதுதானே?"

"அதற்கு வயதாகவில்லை. தவிர, நீங்கள் விடமாட்டீர்கள் போலிருக்கிறது!"

இதைக் கேட்ட ஜோடா அவளை அதிகமாக இறுக்கினான். "அடி கள்ளி! உன்னை என்ன செய்கிறேன் பார்"என்று கூறி வெறியுடன் அவள் உடலில் தனது தலையைப் புரட்டினான்.

அவள் கண்களை அரைகுறையாகத் திறந்து அவனை நோக்கினாள். அந்தப் பார்வை அவன் சித்தத்தைத் தவிடு பொடியாக்கியது. தலையைச் சிறிது தூக்கினான். எதிரே நிமிர்ந்து எழுந்த அழகுகள் அவன் சுயநிலைக்கும் பேச்சுக்கும்

முற்றுப்புள்ளி வைத்தன. அவளைத் தரையில் அழுத்தினான். பிறகு "சேசே! இதென்ன முரட்டு மலைப்பகுதி. உடலில் கற்கள் குத்துமே. நீ பஞ்சணையில் படுக்க வேண்டியவள், மண்டோர் மகாராணி" என்று சொல்லி அவளிடம் இருந்து விலக முயன்றான்.

ஆனால், அவள் கைகள் எழுந்து, அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தன. "நான் மலை அரசி. முரட்டு மலையே எனக்கு பஞ்சணை. முரட்டுத்தனம் எதுவாயிருந்தாலும் எனக்குப் பிடிக்கும்" என்று அவள் முணுமுணுத்தாள், அவனை இழுத்தாள் தன்னை நோக்கி.

எதிரே கிடந்தாள் மலர் அரசியென மலை அரசி, அவனுடைய முரட்டுத்தனத்தை எதிர்பார்த்து. ஆனால், அவன் எண்ணங்கள் பாலைவனத்தில் முதன்முதலாக வந்தபோது நினைத்த விஷயங்களை நோக்கி வட்டமிட்டன. சரித்திரம், பூமி, வாழ்க்கையின் கர்ம பலன்கள் அனைத்திலும் ஒரு சுழற்சியும் தொடர்ச்சியும் இருப்பதை அன்றும் எண்ணினான். இன்றும் எண்ணினான். அன்று தான் ஓடி வராவிட்டால் இந்த மலைக்கு வந்திருக்க முடியாது. வந்திருக்காவிட்டால் இந்த மலை மோகினியைச் சந்தித்திருக்க முடியாது என்று நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான். "வாழ்க்கையின் சுழற்சி விசித்திரம்" என்று முனகவும் செய்தான்.

அவள் கண்களை லேசாக விரித்தாள். மெள்ள அவனைப் பார்த்தாள். பிறகு தைரியமாகவே சொன்னாள். "ஏன் யோசிக்கிறீர்கள்?" என்று.

அவன் யோசனை பலமாயிற்று. "உன்னை மண்டோரில் மகாராணியாக நான் பார்க்கப் போகிறேன். பிறகு அங்கு என் பஞ்சணையில் நீ கிடப்பாய்" என்றான் யோசனைக்குக் குறுக்கே.

அவள் ஒரு வெடியை எடுத்து வீசினாள். "நான் மண்டோருக்கு வரப்போவதில்லை" என்று.

அதிர்ச்சி காமத்தை விரட்டியது ஜோடாவுக்கு "ஏன்?" என்று கேட்டான்.

"முதலில் நான் என்ன ஜாதி என்று எனக்குத் தெரியாது-" என்றாள் மலை அரசி.

"ஜாதிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"நிரம்ப இருக்கிறது. இப்பொழுது மோகவெறியில் நீங்கள் எதற்கும் சம்மதிக்கலாம். பிறகு வருந்துவீர்கள். அதனால்_" அவள் பதிலை முடிக்கவில்லை. அவனை இறுக அணைத் தாள், இழைந்தாள் அவனுடன். தர்க்கம் மறைந்தது, ஜாதி மறைந்தது, ஆண் பெண் என்ற உணர்ச்சியும் வேகமும் இருவரையும் ஆட்கொண்டன.

விடிந்தது தெரியவில்லை இருவருக்கும். தெரிந்தபின் மலை அரசியே முதலில் எழுந்தாள். அவனை எழுப்பாமலே நடந்தாள். புலித்தோல் ஆடையை மீண்டும் புனைந்தாள். புரவி இருக்குமிடம் தள்ளாடி நடந்து சென்று அதன்மீது ஏறினாள். இரவின் நிகழ்ச்சியால் சிவந்து கிடந்த அவள் மேனியை சூரியன் அதிக சிவப்பாக அடித்தான்.

அவள் நிதானமாகப் புரவியை மலைமீது செலுத்தி ஜோகியின் குகை அருகில் வந்து அருவியில் நீராடினாள். பிறகு எழுந்து பக்கத்து குகைக்குச் சென்று வேறு புலி ஆடை அணிந்து குகைக்குள் சென்றாள்.

ஜோகி நிஷ்டையில் இருந்தார். அவரை வணங்கி, பாறையில் சாய்ந்து நின்றாள் அவள். ஜோகி கண்ணைத் திறந்தார். மலை அரசியை ஏறிட்டுப் பார்த்தார். அந்த சமயத்தில் பிருமச்சாரியும் பாபுஜியும் உள்ளே நுழைந்தனர். "நீ இங்கேயா வந்துவிட்டாய்? ஜோடா எங்கே? உங்கள் இருவருக்கும் மண்டோரில் வரவேற்பு தயாராக இருக்கிறதே" என்றார் பிருமச்சாரி.

ஜோகி தலையை நிமிர்த்தனார். "மண்டோர் போர் முடிந்துவிட்டது. நீங்கள் இருவரும் உங்கள் இருப்பிடம் போகலாம். ஜோடா இந்தக் குகையை நோக்கி வந்துகொண்டு இருக்கிறான்" என்றார்.

அவர் சொல்லி முடிக்கும் தறுவாயில் ஜோடா உள்ளே நுழைந்தான். அங்கு இருந்தவர்களைக் கண்டு விழித்தான். பிறகு நெடுஞ்சாண் கட்டையாகத் தரையில் விழுந்து ஜோகியை வணங்கினான்.

ஜோகி சொன்னார், "ஜோடா! மலை அரசி மேவார் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவள். அதனால்தான் நீ அவள் அடிமையாகிவிட்டாய். மேவாரின் பிரதம மந்திரிக்குப் பிறந்தவள் மலை அரசி. ஆகையால் நீ அவளை ஏற்கலாம்" என்று.

இதைக் கேட்ட பிருமச்சாரியும் பாபுஜியும் பிரமித்தார்கள். மலை அரசியும் விழித்தாள். குழப்பம் அடைந்த கண்களுடன்.

"இந்த உண்மையைப் பின்னால்தான் நான் அறிந்தேன் விளக்கின்மூலம். இந்த ஜோடாகிர் ஜோட்பூர் ஆகும். இவள் சந்ததிகள் இங்கு பெரும் அரசை அமைப்பார்கள். அதற்குக் காலம் இருக்கிறது. இப்பொழுது அவளை அழைத்துச் செல்" என்றார் ஜோகி. பிறகு மலை அரசியைப் பார்த்துச் சொன்னார், "மகளே! ஜோடா மகாவீரன். உங்கள் சேர்க்கையால் மார்வாரும் மேவாரும் பெரிதும் இணையும். பிற்காலத்தில் மார்வார் பலத்த அரசாகும்" என்று கூறி ஆசீர்வதித்தார்.

பிருமச்சாரி தமது நகைச்சுவையைக் காட்டினார். "லூனி ஆற்றங்கரையில் மண்டோர் மன்னர் தன்னை மேவாரின் அடிமையாக்கிக் கொண்டார் நேற்று இரவு. ஆனால் அதற்கு முன்பே மேவார் அரச குலமகளின் அடிமையாகிவிட்டது இப்பொழுதுதான் தெரிகிறது" என்று கூறி நகைத்தார்.

பாபுஜியும் நகைத்தார். பிறகு இருவரும் ஜோகியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.

கடைசியாக நின்ற மலை அரசியையும் ஜோடாவையும் போகலாம் என்பதற்கு அறிகுறியாகக் கையை குகைக்கு வெளியே காட்டினார் ஜோகி. மலை அரசியின் கண்களில் நீர் திரண்டது. "அப்பா" என்று நாத் தழுதழுக்க அழைத்தாள்.

"அம்மா! இங்கு நீங்கள் இருவருமே திரும்புவீர்கள். ஜோட்பூர் கோட்டையைக் கட்ட. அதுவரை மண்டோரில் இருங்கள். பெண்ணாகப் பிறந்தவள் என்றாவது ஒருநாள் புகுந்த வீட்டுக்குப் போகத்தானே வேண்டும்" என்று கூறி அவளைக் குனியச் சொல்லி அவள் தலையைத் தடவிக் கொடுத்தார். அவர் கண்கள் பிறகு மூடின. மீண்டும் மோன நிலைக்குச் சென்றுவிட்டார், வனப்பிரஸ்த ஜோகி.

இரண்டுநாள் கழித்து தனது பள்ளியறைக்குள் வந்த மலை அரசியின் கையில் இருந்த பழத்தட்டையும் பால் குவளையையும் வாங்கி மஞ்சத்தில் வைத்தான் ஜோடா. பிறகு அவளைத் தூக்கிப் பஞ்சணையில் படுக்க வைத்தான். "இது மார்வார் அரசகுலப் பழக்கம்" என்றும் —கூறினான் சம்பிரதாயத்தைச் சுட்டிக் காட்டி.

"இது மார்வார் சம்பிரதாயமல்ல. மனிதகுல சம்பிரதாயம். மனிதன் தோன்றிய நாள் முதலாகத் தொடரும் ஒரு நிகழ்ச்சி" என்றாள் மலை அரசி பஞ்சணையில் கிடந்த வண்ணம்.

ஜோடா பஞ்சணையின் முனையில் உட்கார்ந்துகொண்டு "இது மலைத் தரையல்ல" என்று உணர்த்தினான்.

"என்ன வித்தியாசம்?" என்று கேட்டாள் மலைஅரசி.

"இது மிருதுவானது..." என்றான் ஜோடா.

"ஆனால்..." அவனைப் பார்த்து புன்முறுவல் செய்தாள் மலை அரசி.

"ஆனால், என்ன?"

"இது மிருதுவாயிருக்கலாம்."

"வேறு எது மிருதுவல்ல?"

"நீங்கள், உங்கள் முரட்டுத்தனத்தில் வித்தியாசம் இருக்காதே" என்று சொன்ன மலை அரசி முகத்தை தலையணையில் புதைத்துக் குப்புறப் படுத்துக்கொண்டாள்.

அவளைப் புரட்டினான் ஜோடா முரட்டுத்தனமாக. அவள் நகைத்தாள். காரணம் அவனுக்குத் தெரிந்திருந்தது. இருந்தும் அவன் முரட்டுத்தனம் தொடர்ந்தது.

பின்னுரை

ராவ்ஜோடா மஞ்சாஜிக்கு கல்லால் ஸ்தூபி கட்டினான் என்பதையும், ஜோடாகிர்மீது ஜோட்பூர் கோட்டையைக் கட்டி, அதை மார்வாரின் தலைநகர் ஆக்கினான் என்பதையும், ஜோடாவின் வம்சம் பெரிதாக வளர்ந்து பலத்த அரசாக ஆகியது என்பதையும் சரித்திரம் கூறுகிறது. இத்தனைக்கும் மார்வார், மேவாரின் ஆணைக்கு உட்பட்டதாகவே இருந்து வந்தது.

卐

இந்நூலாசிரியரின் பிற நாவல்கள்

- கடல் புறா I
- கடல் புறா II
- கடல் புறா III
- ஜலதீபம் I
- ஜலதீபம் II
- ஜலதீபம் III
- யவனராணி I
- யவனராணி II
- ராஜபேரிகை
- ராஜதிலகம்
- கன்னிமாடம்
- மன்னன் மகள்
- சேரன் செல்வி
- கவர்ந்த கண்கள்
- மலைவாசல்
- ஜீவபூமி
- மஞ்சள் ஆறு
- மூங்கில் கோட்டை
- மோகினி வனம்
- இந்திர குமாரி
- இளையராணி
- நீள் விழி
- பல்லவ திலகம்
- நாகதீபம்
- உதய பானு
- மங்கல தேவி
- நிலமங்கை
- ஜல மோகினி
- ராஜமுத்திரை I
- ராஜமுத்திரை II
- கடல் ராணி
- மலையரசி
- மோகனச் சிலை
- ராஜயோகம்
- ராணா ஹமீர்
- நீலவல்லி
- நாகதேவி
- விலைராணி
- பாண்டியன் பவனி
- சந்திரமதி
- ராஜ்யஸ்ரீ
- மதுமலர்
- நங்கூரம்
- மனமோகம்
- செண்பகத் தோட்டம்
- புரட்சிப் பெண்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தியாகராய நகர், சென்னை-17.